சமர் [illegible]

வம்ச வ[illegible]

1899

DIGITIZED

O-,6M,5
M99
11619

3630

# சவரிராய பிள்ளை வம்ச வரலாறு

# சவரிராய பிள்ளை

## வம்சவரலாறு.

# THE ANCESTORS

## OF

# SAVARIRAYA PILLAI

**A catechist of the Church Missionary Society,**

TINNEVELLY, SOUTH INDIA.

*Compiled By His Son.*

**PALAMCOTTAH:**

SRI VIJAYA LAKSHMI VILASAM PRESS.

**1899.**

O-,6M,S
M90

10917

*Note by the Compiler.*

This volume forms the introductory portion of the LIFE OF SAVARIRAYA PILLAI, a Catechist of the Church Missionary Society, who was born in 1801 and died in 1874.

This Introduction contains accounts of Savariraya Pillai's father, uncles, grandfather, granduncle, great-grandfather and great-great-grandfather who were all Roman Catholics, and relates to a period extending from 1690 to 1821.

The reason why the Introduction is issued first as a separate volume, and the sources from which it has been compiled, are given in the Dedicatory Letter to my kinsmen, printed at the end.

These pages may strictly be styled "The Annals of the Poor". They give a simple, honest story of village people, and every pains has been taken to represent them

as they were. The book is at present intended for circulation among my own family circle. Only fifty copies have been printed.

Years must pass before the intellect of our people is cultivated enough to care for this sort of prosaic, everyday-life stories. Possibly, even some of my 'educated' brethren may express surprise, that there should be found a man to write and print such 'rubbish'.

And yet, I imagine, that the book, if translated into English, will not be uninteresting to the English mind. The difficulty is the translation. The book is so full of our native ways and doings, that, to make it intelligible to a foreigner, the translation will have to be disfigured by explanatory foot-notes almost at every page.

Some of my own kinsfolk may not thank me for making a permanent record of the low estate and hard lives of their ancestors of the Eighteenth Century. But if there is one thing more than another that I have always been anxious to impress on my children, it is *that* knowledge of the past, as compared with the present, which will make their hearts always to be pervaded with a spirit of thankfulness for the peace and prosperity, which, in the Providence of God, they now enjoy under British rule. It was in the year that Britain



assumed the government of Tinnevelly, that my father was born.

If my father had known English, he would have joined heart and soul in singing what my revered master, Thomas Spratt, taught me, when I was a very little boy.

*I thank the goodness and the grace*
*That on my birth have smiled*
*And made me in these gospel days*
*A happy Christian child.*

*Christmas, 1899.* J. D. S.

✝

கடவுள் துணை.

# சவரிராய பிள்ளை

## வம்ச வரலாறு.

---

இந்தச் சரித்திரத்துக்கு ஆதாரம்.—
ஐயாவும் பேர்த்தியும் கைப்பட எழுதிவைத்திருக்கிற சுவடிகள் காகிதங்கள்; 1864 வருஷத்தில் ஐயா சொல்ல நான் எழுதினது; 1876-ம் வருஷத்துக்குப் பின் அம்மையும் சகோதரரும் சொல்லி எழுதிவைத்திருப்பது; நான் கண்டு கேட்டு அறிந்தது.

1899-ம் வரு செப்தெம்பர் மீ 18 உ அச்சடிக்க ஆரம்பித்தேன்.

என் இரட்சகராகிய இயேசுசுவாமி தமது திருநாமத்து மகிமைக்கென்று இந்த ஏழைக்கதையைக் கடாட்சிக்க அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்காரஞ்செய்து நிற்கிறேன்.

J. D. S.

---

### வண்டிக்காரன் புதூர்.

ஆராம்புளியிலிருந்து கோட்டாற்றுக்குப்போகிற ரஸ்தாவுக்கு ஒரு நாழிகைக்குத் தெற்கே ராமபுரம் என்று ஒரு ஊர் இருக்கிறது. அதற்கு இரண்டொரு நாழிகைக்குத் தெற்கே தேரூர் என்று ஒரு ஊர் இருக்கிறது. இந்த இரண்டு ஊருக்கும் இடையில், அதாவது தேரூர் குளத்தாக்கீழ்க்கடைகொம்பு உள்ளேயிலும் ராமபுரத்துக் குளத்துப் புறகரைப் பற்றுக்காட்டிலும், ஒரு ஊர் முன் இருந்து இப்பொழுது பாழாயிருக்கிறது.

முன் குடியிருப்பு இருந்ததென்பதற்கு மண்டபங்களும் கல்லினால் உறுதியாகக்கட்டுப்பட்ட கிழக்கேபார்த்த ஒரு பிள்ளையார்கோவிலும் வடக்கே பார்த்த ஒரு அம்மன் கோவிலும் அதற்குக் கிழ்புறத்தில் கரையிடிந்துகிடக்கிற ஒரு தெப்பக்குளமும் இருக்கிறது. இந்த ஊருக்கு வண்டிக்காரன் புதூர் என்று பேர் சொல்லுகிறார்கள். இது கோட்டாற்றுக்குக் கிழக்கு இரண்டு நாழிகை வழி.

அர்ச். சவரியார் காலத்தில் இத்திக்கையில் முக்குவர், பரவருக்குள் கிறிஸ்துமார்க்கம் பிரபலமாகிப் பிற்காலத்தில் மேல்சாதிக்காரருக்குள்ளும் சொற்பமாய் விருத்தியாகிக்கொண்டு வந்தது. அக்காலத்தில் மலையாளத்தார் கிறிஸ்து மார்க்கத்தாரை வெகுநீட்டாய் நிந்தித்து மேல்சாதிக்காரர் யாராவது சேர்ந்தால் கொடூரமாய்த் துன்பப்படுத்தினார்கள். [தேவசகாயம் பிள்ளை சரித்திரம் திருஷ்டாந்தம்].

இவர்கள் கோவில்களுக்கு வெளியரங்கமாய்ப்போகக்கூடாமல் தடுக்கப்பட்டாலும், மார்க்கத்தில் உறுதியும் நினைப்பும் விசுவாசமும் வைராக்கியமுமுடையவர்களாய் நிலைநின்று இராத்திரிகளில்கூடிச் செபம்பண்ணிவருவார்கள். அந்தக்காலத்தில் மலையாளத்தில் கிறிஸ்துவருக்குரிய கோவில்கள் திருவட்டாற்றுக்குச் சமீபமான வெள்ளிக்கோட்டிலும் திருவனந்தபுரத்துக்குச் சமீபமான கேமத்திலும் மாத்திரமுண்டாம். மற்றக்கோவில்கள் எல்லாம் பிற்பாடுண்டானதாம். காமருநித்தன்புதூரிலும் கோவில் உண்டு.

## நரசிங்கம் பிள்ளை.

1600-ம் வருஷத்தில் மேற்படி வண்டிக்காரன்புதூரில் நரசிங்கம்பிள்ளை யென்று ஒருவர் இருந்தார். இவர் வைசவெள்ளாளக்குடும்பம் கல்வியறிவுடையவர்களாயும் நற்சை புற்சையுடையவர்களாயும் இருந்தார்கள்.

வடக்குன்குளத்தில் ஒருவர் சொன்னது:—

நரசிங்கம்பிள்ளை மேற்படி வண்டிக்காரன்புதூர் கோவிலுக்குப்பூசாரியாயிருந்தார். அவர் வம்சத்தில் ஒரே ஆண்குழந்தை மாத்திரம் பிறக்கிறதாம். அப்படி அவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்து இறந்துபோகவே, அவர் மயானக்கரையில் குழந்தையை அடக்கம்பண்ண ஒப்புக்கொடுக்கமாட்டாமல் மிருந்த வியாகுலப்படுகிறதை, அவ்வழியாய்க் கோட்டாற்றிலிருந்து காமநாதிரதன்புதூருக்குப் போகிற சுவாமியார் ஒருவர் கண்டு: பிள்ளையை அடக்கம்பண்ணக்கொடு உனக்கு இன்னும் ஒரு ஆண் குழந்தைபிறக்கும் என்று ஆசீர்வாதஞ் சொல்ல; அந்த சுவாமியாருக்கு நரசிங்கம்பிள்ளை வேதமார்க்கத்தை அநுசரித்துக்கொண்டார். மேற்படி நரசிங்கம்பிள்ளைக்கு



அப்படியே ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குநல்லதம்பியாபிள்ளை யென்று பேர்.

1898-ம் ஆண்டு டிசம்பர்மீ 27உ நான் குருவினந்தத்துக்குப்போயிருந்தேன். ஐயா, போத்தி குடியிருந்த இடங்களை என் ஜீவகாலத்தில் ஒரு தரம் தரிசிக்கவேண்டுமென்று ஆசை வெகுவருஷங்களாய் இருந்தது. ஆண்டவர் கிருபையாய் மீந்துவைத்திருக்கிற சகோதரர் இருவரும் கூடவந்தார்கள். அவ்விடத்தில் முன்னாளில் அண்ணன் மரியசிங்கம்பிள்ளையவர்கள் அநேக வடிகள் சேர்த்துவைத்திருந்தார்கள். அவர்களை அச்சங்குளம் பண்டிதப்பிள்ளையவர்கள் "சகலகலா வல்லவன்" என்று விநோதகடையில் சொல்லுவார்கள். மேற்படி அண்ணன் இறந்துபோய் அநேக வருஷமானாலும் அவர்களுடைய ஏடுகள் எழுத்துகள் எல்லாம் பத்திரமாய் இருக்குமென்று நினைத்திருந்தேன். போய்ப்பார்க்கும்போது ஒன்றுமில்லை. எப்படித்தொலைந்துபோயிற்று என்று கேட்டதற்குச் சரியான உத்தரவுசொல்ல நாதமில்லை. மேற்படி அண்ணன் மருமகள் மிக்கேல் அம்மாள் வல்லா தொல்லையாய் அரங்குக்குள்ளிருந்த சில சொற்ப ஓலைகளையெடுத்து வெளியேபோட்டாள். அதில் ஒரு செத்தருக்குள் மூன்றோலைகள் இருந்தது. இதுகளில் கண்டிருக்கிற குறிப்புகள் மேற்படி கதைக்கும் ஐயா அம்மைசொல்லி எழுதிவைத்திருக்கிற குறிப்புகளுக்கும் சில காரியங்களில் விகற்பமாயிருக்கிறது.

மேற்படி ஓலையில் எழுதியிருப்பது:— "இயேசுமரியே துணை முன்னிற்க. குரிவிந்தம் மரியசிங்கம்பிள்ளை பவுத்திரனும் மேற்படியார்கள் ஜெரேஷ்டபுத்திரனாகிய மிக்கயேல்ப்பிள்ளையவர்கள் மக்களில் மூத்தோனாகிய மரியசிங்கமென்பவன் குருசையப்பருடைய அடைக்கலத்தை நம்பியெழுதுவது மெய்யான கத்தோலிக்க ரோமான் திருச்சபையில் எங்கள் முன்னோர்கள் வந்துசேர்ந்தது முதல் என்னுள்வரையிலுள்ள தலைமுறை சரித்திரமெழுதவேணுமென்ற எண்ணமென்னத்திலுலென்றால் பின்புள்ளவர்களரியும்படிக்கும் இதுமுதல் தொடர்பாய் ஆண்டு மாசம் தெய்திகள் கணிக்கணக்காயெழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் நான் வாய்மொழியாகக்கேட்டதை கூட்டாமலும் குறையாமலும் மனசம்மதத்தோடு எழுதுகிறேன். மேல்கண்ட மரியசிங்கம்பிள்ளையுடைய பெறனூர் நாஞ்சிநாட்டில் கோட்டாற்றுக்கு கிழக்கு தெருக்கு சமீபமான வண்டிக்காரன்புதூரில் கொஞ்சஞ் சொத்துள்ளவரும் அவடத்தாசாரப்படி தானபானமும் மரியாதியும் படிப்புமுள்ள நரசிங்கமூர்த்தியாபிள்ளை யென்றவரிருந்தார். அவருக்கு சந்ததியில்லாமல் குடிமேல்குடி கலியாணஞ் செய்திருந்தார். எல்லாமிருந்தும் குழந்தை யில்லாமலிருப்பதையிட்டு ரெம்பவும்

இலேசமுற்றிருக்கும்போது யெசுசபை குருக்கள் இருவர் அவ்விடத்துக்
குப்போனார். அக்காலத்தில் சத்தியவேதம் அதிகமாய் பரம்பாததால் வே
த உடையைவிட்டு திருநெல் கம்பி சொமன் பூங்காவி பட்டுத்தார் காவி
நிலயங்கி குல்லா சிரசுவேஷ்டி யோகவல்லாவெட்டு பாதகுறடு தெண்டு
கோல் ஜெபமாலையுடன் ஷையார் இருக்கு மூருக்குவந்தார்கள். அந்த ஊ
ரில் தானபானமுஞ் சொந்தமுள்ளவராதலில் யிவர்களுடு அவர்களுக்
குக்கூடிய பணிவிடையுஞ்செய்து தாமித பந்தி நூக்கிறார் மனச்சஞ்
சலத்தைத்தெரியப்படுத்தினர். இத்தனைனத்தயிடத்தில் குருக்கள் நாமத
மென்று எழுத நான் கேள்விப்பட்டதில்லை. பெருங்காலங்கடந்தவர்களுக்
கும் பிள்ளையுண்டாகும்படிசெய்த சருவேஸ்பரனுடைய தயையும் அவர் தி
ருவாக்குளியவெதவசனங்களையும் பொதித்து சருவேஸ்பரனுடைய வே
தப்படி தீட்சைப்பெற்று அதின்படி நடந்து விசுவாசமாயிருந்தால் இவ
ர்களுக்கு சந்ததிருப்பாரென்றுசொல்ல சுவாமி சொல்லியபடி சந்ததி
யுண்டானால் வேதப்பிரமாணப்படி நடப்போமென்று வாக்குகொடுத்தார்.
அப்படியே சந்ததியுண்டாகி தீட்சைபெற்று அவருக்கு நல்லதம்பியா
பிள்ளையென்றும் அவளுக்கு சாமியடியாளென்றும் பேருண்டாச்சுது.
மூத்தாள் பெருங்காலங்கடந்து பேறுளம்பெண்ணாயிருந்தவள் ஞானஸ்
நானக்காலத்திலிருந்தாளென்றும் இறந்தாளென்றும் நிச்சயமாய்ச்சொல்லி
யில்லாததால் எழுதவில்லை ஷை சாமியடியாளிரு குமாரரை பெற்றாள்.
மூத்தவர் சவரிமுத்துப்பிள்ளை இளையவர் கல்லுப்பிள்ளை யிவர்கள் சிறுப
த்தில் சொம்பவும் விருத்தாப்பியரானதாலிறந்தார். இவருடைய முன்
னோர்கள் சேத்தூர்முதலான பாளையப்பட்டியில் அதிகாரிகளாயிருந்து அர
சைத்தான்றி வருதிப்படி நடக்கச்செய்து வந்ததால் அதிலேயுள்ளவர் வெ
ழும்பி இவர்களுடைய வமிசத்தை முழுதும் கொலைசெய்ய யெத்தனித்த
தை அறியமாயறிந்து. சகல சம்பத்தையும்விட்டு நாஞ்சில்நாட்டுக்குப்போ
னார்கள். மகாராஜனையுங்கண்டு மரியாதைபெற்று முற்சொல்லிய ஊருக்கு
வந்து வெகுகாலமானதால் ஈனுக்குழைத்தப்படி மக்கள்தானம்விட்டு மரு
மக்கள் தானமாச்சு. ராஜதுரோகம் செய்ததாலந்த விடக்குடுக்கவில்லை.
நல்லதம்பியாபிள்ளை மருமக்கள் கொடியவர்களானதால் சாமியடியாளை யு
மவள் புத்திரரிருவரையும் விரட்டினான். அதற்கடுத்த பாண்டிதேசம்
வடக்கன்குளத்தில் கோவிலாம்பிள்ளைமேரில் நிச்சித்தவர்களாயிருந்ததால்
அந்த தாபரத்தில் வந்து ஒதுங்கி தானுமரியாதையாய் காலக்ஷேபங்கழித்து
பிள்ளைகளிருவரையும் தமிழ் இலக்கணவிதிப்படி படிக்கவைத்தாள் அவன்
றுக்கு சாட்சி ஞானரிய சவரிமுத்துப்பிள்ளை யெழுதிய தேம்பாவணியும்

கல்லுப்பிள்ளை தெவத்துதியாய் பாடியதுகளினலுமறிந்தேன். சவரிமுத்
துப்பிள்ளை யெழுதின தேம்பாவணி [illegible] வரையும் [illegible] வரு
சமாயியும் இருக்குது மரியசிங்கம்பிள்ளை இளையதாரத்தாள் மகன் [illegible]
தயெல்ப்பிள்ளைவசம். படிப்புத்தீர்ந்து தாயைவிட்டு சுவாமிமாரிடத்தில்
ச்சேர்ந்து கலியாணப்பருவத்தில் இனத்தார் அஞ்ஞானிகளானதால்
பெண்கிடைக்கயெதுவில்லாமல் சுவாமிமார் மூலமாய் நல்லகெட்டில் தர்
மநாதன்செட்டியார் குமாரத்தியுமாய் சவரிராயன்செட்டியார் சகோதரியா
கிய மாதாவடியாளைக் கலியாணஞ்செய்து அப்பால் விடுதலைபெக்குத்து
ரையிடத்தில் கணக்காயிருந்ததுமன்றி தம்பி கல்லுப்பிள்ளையும் வடக்கன்
குளத்தில் ஷை துரையுடைய வீட்டுக்காரியமுதல்சகலத்துக்கும் கணக்காயி
ருந்தார். துரைவீடும் அவ்விடத்திலிருந்தது. துரை யாபாரியும் செல்வாரிக
யுள்ளவராகவுமிருந்தார். கல்லுப்பிள்ளையுடைய காரியத்தை வெகு விரிவா
க யெழுதவிரேன். துரைக்கு ரூளைச்சை, வடக்கன்குளம், களக்காடு, திரு
நெல்வேலி முதலானயிடங்களிலும் டிங்கழாவும் யாபாரமும்யுண்டு. சவரி
முத்துப்பிள்ளை கூடவே போகிறதுண்டு. சமுசாரம் தகப்பன்வீட்டிலும்
வடக்கன் குளத்திலுமிருந்து அஞ்சு மக்களைப் பெற்றாள். சஞ்சிவிநாதபிள்ளை
ரூசை[illegible]ராபிள்ளை மரியசிங்கம்பிள்ளை தர்மநாதபிள்ளை மதுரெங்கிரம்பிள்ளை
இவர்[illegible]ளும் வாலிபமாயிருக்கும்பொது சழக்காட்டில் [illegible]முறக்காச்சனுண்
டாகி [illegible]மாதாவடியாள் தகப்பனுடைய யுதவியால் காமநாயக்கன்பட்டியில்
[illegible]யிருந்[illegible]தாள். ஆனதினால் ஷை காமநாயக்கன்பட்டி வந்து சேர்ந்தாராம்
அட[illegible]கம் பழைய காமநாயக்கன்பட்டி வடக்குவடை உட்புறத்தில் அடக்
[illegible]ராய் வெகுவயதுசென்ற பறையன் பாக்கியமென்றவன் என்னுடைய
பெ[illegible]ர் மரியசிங்கம்பிள்ளைக்கு காட்டுபொது நானுங் கூடப்போனேன்.
என[illegible]க்கு அப்பொது வயது பத்து. ஷை அய்வரில் தகப்பனார் சாகும்பொது
சஞ்சிவிநாதபிள்ளை படிப்பாகி சாமியார்வசம் ரூசையாபிள்ளையும் படிப்பாகி
சா[illegible]மியார்வசம் மரியசிங்கம்பிள்ளை எண்சுவடிக்குமேல் பள்ளிக்கூடமில்லை.
த[illegible]மநாதபிள்ளை மதுரெங்கிரம்பிள்ளை பள்ளிக்கு பிருயமுமில்லை. சொந்த
மி[illegible]ல்லை. மரியசிங்கம்பிள்ளையும் தம்பிமாரிருவருந்தாயும் ஷை காமநாயக்
கா[illegible]பட்டியிலிருந்தார்கள்.

[illegible] காமநாயக்கன்பட்டி உபதேசியார் வியாகப்பமுதலியாருடைய மக்கள்
[illegible] சவரிமுத்து முதலியார், ரூசை முதலியார்,
தே[illegible]தபோதகம் முதலியார், சதானந்த முதலியார். வேதபோதகம்முதலியா
சத்[illegible]இயநாத முதலியார், ஞானப்பிரகாசமுதலியார்
ரூடை[illegible]டைய மகன்தான் குருத்தையா என்ற

சந்நியாசி முதலியாருடைய மகனுக்கு வேதபோதமுதலியாரென்று பெயர். இந்த வேதபோதமுதலியார் தான் கடைசியில் வைசூரிக்கண்டப [illegible]யிலிருந்து இறந்துபோனார். மேற்படி முதலிமார்ச்சந்ததியார் மதுரைச் சீமைக்குப்போய்விட்டார்கள்.]

## நல்லதம்பிப்பிள்ளை.

மேலேசொல்லிய சரவணம்பிள்ளை மகன் நல்லதம்பிப்பிள்ளை காமநாயக்கன்புதூரிலிருந்தார். சுவாமியடியாள் என்ற ஒருபெண்ணைக் கலியாணம்பண்ணி மூன்று வருஷத்திற்குள்ளாக காமநாயக்கன்புதூரிலே இறந்துபோனார். அவருக்கு இரண்டு ஆண்குழந்தைகள். மூத்தவர் சவரிமுத்துப்பிள்ளை, இளையவர் சின்னப்பிள்ளையென்ற நல்லதம்பிப்பிள்ளை. இளையவர், தகப்பனார் இறந்து இரண்டு மாசத்திற்குப்பின் பிறந்தார்.

## சுவாமியடியாள்.

சுவாமியடியாளுக்குப் பூர்வீகம் வாலியூர்க்கருங்குளம். நல்லதம்பிப்பிள்ளை இறந்தபின் மலையாளத்து ஒழுங்குப்படி அவருடைய நிலம், வீடு, நெல்லு, புல்லு, விதை, வித்து சொத்தையாவும் அவருடைய சகோதரிகள் மூவரும் எடுத்துக்கொண்டார்களாம். சுவாமியடியாளும் யாதொன்றையும் ஒழியாமல் பானைக்குள் விதைக்குள்ளிருந்த மாகாளிப்பணத்தையும் வலியவெடுத்துக்கொடுத்துவிட்டாளாம். மூத்தபிள்ளை சவரிமுத்து கையிலிருந்த ஒரு நார்க்கம்புழுதலாய்ப்பிடுங்கிக்கொண்டார்களாம். சுவாமியடியாள் கூடப்பிறந்தவர்கள் ஒன்பது ஆண்பிள்ளைகள். இவள் ஒரே சகோதரி. இவள் தாய் தகப்பன் சகோதரர் எல்லாரும் அஞ்ஞானிகள். இவ்விதமாக இவளும் இவள் குழந்தைகளும் ஆதரவற்றவர்களாய்க் கைவிடப்பட்டார்கள்.

இந்தக்காலத்தில் இவ்விடத்து சபைகள் பரதேசகுருமாருடைய விசாரணை. அவர்களுக்குள் வியாகப்பபிள்ளை அறுவன். அவருடைய பெண்சாதி ஐந்து குழந்தைகளைவிட்டு மரித்துப்போனாள். இருவர் காலங்களில் இலைபுரத்திலிருந்து கவுண்டச்சிகள் சுவாமியாரிடத்தில் காமநாயக்கன்புதூருக்குப் பாவசங்கீர்த்தனத்துக்கு வருவார்கள். அவர்கள் வியாகப்பபிள்ளைக்கு ஞானச்சகோதரிகள் என்றுமுறை: ஒருவேளை வியாகப்பபிள்ளையுடைய தகப்பனார் அவர்களுக்கு ஞானத்தகப்பனாயிருந்திருக்கலாம். இந்தக்கவுண்டச்சிகள் இங்கேவரும்போது சுவாமியடியாள் வீட்டில் தங்குவார்கள். இந்தப்பெண்பிள்ளைகள், சுவாமியடியாள் வியாகப்பபிள்ளைக்கு இரண்டாந்தாரம் கலியாணம்பண்ணிக்கொள்ளும்படியாக இவளுடைய சகோதரருடன் ஆலோசனைபண்ணினார்கள். மருத்தன் வழியாய்ச்சொத்து இறங்குவதால் இவள் ஒரே சகோதரியாய்ப் பெண்குழந்தைகள் இல்லாதிருப்பதினால் வம்சமூட்டிப்போகுமென்று சகோதரருக்கு இவளைக்கட்டிக்கொடுக்கத்தடையில்லை. சுவாமியாரோடு ஆலோசனைபண்ணி இவள் பாவசங்கீர்த்தனத்துக்குப்போயிருக்கையில் வியாகப்பபிள்ளையைக்கலியாணம் பண்ணிக்கொள்ளும்படியாக சுவாமியார் இவளுக்கு யோசனைசொல்லி, நெருப்பத்திலே தாலியறுத்தவர்கள் தவறி இளப்பத்துக்குள்ளானதுக்கு உதாரணமாக, சேநலைவகாரன்பட்டி மிஞ்சிசெட்டியார் மகன், இரும்புக்காரப்பிள்ளை மகன் முதலிய சரித்திரங்களைச்சொன்னதில் இவள் கோபமும் வெப்பமுமாய் உடனே வீட்டுக்குவந்து கதவையடைத்துக்கொண்டு முட்டி முட்டி அழுதாள். சேப்பிள்ளைகள் இன்னதென்று அறியாமல் திகைக்க, சுவாமியார், "சுவாமியடியாளைப்பசாசு கொண்டுபோகுது" என்றுசொல்லிச்சப்பாத்தைத்தலையில் தட்டிக்கொண்டிருந்தாராம். [இரும்புக்காரப்பிள்ளை மகனை சுவாமியார் கண்டித்தபோது "சுவாமீ, பிசாசுத்தந்திரம்" என்றானாம். "என்ன, பிசாசுத்தந்திரம் பிசாசுத்தந்திரம், நீ மனுசர் அக்கிரமம் பண்ணுகிறது; அப்புறம் பழிபோடுகிறது பிசாசுக்கும்?" என்று சுவாமியார் அவனுக்குச்சொன்னார்.] காலஞ்சென்று சற்குருவுக்கும் சருவேசுரனுக்கும் இஷ்டப்படியவென்று சகோதரர் சொல்படிவியாகப்பபிள்ளைக்கு கலியாணமானாள். மூன்று வருஷம் புருஷனிடம் பேச்சு வார்த்தை எண்ணெய்தேய்ப்புக்குளிப்பு ஒன்றுமில்லாமல் சிறையிலிருந்தாளாம்.

## வியாகப்பபிள்ளை.

வியாகப்பபிள்ளையுடைய ஊர் வடக்கன்குளமானதினாலே அவ்விடத்திலேவந்து குடியேறினார்கள். இதற்குமுன், அதாவது 1714-ம் ஆண்டில் சுவாமியார்வடக்கன்குளத்தில் சபையைஸ்தாபித்தார். சுவாமியடியாளும் அவள் பக்கத்தாரும் சைவகாரர். வியாகப்பபிள்ளை மாம்சம் சாப்பிடப்பட்டவர். சுவாமியடியாள் புருஷனுக்கும் பிள்ளைகளுக்கும் மாம்சக்கறி நன்றாய்ச் சமைத்துவைத்தாலும் அவள் தான் சாப்பிடுவதற்கு அவளுக்கு ஒருநாளும் ஒத்துக்கொள்ளாதாம். தான்சாப்பிட்டுப்படிக்கவேண்டுமென்று ஆரம்பித்தாலும் மனங்கொள்ளாமல் அருவருத்துவிடுமாம். அடுத்த வீட்டுக்காரர் அவள் நாசிக்கும் நாக்குக்கும் புலப்படாதபடிசெய்து மலைக்கறிக்குழம்பென்று ஏமாற்றிக்கொடுக்க, அவள் சாப்பிட்டாலும் கொஞ்சநேரத்திற்குள் அருவருத்து வாந்தியாகிவிடும். வடக்கன்குளத்தில் வியாகப்பபிள்ளைக்கு சுவாமியடியாள் மரியசவரியாபிள்ளையையும், சவரிமுத்து, தெய்வாயியை

ன்ற பெண்பிள்ளைகளையும் பெற்ருள். [தேய்வாயிபிறந்தது 1752-ம் ஞு
அதாவது, தேவசகாயம்பிள்ளை வேதசாட்சியாய் மரணமான ஆறுமாதம்.
இவள் கதை பின்னுலே சொல்லப்படும்].

கல்லதம்பியாபிள்ளை மகன் மூத்தவர் சவரிமுத்துப்பிள்ளை ஆரமாசத்தி
லேயே கடந்தோடித்தடியாயிருப்பாராம். ஓடிப்போய் விளக்கையணைத்
துப்போடுவாராம். சுவாமியடியான் தன் பிள்ளைகளை சிறுவயசிலேதானே
பள்ளிக்கூடத்துக்கனுப்பி பிள்ளைகள்கல்விக்காகவெகு அக்கறையுள்ளவனா
யிருந்தான். வெகுஞானம், வெகு அன்பு, வெகு உருக்கமுள்ளவன். இவனு
டைய அக்கறையினுல் இவனுடைய பிள்ளைகள் அக்காலத்து அறிவின்படி
கல்விமான்களாய் தேம்பாவணிமுதலிய அருந்தமிழ்களையும் வாசிக்கவும்
அர்த்தம்பண்ணவும் திறமையுடையவர்களாயிருந்தார்கள். இவனுடைய
மிருந்த தரித்திரத்தையும் அக்காலத்தில் ஏழைகளுக்குப்படிக்கிறதற்கு வ
சையில்லாததையும் வாத்திமார்களுடைய சம்பளம் மாசம் அரைப்பணம்
இது அந்தக்காலத்தில் சின்னச்செலவல்ல; மற்றும் வாத்திமார்களுக்குச்
செய்யவேண்டியமரியாதைகளையும், கல்வி அக்காலத்தில் வெகு மாத்தி
ரம் அபேக்ஷிக்கப்பட்டிருந்ததையும் எண்ணிக்கும்போது சுவாமியடியானு
டையபுத்திக்கு இது ஒரு திருஷ்டாந்தம். சவரிமுத்துப்பிள்ளை வளர்ந்த
போது வடக்கன்குளத்தில் குருவுக்கு சேசுப்பிள்ளை ஊழியஞ்செய்துவந்
தார். கல்லுப்பிள்ளையாகிய இவ்வர் முன் பட்டணத்திலிருந்து பின்
வியாபாரியாகி வடக்கன்குளத்திலும் கைக்காட்டிலும் பங்களாக்கட்டிக்
குடியிருந்த

## விநிதலேபேக்ரு

என்னும் துரையிடத்தில் கணக்கப்பிள்ளையாயிருந்தார். இந்த விநிதலே
பேக்ருதுரையுடைய பங்களாவும் தோட்டமும் இப்பொழுதும் துரைதோ
ட்டம் துரைவீடு என்று வடக்கன்குளத்தில் பேர், சாமியாரைச்சேர்ந்து
போயிற்று. இவர் கொம்பெனிசேவகமனிதனுய் அக்காலத்தில் அந்தஜில்லை
களில் பெரிய அதிகாரம்பண்ணினவர்தார்.

அம்மை சொல்லுகிறது:—"இவருடைய பெண்சந்ததிருப்பிள்ளைகளில்
லே. ஆனால் மலையாளத்து சரூவத்திக்குப்பிறந்த பிள்ளைகள் அவருக்கு இ
ருந்தது. அதுகளை வெகுவேக்கமாய்ப்பிள்ளைகளைப்போல தான் வளர்த்தார்.
அவருடைய மகன் ஒருவருக்கு இங்கிலீஷியான்துரை என்று பெயர். செய்
யூர்முதலிய இடங்களில் அமிரிப்பயிர் செய்துவந்தார். நான் இங்கிலீஷியா
ன் துரையைப்பார்த்திருக்கிறேன். இந்தப்பிள்ளைகளெல்லாம் ஆலப்பள்ளி,



சென்னபட்டணம்முதலிய இடங்களுக்குப் போய்விட்டார்கள். விநிதலே
பேக்ருத்துரை ஆலப்பள்ளியில் கட்டிக்கொடுத்திருந்த மூத்தமகள் வீட்டுக்
குப் போயிருக்கையில் வியாதிப்பட்டு மரித்துப்போனுர். வியாதியில் தன்
பாவங்களை வெகுவாய் உணர்ந்து கஸ்திப்பட்டு நல்ல ஆயத்தத்தோடு மர
ணமானுராம்."

## சவரிமுத்துப்பிள்ளை.

தாயார் இரண்டாந்தாரம் கலியாணம்பண்ணிக்கொண்டதையிட்டு சிலர்
இளப்பமாகப் பேசினதை மூத்த குமாரன் சவரிமுத்துப்பிள்ளை பொறுக்க
மாட்டாமல் பரதேசம்போக வெண்ணி மறவன் சீமைக்குப்போய்விட்டார்.
அவ்விடத்தில் பல வருத்தங்களை அநுபவிக்க நேரிட்டது. ஒரு [illegible]
மூன்று நாளாய்ப் பட்டினியாய்க்கிடந்து ஒரு கோவிலுக்கு செபம்பண்ண
ப்போகையில் கோவிலுபதேசி யிவருடைய பரதாபத்தையும் ஆயாசத்தை
யும் பார்த்து, தன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய், சாவல் கோழி யடி
த்து கூழுக்குக் கழியும் வைத்து எருமைமோருங்கொடுத்து சாப்பாடுசெய்
வித்தான். அன்று உயிர்த்த திருநாள். தெற்கேயிருந்து பங்குமிசி சரு
கணிக்குப்போகிற ஒரு சுவாமியார் இவரைக்கண்டு தன் பெட்டிக்குள்ளி
ருந்த பாடுபட்ட சுரூபத்தை எடுத்துக்காண்பித்து, உன் தாய் இப்படியி
ருக்கிறாள் என்று சொன்னுர். அதன்பேரில் துக்கப்பட்டு ஊருக்குத்திரு
ம்பிவந்து முன்போல சுவாமியாரிடத்தில் அலுவல்செய்துவந்தார். அந்த
ப்புண்ணியவான் உபதேசி அவருக்கு சாப்பாடுசெய்த அந்தத்தினத்திலே
வடக்கன்குளத்தில் அவருடைய தாய், தன் மகனை ஆண்டவர் அவன்
போயிருக்கிற இடத்தில் நினைத்தருளவேண்டும் என்று சில தருமக்காரர்
களை யழைப்பித்து அவர்களுக்கு அசனங்கொடுத்தாளாம். கல்லுப்பிள்ளை
தன் தாயின் இரண்டாந்தாரத்துப் பிள்ளைகளைக்கண்ணில் காணவொட்
டார். இரண்டாந்தாரம் கலியாணம் பண்ணிக்கொண்டது இவள் சம்சத்
தாருக்கு இளப்பமான சங்கதியாயிருந்ததினுல் அதை வாய்விட்டுப் பேச
மாட்டார்கள். [அதனுல் அப்புறமுள்ளவர்களில் இதை அறிந்தவர்கள் அ
பூர்வம். ஐயா எழுதிவைத்ததை அம்மைக்கு வாசித்தபோது அம்மைக்
குச் சடவுபோலக்கண்டது. ஏனென்றுல் அம்மையை வளர்த்த அருமை
யான தெய்வானை ஆத்தாள் சை இரண்டாவது தாரத்து மகள். குருவினத்
தத்து நிலையிலும் சை. சங்கதியை மறைத்திருக்கிறது. இதை விட்டுவிட
லாமென்று எனக்கும் எண்ணம் வந்தது. பரிசுத்த, பரிசுத்த, பரிசுத்த தே
வ சுதனின் திரு மனுஷாவதார வம்சவழியில் தாமார், ரூத், பத்சேபாள்

பேர் வர இடங்கொடுத்தால், திருநெல்வேலி கவிச்சவ திருச்சபைக்கு ஞானாசிரியரான பேராயர் சாட்டையடி கொடுப்பாரும், அப்படிக்குச் சொல்லக் கூடாத உத்தமியான சுவாமியடியாள்பேரை, அவர் இரண்டாக்கக் கலியாணம் பண்ணின தினிதித்தம், அதுவும் இரகசியத்திலா மறைக்க வேண்டும்.]

சவரிமுத்துப் பிள்ளைக்குத் தேவாலைக்கோட்டை வெள்ளைமடத்தில் அவருடைய மாமன் வீட்டில் பெண்ணிருந்தது. மாமனுக்கு ஆண்பிள்ளையும் பெண்ணுக்குப்பாடகத் தன்னுடைய பாகசமுதல் வேண்டியமட்டும் முண்டு. பெண் அழகும் அப்படித்தான். ஆனால் திருநெல்வேலி சொஞ்சம் மும்பினதுபோல் இருந்த கடப்பாளாம். ஆனால் இவருக்கு அந்தப்பெண்ணைக் கட்ட மனமில்லை. வெள்ளைமடத்தில் இனத்தார் சனத்தார் கூடி பெண்பேசி வெத்திலை பாக்கு விளம்புகிறபோது, குடியிருக்கிறவர்களில் பெரியவர் ஒருவர், எல்லாருக்கும் சம்மதியாவென்று ஒழுங்குப்படி கேட்டாராம். ஆம் ஆம், என்றெல்லாரும் சொல்ல; "எல்லாருக்கும் சம்மதி, சவரிமுத்துக்குத்தான் சம்மதியில்லை" என்று சவரிமுத்துப்பிள்ளை ஒரு மூலையிலிருந்து கூறுகிறார். அதின்பேரில் கலியாணம் குழம்பிப்போயிற்று.

சவரிமுத்துப்பிள்ளைக்கு சுவாமியாரிடத்தில் காதல் உபதேசி அலுவல். அந்தக்காலத்தில் காமநாயக்கன்பட்டியிலும் வெள்ளாளர் இனத்தவர்கள் சொற்பம் இருந்தார்கள். காமநாயக்கன்பட்டிக் கோவில் வடக்கன்குளத்துக்கோவிலுக்கு முந்தினது. 1600-ம் வருஷத்திலே காமநாயக்கன்பட்டியில் சபை ஆரம்பம். இதற்கும் முந்தியது [illegible]. சவரிமுத்துப்பிள்ளை சுவாமியாரோடு காமநாயக்கன்பட்டிக்குப் போயிருக்கையில் இவருடைய சுந்தரத்தையும் கல்வித்திறமையையும் அறிந்து அவ்விடத்தில் சிலருக்கு இவருக்குப் பெண் கொடுக்க ஆசை. கனகாபி அம்மாளுக்கு இரண்டு பெண்களிருந்தது. அந்த அம்மாளுக்கு இவருக்குப் பெண் கொடுக்க ரொம்பப் பிரியம். ஆனால் அந்தப்பெண்கள் கோவிலுக்கு அல்லது கோவிலுக்குச் சமீபத்திலிருக்கிற கிணத்துக்கு வரும்போது அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டு வருமாம். இதென்ன, இந்தப்பிள்ளைகள் கெட்டுக்கிடாய்போல அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு போகிறது என்று சவரிமுத்துப்பிள்ளை தனக்கு அந்தரங்கமானவர்களிடத்தில் சொல்லுவாராம். அவ்விடத்திலேயிருந்த தம்புசெட்டியார் மகனும், பூர்வம் செக்காரக்குடி தவிடன் செட்டியார் பேத்தியுமான ஆரம்பர் கடம்பிறந்தவர்களில் மூன்றுவதான மாதாவடியாள் என்ற பெண்ணின் அடக்கத்தைக் கவனித்து அந்தப்பெண்ணைக் கட்ட இவருக்கு இஷ்டம். பெண்ணின் தாய் தங்கம்



மைக்கும் தகப்பனுக்கும் பிரியந்தான். அவர்களும் இவருக்குத் தங்கள் இஷ்டத்தைத் தெரியும்படி செய்தார்கள். எல்லாம் ஆடி மீ சிரிவைகுண்டத்தில் திருவிழா வருகிறதே, அங்கே என் தாய் வருவாள், அப்போது பேசிக்கொள்ளலாம், என் தாய் மனம்போலத்தான் நான் நடக்கக்கூடும் என்று சொல்லிவிட்டார். அப்பால் சிரிவைகுண்டம் திருவிழாவில் வாய்க்கால் ஓரம் தோப்பில் செட்டிப்பிள்ளைமார் குடியிருக்கையில் சுவாமியாடியாள் திருவிழாவுக்கு வருகிற மார்க்கத்தில் நடந்துபோகிறதைக் கண்டு அவர்கள் தூண்டிக்காட்டி அதோ போகிறவள்தான் சவரிமுத்துப்பிள்ளை தாய் என்று பேசிக்கொண்டதைக் கவனித்துப் போய்த் தன்மகளிடத்தில் விசாரிக்க; அவர் தனக்கு அவர்கள் பெண்கொடுக்க எண்ணமாயிருக்கிறதைச் சொன்னபோது, நான் ஒரு கோலம்போய் இரு கோலமானேனே, அவள் செட்டிச்சியிலுஞ் செட்டிச்சி, என் பிள்ளைக்குக் கொடுப்பாளா வென்றாளாம். இதைத் தங்கம்மை கேட்டு, அவள் இப்படித் தன்னைத் தாழ்த்திச் சொன்னதினாலே அவள் மகனுக்கே கொடுப்பேன் என்று சந்தோஷமாய்ச் சொன்னாள். வடக்கன்குளத்தில் கலியாணம் நடத்துகிறதாகப் பேசி ஒழுங்குபண்ணிக் கொண்டார்கள்.

ஆவணி மீ பெண்வீட்டாரும் பெண்ணும் மாப்பிள்ளையும் வடக்கன்குளத்துக்குப் புறப்பட்டுவரும் வழியில் சேலப்பேரியில் ஆறுபெருகிக்கொண்டதினால் இரண்டொருநாள் தடைபட்டிருந்து வடக்கன்குளம் வந்து சேர்ந்தார்கள். பெண்வீட்டாரை ஊருக்குவடக்கே ஒய்யாயனார்தோப்பில் வைத்துவிட்டு இவர்முந்தி ஊருக்குப்போய், குறித்தநாளில் வராததினாலே வெகு கவலையும் கலக்கமுமாயிருந்த தாயைமுத்தமிட்டு, வீட்டில்போட்டிருந்த பந்தலைப்பார்த்து; இது பிரித்துப்போடுகிறபந்தல், எனக்குப் பிரியாத பந்தலில் கலியாணம் நடப்பிக்கவேணும் என்றுசொல்லி, அந்தப்படியே கோவிலில் வெகுகோலம் பூசைமகிமையோடு சாமியார் கோவிலில் கலியாணம் முடித்துவைத்தார். இவர் கலியாணதினத்திலேயே வெளிவாசகம்பிள்ளைக்கும் குட்டிஆனந்தாயிக்கும் கலியாணம் நிர்மானித்திருந்தது. ஆனால் வெள்ளத்தினாலே இவர் வரத்தடைபட்டுப்போனதினால் அந்தக்கலியாணம் முந்திநடந்தது.

கலியாணம் செய்துகொண்டபின்பு சுவாமியார் கூடக்கூடவிருக்கிறதை விட்டு சிரிவைகுண்டத்தில் உபதேசியாகஇருந்தார். வை கோவிலைச் சேர்ந்த புளியந்தோப்பு இவர்கட்டி உண்டானதாம். பின்பு வகைபுரத்துக்கடுத்த தர்மத்துப்புரத்தில் பள்ளிக்கூடம்போட்டுப் படித்துக்கொடுத்துப்

பின்பு அதையும்விட்டு, விதேலெபேச் தலைவிடத்தில் கணக்குவேலைபார்த்து வந்தார். அவரோடு வாதனூர் [வாகவேதைநல்லூர்] புலியனூருக்குக் கணக்கெழுதப்போயிருக்கையில்-தனை அவ்விடத்தில் ஒரு சன்னடைக்குப் போயிருந்தாராம், காய்ச்சல்வந்து தனை இவ்வளை டோலியில்வைத்து காமநாயக்கன்பட்டிக்கு மாமனார்வீட்டிற்கு அனுப்புவித்தார். ருவிர்ணம், வெருவுபாதிப்பிட்டனர். பெண்சாதியைக் கூட்டிக்கொண்டு குழந்தைகளையும் எடுத்துக்கொண்டுவரும்படி வடக்கன்குளத்துக்குப் போன ஆட்கள் மூவரில் இருவர் வழியில் செத்துப்புதைத்துப்போன ஏட்டோதத்தைத் தின்ன காய்ச்சலும் அதிகமாய் வடக்கன்குளத்துக்குப்போய்ச் சேரவே, அவர்களுக்குப் பாடுபார்க்கவேண்டிய பாரம் தாய் வைத்தியரையாபோயிற்று. ஆகவே தன்மகளைப் பார்க்கப்போக அவள் நடத்தாலும் தெய்வசித்தம் ஒட்டவில்லை. தான் வாராவிட்டாலும் தன்பிள்ளை தானே வளர்க்கும் சுவாமியென்று சொல்லிக்கொண்டு தான் போகக்கூடாமல் வியாதிப்பட்டுவந்த ஆள் இருவரையும் பறிகொடுத்தாள். மருமகளும் குழந்தைகளும் போனார்கள். காமநாயக்கன்பட்டியில் சவரிமுத்துப்பிள்ளைக்கு மச்சினமார் தான் தவ்வளி வெச்சி கொடுக்க மாமியார் விட்டுப்போகக்கூடாது. பெண்சாதி போய்ச்சேர்ந்தாலும் விட்டுப்போகவொட்டார்கள். பெண்சாதியை சஞ்சுவியென்று [மூத்தமகள்பேரன்] அழைப்பாராம். என்னைத் திட்டவே ஒட்டுவதில்லையே என்று அழுவாளாம். இப்படியாக 35-வயதில் காமநாயக்கன்பட்டியில் மாமனார்வீட்டில் 1767-ஆம் மரணமானார். அவரை அடக்கம்பண்ணின இடத்தை பிற்காலத்தில் வெள்ளம் அடித்துக்கொண்டுபோனதால் அது இப்போது திட்டமாய்த் தெரியாது. அது இடமாயிருக்கிறது.

இவர் நல்ல கல்விமான். பிரசங்க பத்திகளைசமுள்ளவர். பாக்கத்துக் கடுத்த பல சுவடிகள் எழுதியிருந்தார். சவரிமுத்துப்பிள்ளை எழுதி வைத்த தேம்பாவணி, சதுரகராதி, வேதியரொழுக்கம் அம்மானை முதலிய சுவடிகள் இன்றுவரை (1904) மட்டும் இருக்கிறது. தளவாய்பிள்ளை கொள்ளையில் அவரவர் தங்கள் தங்கள் பொக்கிஷங்களைத் தூக்கிக்கொண்டு ஓடிப்போகும்போது, இவர் தேம்பாவணியைத் தூக்கித் தலையில்வைத்துக்கொண்டு ஓடினாராம். கொள்ளைக்காரர் அதைப்பறித்துக்கொண்டார்கள். பிற்காலத்தில் இந்த ஏட்டைத் திருத்தினவன் இதுவேதக்காரருடைய சுவடியென்று அறிந்து இவருடைய மகனை வரவழைத்து அவனிடத்தில் கொடுத்துக் கொண்டுவந்தான். தன் தகப்பன் கையெழுத்து என்று கண்டு



ஆச்சரியப்பட்டு மெய்யத்துக்கு வாங்கிக்கொண்டார். [டை தேம்பாவணி ஏமோத்திரம் என் கைவசமானல் அதைப்பார்க்கிறும் பாக்கியம்வேறில்லை என்று வெகுநாளாய் ஆவலாசையாயிருந்தேன். அந்த ஏடு டை மரியசிங்கம்பிள்ளையவர்களுடைய இளயதாரத்துமகன் கடைக்கடை மிக்கேல்பிள்ளையவர்களுக்கு வந்து அவர்களுக்குப்பின் அவர்கள் மகன் இன்னாசிமுத்துப்பிள்ளையவர்கள்வசம் சேர்ந்தது. 1893-ம் வருஷம் டிசம்பர் கடையில் நான் முதலாவதாக குருவினத்தத்துக்கு ஸ்தலயாத்திரை போயிருந்தேன். டை ஏட்டைப்பார்க்க ஆசைப்பட்டபோது டை பார் டை ஏட்டை சிவப்பு வெள்ளை கோடிஇனத்துணியில் பூஜிதையாகச் சுற்றிக்கட்டிவைத்திருந்ததைக்கொண்டுவந்து காண்பித்தார்கள். அபகரித்துக்கொள்ள வாய்வரவில்லை. மரியாதையாய்த் திரும்பக்கொடுத்துவிட்டேன். அப்புறம் அவ்விடம்விட்டுப்புறப்படுகிற நாளில் டை ஏட்டை டை இன்னாசிமுத்துப்பிள்ளையவர்கள் என்னிடத்தில் கொண்டுவந்துகொடுத்து, இங்கே இனி விதைக் காப்பாற்ற ஆளில்லை, உங்களிடத்திலிருந்தால் பத்திரமாயிருக்குமென்றார்கள். சொல்லமுடியாத சந்தோஷத்தோடும் ஸ்தோத்திரத்தோடும் வாங்கிக்கொண்டுவந்தேன். இப்படியாக என் பூட்டனார் எழுதிய தேம்பாவணியும் அவர்கள் மகனாகிய என் பேரனார் எழுதிய தேம்பாவணியும் என்னிடத்திலிருக்கிறது].

தளவாய்பிள்ளை கொள்ளையென்று மேலே சொல்லிற்றே. அம்மை சொல்லுகிறது:—"ஒரு கொள்ளைக்காரன் வருவான். அவன்போனபின்பு இன்னொருவன் வருவான். ஒருவனை யறியாமல் ஒருவன்கொள்ளை. எங்கும் தாலிப்பறி சேலைப்பறி. கொள்ளைக்காரன் வருகிறதைக் கேட்டால் சனங்களெல்லாம் காடுகளுக்கு ஓட்டம். ஒருநாள் கொள்ளைக்காரன் வருகிறபோது சனங்களெல்லாம் ஓடுகிறார்கள். [செவிடிஅன்பாயி என்றவள் பிள்ளைகொள்ளிஅத்தவள், சோளப்பொரி உருண்டைவித்துப் பிழைக்கிறவள்; இப்போது சின்னஞானப்பிரகாசம்பிள்ளையவர்களிருக்கிற வீட்டுக்கு அடுத்த மேல்வீட்டிலிருந்தாள். அவளுக்குப்பித்காவம் அந்தமனையை அண்ணாவிச் சாமியார் வாங்கி சிஷ்பிள்ளை மருவேல்பிள்ளைக்குக் கொடுத்தாராம்.] செவிடிஅன்பாயி பருத்திக்கொட்டைப்பானை முதலியதில சட்டிகளைத் தலைவாசலில் போட்டு உடைத்துச் சிந்திக்கொண்டு தலையையும் விரித்துப்போட்டுக்கொண்டு இப்போதான் வீடுகொள்ளைகொடுத்தவள்போல ஒப்பாரிசொல்லி அழுதுகொண்டிருந்தாள். கொள்ளைக்காரர் பார்த்துப்போய்விட்டார்கள். கல்துப்பிள்ளை கணையாளன், சிறுபிள்ளையாயிருக்கிறபோது முத்தத்திலிருந்து சாமிக்கஞ்சி குடித்துக்கொண்டிருக்கிறார்.

பின்பு அதையுங்விட்டு, விதிலேபேச் தலைவிடத்தில் கணக்குவேலைபார்த்து வந்தார். அவரோடு வரதனர் [வரகுணமங்கை] புலியங்குடிக்குக் கணக்கெழுதப்போயிருக்கையில் தனை அவ்விடத்தில் விதை ஒரு சண்டைக்குப் போயிருந்தாராம், காய்ச்சல்வந்து [illegible] இவரை டோலியில்வைத்து காமநாயக்கன்பட்டிக்கு மாமனார்வீட்டுக்கு அனுப்புவித்தார். ஆனால், வெகு உபாதிப்பட்டார். பெண்சாதியைக் கூட்டிக்கொண்டு குழந்தைகளையும் எடுத்துக்கொண்டுவரும்படி வடக்குன்குளத்துக்குப் போன ஆட்கள் மூவரில் இரவாவதியில் கொள்ளைபோனதுபோல வட்டோதத்தைத் தின்று காய்ச்சலும் அதிகமாய் வடக்குன்குளத்துக்குப்பாய்ச் சேர்ந்தே, அவர்களுக்குப் பாடுபார்க்கவேண்டிய பாரம் தாய் வைரியாயிருந்ததைப் பொறுத்து. ஆகவே தன்மகனைப் பார்க்கப்போக அவன் நடத்தாரும் தெய்வசித்தம் ஒட்டவில்லை. தான் மரணப்பிள்ளையை நட்டம் வைத்தால் தன்பின்னே தானே வளரட்டும் சுவாமியென்று சொல்லிக்கொண்டு தான் போகக்கூடாமல் வியாதிப்பட்டுவந்த ஆள் இருவரையும் படுப்பார்த்தான். மருமகளும் குழந்தைகளும் போனார்கள். காமநாயக்கன்பட்டியில் சவரிமுத்துப்பிள்ளைக்கு மச்சினமார் தான் தண்ணி வெந்நீ கொடுத்து உதவி, மாமியார் விட்டுப்போகக்கூடாது. பெண்சாதி போய்ச்சேர்ந்தாலும் விட்டுப்போகவொட்டார்கள். பெண்சாதியை சஞ்சிவியென்று [ மூத்தமகன்பேரால் ] அழைப்பாராம். என்னைத் தெட்டவர ஒட்டுவார்களில்லையே யென்று அழுவாராம். இப்படியாக 35-வயதில் காமநாயக்கன்பட்டியில் மாமனார்வீட்டில் 1767ல் மரணமானார். அவரை அடக்கம்பண்ணின இடத்தை பிற்காலத்தில் வெள்ளம் எடுத்துக்கொண்டுபோனதால் அது இப்போது திட்டமாய்த் தெரியாது. அது மேட்டுப்பாயிருக்கிறது.

இவர் நல்ல கல்விமான், மிகுந்த பக்தியுள்ளவருமானவர். மாங்கத்துர் கவித்த பல கவிகள் எழுதிவைத்திருந்தார். சவரிமுத்துப்பிள்ளை எழுதிவைத்த தேம்பாவணி, சதுரகராதி, வேதியர்ஒழுக்கம் அம்மானை முதலிய சுவடிகள் இன்னும் (1861) மட்டும் இருக்கிறது. தளவாய்பிள்ளைகொள்ளையில் அவரவர் தங்கள் தங்கள் பொருள்களை எடுத்துக்கொண்டு ஓடிப்போகும்போது, இவர் தேம்பாவணியைத் தூக்கித் தலையில்வைத்துக்கொண்டு ஓடினாராம். கொள்ளைக்காரர் அதைப்பறித்துக்கொண்டார்கள். பிற்காலத்தில் இந்த ஏட்டைத் திருத்தவன் இது வேதக்காரருடைய சுவடியென்று அறிந்து இவருடைய மகனை அழைத்துக் கொட்டியாரிடத்தில் கொண்டுபோய்க் கொண்டுவந்தான். தன் தகப்பன் கையெழுத்து என்று கண்டு



ஆச்சரியப்பட்டு வெகுமதியாக வாங்கிக்கொண்டார். [அந்த தேம்பாவணி ஏடுமாத்திரம் என் கைவசமானால் அதைப்பார்க்கிறதும் பாக்கியம்வேறில்லை என்று வெகுநாளாய் ஆவலாசையாயிருந்தேன். அந்த ஏடு மரியசிங்கம்பிள்ளையவர்களுடைய இளயதாரத்துமகன் மிக்கேல்பிள்ளையவர்களுக்கு வந்து அவர்களுக்குப்பின் அவர்கள் மகன் இன்னாசிமுத்துப்பிள்ளையவர்கள்வசம் சேர்ந்தது. 1893-ம் வருஷம் டிசம்பர்மீ கடைசியில் நான் முதலாவதாக குருவிளைத்தேவர்கோயிலுக்கு போயிருந்தேன். அந்த ஏட்டைப்பார்க்க ஆசைப்பட்டபோது அவர் அந்த ஏட்டை சிவப்பு வெள்ளை கோடிதுணித்துணியில் பூஜிதமாகச் சுற்றிக்கட்டி வைத்திருந்ததைக்கொண்டுவந்து காண்பித்தார்கள். அபகரித்துக்கொள்ள வாய்வரவில்லை. மரியாதையாய்த் திரும்பக்கொடுத்துவிட்டேன். அப்புறம் அவ்விடம்விட்டுப்புறப்படுகிற நாளில் அந்த ஏட்டை அந்த இன்னாசிமுத்துப்பிள்ளையவர்கள் என்னிடத்தில் கொண்டுவந்துகொடுத்து, இங்கே இனி இதைக் காப்பாற்ற ஆளில்லை, உங்களிடத்திலிருந்தால் பத்திரமாயிருக்குமென்றார்கள். சொல்லமுடியாத சந்தோஷத்தோடும் ஸ்தோத்திரத்தோடும் வாங்கிக்கொண்டுவந்தேன். இப்படியாக என் பூட்டனார் எழுதிய தேம்பாவணியும் அவர்கள் மகனுடைய மகன் பேரனார் எழுதிய தேம்பாவணியும் நம்மிடத்திலிருக்கிறது ].

தளவாய்பிள்ளை கொள்ளையென்று மேலே சொல்லிற்றே. அம்மை சொல்லுகிறது:—"ஒரு கொள்ளைக்காரன் வருவான். அவன்போனபின்பு இன்னொருவன் வருவான். ஒருவனை யறியாமல் ஒருவன் கொள்ளை. எங்கும் தாலிப்பறி சேலைப்பறி. கொள்ளைக்காரன் வருகிறதைக் கேட்டால் சனங்களெல்லாம் காடுகளுக்கு ஓட்டம். ஒருநாள் கொள்ளைக்காரன் வருகிறபோது சனங்களெல்லாம் ஓடுகிறார்கள். [செவிடிஅன்பாயி என்றவள் பிள்ளைகொள்ளியத்தவள், சோளப்பொரி உருண்டைவித்துப் பிழைக்கிறவள், இப்போது சின்னஞானப்பிரகாசம்பிள்ளையவர்களிருக்கிற வீட்டுக்கு அடுத்த கீழ்வீட்டிலிருக்கிறாள். அவளுக்குப்பிற்காலம் அந்தமனையை அண்ணாவிச் சாமியார் வாங்கி சிஷுப்பிள்ளை மருவேல்பிள்ளைக்குக் கொடுத்தாராம்.] செவிடிஅன்பாயி பருத்திக்கொட்டைப்பானை முதலியதிலே சட்டிகளைத் தலைவாசலில் போட்டு உடைத்துச் சிந்திக்கொண்டு தலையையும் விரித்துப்போட்டுக்கொண்டு இப்போதான் வீடுகொள்ளைகொடுத்தவள்போல ஒப்பாரிசொல்லி அழுதுகொண்டிருந்தாள். கொள்ளைக்காரர் பார்த்துபோய்விட்டார்கள். நல்லுப்பிள்ளை கவையாளன், சிறுபிள்ளையாயிருக்கிறபோது முத்தத்திலிருந்து சாமிக்கஞ்சி குடித்துக்கொண்டிருக்கிறார்.

பின்பு அதையும்விட்டு, விதேலபேச்தலைவிடத்தில் கணக்குவேலைபார்த்து வந்தார். அவரோடு வாதநூர் [வாசுதேவநல்லூர்] புலியன்குடிக்குக் கணக்கெழுதப்போயிருக்கையில்-இவரை அவ்விடத்தில் விட்டு ஒரு சண்டைக்குப் போயிருந்தாராம், காய்ச்சல்வந்து அவரை இரண்டு டோலியில்வைத்துக் காமநாயக்கன்பட்டிக்கு மாமனார்வீட்டிற்கு அனுப்பினார், ஜுவரம், வெகு உபாதிப்பட்டனர். பெண்சாதியைக் கூட்டிக்கொண்டு குழந்தைகளையும் எடுத்துக்கொண்டுவரும்படி வடக்குன்குளத்துக்குப் போன ஆட்கள் மூவரில் இருவர் வழியில் செத்துப்போக மீதிப்பட்ட ஒருவன் தன்னு காய்ச்சலும் அதிகமாய் வடக்குன்குளத்துக்குப்போய்ச் சேர்வே, அவர்களுக்குப் பார்க்கவேண்டிய பரம் நாய் வேண்டியவரைப் போனத்தது. ஆகவே தன்மகனைப் பார்க்கப்போக அவன் தடித்தாயும் தேய்விசித்தம் ஒட்டவில்லை, தான் வைத்தியனையும் நடப்பா தன் பின்ளை தானே வளர்ப்பேன் கனவிலென்று சொல்லிக்கொண்டு தான் போகக்கூடாமல் வியாதிப்பட்டிருந்த அவ் இருவரையும் படுப்பித்தார். மறுநாளும் குழந்தைகளும் பேருகள், காமநாயக்கன்பட்டியில் வைத்துப் பிள்ளைக்கு மச்சினமார் தான் தண்ணி வெந்நீர் கொடுத்து மாமியார் விட்டுப்போகக்கூடாது. பெண்சாதி போய்ச்சேர்ந்தாலும் விட்டுப்போக ஒட்டார்கள். பெண்சாதியை சஞ்சீவியென்று [மூத்தமகன்பேரால்] அழைப்பாராம். என்னைத் திட்டமா ஒட்டினிருந்தவிட்டுவிட்டு என்று அழுவாராம். இப்படியாக 37-வயதில் காமநாயக்கன்பட்டியில் மாமனார்வீட்டில் 1767 வில் மரணமானார். அவரை அடக்கம்பண்ணின இடத்தை பிற்காலத்தில் வெள்ளம் எடுத்துக்கொண்டுபோனதால் அது இப்போது திட்டமாய்த் தெரியாது. அது இடையாயிருக்கிறது.

இவர் நல்ல கல்விமான். மிகுந்த பக்திவிசேஷமுள்ளவர். மனக்கருத்தெடுத்த பல கவிகள் பாடியிருக்கிறார். கவிமுத்துப்பிள்ளை எழுதி வைத்த தேம்பாவணி, சதாசகாயம், மெய்ஞ்ஞானம் அம்மானை முதலிய கவிகள் இன்றைக்கு (1864) மட்டிருக்கிறது. கள்ளப்பின்னு கொள்ளையில் அவர்வர் தங்கள் தங்கள் பொருள்களைத் தூக்கிக்கொண்டோடிப்போகும்போது, இவர் தேம்பாவணியைத் தூக்கித் தலையில்வைத்துக்கொண்டு ஓடினாராம். கொள்ளைக்காரர் அதைப்பறித்துக்கொண்டார்கள். பிற்காலத்தில் இந்த ஏட்டைத்திருத்தவன் இது வேதக்காரருடைய கவியென்று தெரிந்து இவருடைய மகனை அழைத்துக் கொட்டியாரிடத்தில் கொடுக்கக் கொடுத்தான். தன் தகப்பன் கையெழுத்து எவ்வென்று கண்டு



ஆச்சரியப்பட்டு மொய்த்துக்கு வாங்கிக்கொண்டார். [இந்த தேம்பாவணி எமோத்திரம் என் கைவசமானால் அதைப்பார்க்கிறதும் பாக்கியம்வேறில்லை என்று வெகுகாலமாய் ஆவலாசையாயிருந்தேன். அந்த ஏடு ஸ்ரீ மரியசிங்கம்பிள்ளையவர்களுடைய இளையதாரத்து மகன் கடைக்கட்ட மிக்கேல்பிள்ளையவர்களுக்கு வந்து அவர்களுக்குப்பின் அவர்கள் மகன் இன்றுமுத்துப்பிள்ளையவர்கள்வசம் சேர்ந்தது. 1893-ம் வருஷம் டிசம்பர்மீ கடைசியில் நான் முதலாவதாக குருவினத்தந்துக்கு ஸ்தலயாத்திரை போயிருந்தேன். அந்த ஏட்டைப்பார்க்க ஆசைப்பட்டபோது அதைப் பார் ஏட்டை மைவெள்ளை கோடித்துணியில் பூஜையாகச் சுற்றிக்கட்டிவைத்திருந்ததைக்கொண்டுவந்து காண்பித்தார்கள், அபகரித்துக்கொள்ள வாய்மைநிற்று. மரியாதையாய்த் திரும்பக்கொடுத்துவிட்டேன். அப்புறம் அவ்விடம்விட்டுப்புறப்பட்டுற நாளில் அந்த ஏட்டை இன்றுமுத்துப்பிள்ளையவர்கள் என்னிடத்தில் கொண்டுவந்துகொடுத்து, இங்கே இனி இதைக் காப்பாற்ற ஆளில்லை, உங்களிடத்திலிருந்தால் பத்திரமாயிருக்குமென்றார்கள். சொல்லமுடியாத சந்தோஷத்தோடும் ஸ்தோத்திரத்தோடும் வாங்கிக்கொண்டுவந்தேன். இப்படியாக என் பூட்டனார் எழுதிய தேம்பாவணியும் அவர்கள் மகனுடைய மகன் பேரனார் எழுதிய தேம்பாவணியும் என்னிடத்திலிருக்கிறது ].

தாவாய்ப்பிள்ளை கொள்ளையென்று மேலே சொல்லிற்றே. அம்மை சொல்லுகிறது:—"ஒரு கொள்ளைக்காரன் வருவான். அவன்போனபின்பு இன்னொருவன் வருவான். ஒருவனை யறியாமல் ஒருவன் கொள்ளையடிக்குத் தாவிப்பறி செய்யப்படி. கொள்ளைக்காரன் வருகிறதைக் கேட்டால் சனங்களெல்லாம் காடுகளுக்கு ஓட்டம். ஒருநாள் கொள்ளைக்காரன் வருகிறபோது சனங்களெல்லாம் ஓடுகிறார்கள். [செவிடிஅன்பாயி என்றவள் பிள்ளைகொள்ளி அந்தவன், சோனப்பொரி உருண்டைவித்துப் பிழைக்கிறவள், இப்போது ஞானப்பிரகாசம்பிள்ளையவர்களிருக்கிற வீட்டுக்கு அடுத்த மேல்வீட்டிலிருந்தாள். அவளுக்குப்பிற்காலம் அந்தமனையை அவளுவிச் சாமியார் வாங்கி சேசுப்பிள்ளை மதுவேல்பிள்ளைக்குக் கொடுத்தாராம்.] செவிடிஅன்பாயி பருத்திக்கொட்டைப்பானை முதலிய இலை சட்டிகளைத் தலைவாசலில் போட்டு உடைத்துச் சிதறிக்கொண்டு தலையையும் விரித்துப்போட்டுக்கொண்டு இப்போதான் வீடுகொள்ளைகொடுத்தவள்போல ஒப்பாரிசொல்லி அழுதுகொண்டிருந்தாள். கொள்ளைக்காரன் பார்த்துப்போய்விட்டார்கள். கல்லுப்பிள்ளை கரையாளன், சிறுபிள்ளையாயிருக்கிறபோது முத்தத்திலிருந்து சாமிக்கஞ்சி குடித்துக்கொண்டிருக்கிறார்.

கொள்ளைக்காரன் வருகிறானென்று கூப்பாடானவுடனே வட்டிலைக் கல்படப்பில் திணித்துவைத்துவிட்டு அழுதுகொண்டுநின்றார். என்னடா அழுகிறாய் என்று கொள்ளைக்காரன் கேட்டான். அன்றுபிறக்கு வட்டில், என்றுகாண்பித்தார். இதோ கொடுத்துப்பறிச்சுத்தான். சுவாமியடியான் தன்புருஷனுக்குச் சிலர்இக்குப் பஞ்சபோகவேதத்துக் கோவையிலாம் உப்பும் கையில்வைத்துக்கச்சிச் சாறுபிழிந்து இலையை வெளியேயெறிந்தாள். பிச்சைக்கு வாசலில்வந்துநின்ற சங்கமாண்டிச்சிபிள்ளைகள் ருசித்துப்பிடித்து விழுந்து ஒன்றுபொறுக்கிக்கொண்டுஎடுத்து வாயில்போட்டுக்கொண்டதாம். அப்போது காண்டிவிலைப்பஞ்சம். ஆரம்புளிக்கோட்டை பிடிபட்டபின்பு தான் பஞ்சந்தீர்ந்தது. என்னுடையதாய் [illegible] வயதாயிருக்கையில்-அப்பொழுது அவளுக்குக்கலியாணம்பண்ணின முகூர்த்த-தனவாய்ப்பிள்ளை கொள்ளைக்குப் பயந்து வடக்குன்குளத்திலிருந்து தாமறுமித்தன்புருஷருக்குப் போகிறபோது நகைகள் தாலி தவிர மற்றதைப்பாவிகளுக்கு வைத்திருந்ததை எடுத்துக்கொடுத்ததை முந்திபிலேமுடிந்து தோளில்போட்டுக்கொண்டு போகிறபோது அவள் பெரியண்ணை [illegible] முடியத்தெரியாததினால் ஒத்தைமுடிப்பு முடிந்திருந்தது உருவிவிழுந்துவிட்டது. [illegible] [ மரியான்பிள்ளை ] போகிறார்கள். பின்னே வந்த [illegible] செட்டியார் தாய் [illegible] நகையை எடுத்துக்கொண்டாள் என்று சந்தேகம். அவள், தான் எடுக்கவில்லை என்று தன்பிள்ளைமேல் அடித்துச் சத்தியம்பண்ணிக்கொடுத்தாள். அந்தப்பிள்ளை எட்டமான் செத்துப்போயிற்று". [illegible] செட்டியார் சந்ததியை. [illegible] சாக்குடுக்கைபோட்டுப் பிச்சையெடுப்பாராம். இவர் சக்கிலியும் சொந்த மேன்மையும் அடைந்தவர்களுண்டு. [அந்தக்காலத்துக் கொள்ளைக்காரத் தனவாய்ப்பிள்ளை கொள்ளை என்று அம்மை பொதுப்பெயராய்ச் சொன்னதாக நினைக்கிறேன்].

சவரிமுத்துப்பிள்ளை மகா உண்மையும்சேர்வையுமுள்ளவர். அவருடைய யதார்த்தத்தையும் பரமார்த்தத்தையும் குறித்துஒருகதையுண்டு. ஒருநாளை மாமனார் தம்முசெட்டியார் வீட்டுக்குப்போயிருக்கையில் மாமனார் இவரைச் சற்றுநேரம் கடையில் இருக்கும்படிகேட்டுக்கொண்டார். இவர் கடையில் இருக்கையில் ஒருபையல் கொஞ்சம் பருத்திவைத்துக்கொண்டு பயறுமாற்றித் தரக்கேட்டான். அதற்கு இவர் உனக்குப் பருத்தியேது என்றுகேட்டார். மாடுமேய்த்துக்கொண்டிருக்கையில் புஞ்சையில் பொறுக்கினேன் என்றான். அப்ப, அநியாயம், திருடினவகையை நான் வாங்கமாட்டேன், கொண்டுபோ என்றுவிட்டாராம். இந்தக் கதையிப்படியல்ல, மருமகர் ஒருத்தி தன்னை



[illegible]டுக்கவரும்போது கொஞ்சம்பருத்தியைக்கொண்டுவந்துகொடுத்துப் பயறுகேட்க, இது நியாயக்கொண்டுவந்ததோ என விசாரி, அவன் மாமியாருக்கு ஒளித்துக்கொண்டுவந்ததென்று அறிந்து, அதைவாங்கமாட்டேனென்று சொல்லிவிட்டாராம். பட்டிக்காடுகளில் இந்தக்கடைகளில் நடக்கிற வியாபாரம் பாதி இப்படிப்பட்ட வியாபாரமாயும் மிகுதியாய்ப்பண்டமாற்றுவியாபாரமாயும் இருப்பதினாலே, இவருடைய மைத்துனன்மார் முதலியவர்கள், கடையிலே சரக்கு வாங்கவருகிறவர்களிடத்தில் இந்த விசாரணையெல்லாம் பண்ணியா வியாபாரம்பண்ணுகிறது என்று இவரை பரியாசம் பண்ணினதுமல்லாமல், தாங்கள் கெடுபுத்தி சாமார்த்தியமுள்ளவர்களென்றும் சவரிமுத்துப்பிள்ளை வம்சத்தார் பேதைகளென்றும் காண்பிப்பதற்கு இந்தக் கதையை ஒரு திருஷ்டாந்தமாகச் சொல்லிவந்தார்கள்.

சவரிமுத்துப்பிள்ளை வளர்ந்த ஆள். மகா அழகன். மாதிரிகள் பிராமண யோக்கியமாயிருக்கும். இறையூருக்கடுத்த குமாரப்புரத்தில் இவர் ஒரு [illegible] பக்தர்கள் ஒருவர் வீட்டுக்குத் துஷ்டிவிசாரிக்கப்போய் அந்தவீட்டு அம்மாளைக் கட்டி அழுதார். அந்தஅம்மாளுடைய பிள்ளைகள் இவரை அறியாதவர்களானதினால் வெளியேபோய், அம்மையை ஒரு பிராமணன் கட்டிஅழுகிறான் என்று கூப்பாடுபோட்டதாம்.

இவர் வாசுதேவநல்லூருக்குப் புறப்படுமுன்னே இவருக்கும் சுவாமியார் [ மதுசேந்திர சுவாமி ]க்கும் ஏதோ கொஞ்சம் மனஸ்தாபமும் நேரிட்டு, இவர் சுவாமியாரைப் பார்த்து இந்தக் காரியத்தைத் தீர்க்குமுன்னே நீர் பூசைசெய்யவேண்டியதில்லையென்று மறித்தாராம். அப்புறம் இவர் சாமநாயக்கன்பட்டியில் வியாதியாயிருக்கிற செய்தி வந்தபின்பு ஒருநாள் சுவாமியார் இவருடையதம்பி கஸ்பாப்பிள்ளையைக் கூப்பிட்டு; நான் இராத்திரி ஒரு சொப்பனங்கண்டேன்; இராத்திரி ஒரு ஆள் என் காலை ஆவிச்சேர்த்து இறுக்கிக் கட்டிக்கொண்டு, என்பிழையைப் பொறுக்கவேண்டும், என்பிழையைப் பொறுக்கவேண்டும் என்று கேட்டது; என்[illegible] ஆனமட்டும் உதறிப்பார்த்தும் விடவில்லை; யார் யார் என்று கேட்டேன்; சவரிமுத்து என்று சொன்னான்; நான் உன் பிழையைப் பொறுத்துக்கொண்டேன் என்று சொன்னபின்புதான் என்னை விட்டான்; ஆகையால் உன் அண்ணன் இப்போது மரணமாயிருப்பானோவென்று எனக்கு ஐயமாயிருக்கிறது என்று சொன்னாராம்.

அக்காலத்தில் ரோமைசபைக் குருக்கள் தமிழ்ப்பாஷையை அபிமானித்

தி எல்லாரையும் ஆதரியப்படுத்திக்கொள்ள எல்லாருக்கும் எல்
னேன் என்பதாய் சன்னியாசிகளைப் இத்தேசாசாரப்படி உன்
டு, இந்துக்களுடன் புழங்கி சாஸ்திரிகளுடன் தர்க்கிக்கவும், இற
மில் நூலெழுதவுந் தக்க பாஷைத்திறமுடையவர்களையும் வெர
ர்கள். சவரிமுத்துப்பின்னே காலத்தில் இருந்த தைரியநாதசுவாமி
னும், வீரமாமுனியென்றும் பேர் வழங்கிய பெஸ்கி என்ற குருவான
முதல்முதல் காமநாயக்கன்பட்டிப் பங்குக்குத் தான் குருவாய் வந்
இவ்விடத்திலே இரண்டு மூன்று வருஷமிருந்தார். அக்காலத்தில் ம
கத்துக்கேற்ற வைதிகர் வெகுசேர்ப்பத்தான். வீரமாமுனிவர் மார்க்
கத்துக்கேற்றதும் இலக்கண இலக்கிய சம்பந்தமான அமான பலநூல்களை இ
துக்களும் மெச்சத்தக்கதாய் எழுதிப் பிரசித்தம்பண்ணவே சனங்களெ
அபிமானத்தோடே இந்துக்கள் தங்கள் புராணங்கள் காவியங்களைப் படி
தப் புண்ணியமுடையவரமென்று கொண்டாடுவதுபோலத் தங்கள் மா
க்கத்துக்குக் கிடைத்த இந்நூல்களைக் கற்கவும், கேட்கவும் அக்கறையாயி
ருந்தார்கள். மேலும் காமநாயக்கன்பட்டியில் உபதேசியாயிருந்த முத
லிமார் நல்ல வித்துவான்களாய் மார்க்கசம்பந்தமான நேர்த்த நாடகம்,
கவிகள் பாடியிருக்கிறார்கள். வேதக்குருக்களுக்குப் பின்வந்த சேசுசபைக்
குருக்களும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் வேதக்குருக்களுக்கு நிகரல்ல
வென்றாலும் சனங்களோடே அதிகமாய்ப் புழங்கி அவர்களுக்கு நன்மை
தயவு செய்வதில் புகழ்பெற்றவர்கள்.

## செட்டிப்பிள்ளைமார்.

மேலே சொல்லிய தவிடன்செட்டியாரினத்துச் செட்டிப்பிள்ளைமார்
தங்களுடைய பூர்வத்தைக்குறித்துச்சொல்லுகிற கதை என்னவென்று
ல்:— தாங்கள் முற்காலத்தில் சோழதேசத்தில் காவேரிப்பூம்பட்டணத்
தில் குடியிருந்து பெரும்பாலும் வர்த்தகர்களாயிருந்தார்களாம், அப்போது
ஒரு நாள் அந்தப்பட்டணத்துத் தெருவழியாய் அந்த நாட்டுத்துரைக
ராசாவோ வேறு சாதி ராசாவோ பவனி வருகிறபோது, அவர்கள் குலத்
து சிரேஷ்டனான மூப்பன் செட்டி மகள் எட்டிப்பார்க்கவே, ராசா அந்த
ப்பெண்ணைக்கண்டு மிக இஷ்டம் வைத்து அரமனை சேர்ந்தவுடனே, மூ
ப்பன் செட்டியை அழைப்பித்து, உன் மகளை எமக்குக் கலியாணஞ்செய்து
கொடுக்க வேண்டுமென்று கேட்க, மகாராசா, அப்படியே செய்துகொள்
ளுகிறது, ஆக்ஷேபமில்லை என்ன, ஆனால் எங்கள் சாதியில் கலியாணத்துக்
முன் ஏற்பது நாளைக்கு வேண்டும், அந்த ஏற்பாடு நான் ஆனவுடனே
விவாகத்துக்கு உத்தரவாகவேண்டியது என்று மூப்பன் செட்டிசொல்ல
ராசாவும், நல்லதென்று சொல்லி மூப்பன்செட்டியை அனுப்பிவிட்டார்.



ப்பன்செட்டி வீடுசேர்ந்து, தன் சனங்களை அழைப்பித்துக் காரியத்
தெரிவிக்க, எல்லாரும் ஏகவாக்காய், இனி நாம் இந்நாட்டில் ஒரு
ருப்பது இருக்கிறது மரியாதையல்ல, கண்ணுக்குக்காணாத தேசம்
போகவேண்டுமென்றும் ஆண் பெண் சகல சனம் குஞ்சு குழந்தைகளு
டன், கைப்படக்கமான பொன் ரத்தினம் தவிர வேறு ஒரு பொருளும் எ
டாமல் உடுத்ததுணியுடன் இரவே புறப்பட்டார்கள். காவேரியைக்க
டக்கும்போது வலதிரும் கரையாமற் கடந்த பெண்களைச்சேர்ந்த குடும்ப
ங்களெல்லாம் கோயம்புத்தூர் முதலிய சேரதேசத்திற்கும், வலதிரம் கரைக்
கடந்த பெண்களைச்சேர்ந்த குடும்பங்களைப் பாண்டிதேசத்துக்குமாக,
தன் கூட்டத்தை இரண்டாகப் பிரித்துப்போகச்செய்ததில், தெற்கே வந்
தவர்கள் தாம்பிரவர்ணி தீரத்தில் ராசாவாயிருந்த வல்லவ ராசாவிடத்தில்
வந்து அடைக்கலம் கேட்டதில், அவர் தம்முடைய நகரிக்கு ஒரு நாழி
கைக்குத் தென்புறத்திலிருந்த வல்லநாடு என்னும் கிராமத்தையும் குளங்
கள் நஞ்சை புஞ்சைகளையும் விட்டுக்கொடுத்து, இவர்கள் கிராமத்தில் இவ
ர்கள் குலத்தவிர வேறொருவரும் போகக்கூடாதென்று கட்டளையிட்டார்.
அப்படியே நாளதுவரையும் வல்லநாட்டில் இவர்கள் தெருக்களில் வேறு
சாதிக்காரர் குடியிருக்கிறதுமில்லை, குடியிருக்க இடங்கொடுக்கிறதுமில்
லை. இங்கேயிருந்து பலவிடங்களிலும் பல கிராமங்களிலும் ஆரம்புளி வ
ரையும் போய்க்குடியேறியிருக்கிறார்கள். இவர்கள் குடும்பம் சமீபமான
சேக்காரக்குடியிலும் இருக்கிறது.

## தவிடன் செட்டி.

இக் குடும்பத்தைச்சேர்ந்த தவிடன்செட்டியாரைக் குறித்துச்சொல்லு
கிற கதை என்னவென்றால்:—இவர் சேக்காரக்குடியில் பெரிய மனுஷ
னும் செல்வவானுமாயிருந்தார். இவர் தாயாதி பிரிக்கிறபோது களஞ்சி
ல் தவிப்பணத்தைக்கொட்டி நாழியினால் அளந்தார்களாம். மட்டுமெல்லை
யை தவிடே ஆள் போகச்சொல்லிப் பிரித்தார்களாம். இவருக்குப்பிறந்த பத்
து பிள்ளைகள், தாய் வீடுசேருமுன்னமே வாயில் இரத்தம் கண்டு இறந்து
போனதாம். இவர் குடும்பத்தில் ஒரு பெண் அக்காலத்திலே தீக்குழி பா
ய்ந்ததாக ஊருக்கு வடக்கே ஒரு ஸ்தலமிருக்கிறது. இவர் தம்மதர்த்தாக
இனறுதன் செட்டி தீக்குழிப்பாய்ந்த அம்மன் கோவில் கட்டி ஒரு குளமும்
வெட்டிவைத்தார். இவருடைய சாஸ்தா சேகலப்பேரி மலைமேலிருக்கிற
பூனைவுடையார், இங்கே இருபத்தொரு பூட்டம் போட்டு இவர், இவர்பெண்
சாதிபோய்ப் பொங்கலிடுவார்களாம்.

அந்தக்காலத்தில் புளியம்பட்டியில் ஒரு சாமியார் வந்திருந்தார். அவ்விடத்தில் போகிறவர்களுக்குப் பிணி தீர்க்கிறாரென்று ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் செம்பும் வெள்ளியும் மாதாந்தம் கட்டுவார்கள். தவிடன்செட்டியார் பெண்சாதியும் அவரிடத்தில் போய் தன் குழந்தைகள் இறந்துபோகிறதைச்சொல்லிக் குழந்தைக்கு ஆயுசைக்கேட்டாள். உன்னுடைய வாஸ்தா பிசக, அதுதான் உன்க்குழந்தைகளை இப்படிக்கொல்லுகிறது, இனி நீ அந்தக்கோவில்களுக்குப் போகாதே, அப்படியிருப்பாயானால் சர்வேசுவரன் இனிப்பிறக்கும் குழந்தைக்கு ஆயுசு கொடுப்பார், இனி என்னிடத்தில் நீ மற்ற ஜனங்களோடு ஞான உபதேசத்துக்கு வரவேண்டும். இனி அந்தக்கோவில்களுக்குப் போவாயானால் படிவாசலில் செத்துப்போமென்று சொன்னார். அவள் குருவை நமஸ்கரித்துத் தீட்சை பெற்றுக்கொண்டதுமன்றி குழந்தைக்கும் (தம்பு) ஞானஸ்நானமென்னும் தீட்சைகொடுத்துக்கொண்டாள். இந்தச் சங்கதி தவிடன்செட்டியாருக்குத் தெரியாது.

குழந்தை ஒருவயசாகவே பூலாவுடையாருக்குப் போக்கவிட ஏற்பாடு பண்ணினார். பிள்ளைவரத்துக்காக தவிடன்செட்டியார் நேர்ந்திருந்தார். பெண்சாதி புருஷனிடத்தில் நடந்திருந்த காரியங்களைச்சொல்லி என்னைக்கொன்றாலும் நான் இனி அங்கே வரமாட்டேன்; குழந்தையையும் கொண்டுபோகவொட்டேன்; இந்தக்குழந்தை பூலாவுடையாருக்கு அடிமையில்லை; புளியம்பட்டி சன்னாசிக்கு அடிமை, குழந்தையை பூலாவுடையார்கோயிலுக்குக் கொண்டுபோனால் படிவாசலில் செத்துப்போமென்று அந்தச் சன்னாசி சொன்னார், என்று சொல்லி அழுதாள். புருஷனை அவளுக்குத் தேறுதல்சொல்லி அவள்புத்திமையைக்கேட்டுத் தானும் சன்னாசியினிடத்தில் போய் உபதேசமும் தீட்சையும்பெற்று சத்தியவேதத்தில் சேர்ந்துகொண்டார். புது மார்க்கத்தில் சேர்ந்த புதுமை [illegible] வருகிறவழியில் பூலாவுடையார் கோயிலுக்குப்போய் தன் [illegible] அறுத்துப் புளியமரத்தில் கட்டித்தூக்கிவிட்டு சாத்தானையும் சாத்திவிட்டு வீட்டுக்கு வந்துசேர்ந்தார். சனங்கள் சாஸ்திரிக்குப் போய்க்கேட்டபோது ஒரு குழந்தைக்கு சேமமாச்சுது, பூதவேதத்துக்குப் பூசாரி போய்விட்டான், வரப்போகுது உங்களுக்கு ஆபத்து, [illegible] என்று கதறினான், ஜனங்களெல்லாரும் செக்காரக்குடிக்கு வந்தார்கள். அப்போது செட்டிப்பிள்ளைகள் [illegible], [illegible] கட்டு செக்காரக்குடியில் இருந்தாராம். ஜனங்கள் தவிடன்செட்டியை



அழைப்பித்துக் கேட்டார்கள். அந்தப்பிசாசை நானடித்தேனானால் அது என்னைக்கொல்லட்டும்; அதைக்கும்பிடப்போன உங்களுக்கு என் ஆபத்துவரவேண்டும், அதுக்கனைக் காலமடக்கச்சொல்லுகிறாயா, பூசாரி, உன் கண்ணைக்குத்தட்டா என்ற கதையாயிருக்கிறதே என்றார். அந்தக்காலத்தில் அவ்விடத்தில் கவுண்டமார் அதிகாரம். எல்லாருங்கூடி அவரை ஊரைவிட்டுத்துரத்திவிட்டார்கள். நம்மை உயிரோடே விட்டதே புண்ணியமென்றுசொல்லி, பெண்சாதியையும் பிள்ளையையுங்கூட்டிக்கொண்டு "தவிடன் செட்டி பேர் மங்காது, நீங்கள் வர்த்திக்கப்போகிறதுமில்லை, மலையளவு பஞ்சுக்குக் கடுகளவு தீ" என்று அந்தச்சனங்களுக்குச்சொல்லிப் புறப்பட்டுப் புளியம்பட்டிக்கு சன்னாசியிடத்தில் வந்துசேர்ந்தார்.

தவிடன்செட்டியாருக்குப் பிழைப்புக்கு வழியொன்றுமில்லாததினால் சன்னாசியார், அவர் கையில் ஒருபையில் விபூதிகொடுத்து, இதை வருகிற சனங்களுக்குக்கொடு, தருகிற காணிக்கையை வாங்கிக்கொள் என்று உத்தரவு கொடுத்தார். அந்தக்காணிக்கையைக்கொண்டு இவர் பிழைத்ததுமல்லாமல் ஒரு சிறுகோவிலும் கட்டிவைத்தார். குறமடைப் பாளையகாரனுக்குத் தானாதிபதியாயிருந்த பெருமான் செட்டி என்பவர் தவிடன் செட்டியாருக்குத் தங்கச்சி மகனாம். அவரோ அவர் பெண்சாதி பிள்ளைகளோ வேதத்தில் சேர்ந்ததினால் தவிடன் செட்டியார் வம்சத்தாருக்கு சம்மந்தம் பண்ணிக்கொள்ளுகிறதற்கு இலகுவாயிற்று. காமநாயக்கன்பட்டிப்பெரியகோயில் ஆதியில் பெருமாள்செட்டி வகையரா எழவினால் உண்டாகி அவர்கள் மூலமாய்ப்பேரும் பிரஸ்தாபமும் சிறும்சிறப்பும்பெற்றதாம்.

தவிடன்செட்டியார் குமாரனாகிய தருமநாதன்செட்டியார், படந்தபுளி பூவாயியை விவாகஞ்செய்து சவரிராயன்செட்டியார், அந்தோணிமுத்து செட்டியார் என்ற ஆண்பிள்ளைகளையும், மாதாவடியாள், தெய்வாயி, சின்னாயி, அருளாயி என்ற பெண்பிள்ளைகளையும் பெற்று காமநாயக்கன்பட்டியிலும், சித்தான்பட்டியிலும் வாசம்பண்ணி மரித்தார்.

புறநடை:—மேலே சொல்லிய கதைகளின் நிசம் பொய் தெரியாது. 1845-ம் வருஷத்தில் தவிடன் செட்டியாருடைய பெயரையும் அவர் சந்ததிகள் பெயரையும் ஜூபூ எழுதிவைத்திருக்கிறார்கள். தவிடன் செட்டியார், என்பேர் மங்காது, உங்கள் பேர் அழிந்துபோம் என்று செக்காரக்குடியாருக்குச்சொன்னாரென்ற கதை எழுதியும், விருதுங்களாகிறது. இக்காலத்தில் [ 23-9-1899 ] தவிடன்செட்டி யென்றபேர் செக்காரக்குடியில் தெரியுமாவென்று அந்த ஊரில் விசாரிக்கிறபோது, கீச்செக்கார்க்குடி

ஊருக்கு வடபுரத்தில் ஒரு பழங்கிணற்றைக் காண்பித்து, இது தவிடன் செட்டி கிணறு என்றும், அதற்கு வடக்கே சாலைக்கு வடக்கே ஒரு குட்டத்தைக் காண்பித்து இது தவிடன் செட்டி குட்டமென்றும்; அந்தக் குட்டத்துக்குக் கீழ்புறமடுக்க காறு, ஐந்து சாட்டைக்கல் .. போல் பதித்திருக்கிறதை நீர்க்குழிப்பாய்ந்த அம்மன்கோயில் என்றும், இந்த அம்மன் ஆதியில் செட்டிப்பிள்ளைமார் வம்சத்தைச் சேர்ந்த பெண்ணாயிருக்கவேண்டுமென்றும், இது பொல்லாத அம்மனென்றும், செட்டிப்பிள்ளைமார் வீடு குறுகிப் போயிற்றென்றும், காறு வீட்டுக்காரர் இருக்கிறவர்களும் கீழ்ச்செக்காரக்குடியில்போய்க் குடியிருக்கிறார்களென்றும், அவர்கள் தைப்பொங்கலன்று முதலில் இந்த நீர்க்குழிப்பாய்ந்த அம்மனுக்குப் பொங்கலிட்டு விட்டுத்தான் வீட்டில்போய்ப் பொங்கலிடுவார்களென்றும் சொல்லுகிறார்கள். இதுதவிர, இந்த தவிடன்செட்டி ஆர், அவர் வரலாறு என்ன, இந்த நீர்க்குழிப்பாய்ந்த அம்மன் ஆர், அவள் வரலாறு என்ன, தவிடன்செட்டி என்று ஏன் பேர்வந்தது, அவர் இந்தக் குளம் வெட்டவேண்டியதென்ன, அவருக்குச் சந்ததியுண்டா, அவர்கள் எங்கேயிருக்கிறார்கள், என்று கேட்டால் ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது. நம்பர்க்கணக்கெடுத்திலிருக்கிற சர்க்கார் செட்டில்மென்டு பிளானை வாங்கிப் பார்த்தபோது இந்த குட்டம், தவிடன் செட்டி குட்டமென்று இங்கிலீஷில் அச்சடித்திருக்கிறது. அந்தப்பெயர் வந்ததென்னவென்று கேட்டால் ஒருவருக்கும் தெரியாது. என் பேர் மங்காது, என்று தவிடன் செட்டி சொன்னதாகச் சொல்லுகிற கதையோ பொய்க்கதையோ. ஆனால் அது மங்கவில்லை என்பது நிச்சயம். பிள்ளையில்லாமல் அல்லது பிள்ளை தங்காமலிருந்து பிள்ளையாய் கவனித்த பிள்ளை என்பதுக்கு, பிள்ளை பிறந்தவுடனே எரில் தவிட்டுக்குப் போட்டெடுப்பிராட்டி எடுத்ததினால் தவிடன் செட்டி என்ற பேர் வந்ததென்று அம்மை சொல்லியிருக்கிறாள்.

வடக்குத்தெருவும் சர்க்கார் கணக்கிலும் செக்காரக்குடி என்று சொல்லப்படுகிறது, நான் "செக்காரக்குடி" என்று எழுதியிருக்கிறார்கள். முற்காலத்தில் கரும்புப் பயிரிட்டு ஆலை இருந்ததால் செக்காரக்குடிப் பிள்ளை ஒருவர் சொன்னார். இப்போது கரும்பு, கரும்புப்பயிர் என்னவென்று தெரியாத ஊர்களிலும் பழயகாலத்துக் கரும்பாலைகளைக் காணலாம். பனம்பழம், பனைவெல்லம் இச்சீமையில் பிற்காலத்தில் உண்டானதினாலும் ஆதியில் இந்நாட்டுச் சர்க்கரை வெல்லம் என்கிறதெல்லாம் கரும்பிலிருந்துதான். அதை விட்டு எங்கும் கரும்புப்பயிர் செய்யவேண்டியிருந்தது.



## நல்லுப்பிள்ளை.

சவரிமுத்துப்பிள்ளை தம்பியாகிய நல்லுப்பிள்ளை யென்ற நல்லதம்பியாபிள்ளை எக்காலமும் வடக்கன்குளத்திலேயே குடியிருந்தார். அவர் ஆதியாய்க்குடியேறினவரானதினாலும் வெகுவயசுக்கு இருந்ததினாலும் பெரிய குடும்பத்துக்கு சிரேஷ்டராயிருந்ததினாலும் அவருக்குக் கணையாளன் என்று பட்டம். இதினால் இவர் வம்சத்துக்கு இவர் அண்ணன் சவரிமுத்துப்பிள்ளை வம்சத்தையுஞ் சேர்த்துக்கணையாளன்வம்சமென்று பேராயிற்று. பிள்ளைமார் முதலிமார்கள் இனசன சங்கத்தில் நல்லுப்பிள்ளைக்குத்தான் முதல் வெத்திலை பாக்கு, தேவாலயம், சப்பரம், தேர் திருவிழா நடப்பிக்கிறபோது இவர்தான் முதலில் தொட்டுக்கொடுத்து நடப்பிக்கிறது. தேவசகாயம் பிள்ளை சரீரம் துபாக்கியினால் சுட்டுப்பட்டு, மலங்காட்டில் கிடந்ததை இரகசியமாய் எடுத்துக்கொண்டுபோய் கோட்டாற்றுக்கோவிலில் கொண்டுபோய் சேமம்செய்து அவர்காலில் கிடந்த விலங்கைக் கொண்டுவந்து வடக்கன்குளத்துக் கோவிலில் வைத்தவர்களில் இவர் ஒருவர் என்று சொல்லுகிறார்கள். அப்பொழுது இவருக்கு வயசு இருபத்தைந்து என்று சொன்னாலும் என் கணக்குக்கு இருபதுபோல்தானாகிறது.

மேலே சொல்லியபடிக்கு விடுதலைபெற்று தலையிடத்தில் கணக்கு வேலைபார்த்துவந்தார். ஒரு விசை முதலாளியிடத்துக்கு குளச்சைக்குப் போகும்படி வடக்கன்குளத்திலிருந்து புறப்பட்டுப் போகிறவழியில் பசி பொறுக்காமல் அனேகம் பனையேறிகளிடத்தில் பதனி கேட்டதில் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு பனையேறி நயமான பதனி கொடுத்தான். நல்லுப்பிள்ளை ரொம்ப சந்தோஷப்பட்டு நன்றியறிதலாய் அவன் பேரை நினைத்துக்கொள்ள வேண்டுமென்று அவனிடத்தில், உன்பேர் என்னவென்று கேட்டார். புலமாடன் என்றான். பெண்சாதி பேர் என்னவென்று கேட்டார். மாடத்தி யென்றான். பிள்ளைகள் பேர் என்னவென்று கேட்க இந்தமாடன் சுடலைமாடன் என்று மாடன் மாடி வராதபேரில்லை. இந்த நரகப்பேய் பேரில் இவனுக்கு இத்தப்பக்தியானால் மோட்ச இராக்கினியாகிய மரிய தாயார்பேரில் நாம் எவ்வளவு பக்தியாயிருக்க வேணுமென்று தியானித்துக் கொண்டார்.

இவர் முதலாவது ஞானமரியாயி என்பவளைக்கலியாணம் பண்ணினார். அவளுக்குப் பதினொரு குழந்தைகள் பிறந்தது. ஒவ்வொரு பிள்ளைக்கும் மரிய என்று பேர் வரும்படியாகப் பேரிட்டார்.

மேற்படிதாரம் இறந்தபின்பு இரண்டாவது தேரூர் உடையார்போத்திமகளைக்கலியாணம் பண்ணினார். கலியாணம்பண்ணுகிறபோது பெண்ணெம்

பச் சின்னப்பிள்ளை. 10, 12-வயசுக்குச் சேர். உடையார்போத்தி அஞ்ஞானி. அவர் சாமியாரிடத்தில்போய் பிள்ளையைக் கட்டிக்கொடுக்க உத்தரவு கேட்டார். பிள்ளைக்கு வயசுகாணாதென்று சுவாமியார் உத்தரவுகொடுக்கமாட்டோமென்றார். இவர் நெடுநேரம் முழந்தாளிலின்று கெஞ்சிக் கெஞ்சிக்கேட்டும் பிடிவாதமாய் மாட்டோமென்றுவிட்டார். "சுவாமீ, உத்தரவுகொடுக்காவிட்டால் உம்முடைய பாதத்தில் முட்டி என் சீவனைப்போக்கிவிடுவேன்" என்றுஉடையார் போத்திசொன்னதை வீண்பேச்சுப்போல சுவாமியார் எண்ணி: உத்தரவுகொடுக்கமாட்டோம், போ, போ வென்று சொல்ல, உடையார் போத்தி தனத்தில் ஒரு முட்டுமுட்டவே பெரிய காயமுண்டாகி இரத்தம் பீறிட்டது. இரண்டாம் முட்டு முட்டினால் மண்டை வெடித்துப்போம். சுவாமி அதற்குள் அவனைப் பிடித்துக்கொண்டு, இவன் என்ன முரட்டுமுரடனாயிருக்கிறானென்று சொல்லிக் கலியாணத்துக்கு உத்தரவுகொடுத்தார். உடையார் போத்தி இரண்டுபெண்டாட்டிக்காரன். பின்னும் பெரிய விபசாரக்காரனென்றும் பேர். இவனை யாரும் பரிகாசம் பண்ணுவார்கள். பிள்ளைகள்கூட இவனைக்கண்டால்

கண்டைக்காய் மண்டைக்காய் அதனக்காய்
சொட்டுப்போட்டுத்தின்பார் உடையார்போத்தி
எச்சி எடுப்பவன் சாத்தாவி
இதமாயிருப்பாள் அக்காமலை.

என்று பாடுவார்கள். கலியாணம் கட்டின இந்தப்பெண்பேர் சவுரிமுத்து; சாத்தாவிக்குப் பிறந்தவள். அப்போது கலியாணனுக்கு ஐம்பது வயசுக்கு மேல். பெண்ணைக் கட்டிக்கொண்டுபோய்த் தன்முதலாளி வீட்டுப்பெருந்துணையை சந்திப்புவைத்துக் கண்டபோது, சவுக்கு எடுத்துவா, பால் போட்ட: இந்தக்குழந்தைக்குப் பசியாயிருக்கும் என்றாராம்.

இவரும் பத்துப்பிள்ளை பெற்றான். ஆக ஒருகோட்டை இருபத்தொரு பிள்ளைக்கும் மரிய என்ற கூட்டுப்பேரை வைத்துப்போயிட்டார். அந்தக்காலத்திலும் அப்படியே இதற்கு சிலவருஷங்களுக்குமுன் வரையிலும் வேதக்காரர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் இனமுறைப்படி பந்திபோசனம் ஒருவருக்கொருவர் இருந்தது. வேதக்காரர் இந்துக்களின் இனத்தாரிடத்தில் பெண் கொள்ளுகிறதுமுண்டு. ஆனால் பெண்கொடுக்க மாட்டார்கள். புரொடெஸ்டாண்டு வேதம்பரவி இவர்களுக்குள் வழமையில்லை யென்று எங்கும் பிரஸ்தாபமான பின்புதான் ரோமான் வேதக்காரரிடத்திலும் அஞ்ஞானிகள் பந்திபோசனம் விலக்கிக் கொண்டார்கள். கலியாணன்



1807-ம் வருஷத்தில் இறந்துபோனார். அவருடைய மக்களில் மரியதாசப்பிள்ளை வைத்தியசாலையில் கணக்காயிருந்தார். இவர் பேர்பெற்ற கவிராயர் மரியம்மாள் பேரில் அனேக ஸ்தோத்திரங்கள் பாடியிருக்கிறார்:

கல்லுப்பிள்ளைக்கு மூத்ததாரத்துக்கு மரியாயி க-பெண்; மரிதாசப்பிள்ளை, மரிய வியாகப்பபிள்ளை, மரிய சின்னையாபிள்ளையும் பின்னும் ஆறுகுமாரரும் குமாரத்திகளும் பிறந்தார்கள். ஆக ய.

உ-ம்- தாரம் சவுரிமுத்து இடத்தில், மரிய சந்தனி, மரியதாசப்பிள்ளை மரிய ஞானப்பிரகாசம்பிள்ளை. மரிய வியாகுலம், மரியபிலேவிவர்களும் பின்னுமாணும்பெண்ணுமான ஆறுபேர் பிறந்தார்கள். ஆக உக-குமாரர்களையுங் குமாரத்திகளையும் பெற்று கல்லுப்பிள்ளை மரித்தார்.

---

ஐயா தங்கள் இளையபேரனுடைய கல்லுப்பிள்ளை கலியாணனுடைய செய்யுள்கள் சிலதைப் படிப்பார்கள். இரட்சகர் பிறப்பைப்பற்றி அவர் உண்டுபண்ணின இரண்டு பதங்களும் பின்னுஞ் சிலதும் ஐயா படிக்கக்கேட்டு ...ங்களுக்கும் பாடம்.

இந்நேரம் வந்ததேதய்யா என்னய்யா சுவாமி
இந்நேரம் வந்ததேதய்யா.

இந்நேரம் வந்ததெல்லாம் எவை யதரு செய் பொல்லா
செம்மப் பவத்தை யெல்லாஞ் செகத்திற் றூத்தி வெல்ல. [இந்]

மந்தையைத் தேவரீர் தேடச்
சம்மனசோர்கள் மங்கள ராகமே பாட
மந்தைத் துணியால் மூடக் கணங்கள் வெருவி யோட
இந்தப் பாவியைத் தேட இரக்கங் கண்ணீரோட. [இந்நே]

அளவில்லாதவர் நீரல்லோ நீர் தேடி வந்த
அடிமைகள் நாங்களல்லவோ
பழிகேடரல்லோ விந்தப் பவத்தைத் தூத்தி வெல்ல
தலைவனைவிட்டு நல்லோ சப்ரமஞ்சம் புல்லோ [இந்நே]
மாட மண்டப மில்லையோ நீர் தெய்வீகமாய்
வந்து பிறக்க வெல்லையோ ஆடம்பரமில்லையோ
ஆதரிப்பாரில்லையோ கூடமில்லையோ [இந்நே]
மாட்டுக் கொட்டிலுமக் கெல்லையோ.

---

இந்த இராத்திரி பகலானராத்திரி
யென்றெழுதிவைத்தார் தவீது ராயர் சாஸ்திரி

அந்தர வானவருக் கான சமாதானமாக
வந்து சருவேஸ்பரன் மனுடனாகப் பிறந்தார். (இந்தஇராத்திரி)

புண்ணியஞ்செறி விலாச சபை யொன்பதுங் கூடித்
திருப் பாடல் பகர்ந் தம்பர நாடக மாடி
யின்று மகுடமுடி மன்னர் மூவர்க்கு மாபப்
பொன்னுமீரையும் வைப்பச் சின்னப்பிள்ளையாய்ப்பிறந்த (இந்த)

உடையோனுரு வெகலிற்போன வோராட்டைக்
கிருபையுற்றே வெல்லைமலையின் சார்வெனுங்காட்டில்
விடையமுடனே தேடி விடையரடி பரவ
கவோ மிரவில் மனுச்சட லெடுத்துப் பிறந்தார் [இந்தஇராத்திரி]

சகலசிர்த நன்மைத் தேவதாயாரும் அவர்
தமது பேரின்பமுள்ள சற்குருவையாரும்
வெருவாய்த் துதிக்க ரண்டிருகங்களாகரிக்கப்
பகலோனு மூன்றுதிக்கப் பரன் மனுவாய்ப் பிறந்தார். (இந்த).

---o---

## மாதாவடியாள்.

சவரிமுத்துப்பிள்ளை மரிக்கும்போது மூத்தபிள்ளை சவரிப்பிள்ளைக்கு வயசு பத்துமாத்திரம். சவரிமுத்துப்பிள்ளைக்கு வடக்குன்குளத்தில் நிலங்களோ சொத்துக்கள் இல்லாததினால் திரும்பிப்போகாமல் மாதாவடியாள் தன் பிள்ளைகளுக் தாயமாகத் தன் தகப்பனாராகிய தம்முசெட்டியார் வீட்டில்தானே யிருந்துகொண்டார்கள். புருஷன் வைத்துவிட்டுப்போன ஆஸ்தி அவருடைய கடுக்கனும் எழுத்தாணியும் வடுகருத்தான். கொஞ்சம் கடன்தானிருந்தது. மாதாவடியாள் தன் பிள்ளைகளைப் படிக்கவைத்து நல்லொழுக்கத்தில் நடத்திவளர்த்து வந்தாள். மற்றொருவருடைய வுபகாரத்தையுங் கருதாமல் தன்கைப்பாடு கஷ்டப்பட்டுப்பெட்டிக்கொட்டை, நாற்றுப்பிள்ளைகளுடைய சாப்பாடு அன்னுமிக்குச் சம்பளம் செலவு முதலானகாரியங்களில் தன் பிள்ளைகளுக்குக் குறைவுசேரிடாமல் கனமாய்த் தன் காரியங்களை நடத்திவந்தாள். ஒரு அசல்வீட்டுக்குப் பிள்ளைகள் சாப்பிடப்போகாது. தெர்ட்டன்பட்டியில் தன் சகோதரர் வீட்டுக்குக் கூடத் தன்பிள்ளைகளைப்போய்க் கஞ்சி தண்ணி குடிக்கவிடமாட்டாள்.



க்களில் தருமநாதன் தவிர மற்றவர்கள் படித்துத்தேறினார்கள். அவரோ பள்ளிக்கள்ளனாய்ப் படியாமல் மூடனாய்ப் போனதினால் காட்டுச்செட்டி யென்று பேரெடுத்தார்.

காமநாயக்கன்பட்டியில் வெள்ளாங்குடி இரண்டொன்று தான், ஊருக்குமேலக் கடசியில் கோயிலுக்கு வடபுறமிருந்தது. அவர்களுக்குக் கடை வியாபாரந்தான் முக்கியம். இவர்கள் வீட்டுத் தெருவுக்கு எதிரே மேலப்பக்கத்தில் உபதேசி முதலிமார் வீடு இருந்தது. இதற்குத்தெற்கேயின்னும் அதற்கு மேல்புறம் சமீபத்தில் சாமியாருடைய மடைப்பள்ளி அறைவீடும் இருந்தது. ஊரிலுள்ள மற்றவீடுகளில் சாணக்குடிதான் பெருப்பம். மாதாவடியாளுடைய பிள்ளைகள் கொஞ்சம் தலையெடுத்தவுடனே வயிற்றுப்பாட்டுக்குக் கூலிவேலை கொத்துவேலைக்குப் போவார்கள். அவன் சித்தநுதலியானதினால் வீட்டுக்குவெளியே போகமாட்டாள். மகன் மரியசின்னகம் சாணார்புஞ்சையில் கூலிவேலைகளுக்குப்போவார். ஒரு சாணான் இணைறடித்தான். இவர் கூலிக்கு சால்மண் சுமக்கிறபோது ஒரு சாணப்பையன் இவனை நிந்தனையாய் ஏதோ சொல்லிக்கொண்டு இவர் தோளின்மேல் ஏறினானாம். தன் புருஷன் இறந்ததையும் தன் தரித்திரத்தையும் தன் பிள்ளைகளுடைய கஷ்டத்தையும் நினைத்து மாதாவடியாள் அழுவாளாம்.

அப்படி இருக்கிறபோது எட்டியாபுரத்திலிருந்து அரமனைக் காரியமாய் ஒரு கம்பளத்தான் காமநாயக்கன்பட்டிக்கு வந்தான். கறுட்டுச்சாமியடியான் என்ற ஒரு வீணன். அவன் சாணாருக்குள் அம்பலம். வந்தசேவகனுக்குப் படி விசாரிக்கவேண்டிய முறைப்படி கறுட்டுச்சாமியடியான் ஒரு படி தவசங்கொடுத்து ஊர் மேலக்கடசியில் செட்டிச்சி வீட்டில் கொடுத்து சமைத்துச்சாப்பிடுங்களென்று அனுப்பினான். நான் கைம்பெண் என்வீட்டில் ஒருவருக்குச் சமைத்துப்போடுகிறது வழக்கமல்லவென்று சொல்லிவிட்டாள், அதை அந்தச் சேவுகன் கறுட்டுச்சாமியடியானிடத்தில் சொல்ல, அவன் அப்படியானால் அந்தச்செட்டிச்சி என் இருக்கிறாள் என்றானாம். உபதேசியார் இதைக்கேட்டு, என்னிடத்தில் சொன்னால் நான் சமைத்துப்போடுவேனே, அந்த அப்பாயிப் பெண்பிள்ளையைப்போய் ஏன் அழைப்பண்ணவேணும் என்று சொல்லித் தன் வீட்டில் அந்தக்கம்பளத்தானுக்குச் சமைத்துப்போட்டார். இப்படியாக மாதாவடியாள் தரித்திரத்தோடு இளப்பத்தையும் அனுபவிக்கவேண்டியதாயிற்று.

குருவிளத்தத்தில் பலவேசம்பிள்ளை என்ற ஒருவர் இருந்தார். அவர் அந்த ஊரில் வீடு வாசல் நிலங்களையுள்ள மனுஷன். அவருடைய பெண்

சாதி தோட்டம்பட்டிக்காரி. சிறுப்பத்தில் இவளும் மாதாவடியாளும் தோழிகள். அவர்கள் அஞ்ஞானிகளாயிருந்தாலும் தன் மார்க்கத்தாரைப்பார்க்கிலும் அதிக அருமையும் உறுத்துமுள்ளவர்களாயிருந்தார்கள். மாதாவடியாளுக்கு அவள் தங்கச்சி யென்று முறை. இப்போது வாழ்வாயிருக்கிற அவளிடத்தில் போய் தன் சொம்பலங்களைச் சொல்லி அழுதாள். அவள் தன் புருஷனிடத்தில் சொல்ல, அவர் மாதாவடியாளுக்குக் குடியிருக்கவும் அவள் பிள்ளைகளுக்கு ஒரு கடை கட்டவும் இடம்விட்டுக்கொடுத்து வேண்டிய ஒத்தாசைசெய்து மாதாவடியாளையும் அவள் பிள்ளைகளையும் குருவினத்தத்தில் கொண்டுவந்து குடியிருத்திவைத்தார். அந்தப் புண்ணியவானுடைய உதவி காரணமாய் மாதாவடியாளுடைய சந்ததியாரிலும் செல்வத்திலும் குருவினத்தத்தில் விருத்தியானது. மாதாவடியாள் தோட்டம்பட்டியில் காஅ௰-ம் ஆண்டு மரணமானாள். [1810]

## சஞ்சீவிப்பிள்ளை.

மூத்தகுமாரன் திவ்வியானந்த சுவாமியிடத்தில் சேர்ந்து அதிககல்வி விர்த்தியடைந்து லத்தீன்பாஷை வாசிக்கவும் அர்த்தப்படுத்தவும் பழகியிருந்தார். வடக்குன்குளத்தில் மாதாவடியாள் என்ற பெண்ணைக் கலியாணஞ்செய்தபின்பு சுவாமியாரிடத்தில் அலுவலைவிட்டுப்போனார். தம்முதன்செட்டியார் இறந்தபின்பு சேலநித்தான்பட்டியில் கடைவைத்து வியாபாரஞ்செய்து சீவனம்பண்ணிவந்தார். காகசா-ரு பங்குனி மீ (1819) தென்காசிக்குப்போய் சரக்குப்பிடித்துக்கொண்டு வருகிறவழியில் வெள்ளாளன்கோட்டையில் பேதி கண்டு நித்தான்பட்டியிலுள்ளவர்கள் செய்தியறிந்து வந்து வேண்டியமட்டும் பிரயாசப்பட்டுப்பார்த்தும் பிழையாமல் மரித்துப்போனார். டை வெள்ளாளன்கோட்டையில்தானே அடக்கம். அவர்சாகிறபோது கூ-பொன்போலக்கடனிருந்தது. [ஒருபொன் பத்துப்பணம், ஒருபணம் பத்துத்துட்டு ஒருபொன் = ரூ. 2-1-4] மார்க்கப்பத்தி வைராக்கியத்தில் ஒருவிசை சுவிசேஷமார்க்கத்து உபதேசியை அடித்துப்போட்டாராம்.

சஞ்சீவிப்பிள்ளைக்கு மிக்கேல்பிள்ளையென்ற குமாரனும், சவரிமுத்து, மாதாவடியாளென்ற குமாரத்திகளும் பின்னுஞ்சில குழந்தைகளுமுண்டு.

## ஞானையாபிள்ளை,

என்ற ஞானமரியஞானப்பிரகாசம்பிள்ளை தன் தமயனுக்குப்பின்பு சுவாமியாரிடத்தில் படிப்புத்தேறி, கிழாக்குளத்தில் புதுமைக்கண்ணு என்ற பெண்ணை விவாகம்பண்ணி அவ்விடத்தில் சமுசாரித்தனம் செய்துவந்தார்.



பின்பு உண்டான கொள்ளைக்காய்ச்சலில் கிழாக்குளத்தில் வாலவயதில் இறந்துபோனார். அவருடைய பிள்ளைகளும் இறந்துபோனதால் அவர் வம்சம் அற்றுப்போயிற்று. அவர் எழுதிய சலப்பிரளய உலா, கண்ணக்கொழிப்பு, கழிநெடில்முதலியவை அடங்கிய ஏடு ஒன்று ஆனைவீடு மரியதாசப்பிள்ளை மகன் நல்லதம்பியாபிள்ளையிடத்தில் [1864] இருக்கிறது. காசுயச-ரு சித்திரை மீ ௰௨ உ சவரிமுத்துப்பிள்ளை குமாரன் ஞானமரியஞானப்பிரகாசம் பிள்ளை மரணமடைந்தார் புதவாரம் பொழுதத்தமிசதின் பிறகு வியாழக்கிழமை சரீரத்தை எடுத்து அடக்கினார்கள், கிழாக்குளத்தில். [1789-ஆம் ஏப்பிரல் மீ 23 உ].

## மரியசிங்கம்பிள்ளை

குருவினத்தத்தில் கடைபோட்டுச்சீவனம்பண்ணிவந்தார். படிப்பு கூடப்பிறந்த மற்ற மூன்றுபேர்களுக்கும் குறைவு, கணக்கு முதலியவைகளிலும் அதிகப்படிப்பு இல்லை. ஏடு எழுத்தும் அதிகமாய் ஓடாது. என் தம்பி மதுரேந்திரம் ஓலை எழுதிச் செந்துருக்குப்போட்டால் சித்துச் சிறக்கென்று லட்சணமாயிருக்கும், நான் செந்துருக்குப் போட்டால் சோத்துப்பானைக்குக்கலவடைக்காகும் என்பாராம். ஆனால் செட்டுத்தனத்தில் இவரை மிஞ்சின செட்டி கிடையாது. சேர்வைகாரன்பட்டி கண்ணுசெட்டியார் மகள் இன்னாசியம்மாளைக் கலியாணம் பண்ணினார். இவள் வீட்டுக்குடித்தனத்தில் மகா செட்டிக்காரி. புருஷனுக்கு மிருந்த உதவி. அந்தக்காலத்தில் பலவகைக்காக நடமாடினதினால் அவருக்குப் பணம் கோட்டும் பார்க்கிறது பெண்சாதிதான். தனக்குத் தெரியாத எதுவும் அவளிடத்தில் கேட்டு நடந்துகொள்ளுவார். அவர் கட்டுவது பறையன் வேட்டி ஆறு முழம். அதுவும் முட்டுக்கு மேல்தான். மேல்வேட்டி கிடையாது. கோவிலுக்குப் போகிறபோது ஒரு அழுக்குத்துணி தலையில்சுற்றியிருக்கும். தனக்குப் பணங்காசு வந்துவிட்டதென்ற பெருமை பெத்தரிக்கம், மேத்தாப்பு கிடையாது. அவருடைய சிறு பிள்ளையொன்று வந்து கடையில் சீனி கேட்டதாம். கொஞ்சம் உப்பை அள்ளிக்கொடுத்தாராம். அது வாயில் போட்டுப்பார்த்துத் துப்பி விட்டு ஓடிவிட்டது. கொஞ்சம் சீனி கொடுக்கக் கூடாதாவென்று கேட்டதுக்கு, இன்றைக்கு ஒரு நாள் கொடுத்தால் அதுதான் வேலையாய்க் கேட்குமென்றாராம்.

இவர் தமையனார் சஞ்சீவிப்பிள்ளை இவரிடத்தில் உன் மகளை என் மச்சினன் மதுரேந்திரஞ் செட்டியாருக்குக் கொடு என்று கேட்க; நான் கொடுக்கிறேன், உன் மகளை என் மச்சினன் சாமியடியான் செட்டியாருக்குக்

கொடுவென்றார். அந்தப்படியே கலியாணம் நடந்தது. மதுரேந்திரஞ் செட்டி அப்பாயி, அதிலும் சாமியடியான் செட்டி சுத்தப் பேதை. இக்தக்காலத்திலானால் சாமியடியான் செட்டிக்கு ஒருத்தியும் வாழ்க்கைப் படமாட்டாள். கலியாணத்தன்றைக்கு ஒரு எழுத்தாணி எடுத்துக் காதைக் குத்திக் கடுக்கன் போட்டார்கள். மச்சினன் கடையில் ஒரு நாளிருக்கும் போது ஒரு சவுப்பச்சி சிலுப்பட்டை மஞ்சள்குளித்துப் பூ வைத்துக்கொண்டு சரக்கு வாங்க வந்தாள். சுவாமியடியான் செட்டியார், மதினி, மணக்குதே என்றார். அந்தவேளை மச்சினன் மரியசிங்கஞ் செட்டியார் வந்து, சவுப்பச்சி உனக்கு மதினியா வென்று செவிட்டில் ஒரு அறைபோட்டார். மரியசிங்கஞ்செட்டியார் மகள் மரியம்மாளைக் கெட்டின மதுரேந்திரம்பிள்ளை கொப்பம்பட்டியிலிருந்தார். அவர் அப்பாயி யானாலும் அவள் கெட்டிக்காரி. மரியசிங்கஞ் செட்டியார் தன் மக்களை ஏழைகளான மாப்பிள்ளைமாருக்குக் கட்டிக்கொடுத்து, ஐம்பது நூறு கொடுத்து வீடுங் குடியுமாக்கி வைத்தார்.

அந்தக்காலத்தில் உறமுறையை விட்டுக் கொள்வினை கொடுப்பினை நடத்துகிறதேயன்றி வேறு காரணம் நினைக்கிறதில்லை. மேலும் ஆண்பிள்ளைக்குக் கலியாணமாக இருபத்தைந்து முப்பது வயசமரும். பெண்கள் அபூர்வம், பத்து, பதினொன்று, பன்னிரண்டு வயசில் கலியாணமாகிவிடும், பெண் பேசப்போய் நடந்து செருப்பு எழுக்குத்தோறும் ஒரு அடுக்காய்த் தேயும். இந்த ஐந்து சகோதரருக்குக் கிட்டின இனத்தில் ஒருவர் பெரிய ஆள்— ஐயா அவர் பேர் சொன்னார்கள், மறந்து போயிற்று—அக்காலத்தில் கலியாணம் பண்ணுமட்டும் முகக்சவரம் செய்யமாட்டார்கள். ஆகையால் பெரிய தாடியும் மீசையுமாயிருக்கிறார். தன் தாய் கூடப்பிறந்த மாமனாரிடத்தில் போய்; அண்ணாவி, எனக்குக் கஞ்சி காய்ச்சிக்குடிக்க கஷ்டமாயிருக்கிறது. எனக்கொரு கையான் பார்த்து வைக்கவேணும் என்று தன் காரியத்தைச்சொன்னார். ஐயா, அப்படியே செய்கிறது, என் தங்கச்சி பிள்ளையைப்பற்றி நான் நினைவில்லாமலா இருக்கிறேன், உங்கள் அத்தை இப்போது நிறைந்த மாசங்குளியாமலிருக்கிறாள், அது பெண் பிறந்தால் என் கூடப்பிறந்தாள் பிள்ளையை விட்டுவிட்டு யாருக்குக் கட்டிக்கொடுப்பேன் உனக்குத்தான் கட்டிக்கொடுப்பேன், ஐயா, நீ யோசிக்கவேண்டாம், போவென்று அருமையாய்ச் சொல்லி திருப்பினார். பெண் பிறந்து அப்படியே காத்திருந்து கலியாணம் பண்ணினாராம்.

ஷை. இன்னாசியம்மாள் மரியசிங்கஞ்செட்டியாருக்குப் பதினாறு பிள்ளை



பெற்றாள். அவள் இறந்துபோன பிற்பாடு மரியசிங்கஞ்செட்டியார் தன் பிள்ளைகளுக்குத் தெரியாமல் இரண்டாந்தாரம் கலியாணத்துக்கு ஆரம்பித்தார். அப்போது மூத்த தாரத்துக் கடைக்குழந்தை தேவசகாயம் பிள்ளைக்கு வயசு ஒன்றரை. இரண்டாம்பேருக்குத் தெரியாமல் சோழவந்தான் பட்டிக்கிட்ட இருக்கிற பட்டி அல்லது செக்கடிபட்டி என்ற ஊருக்குப் போய் அங்கேயிருந்து பெண்ணைக் கூட்டிக்கொண்டு காமநாயக்கன் பட்டிக்கு நேரேவந்து சாமியாரிடத்தில் தாலி கட்டிக்கொண்டார். அவர் மூத்த மகள் கொப்பம்பட்டி மரியம்மாள் பொல்லாத ஆங்காரி. தகப்பனார் கலியாணம் பண்ணிக்கொண்டு வருகிறாரென்று கேட்டவுடனே அவளும் தம்பி சவரிமுத்துப்பிள்ளை பெண்சாதி அன்னம்மாளும் தங்களுக்கேற்ற பெண்டுகள் பிள்ளைகளையும் வீட்டில் கூட்டிக்கொண்டுவந்து மொச்சைப்பயறு அவித்து விளம்பி, பெண்ணும் மாப்பிள்ளையும் ஊர் மந்தை புளியமரத்துக்கிட்ட வந்தவுடனே, இந்தப் பெண்டுகள் ஒருவரை ஒருவர் கட்டியழுது மாரடித்து மறுதார்ப்பாய்ச்சி இல்லாத கோரணிகளெல்லாம் பண்ணினார்களாம். இப்படி இழவு பட்ட பாடாய்க் கிடக்கிறது கேட்டு மாப்பிள்ளை தம்பி மதுரேந்திரம்பிள்ளை முந்தியோடிவந்து மரியம்மாளைப்பார்த்து; நடந்துபோன காரியத்துக்கு இனி என்ன செய்கிறது என்று நாடியைத் தாங்கி நல்லவார்த்தை சொல்லியும் கேட்கவில்லை. சாளுத்தி யாரோ அடகுபோட்டிருந்த அழகுகுளிசத்தை [அழகுகுளிசம் என்றால் பொன்மணிக்கோர்வை] கைக்கூலி கொடுத்த பிற்பாடு கோரணிகள் மட்டுப்பட்டது. கிழட்டு மாப்பிள்ளையும் பெண்ணோடு வந்து மகள் வாயைப் பொத்தி சலவு பண்ணினார். இந்த இரண்டாந்தாரக்காரி சவரியாயியும் பிள்ளைகள் எட்டோ பத்தோ பெற்றாள்.

மரியசிங்கம் பிள்ளைக்கு தேவன் பிள்ளைகளைக்கொடுத்ததுபோல மிகுந்த ஐசுவரியமும் கொடுத்தார். ஐந்து சகோதரர்களில் எல்லாருக்கும் பின் இவர்தான் அதிக வயசுக்கிருந்து [illegible] [1832 சனுவரி] மரணமானார். அக்காள் இன்னாசியம்மாள் பிறந்த மூன்றாம் மாசம் . ] மக்கள் மிகுந்த செலவுசெய்துவெகு ஆடம்பரமாய் பூஞ்சப்பரம் முன்சப்பரம் பின்சப்பரம் கட்டி அடக்கம் பண்ணினார்கள். தன் சகோதரர் நாலுபேரும் ஊரை விட்டுப்போயிருந்த இடங்களில் மரித்துப்போனார்களென்று இவர் தன் ஊர் குருவினத்தத்துக்கப்புறம் கால் எடுத்து வைக்கிறது கிடையாது.

மரியசிங்கம்பிள்ளை முதல் தாரத்துக்கு மரியம்மாள், ஞானசமரியாயி, மரியவியாகம்மை, அருளாயி, வியாகம்மை, அதினேசம்மாள், என்ற பெண்

பிள்ளைகளும்; மிக்கேல்பிள்ளை, சவரிமுத்துப்பிள்ளை, தேவசகாயம்பிள்ளையென்ற குமாரரும்: இரண்டாவது சவரிபாயிக்கு, மிக்கேல்பிள்ளை, சஞ்சீவிப்பிள்ளையென்ற ஆணும், பெண் மாதாகடியாளும் பிறந்தபின் மரியசிங்கம்பிள்ளை மரித்தார்.

இவர் பேரன்மாரில் மரியசிங்கம்பிள்ளை வெகுபெருமை டம்பமாய்ப் பேர்ப்பிரஸ்தாபமான முதலாளியாகவும் சாமர்த்தியவானும் பெரிய வர்த்தகனுமாயிருந்தார். 1863ம்-ஆண்டில் அமெரிக்கா தேசத்தில் யுத்தம் நடக்குங்காலத்தில் பெருத்த பஞ்சுவியாபாரஞ்செய்தார். அவ்விடத்து யுத்தம் நின்றுபோகிறது தெரியாமல் இவ்விடத்தில் அதிகங்கொள்முதல் செய்ததில் திடீரென்று விலை விழுந்துபோக பெரிய நஷ்டம்வந்து சேர்ந்தது. அதினால் அவரும் தம்பிமாரும் பிந்திக் குறைவுபட வேண்டியதாயிற்று.

## தருமநாதன் செட்டியார்.

இவருக்குப் படிப்புத்தெரியாது; தடித்தனமுண்டு, முரட்டுப்புத்தி, மகா கோபக்காரன். காட்டுவேலை ஊர்வேலைசெய்வார். தருமநாதன் என்பது இவருடைய தாயாருடைய தகப்பனார் பெயர்; தாயார் அந்தப் பெயரைச் சொல்லிக் கூப்பிடக் கூடாததினால் இவருடைய முரட்டுத்தனத்துக்காக காட்டுச்செட்டியென்று கூப்பிடுவாள். தாயிட்டபேரை ஊரிட்டழைக்கும் என்றபடி இவருக்குக் காட்டுச்செட்டியென்று பேராயிற்று. வாத்தியாரை வழிமறித்துக் கட்டப்போவாராம். தாய் எவ்வளவு மறைவில் பஞ்சுபருத்தி நூல் விற்றுக்காசு சேர்த்திருந்தால், கோட்டு மூங்கில் மல்லாப்பு இறைவாரத்தில் கிண்டிக்கொண்டிருக்கிற குழந்தைக்குள் போட்டு வைப்பாளாம். தான் சொன்னபடி தாய் கேட்கவில்லையென்றால்: அன்று, நீ காசுவைத்திருக்கிற இடந்தெரியும், கொள்ளைக்காரன் வாட்டும், காண்பித்துக் கெடுக்கிறேனென்பாராம். ஒருநாள் தாயார் கேப்பைக்கூழ் காய்ச்சிவைத்துவிட்டு வெளியே போயிருக்கிறவேளை இவர் வந்துபார்க்க, உறியில் ஒருகலயத்தில் எண்ணெய் இருந்தது. இவ்வளவு செய்யும் நமக்குத் தெரியாமலல்லவா ஒளித்து வைத்திருக்கிறாள் என்று தாயைத் திட்டிக்கொண்டு, எடுத்துக் கேப்பைக்கூழ்ப்பானைக்குள் அவ்வளவையும் விட்டுக்கிண்டி ஒருவாயெடுத்து வைத்தார். கசப்பு வாயில்வைக்கமுடியாது.—வேப்பெண்ணெய். ஒரு பானைக்கூழும் ஒருவருக்கும் உதவாமற்போயிற்று.

இவர்பெண்சாதி மரிகருதாள் சத்தக்கூறசெட்டிமகள். வீட்டுப்பண்டங்களெல்லாம் செதிச்செதுக்கிச்சேமித்துவைக்கும். சமுசாரி வீட்டுக்குடித்தனத்தைக் காப்பாற்றப்பட்டவளல்ல. தான் எப்போதும் அவள் அக்காள் வீ



ட்டுக்குப்போயிருப்பாள். அவளுடைய அக்காள் ஆரென்றால் புருஷன் தருமநாதன் செட்டியாருடைய தமையனார் சஞ்சீவிப்பிள்ளையுடைய பெண்சாதி: அவள் மேலத்தெருத்தாண்பட்டியி லிருந்தாள். தருமநாதன் செட்டியாரிருந்தது தொட்டம்பட்டி. ஒரு நாள் தருமநாதன் செட்டியார் தன் பெண்சாதி தலைமேல் நெய்யைவாரிப் போட்டு விட்டாராம்.

குருவினத்தத்தில் தமையனார் மரியசிங்கம் பிள்ளையிடத்தில் சொக்காரவழக்குக்கு ஓயாமல்ப் போவாராம். மூன்று தரம் அடித்துக்கொண்டு கிடந்து பங்கு வாங்கினாராம். கடைக்குட்டித் தம்பி மதுரேந்திரம் பிள்ளை இவனை எழுப்பி விட்டாரென்று குருவினத்தத்தார் சொன்னார்களாம்.

தருமநாதபிள்ளை, ஒருதரம் உயிடு-பொன் பகுந்துகொண்டுபோய் ஒரு சோடு காளைமாடு வாங்கி உழக்கொண்டு போகையில், வாய்க்கூடு கொண்டுபோக மறந்துபோனதினால் அரைஞாண்கயிற்றை அவிழ்த்து இரண்டுமாட்டுக்கும் மூஞ்சியைக்கட்டி உழுதாராம். பின்பு வீட்டுக்கு மாட்டைக்கொண்டுவந்து தாவணியில் கட்டி தட்டையும் உதறிப்போட்டுவிட்டுப் போனார். மூஞ்சிக்கட்டு அவிழ்க்க நினைவற்றுப் போயிற்று. ராத்திரி மழைபெய்து கவிறு இறுகி காலமே வந்துபார்க்க இரண்டுமாடும் செத்துக்கிடக்கிறதாம்.

தருமநாதபிள்ளை காதுகுத்து அடிக்கடி வந்து வருத்தப்படுவார். அதோடு காய்ச்சல்சன்னி வந்து செத்துப்பிழைத்தார். அவர் தம்பி மதுரேந்திரம் பிள்ளை வடக்குன்குளத்திலிருந்து அவரைப் பார்க்க வந்து, அவருக்கு வைத்தியஞ் செய்யும்படியாகவும் தன் மகன் சவரிமுத்துப்பிள்ளை கலியாணவேலை பார்க்கும்படியாகவும் தன் வீட்டுக்கு வடக்குன்குளத்துக்கு அழைத்துவந்தார். கலியாணத்துக்கு கண்டாங்கி முதலியது வாங்கும்படி இவரும் கவிராயர் மரியதாசப்பிள்ளையுமாக வடக்குன்குளத்திலிருந்து வீரவநல்லூருக்குப் போயிருக்கையில் இவருக்கு சுரமுண்டாயிற்று. சவரி வாங்கு சேர்மாதேவி, பத்தையில் ஈர்வை தீர்ந்து சாப்பை குத்தி மரியதாசப்பிள்ளை கலியாணத்துக்கு கொண்டுவந்து சேர்த்தார். இவர் வீரவநல்லூர்க்கோர்ச்சேர்ந்த கீழக்குளத்திலிருக்கிற தம்முடையமகள் சவரிமுத்தைக் கட்டிக்கொடுத்த மருமகன்வீட்டில் சுரத்தில்ரோகித்த சன்னியுண்டாகி இறந்துபோனார். இவர்தமையனார் ஞானையாபிள்ளையும் இவரும் ஒருஇடத்தில் அடக்கமானார்கள். காலகங்கரு கார்த்திகைமீ (1815 நவம்பர்) வடக்குன்குளத்தில் கலியாணமுடிந்த மறுநாள் இழவுஞ்சே வந்தது. தருமநாதபிள்ளைக்கு சவரிமுத்து என்ற மகளும் ஞானப்பிரகாசம் என்றமகனும் இருந்தார்கள்.

# மதுரேந்திரம்பிள்ளை.

## 1766—1821

### கல்வி.

௲௭௱௮௰௭௵ பிலவங்க௵ ஆவணி௴ ௨௰௩௳ (1787-9-3) தயக்கி யெழுதியிருக்கிற திருக்காவலூர்க் கலம்பகம் அடைக்கலமாலை என்ற சுவடியின் கடைசியில் "அஞ்ஞாயப் பிரஞ்சிக்கு மதுரேந்திரம்" என்று தன் பெயரை எழுதியிருக்கிறார்கள். இவர்கள் பிறந்தது வடக்கன்குளம். கடைசிப்பிள்ளை. ஒன்றரைவயசில் தகப்பனார் இறந்துபோக பிள்ளைகளுந்தாயும் மேலே சொல்லியபடி காமநாயக்கன்பட்டியில் குடியிருந்தார்கள், அவ்விடத்திலே மதுரேந்திரம்பிள்ளை ஆறுமாசம் படித்தார்கள். அப்புறமெல்லாம் படிப்பு சொந்த முயற்சிதான். மிளகாய்த் தோட்டமுதலிய தோட்டங்களில் வேலைசெய்யும்போது விட்டாத்தி நேரங்களில் ஏடும் எழுத்தும் படிப்புந்தான். ஒரு குறைகோக்காட்டி வாத்தியார் இருந்தார்; அவருக்கு எலிவந்து கடியாதபடி இராத்திரிகளில் விழித்திருந்து விரட்டி பொறி வைத்துப்பிடித்து பலவிதமாய் அவருக்கு வழிபடுவோனாயிருந்து படித்தார்கள். சிறுவயசுமுதலே கல்விப்பிரியமும் பக்திவிசுவாசமு மிருந்ததென்று அவர்கள் எழுதியிருக்கிற சுவடிகளினால் தெரிகிறது. கவிராயத்துவ மிருந்ததினால் வயித்தியநூல் முதலிய ஏடுகளில் அஞ்ஞான தேவதைகள் சம்மந்தமானபேர்கள் வாசகங்களைமாத்தி வேதசம்மந்தமாகத் திருத்தியெழுதிவைத்திருக்கிறார்கள்.

### மாமன்.

மதுரேந்திரம்பிள்ளைக்கு தன் தாய்கூடப்பிறந்த மாமன் சவரிராயன் செட்டியார் வீட்டில் பெண் கட்ட ஆசை. சகோதரர் ஒருவருக்கும் தாய் கூடப்பிறந்த மாமன்மார் பேரில் பிரியமில்லை; அதினால் தம்பியை மாமன் வீட்டில் பெண் கட்டவேண்டாமென்று சொன்னார்கள். அவர்கள் அநியாயப்பட்டவர்கள், கோடு வழக்குக்காரர் என்றார்களாம். அதற்கு மதுரேந்திரம் பிள்ளை, அம்மான் வீட்டிலிருக்கிறது பூனைக்குட்டியானாலும் அதைத்தான் தாலிகட்டுவேனென்றாராம். ஷை மாமன்மார் வம்சத்தார் தாங்களெப்போதும் திட்டவட்டக்காரரென்று பெருமை சொல்லிக்கொள்ளுவார்களாம். "செட்டி கட்டறுப்பு, கணையாளன் வம்சம் உழுந்தவைச்ச அம்மி; 'தோ என்றால் வரும், சீ என்றால் போகும்'' என்று பரியாசம் சொல்வார்களாம். அதுவும் நிசந்தான். பகை விரோதம் பண்ணிக்

சொன்னால் அப்புறம் கூடி செட்டிப்பிள்ளைமார் வருவில் இணங்குவதே இல்லை. "சித்திரை மீ பாடுபட்ட திருநாள் வருமே, அப்போது எல்லாரும் ஒன்றாய்க்கூடி காமநாயக்கன்பட்டியில் பெரிய வெள்ளிக்கிழமை யன்று சமைத்துச் சாப்பிடுவார்கள். மறு நாள் முதல் இன்னும் ஒரு வருஷத்துக்குப் பழையபகை பகைதான். கரையாளன் வம்சத்தார் ஒரு நாள் ஒருவனுக்கொருவன் மண்டையை உடைத்துக்கொண்டாலும் மறுநாள் கூடிக் கட்டி யழுவான்.

## கலியாணம்.

மதுரேந்திரம்பிள்ளை தொட்டண்பட்டியில் மாமனார் வீட்டில் கலியாணம் பண்ணினார்கள். மாப்பிள்ளைக்கு வயசு இருபத்தைந்து நிறைந்து இருபத்தாறு நடக்கிறது. பெண்ணுக்குப் பன்னிரண்டுவயசும் மூன்றுமாசமும். கோவில் கலியாணம் 1791ம்-ஞு ஆகஸ்து மீ 15 உ திங்கள்கிழமை யன்றும் மறு மாசம் செப்டெம்பர் 8 உ வியாழக்கிழமை யன்று வீட்டுக்கலியாணமும் நிறைவேறியது. கலியாணமுடிந்து இரண்டாம் வருஷத்துக்குப்பின் பங்குனி மாசத்தில் திங்கட்கிழமை பெண் ருதுவானது. தங்கள் கலியாணத்தைக்குறித்து அவர்கள் எழுதிவைத்திருக்கிறது எத்தனை அருமையான வாசகம்:—

"காளயுக்தி-ஞு விரோதிகிருது ஞு ஆவணி மீ கூ-உ அர்ச்சியசிஷ்ட தேவமாதாவின் மோக்ஷத்துக்கெழுந்தருளின திருநாளன்று திங்கள்கிழமை பூசையில் நன்மைவாங்கின இவ் பிறகு இருபத்தஞ்சாம் நாழிகையளவில், காமநாயக்கன்பட்டிப்பாதுகாவல், செண்பகப்பாவையில்லாமலும் பவித்ர அர்ச்சியசிஷ்ட தேவமாதாவின் கோவில் சன்னிதானத்தின் முன்பாக வடக்கன்குளம் சவரிமுத்துப்பிள்ளை குமாரன் மதுரேந்திரத்துக்கும் தொட்டண்பட்டியிலிருக்கும் சவரிராயன் செட்டியார் மகள் அருளாயியை நாலு திருச்சபையறிய ஞானக்கலியாணத்தின் சடங்குஞ்செய்து சவேரியார் நாசரிகுருசுவாமியவர்கள் பெரிய ஆசீர்வாதமும் கொடுத்தருளினார். அதின் பிறகு கன்னி மாசம் உ௰௨ உ வியாழக்கிழமையன்று லோக்காஸ்திரத்தின்படி அக்கியானமில்லாமல் சாதியாசாரத்தின்படியே குருவினுத்தத்தில் நாலு உறவின்முறையும் அறியும்படிக்கு யாரும் உறவுமுறையுமாகக்கூடி மணவறைப்பந்தலில் திருமங்கிலியம் தரித்து விவாகம் நிறைவேற்றி வைத்தார்கள். † இந்தக் கலியாணத்துக்கு உதவியாயிருக்க உத்தரவுகொடுத்து கோவில் கலியாணஞ்செய்வித்தது பிரஞ்சிக்கு சவியெர் நாசரிகுருசுவாமியவர்கள், அவருடைய பரிபூரண ஆசீர்வாதத்தினால் சகலகாரியமும் அனுகூலமாயிருந்தது."



## குழந்தைகள்.

கோவில் கலியாணம் முடிந்து நாலு வருஷம் நிறைந்து மூத்தப்பிள்ளை பெண் பிறந்தது. ஆனந்த-ஞு ராட்சத-ஞு ஆவணி மீ கூ உ ஞாயிற்றுக்கிழமை. [1795—9—16] மறுநாள் அவஸ்தை ஞானதீட்சைபெற்று மரித்தது. பேர் சவரிமுத்து.

இரண்டாவது பெண், மரியமாதாவடியாள் [பிறந்தது 1796—7—1]
மூன்றாவது ஆண், மரிய சவரிமுத்து [1798—10—17]
நாலாவது ஆண், மரிய சவரிராயன் [1801—11—29]

ஐந்தாவது பெண், மரிய ஞானப்பிரகாசம் [1804—1—14]. இந்தக் குழந்தை பத்து மாசமிருந்து இறந்துபோயிற்று. அச்சன்குளத்தில் ஊருக்கு வடக்குப் புளியங்குளம் கால்வாய்க் கரையில் அடக்கினது.

ஆறாவது ஆண், மரிய விசேந்திமுத்து (1805—3—14) இதற்கு ஞானஸ்நானங் கொடுத்தது தத்துவ போதக சுவாமியவர்கள்.

ஏழாவது பெண், அன்னம்மாளென்ற அன்னமரிய அந்தோணிமுத்து [1807—8—7]

அன்னம்மாள் பிறந்த மறு மாசம் இரண்டாவது பிள்ளை மரிய மாதாவடியாள் மரணமாயிற்று. ஏழுவயசில் இவளுக்குக் குமரகண்டவலி வந்துபட்டதுயரம் சொல்லி முடியாது. நின்றுப்போல நின்றுப்போலத் தூக்கியெறிந்துவிடுமாம். அவளுக்கு செய்யாத மருந்தும் பக்குவமும் இனிமேலும். அந்த வலிப்பு வரும்போது பார்த்தால் பரதாபம் சகிக்கமுடியாது. அவளுக்கு வயித்தியம்பார்த்த நிமித்தம் மதுரேந்திரம்பிள்ளையும் வைத்திய சாஸ்திரங்கள் ஆராயவும் எழுதவுமாகி நம்முடைய குடும்பத்தில் பண்டிதத்துக்கு முதல்வராயிருந்தார்கள். அவர்களுக்கு முதலில் வயித்தியம் சொல்லிக்கொடுத்தது பசவன் என்ற பள்ளன். மூன்று வருஷம் கிடந்தாள். இறக்கும்போது வயசு பன்னிரண்டு நடக்கிறது. இளிக்கூடு மாதிரியான பூஞ்சப்பரங் கட்டி யெடுத்துக்கொண்டுபோய் அடக்கஞ்செய்தார்கள். அமிர்த-ஞு பிரபவ-ஞு புரட்டாசி மீ யகூ உ ஞாயிற்றுக்கிழமை பொழுதத்தமிக்க பதினஞ்சு நாழிகைமேல் மரியமாதாவடியாளாற்றும் பிரிந்து திங்கள்கிழமை தங்கச்சி ஞானப்பிரகாசத்தின் கல்லறைக்குக்கிட்ட வடபுறத்தில் கல்லறையிலடக்கி வைத்தது. [1807—9—27].

இந்த மகளிறந்த தொண்ணூறாம் நாள் ஆறாவது ஆண் குழந்தை மரிய விசேந்திமுத்து வயிற்றளைச்சலில் மார்கழி மீ யகூ உ வியாழக்கிழமைவிடிந்து ஒருச் சாமத்தில் மரணமாயிற்று. முன்சொன்ன கல்லறைக்குத் தென்

புறத்தெக்க காலாங்கரைமேலே படக்கினது. அன்று சுவாமி பிறந்த திருநாள் ஒருசந்தி; மறுநாள் வெள்ளிக்கிழமை டை திருநாள்.

எட்டாவது ஆண்குழந்தை ஒன்று பிறந்து அதுவும் இறந்துபோயிற்று. இப்படியாகக் கரிசல்காட்டு மன்னருக்கு ஐந்து பிள்ளைகளையுங் கொடுத்தார்கள்.

[மேற்படி குழந்தைகள் அடக்கின இடம் இப்போது லக்குத்தெரியாது. டை கிராமங்களை மாறிப் புதுக்கனாகள் போட்டிருக்கிறது. லக்குத்தெரியுமென்று சொன்ன சுப்பபிள்ளை யென்ற தொண்ணூறு வயசுக் கிழவனைக் கூட்டிக்கொண்டு போய் இடங்களெல்லாம் சுற்றிப் பார்த்தும் நிச்சயம் துலங்க வில்லை 1893-12-28].

## அச்சங்குளம்.

மதுரேந்திரம்பிள்ளை அச்சங்குளத்தில் கடைவைத்து சீவனம்பண்ணினார்கள். சமீபமான தொட்டம்பட்டியில் தாயாரும் தமையன் காட்டுச் செட்டியாரென்ற தம்முபிள்ளையும், தாய்கூடப்பிறந்தவரும் பெண்கொடுத்தவருமாகிய மாமனார் சவரிராயன் செட்டியாருமிருந்தார்கள். மதுரேந்திரம் பிள்ளை, பெண்சாதி தலைப்பிள்ளை பெறுமட்டும் அவ்விடத்திலிருந்து அச்சங்குளத்துக்குப்போய் கடை வியாபாரஞ்செய்து அப்புறம் அச்சங்குளத்துக்கே பெண்சாதியோடு போய் வீடுகட்டிக் குடியிருந்தார்கள். அச்சங்குளத்தில் கடைவியாபாரமும் எருத்துமாட்டு வியாபாரமும் உழுபடையும் உண்டு. கரிசல்காட்டிலிருந்து பருத்தி புகையிலை முதலியது எருத்துமாட்டில் தெற்கே வடக்குன்குளம் முதலிய இடங்களுக்குக் கொண்டு போய் விற்று அங்கேயிருந்து கருப்புக்கட்டிமுதலியது வடக்கே கொண்டுவருவார்கள். அச்சங்குளத்தில் கடை வியாபாரமுமல்லாமல் பிற்று பொன்வாணிபமும், பண்டிதத் தொழிலுமிருந்தது.

## பாக விசுத்தி.

சகோதரர் நால்வரும் அத்தனை ஐக்கியமாக இருந்ததாகக் காணவில்லை. பிதிரார்ச்சிதச்சொத்து இருந்தால்மாத்திரம் அதைமாத்திரந்தான் சொக்காரர் பாகம் பண்ணிக்கொள்ளலாமேயன்றி சுயார்ச்சிதத்தைப்பற்றி ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லை யென்ற ஏற்பாடு அக்காலத்தில் இல்லையாக்கும். அதினால் சொக்காரர் ஒருதரம் பாகம் பண்ணிக்கொண்டாலும் ஒருவனிடத்தில் சொத்து விர்த்தியானால் திரும்பவும் அழிச்சுக்கழிச்சுப்பாகம் பண்ணவேண்டுமென்று சற்று ஏழையாய்ப்போனவன் வழக்குப் பண்ணுவான். அவனுக்கும் நாலுபேர் சேர்வார்கள். ஊரார், அதிகாரி, பேரில் ஆணையிட்டு மறித்துத் திரும்பவும் பிரிசல் பண்ணுவார்கள். எந்தவழக்கு விசாரணையும் ஊருக்குள் தீர்ந்துபோகுமேயல்லாமல் அதுக்கு மிஞ்சிப்போக இடமில்லை



மதுரேந்திரம்பிள்ளைக்கும் சகோதரருக்கும் பாகவிசுத்தியான சீட்டின் இடதுபக்கம் துவக்கம் பூச்சியரித்துப் போய்விட்டதினாலே அதுபிறந்த ஆண்டு தெரியவில்லை.

...திரஞ் செட்டியாருக்கு சஞ்சிவிசெட்டி மரியசிங்கஞ்செட்டி தம்மு செட்டி......வது நாங்கள் தயாதிபிபகாரமாய் ஒன்றுக்கொன்று கொசர் பண்ணி நாமனுய்க்க... ...கள் நாலுபேர் கணக்குப்பாத்துத் தீத்தது பங்குக்கு பொன்-உயிசு-பணம் அ-அரைக்கால் ஆ..பருந்து குடுத்தபடியி கட்டிக்கொள்வாராகவும் இந்த விபகாரங்களில் ஆதாமொருதர் ஒருதர் பேரில்...... உறமுறைக்கு அபதாரம் பொன் உயிசு.ம் குடுத்து தொடுத்த விபகாரமுமினாந்து போவோ...றுதிக்கொடுத்தோம் சஞ்சிவி செட்டி மரிய சிங்கஞ்செட்டி தம்முசெட்டி மதிசொக்கிரஞ்...யார் இன்னாசிமுத்துப்பிள் இவர்கள் சொல்ல இந்த விருத்திச் சீட்டெழுதினேன்.

...டு-க பாம் படம் சுவடு-க மெலிடு சுவடு-க சஞ்சீவி மரியசிங்கம்...ராயன் சவெரிராயன் இப்படிக்கு அறிவென் இன்னாசிமுத்து.

[மேலே பேர்கண்ட இன்னாசிமுத்துப்பிள்ளை யென்பவர் படத்தலைப்புளியூராயிமகளைக் கட்டின இன்னாசிமுத்துப்பிள்ளையா யிருக்கவேண்டுமென்று அம்மை சொல்லுகிறாள்.]

## பெருமையும் இரக்கமும்

மதுரேந்திரம் பிள்ளை குணத்தில் திட்டாந்தமாய்க்காணலாம். அதினால் எந்த இன சனத்துக்கும் இல்லையென்று சொல்ல மனம்வராது. அச்சங்குளத்து வீட்டில் இனசனத்துக்கு உபசாரம் ரெம்ப நடக்கும். இவர்கள் தமையனார் மரியசிங்கஞ் செட்டியார் சுத்தக் கஞ்சனென்று தெரியுமே. அவர் மகன் கொப்பம்பட்டி மரியம்மாளுக்கு மதுரேந்திரம்பிள்ளைவீட்டில் இரண்டுபிள்ளைப் பேறு பார்த்தார்கள். தாயாருக்கு ஐசுவரியனான மகன் மரியசிங்கம்பிள்ளை உதவியில்லைப்போலும். தாயாரும் மதுரேந்திரம்பிள்ளையும் காட்டுச்செட்டியாரும் இவர்கள் மாமன்மார் மைத்துனன்மாரும் ஐக்கியமாகஇருந்தார்களாக்கும். காட்டுச்செட்டியார் முரடனும் மூடனுமிருந்தாலும் அன்பும் உருக்கமுமுடையவராயிருக்கலாம். மரியசிங்கஞ்செட்டியார் சாந்தமும் அமர்ந்த சுபாவமுமுடையவராயிருந்தாலும் தன் காரியக்குட்டியாய் அன்பும் இரக்கமுமற்றவராயும் கடினசித்தமுடையவராயுமிருக்கலாம். செல்வ மிகுந்த மக்கள் பெற்றோரை ஆதரியாமல் மதியாமல் போறதும், ஏழையான மக்கள் தாய்தகப்பனை வணங்கிப் பணிவிடைசெய்து காப்பாற்றுவதும் லோகத்தில் எப்போதும் காணலாம்.

## இருந்த ஊர்.

மதுரேந்திரம்பிள்ளைக்கு கரிசல்காட்டை விட்டு வடக்குன்குளத்திற்குப் போய் குடியிருக்கவேண்டுமென்ற எண்ணம் வந்தது.—கரிசல்காட்டில் வேதக்கார வெள்ளாங்குடி யொருக்கொன்றுதான் இருக்கும். காமநாயக்கன் பட்டியில் ஒருவீடு, குருவினத்தத்தில் ஒரு வீடு, கொப்பம்பட்டியில் ஒரு வீடு, மேலத்தீத்தான்பட்டியில் ஒருவீடு, தெக்குத்தீத்தான்பட்டியில் ஒரு வீடு, அச்சங்குளத்தில் ஒருவீடு, செவ்வல்பட்டியில் ஒரு வீடு, இலந்தைப் பட்டியில் ஒரு வீடு, இப்படித்தானிருக்கும். இவர்களுக்கு அங்கங்கே சீவனம் கடைதான். சமுசாரித்தனமும் வைத்துக்கொள்வார்கள். இந்தச் செட்டிப் பிள்ளைமார் தவிர வேறே சாதிக்காரர் கடை வைக்கிறதில்லை. கடை வியாபாரமும் தெரியாது. இந்த ஊர்கள் ஒரு நாழிகை இரண்டு நாழிகை வழி தூரத்திலிருக்கும். பூசைக்கு எல்லாரும் காமநாயக்கன் பட்டிக்குத்தான் போகவேணும். வீட்டில் வரும் நன்மை தின்மைகளுக்கு அஞ்ஞானிகள்தான் உதவவேண்டியது.

ஐந்து பிள்ளைகள் இறந்துபோனதுமல்லாமல் இருக்கிற பிள்ளைகளுக்கும் அச்சங்குளம் பிடிக்கவில்லை. பிள்ளைகள் சகவாசத்துக்கு அஞ்ஞானப்பிள்ளைகள் தான். படிக்கவேண்டியது அஞ்ஞான வாத்தியாரிடத்தில் தான். ஆண் குழந்தைகள் இரண்டு பேருக்கும் தாங்களே படிப்பு சொல்லிக் கொடுத்தார்கள்.

ஐயா எழுதியிருக்கிறது:— "அ௲ரு ஆவணிமீ எனக்கு வயசில் என் தகப்பனாரவர்கள் அரவரி தொடங்கித் தந்தார்கள். அது தொடங்கினது வெள்ளிக்கிழமை. அந்த மாசம் சில நாளைக்குப் பின்பு உடுத்து புறவீச்ச கன்னி யுண்டாயிக்கிடந்து குணமாயிற்று. வெகு நாள் படிக்கவில்லை. ஒரு அஞ்ஞானப் பையனுக்கு அப்போது அந்த வியாதி யுண்டாய் மரித்துப்போனான். எனக்குத் தெரியும். எனக்கு வியாதியுண்டான போது வந்த உறவின்முறையார் பார்க்கவந்தவர்களைத் தெரியாது. வியாதி சுகமானபோது வந்தவர்களை யறிவேன். பின்பு சுப்பிரமணிய பிள்ளையிடத்தில் சில நாள் படித்துப்பின்பு தொட்டன்பட்டியில் எங்கள் பேரனார் வீட்டிலிருந்து ஆண்டபெருமாள் பிள்ளையிடத்திலும் அவர் பெரிய தகப்பனார் அங்கப்பபிள்ளை யிடத்திலுமவர் தம்பி முருகப்ப பிள்ளையிடத்திலும் படித்துத் திவாகரம் படிக்கையில் எங்கள் வீட்டிலடச்சங்குளத்தில் வந்து குத்தாலஞ்செட்டியாரிடத்திலும் சிலநாள் படித்தேன்."

மக்களிருவரும் பள்ளிக்கூடத்திற்குச் செல்லும்போது, ஆளுக்கொரு அசை செய்து கொடுத்தார்கள். பிற்காலத்தில் பங்கிட்டபோது தம்பி அசை



தமையனுக்கும் தமையனார் அசை தம்பிக்கும் விழுந்தது. இந்த அசை இப்பொழுது (1899.) நம்மிடத்திலிருக்கிறது.

மூத்தமகன் சவரிமுத்துப்பிள்ளைக்குப் பதினொன்றரை வயசாயிருக்கிற போது படிக்கவெழுதிக்கொடுத்த, சுவாமி பாடுகளின்பேரில் தாழிசை, வியாகுலமாதாப் புலம்பல் அடங்கிய ஏடும் இருக்கிறது. அதில் "யேசுவே யடியேனை யிரட்சியும். கா அ௲ரு ஆனிமீ யசுஉ திங்கட்கிழமை (1810-6-25) யன்று எழுதி முடிந்தது முற்றும். மதுரேந்திரங்கையெழுத்து. சவெரிமுத்துப்பிள்ளை பேரன் சவெரிமுத்துக்கு" என்றெழுதியிருக்கிறார்கள். எவ்வளவு சிறுவயசில் பிள்ளைகளுக்கு நற்றமிழ் படிப்பித்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் கையெழுத்து எவ்வளவு சேர்த்தியான எழுத்தென்றும் காலத்தில் அச்செழுத்துப் படித்த பிள்ளைகள் இச்செந்தமிழை வாசிக்கவும் கருத்துணர்ந்து கொள்ளவும் எவ்வளவு கஷ்டப்படுவோர்கள் என்றும் கவனிக்கவேண்டியது.

இந்தக்காலத்தில் மதுரேந்திரம்பிள்ளை தாயார் தொட்டன்பட்டியிலிறந்துபோனாள். மாமனார் சவரிராயன் செட்டியாரும் மாமியாளும் முதிர்ந்த வயசு. அவர்கள் மகன் தருமநாதன் செட்டியார் வடக்குன்குளத்தில் குடியிருந்தார். அந்த ஊரில் அவர் ஒருவருக்குத்தான் கடை. அதினால் அவருக்கும் அவர் வம்சத்தாருக்கும் கடையீடென்பது முதல்பேராயிருக்கிறது. சவரிராயன்செட்டியாரும் பெண்சாதியும் தங்கள் மகன் வீட்டிற்கு வடக்குன்குளத்துக்குப் போய் மரணமாக வேண்டுமென்று எண்ணமுடையவர்களாயிருந்தார்கள்.

## பிறந்த ஊர்.

மதுரேந்திரம்பிள்ளைக்கு வடக்குன்குளம் அவர் தகப்பனார் ஊரும் அதுவே குடும்பத்துக்கும் வேத மார்க்கத்திற்கும் தலை நகரியாயிருந்தது. பந்துக்கள் வீடு தெருத்தெருவாயிருந்ததோடு வேதக்கார முதலிமார் வீடும் ராசாக்குடியுமாக அனேக வீடுகள் இருந்தது. கோவில் சிறப்பும் சப்பரம் தேர் திருநாள் யாவும் இவர்கள் குடும்பத்தாருக்குள்ளிருந்தது. மதுரேந்திரம் பிள்ளையினுடைய பத்தி விசுவாசத்திற்கும் கல்வி யறிவு திறமைக்கும் பிள்ளைகளுடைய சுகத்துக்கும் சந்தோஷத்துக்கும் வடக்குன்குளமேயன்றி அச்சங்குளம் அல்ல.

## புது வீடு.

அ௲ரு-ளு அவர்கள் சிறியதகப்பனார் சவரிப்பிள்ளை கலியாணன் மூத்தகுடியாள் மக்களும் இளையகுடியாள் மக்களும் பாகம்பண்ணிக் கொண்டார்கள், அதற்கு இரண்டொரு வருஷத்திற்குமுன் கலியாணன் இறந்து

போனார். அவர் மரிக்குமுன், என் அண்ணன் மக்களுக்கு வீட்டுக்கு ஒரு மனைகொடுக்கவும் என்று தன் மக்களுக்கெழுதி வைத்தும் சொல்லியுமிருந்தாராம். மக்கள் அதை மறைத்திருந்தார்களாம். ஒருதடவை மதுரேந்திரம்பிள்ளை வியாபார நிமித்தியமாக வடக்குன்குளத்திற்கு வந்திருந்தபோது கரையாளன் மூத்தகுடியாள் மகன் மரியவியாகப்பபிள்ளை கொஞ்சம் மனை நிலத்தைக்கூட்டிக் கொண்டதாக அவருக்கும் இளையகுடியாள் மகன் மரியதாசப்பிள்ளைக்கும் அடிபிடியாய் ஊரில் கரையேறினார்கள். மதுரேந்திரம்பிள்ளைக்கு வடக்குன்குளத்தில் குடியிருக்க விருப்பமிருக்கிறதென்று சனங்கள் அறிந்தபோது அவர்களுக்குண்டான சந்தோஷம் இம்மட்டென்றில்லை. ஊரார் கூடிப்பேசி, கரையாளன் சொல்லியிருந்த திட்டப்படி ஒழுங்குசெய்து மதுரேந்திரம்பிள்ளை வீடு கட்டுவதற்கு மூன்றிலொருபங்கு நடுப்பங்கு நிலத்தை எல்லைபோட்டுக் கொடுத்தார்கள்.

அவர்களுடைய பங்குநிலம் எப்படியிருந்ததென்றால்:—

வடக்குன்குளம் மனை கண்டது: மரியாம் பிள்ளை வீட்டுக்கு கிழக்கு, குருவினாதம் மரியசிங்கம்பிள்ளை கடைக்கும்மேற்கு, தென்வடல் மூன்று வாலமாயிருந்ததில் கீழ்பக்கத்து வாலம் மூன்று கண்டமாக தெற்குக்கண்டம் மரியதாசப்பிள்ளைக்கும், நடுக்கண்டம் மரியவியாகப்பபிள்ளைக்கும், வடக்குக்கண்டம் மரியசீனியர பிள்ளைக்கும் பகுத்தி.

மேலப்பக்கத்து வாலத்தில் தெற்குக்கண்டம் காத்தர் தோட்டம், நடுக்கண்டத்தில் பெரிய வீடும், வடக்குக் கண்டத்தில் சமையற்புரையும் சொட்சிப்பிள்ளைக்கு.

நடுவாலத்தில், தெற்குக்கண்டம் மைதோட்டமென்று, நடுக்கண்டத்தில் பெரிய புதுவீடு, வடக்குக்கண்டத்தில் மூன்று தட்டாக சிறுவீடு, மதுரேந்திரம் பிள்ளைக்கு மாக இருந்தது.

இதுகளிற்கண்ட முழம் கிழமேல் உத்தேசம் சரி, தென்வடல் முழம் உத்தேசம் முழம் கயி.

இப்படியாக மதுரேந்திரம்பிள்ளை தான் சிறுவயசுமுதல் குடியிருந்ததும் பெண்சாதிக்கு சொந்த இடமுமாயிருந்த கரிசல்காட்டைவிட்டு வடக்குன்குளத்தில் குடியானார்கள்.

அப்போது மதுரேந்திரம்பிள்ளைக்கு வயசு ௬௰௪
மனைவிக்கு வயசு ௧௰௧
மகன் சவரிமுத்துப்பிள்ளை வயசு ௰௫
மகன் சவரிராயபிள்ளை வயசு ௰௦
மகள் அன்னம்மாள் வயசு ௫



ஐயா எழுதியிருக்கிற வக்கணையாவது—

அ௰எ-ளு தையீ எங்கள் தகப்பனாருக்கு வீடு கட்டும்படிக்கு அவர்கள் சிறிய தகப்பனார் மக்கள், கீழ்பக்கம் மூத்தகுடியாள் மக்களும், மேல்பக்கம் இளையகுடியாள் மக்களும் குடியிருந்ததினால், நடுப்பக்கம் தென்வடலாய் மூன்று கண்டமாக இருந்ததை விட்டுக்கொடுத்து அந்த இடத்தில் வடக்குன்குளத்தில் டை தையீ முதல் வீட்டுவேலை கட்டுவித்து முடித்து டை அ௰எ-ளு வைகாசி ஸ்ரீ வடக்குன்குளத்துக்கு எங்களய்யா குடியிருக்கும்படி எங்கள் தாயாரையும் எங்களையும் அச்சங்குளத்திலிருந்து கூட்டிக்கொண்டு சகல சாமான்களையும் மாடுகள் முதலானவைகளையுங் கொண்டு வடக்குன்குளத்துக்கு வந்தார்கள். வந்தவுடனே எங்கள் மாமனார் தருமநாதன்செட்டியார் வீட்டிலிறங்கியிருந்து அந்த ஸ்ரீத்திலதானே எங்கள் வீடு பால் காய்ச்சிக் குடிபுகுந்தோம். (1812—6—7) டை மனையில் தெற்குக் கண்டத்தில் கிணறிருந்ததைத் தோட்டமாகவும், நடுக்கண்டத்திற் பெரிய வீடுங்கட்டி வடக்குக் கண்டத்தில் தொழுவாகவும் மாடுகள் கட்டியுமிருந்தது. அ௰அ-ளு தோட்டத்தில் தென்னங்கன்று முருங்கை வைத்துக் கிணற்றில் கைத்துலாவும் போட்டுக் கீரையும் விதைத்து வந்தோம்.”

வடக்குன்குளத்தில் பிள்ளைமார்கள் வீடு ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு பேர் இருக்கும். இனமுறைப் பாத்தப்படி பெரும்பாலும் ஆண்பிள்ளைகள் பேரைப் பெண்பிள்ளைகள் சொல்லமாட்டா நிமித்தம் வீடுகளுக்குப் பேர் வைத்து, அந்தப்பேர் வழக்கமாகிப் போயிருக்கலாம். அப்படியே ஒவ்வொரு வீடுகளுக்கும் ஒரு பேருண்டு. போத்தி கட்டின நம்முடைய வீட்டுக்குப் புது வீடு என்று பேராயிற்று.

அச்சங்குளம் வீடு.

அச்சங்குளத்து வீட்டை அரசப்பபிள்ளைக்குக் கொடுத்துவிட்டு வந்தார்கள். அந்தவீடு ஊர்மத்தியில் கிழமேல்தெரு மத்தியில் இருக்கிறது. இப்போது வாசல் வடக்கேபார்க்க இருக்கிறது. அந்த வீட்டுக்குக் கீழ்புறத்தில் தென்வடலாயும் தெரு இருக்கிறது. முன்னேவாசல் கிழக்கேபார்க்க இருந்ததாம். வீட்டுக்குக் கீழ்புறம் தெருவில் பழையகாலத்துக் கல்ஆட்டுரல் ஒன்று பதிந்திருக்கிறது. அந்தக்காலத்தில் நாலு ஐந்து வீடுகளிருந்த ஊர்களெல்லாம் இப்பொழுது நாற்பது ஐம்பது வீடுகளாயிருக்கிறது. ஐயா பிற்காலத்தில் எழுதியபடி பட்டிகளெல்லாம் பட்டணங்களாயிருக்கிறது. அரசப்பபிள்ளை மதுரேந்திரம்பிள்ளைக்கு வேண்டியவராயிருந்தார். அவர் சகோதரி பிள்ளை கொள்ளியத்தவன், இவர்கள் வீட்டுக்கூடுகூட்டுக்கு உதவியாயிருந்

தானம். தொட்டன்பட்டி அச்சன்குளம் இந்த இடங்களிலுள்ள வெள்ளாளர் தவிட்ன்செட்டியார் குலத்தில் சம்மந்தப்பட்டவர்களாயிருந்தபடியால் இன சன முறைப்படி ஐக்கியமாகவும், ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிடுகிறவர்களாகவுமிருந்தார்கள்.

டை அரசப்பபிள்ளை தகப்பனார்பேர் கருப்பபிள்ளை. அரசப்பபிள்ளைக்கு சுப்ப பிள்ளையென்றும் கருப்ப பிள்ளையென்றும் இரண்டு குமாரர். அவர்கள் மக்கள், அரசப்ப பிள்ளை, வேலாயுதம் பிள்ளை, இப்பொழுது டை வீட்டில் இரண்டுபாகமாய்க் குடியிருக்கிறார்கள். மேலேசொல்லிய அரசப்பபிள்ளை சகோதரி அம்மணி என்பவள் மகாபுண்ணியவதியாயிருந்தாளென்று இந்நாள்வரையும் விசேஷமாய்ச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். (1893.)

(இனி நான் மதுரேந்திரம் பிள்ளை யென்றும் அவர்கள் பெண்சாதி யென்றும் வலித்து சொல்லுகிற வருத்தமான பெயரைப் பேர்களை விட்டு, பேரத்தி ஆத்தாள் என்று செமப்படி சொல்வேன். J. D. S.)

ஆத்தாளுக்கு வடக்குன்குளத்துக்கு வரப் பிரியமேயில்லை. ஐந்து பிள்ளைகளையும் இங்கே கரிசல்காட்டுக்கு வாரிக்கொடுத்தோமே, இருக்கிற மூன்று பிள்ளைகளும் அங்கேபோனால் நல்லாயிராதா என்று அந்தப்பிள்ளைகளுக்காகத்தான் வந்தார்கள்.

அம்மை சொல்லுகிறது:—

"என்னும் மிளகுவத்தலும் தொண்டெட்டி வியாபாரஞ்செய்வதற்காக என்றுசொல்லி வடக்குன்குளத்துக்கு வந்தார்கள். அப்புறந்தான் அத்தைக்கு இவ்விடத்தில் நிலையாய் குடியிருக்கிறதற்காக என்று தெரியவந்தது. அத்தைக்கு வடக்குன்குளத்துக்கு வரவே மனமில்லை. அச்சன்குளத்திலே வயித்தியத்திற்கு இவர்களுக்கு ஒரு கொடிக்கால் விட்டுக்கொடுத்து வியாபாரம் மற்றதிலும் குறைவில்லாமலிருந்தது. செல்வச்சோற்றுக்குத் தண்ணீர் ஊற்றி புல்லுப்பானைக்குத் தண்ணீர்விட்டு விளக்கேற்றிவைத்துப் போட்டுப் புறப்பட்டு வந்தார்கள். வடக்குன்குளத்துக்கு வந்தபோது செல்வமும் சிறப்புமாய் வந்தார்கள்."

### இல் வாழ்க்கை.

"அம்மானும் அத்தையும் அன்றிலும்பேடையும் போலிருப்பார்கள். அம்மான் வழியனுப்பிக்கொண்டு போகிறபோது, அவர்கள் காலில் அத்தை விழுந்து கும்பிடுவார்கள். திரும்பி வீட்டுவந்து சேரும்போதும் அப்படித்தான் கும்பிட்டு எழுந்திருப்பார்கள்; இரண்டுபேரும் சந்திரசூரியர் போலிருப்பார்கள். உருக்கிவிட்டாற்போல வளர்த்தியும் பல்வரிசையும் வெப்பும் வெகு



அழகாயிருப்பார்கள் அம்மான். அத்தை அழகும் அப்படித்தான். அத்தை கரிசல்காட்டு வழக்கப்படி, வீட்டைவிட்டு வெளிப்பட்டால் முக்காடு போடாமல் புறப்பட மாட்டார்கள்.

"வடக்குன்குளத்திற்கு வந்தபின்தான் நான் அவர்களைப்பார்த்தேன். எங்கள் வீடு தேவாபி ஆத்தாள் வீட்டுக்கு, அவள் மகன் மரியவியாகப்பபிள்ளை முறைக்காய்ச்சலில் இருபத்துநாலு வயசில் மரணமான துட்டிகேட்க எங்கள் வீட்டுக்கு அத்தைவந்தார்கள். வரகரிசியும் தாளம்பூவும் காய்ச்சினசேலை கட்டிக்கொண்டு வந்தார்கள். வீடு பால்காய்ச்சினபோது நான்போய்ச் சாப்பிட்டேன். வடக்குன்குளத்தில் எல்லாரும் அம்மானை ஒரு ராசா போல் சமஸ்தான பிரபுபோல் எண்ணி மரியாதை செய்வார்கள். வீட்டில் ஒரு சத்திரம்போல்தான், கட்டுச்சோறு கட்டிமுந்தாது. வரத்தாளும் போக்காளுந்தான். வடக்குன்குளத்து திருவிழாவுக்கு வருகிறவர்களும் கோட்டாற்றுத் திருவிழாவுக்கு வருகிறவர்களும்: எல்லாம் அவர்கள் இனசனந்தான். வந்தார் இறங்குமிடம், வழிபோவார் தங்கு மடம்."

### செல்லப் பிள்ளைகள்.

ஐயா சொன்னது:—"அநேகம்பிள்ளைகள் இறந்துபோனதினால் எங்களை வெகு செல்லமாய் வளர்த்தார்கள். வேலை, வருத்தம், வீட்டுக்காரியம் தெரியாது. நாங்கள் உடுக்கிறது சாயவேஷ்டிதான்; கையில் காப்பு, அரைஞாண், காலில் மிஞ்சி, கரிசல் காட்டு நாய்க்கன்மார் இப்போது போடுகிற தினமானமாதிரி கடுவில் கல்பதித்த கடுக்கனும் பக்கத்தில் குவளைக் கடுக்கனுமாகக் காதில் மூன்றுசோடி கடுக்கன். வருத்தம் ஒன்றுமில்லாமல் சாப்பிட்டுக்கொண்டு உல்லாசமாய் ஆடப் பாடப் படிக்க இப்படியிருந்தோம். ஒரு வேலை ஏவ வேணுமானால்: ஐயா, அந்தச் செருப்பைக் காலில் போட்டுக்கொண்டு, இந்த வேட்டியைத் தலையில் போட்டுக்கொண்டு, விளையில் ஏதாவது தொண்டு திறந்து கிடக்கிறதா என்று பார்த்துவிட்டு வாரு வென்று, இந்த மாதிரி ஐயா எங்களைப் பார்த்துச் சொல்லுவார்கள்."

நீர்க்காவி வேஷ்டியும் சந்தனப்பொட்டும் பூச்சும் தப்பாது. கணியான் கூத்து, அர்ச்சிஷ்டவர்களைக்குறித்த நாடகம், மார்க்க சம்பந்தமான பாட்டுகள் இப்படிப் பார்த்தும் படித்தும் கேட்டும் சந்தோஷமாய் நாட்களைப் பின்னிட்டார்கள். கடைவியாபாரம் சாகுபடி வயித்தியம் முதலிய காரியங்களில் தகப்பனுக்கு உதவியாய் ஏதாவது வினைவேலைசெய்து வருவார்கள்.

இதற்கு ஐம்பது வருஷத்துக் கப்புறம், ஐயா தன்மகன் தேவசகாயத்

துக்கு எழுதின ஒரு காகிதத்தில்; தன் தகப்பனார் வீட்டுச் சந்தோஷத்தையும், பின்னாட்களில் பட்ட கஷ்டங்களையுங் காட்டி "இந்த உலக "இன்பம் எனக்குப்போல கர்த்தருடைய சனங்கள் ஒருவருக்குமில்லை. அது "போலத் துன்பமுண்டாயிருந்தது எனக்கு கர்த்தர் இரக்கமும் அதிகமாயிருக்கிறது" என்று மூன்று வாக்கியங்களில் தங்கள் அறுபத்தாறு வருஷச் சரித்திரத்தை யடக்கியிருக்கிறார்கள்.

கோவில்.

அம்மை சொல்லுகிறது:— உங்கள் ஐயா தவறாமல் விடியற்காலம் உபதேசியாருக்கு முந்தியும் கோவிலுக்குப்போய் உதவி மந்திரம் சொல்லுகிறதில் பாடுகிறதில் முதன்மையாய் இருப்பார்கள். இவர்களுக்கு பாட்டுப்பிரியமும் கேர்த்தியான குரலுமிருந்தது. ஆகையால் உபதேசியாருக்கும் குருவுக்கும் இவர்கள்மேல் மிகவும் பிரியம். கோவில் பீடத்துக்குமுன் முழங்காலினின்று தூபக்கலசம் பிடித்துக்கொண்டு சாமியாருக்கு ஒத்தாசையாக உதவி செய்வார்கள். வேட்டியெல்லாம் பேரளம் மணக்கும்.

தேர் ஓட்டுவிக்க ஆரம்பிக்கும் சமயத்தில் தேர் முன்னின்று:—

காயமே எழுந்தருளினார் ஏதமில் வீதியில்—மரியா
நாயகி எழுந்தருளினாள்

என்ற கீர்த்தனையை வெகு உற்சாகமாய், உன்னதமான இனிய குரலோடு இருதய முருகிப் பாடுகிறதைக் கேட்கிற சகல சனங்களின் மனமெல்லாம் பூரித்துப் போகும்.

பிற்காலத்தில் ஐயா சுவிசேஷ மார்க்கத்தில் சேர்ந்திருந்த காலத்தில் ஷை வடக்கன்குளம் உபதேசியார் சின்னவஸ்தாவி விசுவாசப்பிள்ளை ஐயாவைப்பார்த்தபோது வெகுவாய் அங்கலாய்த்து, அப்பா, நீயும் போனாயா, இப்படி வருமென்று நினைக்கவில்லையே யென்று ரெம்பவும் பசதாபப்பட்டுக் கொண்டார்.

நாடகம்.

அந்தக்காலத்தில் வடக்கன்குளத்தில் பாட்டுகள் படிப்புகள் மிகவும் உண்டு. சனங்கள் ஐசுவரியவான்களாய் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு பாட்டுக்குக் குறைவில்லை. தரித்திரமில்லை. சொத்தெல்லாம் வீட்டுக்கொரு மரப்பட்டியும் ஒரு மாடும் ஒரு வீடுமுந்தான். பிழைப்புக்கு அது போதுமான ஆஸ்தியாயிருந்தது. தேவசகாயம்பிள்ளை நாடகம் வெகு பிரபலத்தில் உண்டானது. அக்காலத்தில் அலேசியார் நாடகம், அகிநேசம்மாள் நாடகம், பொறுமையம்மாள் நாடகம் விசேஷம். பெரிய சனிக்கிழமை



வாசாப்பு, மூன்று ராசாக்கள் வாசாப்பு உண்டு. மூன்று ராசாக்கள் திருநாள் வாசாப்பு போத்தி உண்டுபண்ணின செய்யுள். வீடுகளிலும் பாட்டுக் கச்சேரி நடக்கும். அகிநேசம்மாள் நாடகத்தில், ஐயா ஞானபூரணி வேஷம், கடைசியில் அந்தோனிமுத்துப் பிள்ளை ஆனந்தராயர் வேஷம்.

இந்த நாடகங்கள் பக்தியையும் நல்லொழுக்கம் நன்னெறியையும் கற்பிக்கும்படி செய்யப்பட்டிருந்தாலும், நாடகமாகிறபோது பாவத்துக்குத்தான் பள்ளிக்கூடமாகிறது. அகிநேசம்மாள் நாடகத்தில் தெய்வநிந்தையும் தெய்வநம்பிக்கையும் தெய்வ ஆறுதலும் பிறப்பிக்கிற தருக்கள் நிறைந்திருக்கிறது. ஆனால் நாடகமாகிறபோது, தீய இச்சைகளை எழுப்புவதற்கு மனுஷ நீசசுபாவம் இடம் பண்ணுகிறது. சுவாமிமார் இவைகளெல்லாம் அறிந்தவர்களாய் இப்படிப்பட்ட நாடகம் போடக்கூடாதென்று பிற்காலங்களில் ஒவ்வொரு வருஷமும் தடைசொன்னாலும், சனங்களுடைய பிரியத்துக்கு இடங்கொடுக்கிறார்கள்; நாடகத்தினிமித்தம் சனக்கூட்டம் அதிகமாகும், அதினால் கோயில் காணிக்கையும் அதிகமாகும் என்ற எண்ணமும் சுவாமிமாருக்கு உள்ளுக்குள்ளிருக்கலாம்.

வடுகவாத்தியான் என்று ஒருமனுஷன் வடக்கேயிருந்து வடக்கன்குளத்துக்கு வந்து பொறுமையம்மாள் நாடகம் படித்துக் கொடுத்தான், ஊரார் அவனை வெகுவாய்க் கொண்டாடினார்கள். ஷை நாடகம் போட்டபோது ஐயா சவுந்தரிவேஷமும் பெரியையா வணிகேசன் வேஷமும் போட்டார்கள். ஆனால் இக்காலத்து வடக்கன்குளத்தார் செய்கிறதுபோல் அக்காலத்தில் திங்கட்டம் திரிகட்டம் என்று ஆடுகிறதில்லை. அக்காலத்தில் சுற்றி வந்து பாடுகிறதுதான் உண்டு. ஷை வடுகவாத்தியான் பின்னிட்டு நம்முடைய வகைப்பெண் ஒன்றைக் கடத்திக் கொண்டுபோய்விட்டான். அவனையும் பெண்ணையும் தொடர்ந்துபோய், கிழக்கே கடற்கரை யூர் ஒன்றில் கண்டுபிடித்து, இருவரையும் வடக்கன்குளத்திற்குத் திரும்பக் கொண்டுவந்து, அவனை அவமானப்படுத்தித் துரத்திவிட்டார்கள். ஷை பெண் 'குரூஸ்' இன்னாசிமுத்துப் பிள்ளைக்கு அப்பால் கலியாணமானவள், ஞானப்பிள்ளையைப் பிறந்தாள். நாடகத்தின் கேட்டுக்கு வெளிப்படையான திருஷ்டாந்தங்களில் இது ஒன்று.

அம்மை சொல்லுகிறது:—

ஷை வடுக வாத்தியான் திருச்சிறுப்பள்ளிக்காரனும், கொல்லவுசனும் அவன் தமயன் அவனை வேதத்தைவிட்டுச் சொல்லித் துன்பப்படுத்தினான். பொறுமையம்மாள் நாடகம் அவன் கட்டவில்லை, முத்தபிள்ளை [மதுரேச

துக்கு எழுதின ஒரு காகிதத்தில்; தன் தகப்பனார் வீட்டுச் சந்தோஷத்தையும், பின்னுட்களில் பட்ட கஷ்டங்களையுஞ் சுட்டி "இந்த உலக "இன்பம் எனக்குப்போல கர்த்தருடைய சனங்கள் ஒருவருக்குமில்லை. அது "போலத் துன்பமுண்டாயிருந்தது எனக்கு கர்த்தர் இரக்கமும் அதிகமா யிருக்கிறது" என்ற மூன்று வாக்கியங்களில் தங்கள் முழுபத்துவாறு வருஷச் சரித்திரத்தை யடக்கியிருக்கிறார்கள்.

கோவில்.

அம்மை சொல்லுகிறது:— உங்கள் ஐயா சஞ்சலமாமல் விடியற்காலம் உபதேசியாருக்கு முந்தியும் கோவிலுக்குப்போய் உதவி மந்திரம் சொல்லுகிறதில் பாடுகிறதில் முதலாமையாய் இருப்பார்கள். இவர்களுக்கு பாட்டுப்பிரியமும் சேர்ந்தியான குரலுமிருந்தது. ஆதலால் உபதேசியாருக்கும் குருவுக்கும் இவர்கள்மேல் மிகவும் பிரியம். கோவில் பீடத்துக்குமுன் முழங்காலினின்று தூபக்கலசம் பிடித்துக்கொண்டு சுவாமியாருக்கு சேவுப்பிள்ளையாக உதவி செய்வார்கள். வேட்டியெல்லாம் பொன்னம் மணக்கும்.

தேர் ஓட்டுவிக்க ஆரம்பிக்கிற சமயத்தில் தேர் முன்னின்று:—

காயமே எழுந்தருளினார் தெருவீதியில்—மரியா
தாயமே எழுந்தருளினாள்

என்ற கீர்த்தனையை வெகு உற்சாகமாய், உச்சஸ்தாயி இனிய குரலோடு இருதய முருகிப் பாடுகிறதைக் கேட்கிற சகல சனங்களின் மனமெல்லாம் பூரித்துப் போகும்.

பிற்காலத்தில் ஐயா சுவிசேஷ மார்க்கத்தில் சேர்ந்திருந்த காலத்தில் மேற்படி வடக்கன்குளம் உபதேசியார் சின்னையாவி ஸ்வாமிப்பிள்ளை ஐயாவைப்பார்த்தபோது வெகுவாய் அங்கலாய்த்து, அப்பா, நீயும் போனாயா, இப்படி வருமென்று நினைக்கவில்லையே யென்று ரொம்பவும் பரிதாபப்பட்டுக் கொண்டார்.

நாடகம்.

அந்தக்காலத்தில் வடக்கன்குளத்தில் பாட்டுகள் படிப்புகள் மிகவுமுண்டு. சனங்கள் ஐசுவரியவான்களாய் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு பாட்டுக்குக் குறைவில்லை. தரித்திரமில்லை. சொத்தெல்லாம் வீட்டுக்கொரு மாட்டுப்பட்டியும் ஒரு மாடும் ஒரு வீடுமிருந்தன. விளைப்புக்கு அது போதுமான ஆஸ்தியாயிருந்தது. தேவசகாயம்பிள்ளை நாடகம் வெகு பிரபலத்தில் உண்டானது. அந்தக்காலத்தில் அலேசியார் நாடகம், அகிநேசம்மாள் நாடகம், பொறுமையம்மாள் நாடகம் விசேஷம். பெரிய சனிக்கிழமை



வாசாப்பு, மூன்று ராசாக்கள் வாசாப்பு உண்டு. மூன்று ராசாக்கள் திருநாள் வாசாப்பு போத்தி உண்டுபண்ணின செய்யுள். வீதிகளிலும் பாட்டுக் கச்சேரி நடக்கும். அகிநேசம்மாள் நாடகத்தில், ஐயா ஞானபூரணி வேஷம், கடைசியில் அந்தோனிமுத்துப் பிள்ளை ஆனந்தராயர் வேஷம்.

இந்த நாடகங்கள் பத்தியையும் நல்லொழுக்கம் நன்னெறியையும் கற்பிக்கும்படி செய்யப்பட்டிருந்தாலும், நாடகமாகிறபோது பாவத்துக்குத்தான் பள்ளிக்கூடமாகிறது. அகிநேசம்மாள் நாடகத்தில் தெய்வநிந்தையும் தெய்வநம்பிக்கையும் தெய்வ ஆராதனையும் பிறப்பிக்கிற தருக்கள் நிறைந்திருக்கிறது. ஆனால் நாடகமாகிறபோது, தீய இச்சைகளை எழுப்புவதற்கு மனுஷ ஹீயசுபாவம் இடம் பண்ணுகிறது. சுவாமிமார் இவைகளெல்லாம் அறிந்தவர்களாய் இப்படிப்பட்ட நாடகம் போடக்கூடாதென்று பிற்காலங்களில் ஒவ்வொரு வருஷமும் தடைசொன்னாலும், சனங்களுடைய பிரியத்துக்கு இடங்கொடுக்கிறார்கள்; நாடகத்தினிமித்தம் சனக்கூட்டம் அதிகமாகும், அதினால் கோயில் காணிக்கையும் அதிகமாகும் என்ற எண்ணமும் சுவாமியாருக்கு உள்ளுக்குள்ளிருக்கலாம்.

வடுகவாத்தியான் என்று ஒருமனுஷன் வடக்கேயிருந்து வடக்கன்குளத்துக்கு வந்து பொறுமையம்மாள் நாடகம் படித்துக் கொடுத்தான். ஊரார் அவனை வெகுவாய்க் கொண்டாடினார்கள். மேற்படி நாடகம் போட்டபோது ஐயா சவுந்தரிவேஷமும் பெரியையா வணிகேசன் வேஷமும் போட்டார்கள். ஆனால் இக்காலத்து வடக்கன்குளத்தார் செய்கிறதுபோல் அக்காலத்தில் நிகட்டம் திரிகட்டம் என்று ஆடுகிறதில்லை. அக்காலத்தில் சுற்றி வந்து பாடுகிறதுதான் உண்டு. மேற்படி வடுகவாத்தியான் பின்னிட்டு நம்முடைய வகைப்பெண் ஒன்றைக் கடத்திக் கொண்டுபோய்விட்டான். அவனையும் பெண்ணையும் தொடர்ந்துபோய், கிழக்கே கடற்கரை ஊர் ஒன்றில் கண்டுபிடித்து, இருவரையும் வடக்கன்குளத்திற்குத் திரும்பக் கொண்டுவந்து, அவனை அவமானப்படுத்தித் துரத்திவிட்டார்கள். மேற்படி பெண் 'குரூஸ்' இன்னாசிமுத்துப் பிள்ளைக்கு அப்பால் கலியாணமானவள், ஞானப்பிள்ளையைப் பிறந்தாள். நாடகத்தின் கேட்டுக்கு வெளிப்படையான திருஷ்டாந்தங்களில் இதுவொன்று.

அம்மை சொல்லுகிறது:—

மேற்படி வடுக வாத்தியான் திருச்சிறுப்பள்ளிக்காரனும், கொல்லவடுகனும் அவன் தமயன் அவனை வேதத்தைவிட்டுச் சொல்லித் துன்பப்படுத்தினான். பொறுமையம்மாள் நாடகம் அவன் கட்டவில்லை, முத்தப்பிள்ளை [மதுரேச

துக்கு எழுதின ஒரு காகிதத்தில்; தன் தகப்பனார் வீட்டுச் சந்தோஷத்தையும், பின்னாட்களில் பட்ட கஷ்டங்களையும் காட்டி "இந்த உலக "இன்பம் எனக்குப்போல கர்த்தருடைய சனங்கள் ஒருவருக்குமில்லை. அது "போலத் துன்பமுண்டாயிருந்தது எனக்கு கர்த்தர் இரக்கமும் அதிகமாயிருக்கிறது" என்று மூன்று வாக்கியங்களில் தங்கள் பழம்பத்தூராய வருஷச் சரித்திரத்தை யடக்கியிருக்கிறார்கள்.

## கோவில்.

அம்மை சொல்லுகிறது:— உங்கள் ஐயா சம்பளமில்லாமல் விடியற்காலம் உபதேசியாருக்கு முந்தியும் கோவிலுக்குப்போய் தனி மந்திரம் சொல்லுகிறதில் பாடுகிறதில் முதன்மையாய் இருப்பார்கள். இவர்களுக்கு பாட்டுப்பிரியமும் கீர்த்தியான குரலுமிருந்தது. ஆதலால் உபதேசியாருக்கும் குருவுக்கும் இவர்கள்மேல் மிகவும் பிரியம். கோவில் பீடத்துக்குமுன் முழங்காலினின்று தூபக்கலசம் பிடித்துக்கொண்டு சுவாமியாருக்கு பிள்ளையாக உதவி செய்வார்கள். வேட்டியெல்லாம் போளம் மணக்கும்.

தேர் ஓட்டுவிக்க ஆரம்பிக்குஞ் சமயத்தில் தேர் முன்னின்று:—

தாயவள் எழுந்தருளினாள் தெருவீதியில்—மரியா
தாயவள் எழுந்தருளினாள்

என்ற கீர்த்தனையை வெகு உற்சாகமாய், உன்னதமான இனிய குரலோடு இருதய முருகிப் பாடுகிறதைக் கேட்கிற சகல சனங்களின் மனமெல்லாம் பூரித்துப் போகும்.

பிற்காலத்தில் ஐயா சுவிசேஷ மார்க்கத்தில் சேர்ந்திருந்த காலத்தில் மேற்படி வடக்கன்குளம் உபதேசியார் [illegible] ஐயாவைப்பார்த்தபோது வெகுவாய் அங்கலாய்த்து, அப்பா, நீயும் போனாயா, இப்படி வருமென்று நினைக்கவில்லையே யென்று ரொம்பவும் பரிதாபப்பட்டுக் கொண்டார்.

## நாடகம்.

அந்தக்காலத்தில் வடக்கன்குளத்தில் பாட்டுகள் படிப்புகள் மிகுதியுண்டு. சனங்கள் ஐசுவரியவான்களாய் இல்லாவிட்டாலும் அவரவர்கள் பாட்டுக்குக் குறைவில்லை. தரித்திரமில்லை. சொத்தெல்லாம் வீட்டுக்கொரு மாட்டுப்பட்டியும் ஒரு மாடும் ஒரு வீடுமிருந்தது. பிழைப்புக்கு அது போதுமான ஆஸ்தியாயிருந்தது. தேவசகாயம்பிள்ளை நாடகம் வெகு பிற்காலத்தில் உண்டானது. அந்தக்காலத்தில் அலேக்ஸியார் நாடகம், அக்னேசம்மாள் நாடகம், பொறுமையம்மாள் நாடகம் விசேஷம். பெரிய சனிக்கிழமை



வாசாப்பு, மூன்று ராசாக்கள் வாசாப்பு உண்டு. மூன்று ராசாக்கள் திருநாள் வாசாப்பு போத்தி உண்டுபண்ணின செய்யுள். வீதிகளிலும் பாட்டுக் கச்சேரி நடக்கும். அக்னேசம்மாள் நாடகத்தில், ஐயா ஞானபூரணி வேஷம், கடைசியில் அந்தோணிமுத்துப் பிள்ளை ஆனந்தராயர் வேஷம்.

இந்த நாடகங்கள் பத்தியையும் நல்லொழுக்கம் நன்னெறியையும் கற்பிக்கும்படி செய்யப்பட்டிருந்தாலும், நாடகமாகிறபோது பாவத்துக்குத்தான் பள்ளிக்கூடமாகிறது. அக்னேசம்மாள் நாடகத்தில் தெய்வசிநேகமும் தெய்வநம்பிக்கையும் தெய்வ ஆறுதலும் பிறப்பிக்கிற தருக்கள் நிறைந்திருக்கிறது. ஆனால் நாடகமாகிறபோது, தீய இச்சைகளை எழுப்புவதற்கு மனுஷ நீசபாவம் இடம் பண்ணுகிறது. சுவாமிமார் இவைகளெல்லாம் அறிந்தவர்களாய் இப்படிப்பட்ட நாடகம் போடக்கூடாதென்று பிற்காலங்களில் ஒவ்வொரு வருஷமும் தடைசொன்னாலும், சனங்களுடைய பிரியத்துக்கு இடங்கொடுக்கிறார்கள்; நாடகத்தினிமித்தம் சனக்கூட்டம் அதிகமாகும், அதினால் கோவில் காணிக்கையும் அதிகமாகும் என்ற எண்ணமும் சுவாமிமாருக்கு உள்ளுக்குள்ளிருக்கலாம்.

வடுகவாத்தியான் என்று ஒருமனுஷன் வடக்கேயிருந்து வடக்கன்குளத்துக்கு வந்து பொறுமையம்மாள் நாடகம் படித்துக் கொடுத்தான், ஊரார் அவனை வெகுவாய்க் கொண்டாடினார்கள். மேற்படி நாடகம் போட்டபோது ஐயா சவுந்தரிவேஷமும் பெரியையா வணிகேசன் வேஷமும் போட்டார்கள். ஆனால் இக்காலத்து வடக்கன்குளத்தார் செய்கிறதுபோல் அக்காலத்தில் டிக்கட்டும் இரிகட்டும் என்று ஆடுகிறதில்லை. அக்காலத்தில் சுற்றி வந்து பாடுகிறதுதான் உண்டு. மேற்படி வடுகவாத்தியான் பின்னிட்டு நம்முடைய வகைப்பெண் ஒன்றைக் கடத்திக் கொண்டுபோய்விட்டான். அவனையும் பெண்ணையும் தொடர்ந்துபோய், கிழக்கே கடற்கரை ஊர் ஒன்றில் கண்டுபிடித்து, இருவரையும் வடக்கன்குளத்திற்குத் திரும்பக் கொண்டுவந்து, அவனை அவமானப்படுத்தித் துரத்திவிட்டார்கள். மேற்படி பெண் 'குஞ்சுவள்' இன்னாசிமுத்துப் பிள்ளைக்கு அப்பால் கலியாணமானவள், ஞானப்பிள்ளை [illegible] பிறந்தாள். நாடகத்தின் கேட்டுக்கு வெளிப்படையான திருஷ்டாந்தங்களில் இது ஒன்று.

அம்மை சொல்லுகிறது:—

மேற்படி வடுக வாத்தியான் திருச்சிராப்பள்ளிக்காரனும், கொல்லவடுகனும். அவன் தமயன் அவனை வேதத்தைவிடச் சொல்லித் துன்பப்படுத்தினான். பொறுமையம்மாள் நாடகம் அவன் கட்டவில்லை, முத்தப்பிள்ளை [மதுரேச

திரம்பிள்ளை] மகன் வீரசல் உபதேசியாரும் மற்றவர்களெல்லாம் சேர்ந்து மேற்படி நாடகம் கட்டினார்கள். மேற்படி வாத்தியான் பொறுமையம்மாள் வேஷம் போட்டான். மேற்படி பொறுமையம்மாள் கதை சனிக்கிழமைப் புதுமைகளிலொன்று. நாடகத்தில், ஐயா சவுந்தரிவேஷம்; பெரியையா வணிகேசன்: வன்னெஞ்சன் தென்காசி மிக்கேல்பிள்ளை: இராசா வைத்தலைப்பிள்ளை: சிலாக்குட்டிப்பிள்ளை சேவகன்: பசாக சொக்கப்பிள்ளை: சேவகன் 'குழுவன்'; சம்மனசு பூக்தோணிப் பெண்கள் பலர்.

### விருந்துக்கிட்ட வீடு

போத்தியுடைய வீட்டில் விருந்து சாப்பாட்டுக்கு வாத்துக்காரர் ரொம்ப உண்டு. கரிசல்காட்டிலிருந்து அவர்கள் தமயனார் சஞ்சீவிப்பிள்ளை குமாரர் மிக்கேல்பிள்ளை கலியாணத்துக்கு மாப்பிள்ளை வீட்டார் மற்றும் கரிசல்காட்டு இனத்தார் வடக்குன்குளத்தில் போத்திவீட்டில் வந்திறங்கியிருந்து புறப்பட்டுத் தன்று வடக்குத் தெருவில் பெண்வீட்டுக்குப்போய் கலியாணஞ் செய்து கூட்டங்கள் நம்முடைய வீட்டுக்கு மறுபடிவந்திருந்து, குருவினத்தந்துக்குப் போனார்கள். போத்திவீட்டுச் செலவுக்குத் திருஷ்டாந்தமாக இது ஒன்று. போத்தியுடைய கொழுந்தி, டாக்டர் மரியதாசப்பிள்ளை பெண்சாதி பிள்ளைப்பேறு முதலியதும் நம்முடைய வீட்டில்தான். போத்திக்கு வடக்குன்குளத்தில் இரண்டு குழந்தை பிறந்தது. கூவது ஆண்: மரிய மதுரேந்திர தேவசகாயம், கஅகூ-ஞ ஆடிமீ கூஉ-உ. (1819-7-25). மேற்படி குழந்தை இறந்துபோயிற்று, மற்றது தெரேசியம்மாள்.

### வைத்தியம்,

வடக்குன்குளத்தில் போத்திமுக்கியமாய் வைத்தியத் தொழில்செய்து வந்தார்கள். மூலிகைகள் மருந்துச் சரக்குகள் பலஇடங்களிலிருந்தும் தருவித்து சாஸ்திரவாகடப் பிரகாரம் புடம்போடுகிறதும் சம்பள ஆள்வைத்து அரைக்கவேண்டியவைகளை அரைக்கிறதும் மாத்திரைகள் சூரணங்கள் பஸ்பங்கள் செய்கிறதும் மிகுந்தபிரயாசத்தோடு செய்வார்கள். கண்டதுகற்கில் பண்டிதனாவா னென்று மக்களுக்கு புத்தி சொல்லுகிற பிரகாரம் தானும் வைத்தியவாகடங்கள் சுவடிகள் யார்யாரிடத்தில் இருந்தாலும் கூடியதோ அவைகளை வாங்கிப் படித்தெழுதிவைத்துக் கொள்ளுவார்கள். மார்க்கத்துக்கடுத்த சுவடிகளும் அப்படியே அநேகம் எழுதியிருக்கிறார்கள்.

பிள்ளைகள் வெளியில்காட்டு வேலைகளை வேலைக்குப்போகக்கூடாதென்பதே முக்கியநோக்கமாய் புலசாக்குகளையும் வைத்தார்கள். மூத்தகுமாரன்கடையில் அநேகமாயிராமல் மற்றவேலைகள்பார்த்ததினால் சவரிமுத்துப்



பிள்ளை யென்றும் இளையமகன் அநேகமாய் கடையிலிருந்ததினால் சவரிராயன் செட்டியாரென்றும் பேரும்எழுத்துக் குத்துமாயிற்று. கரிசல்காட்டிலிருந்து புகையிலை வருத்தி வியாபாரஞ் செய்தார்கள். பின்னும் பொன்வாணிபமும் கொடுக்கல் வாங்கலுமிருந்தது.

### ஒட்டுவாலம்.

ஒரு விளையும் கிரயத்துக்கு வாங்கிப் பயிர் செய்தார்கள். அந்தவிளைக்கு ஒட்டுவாலம் என்றுபேர். இதுகல்லறை விளைக்கு வடக்கு விளை. இந்த விளைக் கிரயமுறியும் அதற்கு மூலமுறியும் நம்மிடத்திலிருக்கிறது. பூச்சியரித்துபோக மற்றது பின்வருமாறு:—

... ... ... ...வடக்கன்குளத்திலிருக்கும் மதுரேந்திரம்பிள்ளைக்கு
.........ாகுலம்பிள்ளையென் விளைவிலைக்கிறைய சீட்டு யெழுதிக்குடுத்த
படி...யென்விளை ஒட்டுவாலம் தென்மடல்பாதைக்குமேக்கு வாணியன்
விளைக்கு ...ளைக்கு வண்ணான்ராக்கன்விளைக்கு தெக்கு யிப்படிநாங் கெ
ல்கைக்குள் பட்ட...ாதுபேர் கண்டவிலை கலிப,கூய விந்தகலிபணம் முப்ப
துக்கும் யென்விளையை யிர ...ண்டு அரமனையிறையும் வரியுங் குடுத்து
ஆச்செந்திரகாலம் சந்ததி பிற...............டிக்கொள்வாராகவும் இப்படி
சம்மதித்து யென்ராசியிலெழுதி.................பிள்ளை யென் மதுரெந்தி
ரம்பிள்ளைக்கு யிபடிக்கு வியாகுலம் ...யன்புகளும்ளுள் இந்த விளைவிலை
முறி கடு யெழுதினென் அருளானந்தம் எழுத்து.

..................குளத்திலிருக்கு பூவாயிக்கு மேற்படி யூர் சவரிமுத்து வென்
...விளை விலைக்கிறைய சீட்டாவது யென் விளை ஒட்டுவாலம் தென்மடல்
...க்கு தெய்வுபிள்ளை விளைக்கு ளைக்கு வண்ணான் ராக்கன் விளைக்கு தெக்கு
........ளையை யிவழுக்கு நாதுபேர்கண்டவிலை கலிப,கூய யிந்த கலிபணம்
...பயிர் யிட்டுகொண்டு அரமனை இறையும் வரியும் குடு............................
...சுகமெ கையாடி கொள்ளுவாள், ஆகவும்.......................................
...விளையை விலைக்கிறையம் பண்ணி குடுத்தெ.....................................
...வராசா மேற்படி யூர் வடக்கு வீட்டு உபதேசியார் வியாகப்ப.........................
...யப்பமுகாலியெழுத்து இப்படிக்கு மதுரெந்திரம்-

(மேலே கண்ட வியாகுலம்பிள்ளை மரியாம்பிள்ளையுடைய தகப்பனார்; புகழும்பெருமாள் என்பவன் வாணியன், வடக்குவிளைக்காரன்; அருளானந்தம் என்பவர் குழுவன் இன்னாசிமுத்துப்பிள்ளையுடைய தகப்பனார் என்று மேற்படி ஒட்டுவாலம் போத்திவாங்குமுன் மேற்படி வியா அம்மை சொல்லுகிறாள்.)

குலம்பிள்ளையுடைய பெண்சாதி பூவாயி சிறையத்துக்கு வாங்கி யிருந்ததாகக் காணுகிறது.

அந்தக்காலத்தில் வடக்குன்குளத்துக்கு அரைகாழிகைக்கு மேற்கே முதல் மலை வரைக்கும் மரங்கள் செடிகள் அடர்ந்த வனமாயிருந்தது. பயிர் நிலங்கள் கொழுமையாயிருந்தது. ஒட்டுவாலம் உத்தேசம் அரையே அரைக்கால் சங்கிலி. நல்லயிலைச்சல். ஒருகட்டையை ஆறுகோட்டைபோல கம்பு கிடைத்தது. "பரண் கட்டியிருந்து, நானும் போயிருந்து குருவி விரட்டியிருக்கிறேன்" என்று ஐயா என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

அம்மைசொல்லுகிறது: "கம்பு நன்றாய்விளையும்: கரிசல்காட்டிலிருந்து நல்ல வித்துக் கொண்டுவந்து போட்டார்கள். அத்தைக்குக் கம்புச்சோறு பிரியம். கம்புச் சாதம் சாப்பிட்டால்தான் அவர்களுக்குச் சாப்பிட்டது போலிருக்கும் கரிசல் காட்டுப் பழக்கம். நாலு, ஐந்து, ஆறு, கோட்டை குறையாமல் கிடைக்கும். பயறும் நன்றாய்ப் பிடிக்கும். ஒருதரம் கொத்து பறிக்கப்போனவர்களோடு நானும் பறிக்கப்போனேன். (வெயிலபட்டதினால்) கன்முதலெல்லாம் கொப்புளங் கொப்புளமாய் பொக்களித்து விட்டது. அதைப் பார்த்து; கரிசல் காட்டுச் சனங்களுக்கானால் இது [இப்படி வெயிலில் போக] ஆகும், இதுகுளக்காட்டு சனம் என்றார்கள். ஒருதரம் [அம்மான் மரிக்கு முன்] பயறு விதைத்துப் பிடுங்கின பின்பு போக்குப்பயறு [தானாய் விதை விழுந்து தானாய் முளைத்த பயறு] மாத்திரம் ஒரு கோட்டைக்கு மேல் ஆதிசம் கிடைத்தது. இது [ஆகுரி] ஆச்சே என்று சொல்லிக் கொண்டார்கள். அப்படித்தான் போச்சுது".

வேட்டை.

கொன்னையும் போரும் பாளையப்பட்டும் சனங்களும் பெருத்தகாலமான தால், சனங்களுக்கு ஆயுதப்பழக்கமுண்டு. வேசர்கள் தனித்தும் திரண்டும் வேளைவேளைகளில் வேட்டைக்குப் போவார்கள். மான், புல்வாய், முசல், காடை, கவுதாரி, கேட்டைக்குப் பெருகிறது சாதாரணமாயிருந்தது. போத்தி வெருகுரியாய் வில் தெரிப்பார்களாய், வீட்டில் வேட்டையாய் வளர்த்தார்கள் பாய்ச்சல் வாறு கெருசால்வரை நம்முடைய வீட்டிலிருந்தது நான்பார்த்திருக்கிறேன். மக்களையும் கூட்டிக்கொண்டு ஒரு நாள் ... வேட்டைக்குப் போயிருந்தபோது ஒன்றும் தென்படவில்லை. வருகுத் திரும்பி வீட்டுக் கிட்டவருகிறபோது கையிலிருந்த வில்லுருண்டையை ஆகாயத்தில் பறந்துபோகிற காக்கைமேல் விட்டபோது அது பட்டுக் கிறு விழுந்து விட்டது.



அம்மை சொல்லுகிறது:— சிலவேளைகளில் புகையிலைச் சுருட்டுப் பிடிக்கிறதுண்டு. பெரிய வயசாயிருக்காலும் மரியாதைக்காகத் தன் தமையன்மார் மூத்தோர்கள் கண்காணாதிருக்கும்படி மறைத்துப் பிடிப்பார்கள்.

சவரிராயன் செட்டியார்

ஆத்தாளுடைய தகப்பனார். தாயார்பேர் அன்னம்மை. இவன் மரியதாச
செட்டியார் மகன். சவரிராயன் செட்டியாருக்கு, மரியதாசசெட்டியார்,
விசெந்திமுத்து செட்டியார், தர்மநாதன் செட்டியார், அந்தோணிமுத்து,
அருளம்மாள், இன்னேசியம்மாள், என்ற குமாரரும் குமாரத்திகளும் பின்
ஒரு லெருமாகப் பிறந்தவர்கள், மக. அவர் தொட்டன்பட்டி, செவ்வல்
பட்டி, பசுவந்தனை முதலான இடங்களில் வாசம்பண்ணி, பேரன்மார்களை
யும் பேத்திமார்களையுங்கண்டு, தன் கடை வியாபாரங்கள் சொத்துக்கள் எல்
லாவற்றையும் தன் மக்களுக்கு ஒப்புவித்துவிட்டு, முதிர்வயதில் அவரும்
மனைவியும் வடக்குன்குளத்தில் தங்கள் இளையகுமாரன் தர்மநாதன் செட்
டியார் வீட்டில் மரணமாக வென்றுயர்ந்தார்கள். இவ்விடத்தில் அவர்களு
டைய பெண் மக்கள் நம்முடைய ஆத்தாள் ஒன்று, டாக்டர் மரியதாசப்பிள்
ளை பெண்சாதி ஒன்று, ஆக இரண்டுபேர் இருந்தார்கள்.

அம்மை சொல்லுகிறது:— ஆத்தாள் (சவரிராயன் செட்டியார் பெண்சாதி) பழுத்தபழம். கரிசல்காட்டிலிருந்து தொட்டில் கட்டி வடக்குன்குளத்துக்குக் கொண்டுவந்தார்கள். கண் மங்கலாய்ப் போய்விட்டதினால், தங்கள் பேத்தி அன்னம்மாள் அவர்கள் கிட்டப்போகிறபோது, தடவிக்கொடுத்து, ஆண்டிச்சியா என்பார்கள். பாலும் வாழைப்பழமுந்தான் சாப்பிடுவார்கள். [அன்னம்மாள் என்கிறது ஐயாவுடைய தங்கச்சி].

ஐயா எப்பொழுதும் தாங்கள் பேர்கொண்ட பேரனாகிய சவரிராயன் செட்டியாரை பாக்கியமான அந்தியகாலம் பெற்றவர் என்று வாழ்த்தித் தங்களுக்கும் அவர் மாதிரிபோல இருக்கவேணுமென்று நினைத்துச் சொன்னதுண்டு.

கை ஆத்தாள் கை தன்மகன் வீட்டில் மரணமானாள். கை போத்தி சவரிராயன் செட்டியார் பெண்சாதிக்குப் பிந்தி மரணமானார். வடக்குன்குளத்தில் அவருடைய கல்லறையும் அவர் பெண்சாதியுடைய கல்லறையும் சேர்த்து ஒலிவியகோவிலில் கட்டியிருக்கிறது. எழுத்துக் கல்லும் வைத்திருக்கிறது. அதில் "காலம் ... மாசி ... வியாழக்கிழமை சவரிராயன் செட்டியார் மரித் தடங்கின கல்லறை" என்று வெட்டியிருக்கிறது. இதுக்குமுன் நமது சுயவம்சத்தில் எவருக்காவது கல்லறை கட்டி எழுத்துக்க... ...ாக இல்லை.

சவரிமுத்துப்பிள்ளை கலியாணம்.

அம்மை சொல்லுகிறது;— சவரிராயன் செட்டியாருடைய மகன் விசேந்திமுத்து செட்டியார் தொட்டன்பட்டியி லிருந்தவருடைய மகள் உங்கள் பெரியையாவுக்கு முறைப்பெண். இவளைக் கட்டிக்கொடுக்கிறதாகப்பேச்சிருந்தது. ஆனால் விசேந்திமுத்து செட்டியார் முறைமாப்பிள்ளைக்குக் கட்டிக்கொடாமல் சிறிலைகுண்டம் உபதேசியார் வாழைத்தோட்டம் வெட்டுகையில் புதையல் கண்டெடுத்துச் சொத்துள்ளவரா யிருந்ததினாலே தவலையிலிருந்த பணத்துக்கு ஆசைப்பட்டு அவருடைய மகன் மிக்கேல் பிள்ளைக்குக் கட்டிக்கொடுத்தார்கள். இந்தக்கலியாணம் ஆவணி மீ நடந்தது. அம்மாளும் உங்கள் ஐயாவும் சிறிலைகுண்டத்துக்குக் கலியாணத்துக்குப் போய் வந்தார்கள். சவரிராயன் செட்டியாருக்கும் அவர் பெண்சாதிக்கும் மிகவும் மனஸ்தாபம். அவர்களும் பின்னும் அநேகரும் கலியாணத்துக்குக் கூடவில்லை. மாப்பிள்ளையும் பெண்ணும் பல்லக்கில் வடக்குன்குளத்துக்கு வருகிறபோது போத்தி சவரிராயன்செட்டியாரும் வைத்தாளும் கடைவீட்டு இளையமகன் வீட்டிலிருந்தவர்கள் கதவை அடைத்துக் கொண்டார்கள். தங்களுடைய கண்ணுள்ள போதே தங்கள் பேரனுக்குக் கலியாணம் முடிக்கவேண்டுமென்று துரிதம் பண்ணினார்கள். அப்போது சகாத்துக்கு உம் யரிசிப்பஞ்சம், சோனம் ஐப்பசிக்கு பஞ்சத்தில் உங்கள் பெரியையாவுக்குப் பதினேழுவயதில் ராசாபுரில் பெண்பேசி வடக்குன்குளத்தில் தங்கள் வீட்டில் தலைக்கலியாணம் வெகு சிறப்பாய்ச் செய்தார்கள். ௯௱௰௩-ஞ கார்த்திகை மீ ஞாயிற்றுக்கிழமை. கலியாணத்துக்கு வடக்குத்தெருவில் வடக்குச் சுவரோடு மூன்று தட்டாக வீடு இருமேலாகக் கட்டினது.

பெண், போத்தி மதுரேந்திரம்பிள்ளையுடைய சிறியதகப்பனார் கல்லுப்பிள்ளையுடைய மகன் மரியதாசப்பிள்ளையின் மகள் ஒத்தேரியம்மாளுடைய மகள் சவரியம்மாள். ஒத்தேரியம்மாள் சிறுப்பத்திலே தாலியறுத்தவள். அவளுக்கு இந்த ஒரேமகள்தான். பெண் அப்போது புத்தியறியவில்லை. கலியாணம் முடிந்து மறுவருஷம் கார்த்திகை மாசத்தில் தம்முடைய வீட்டில் புத்தியறிந்தது.

போத்தி தனக்கு முதல்பேத்தி பிறந்ததைக்குறித்து எழுதியிருக்கிறது;—

"சாதகம்.

௯௱௰௪-ஞ வைகாசி மீ ௨௰ வெள்ளிக்கிழமையும் அத்த நட்சேத்திரமுங் கூடிய சுபதினத்திலன்று ராத்திரி இருபது நாழிகைக்கு மெல்ச்



சனிக்கிழமை விடிய ஒருச்சாமத்துக்கு முன்னே தம்பி மரியசவெரிமுத்துப்பிள்ளைக்குஞ் சவெரியம்மாளுக்குஞ் செவ்ந்தபுத்திரியாகிய குமாரத்தி பிறந்தாள். சறுவேஸ்பரனுடைய அனுக்கிரகத்தினாலேயும் செனமப்பாவமில்லாமலுற்பவித்த அற்சியசிஸ்ட்ட தெவமாதாவினுடைய தயவையினாலேயும் பெரியவர்களுடைய வெண்டுதலினாலேயும்" [1819—3—12].

சேசுசபைக் குருக்கள்

இக்காலத்தில் வடக்குன்குளம் கோவைக் குருக்களுடைய விசாரணையில் கொல்லம் மேத்திராணத்துக் குள்ளிருந்தது. 1760-ம் வருஷத்துக்குமேல் சேசுசபைக் குருக்கள் வருகிறது நின்று போயிற்று. சேசுசபைக் குருக்கள் தேசதேசங்களில் கலாபனை செய்கிறவர்களென்பதாக பதினாலாவது கிளெமெந்து என்கிற பாப்பானவர் கட்டளையின்படி அச்சபை நின்று போயிற்று. இத்தேசத்திலிருந்த சேசுசபைக் குருக்கள் பலனா சீமைக்குத் திரும்பக் கப்பலேற்றி விட்டார்கள். வடக்குன்குளம், தாளை, மணப்பாடு, வீரபாண்டியப்பட்டணம், முதலிய இடங்களிலிருந்த சேசுசபைக் குருக்கள் ஒவ்வொருவராய் இறந்து போனார்கள்.

மதுரேந்திர சுவாமி

வடக்குன்குளத்தில் கடைசியாயிருந்த சேசுசபைக் குருக்களுக்கு மதுரேந்திரசுவாமியென்றுபேர். இவர் 1750-ம்வருஷம்போல வடக்குன்குளத்தில் வந்திருந்து, அவ்விடத்தில் ஒருபெரிய கோவிலும் கட்டிவைத்தார். கோவிலுக்கு மேல்புறத்தில் பிள்ளைமாருக்காக ஒரு கிணறுவெட்டிக் கொடுத்தார். வடக்குன்குளத்தை விட்டுப்போகப் பிரியமில்லாதவர்கள் மதுரேந்திர சுவாமி மந்திரிச்ச கிணத்துத் தண்ணீரைக் குடித்தல்லவா சாகவேணுமென்றிருக்கிறேன் என்று முகாந்தரம் சொல்லுகிறதுண்டு.

மதுரேந்திர சுவாமி தாளையிற் போய் மரணமானார். அவர் மரணமாகிறபோது தேவராயி ஆத்தாள் இரண்டாவது பிள்ளை பெற்றிருக்கிறாள். கவிராயர் மரியதாசப்பிள்ளை இவர் பேரில் பாடினபாட்டு ஐயா படிக்க நான் கேட்டிருக்கிறேன். ஆனால் அந்தப்பாட்டு ஐயாவுடைய ஏடுகளில் அகப்படவில்லை. வடக்குன்குளத்தார் மதுரேந்திரசுவாமி யுடைய பெயரை மகிமையாய்க் கொண்டாடினாலும் அந்தப்பாட்டு இப்போது வடக்குன்குளத்தில் ஒருவரிடத்திலுமில்லை; அதைக் கேட்டவர்களுமில்லை. பல்லவியும் அனுபல்லவியும் மட்டும் எனக்கு ஞாபகமிருக்கிறது;—

இன்னம் ஒரு குரு, இன்னம் ஒரு சுவாமி
இன்னம் ஒரு நாயன், இப்படி யுண்டோ

தெக்கெநல் கிழக்கும் இத்தாலிய தேசத்துத்
தீரன் மகாசேந்திர இராசசிலையைப் போல— இன்னம்—

இவருக்குப்பின் சிமைக் குருக்கள் வருகிறது நின்று போனதினாலும் கோவையிலிருந்து வந்த குருக்கள் அநேகவிஷயத்தில் சேசசபைக் குருக்களுக்கு இணையில்லாததினாலும் ஸ்ரீ பாட்டில் எதோபரம் விழுந்துவிட்டதென்று சனங்கள் சொன்னார்களாம். ஆனால் சில விஷயங்களுக்காக கோவைக் குருக்களை மெச்சக்கொள்ளுகிறார்கள். "கோவில் வருமானம், காணிக்கை முதலியவைகளை வைத்துத் தங்கள் சபைக்கு சொத்தும் ஆஸ்தியும் திரட்டிக்கொண்டதேயன்றி சனங்களுக்கு எவ்வளவும் உதவியில்லை; எப்படிக்கசக்கினாலும் விசாலியிலையைக் காக்கினது அம்பாலத்தான்; எங்களை மோட்ச கரையேற்றுகிறதற்கு அறிவீனம் தரித்திரம் என்ற கப்பலை அங்களுக்கு உண்டுபண்ணி வைத்திருக்கிறார்கள்; தாங்கள் கொழுத்து முடிக்கவேணுமென் முக்கால் துட்டுக் காரியத்துக்கு முந்நூறு ரூபாயும் செலவழிக்கிறார்கள்" என்று வட்டக்குன்றுளத்துப்பிள்ளை ஒருவர் சாளரு சேசசபைக்குருக்களுக்கு பிரதுக்சொன்னார். [இவர்வகை இக்காலத்துச் சனங்களுக்கு, முற்காலத்து சேசசபைக் குருக்களுடைய கடப்பட அறியத்தக்க அறிவு இல்லாததினால், இக்காலத்துக் குருக்களைக் குறித்த அறிவைக்கொண்டு முன்னோர்களை நிதானிக்கிறது சரியல்ல.] கோவைக் குருக்கள் மேலாவில் ஒருவருக்கும் கணக்கு ஒப்புவிக்க வேண்டியில்லாததினால் சனங்களுக்குத் தாராளமாய் அநேக நன்மை உதவி செய்தார்கள் என்று குறவினத்தில் ஒருவர் சொல்லுகிறார்.

## குருக்கள் வருமானம்

இன்னபடியென்பதாக ஒரு காகிதத்தில் ஐயா எழுதி வைத்திருக்கிறார்கள். இது எழுத முகாந்தரம் கேட்டதெனவென்று தெரியாது:—

"உரோமான் குரு, உபதேசிமாருக்கு மேற்படி சபையாரால் வரும் வருமானத்துக்குண்டான ஏற்பாடு;—

ஞானஸ்நானம் பெறுகிற ஒவ்வொருவருக்கு ஒரு சக்கரம். குருவுக்கு பாவ சங்கீர்த்தனத்துத் தலைக்கட்டுக்கு சக்கரம்-௨.

கலியாணத்துக்கு பரிசம், ௩. ரூ-யானால் குருவுக்கு ரூ ௰. பரிசமில்லாத கலியாணத்துக்கு கைசெலவு தாரி யென்று சக்கரப்பணம், ௮, குருவுக்கு.

மரித்தவர்களை அடக்கம்பண்ண இந்த குரு ஒப்பூசை பாடினால் ஷை பணம் ௰௯. ஷை ௬-குருவானால் ஷை பணம், ௮. உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்கள் பேரெழுதுகிறதுக்கு வீட்டுக்கு சக்கரம், ௧.

மரித்தவனுக்குப் பூசைக்கு பணம்-௧௰, அல்லது, ௨. ஷை மரித்தவனுக்கு



மோட்ச விளக்குக்கு பணம்-இ. இதுக்குப் புதுப்பூசை புது மோட்சவிளக்கு என்ற பேருக்கு அப்படி.

திருநாள் கொண்டாடுகிற கோவிலில் பிரசங்கம் பண்ணுகிற குருவுக்கு ஷை பணம்-௰௧. புதுக்கோவில் கட்டி பிரதிஷ்டைக்கு பணம்-௬௰, ௫௰, ௭, என்று தகுதிக்குத்தக்கது.

உபதேசிக்குக் கலியாணத்திற் சாப்பாடு மாத்திரம்.

கோவிலிலிருந்து உபதேசிக்கு சம்பளம் பணம் ௭௰, ௰, ௰௫, அந்தந்த கோவில் சபைத் தகுதிக்குத்தக்கது. சில இடங்களில் கோவில் நடப்புக் காணிக்கைகளும். மேற்கண்டது மலையாளத்து சபையில் நடக்கிற வருமானங்களின் விபரம் முற்றும்.

திருநெல்வேலி ஜில்லா உரோமான் குருவுக்கும் உபதேசிக்குஞ்
சபையாரால் வருமானம்.

க-வது குருவுக்கு கலியாணத்துக்கு பணம் உ-க்கு ரூ-காலேயரைக்கால், ௮. உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கு பேரெழுத ரூ. அரைக்கால், மும்மாகாணி, மாகாணி, வீடொன்றுக்குத் தகுதிக்குத்தக்கது. ஷை திருநாளுக்கு. வழக்கப்படியும் பூசைக்கு பணம உ, மோட்ச விளக்குக்கு ரூ.அரைக்கால்; மும்மாகாணி ௬; மாகாணி- ௮, இப்படிக்கொடுக்கிறது. மரித்தவர்கள் க.க்கு பூசைக்கு பணம் உ. மோட்சவிளக்குக்கு பணம் க, எவர்களுங் கொடுக்கவேண்டும். புதுக்கோவில் பிரதிஷ்டைக்கு ரூ-௫௰, அல்லது, ௩௰-ரூ, உ௰, ௰௫, இடங்கண்டு.

திருவிளாவுக்கு ௰-நாள் பூசைக்கு பணம் உ௰, அதிகங் கண்டு கண்டு, ௩-வராகன், ௫-வராகன், ௰-வராகன் திருவிளாச்சிறப்புக்குத்தக்கதும் இடத்துக்குத் தக்கதும். சில இடத்தில் திருவிளாச் செலவு நீக்கிக் காணிக்கையிற்பாதி அறக்குறைய, ௫-வராகன், ௰-வராகன் காலத்துச் செழிப்புக்குத் தக்கதாய். சில இடத்தில் திருநாள்மளர்ச்செலவு திருநாளுக்கும், காணிக்கையாகப்பட்டதெவ்வளவோ அவ்வளவும் குருவுக்கு.

கலியாணத்துக்கு முறைப்பெண்ணுக்கு வராகன் உ, ௩-ங்கால்பெண்ணுக்கு வராகன் க; நாலுங்காலுக்கு வராகன் இ. இது தரும அவராதமென்று பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பொதுவாய் வாங்கிறது. இதைச் சிலர் விரத்தர் மடத்துக்கும் கன்னியஸ்திரிகள் மடத்துக்கும் போமென்பார்கள் இட்டங்தெரியாது.

அவஸ்தைக்காரனவன் தூரத்திலிருந்து அவஸ்தைக்கு குரு வரவேண்டுமென்றால் பல்லாக்கு முதலான செலவுகொடுக்கிறதுண்டு. அப்போது:

பூசைக்கும் பணம்-உ, சிலர் மோட்சவிளக்குக்கும் பணம் க, கொடுக்கிறதுமுண்டு. இதுவுமல்லாமல் அவரவரே நேட்சை நேத்திக்கடனென்றும், பூசைக்கும் பணம்-உ, க, பூசைக்கும்.

சிலர் பிள்ளையில்லாதவர்களும் ஆண்பிள்ளை யில்லாதவர்களுமானவர்கள் மரித்தால் இருக்கிற ஆஸ்திக்குத்தக்கதாக-ய,உய,சய,இய, பூசைக்கென்றும் பணம், தங்களை விசாரிக்கிற குருவுக்கும் அங்கங்கே யுள்ள குருக்கள்மார்களுக்குங்கொடுக்கிறதும்......மோட்ச விளக்குக்குங் கொடுக்கிறது...... காரியத்துக் கென்று கைகளைக் கொடுக்கிறது முண்டு. திருட்டாந்தமாக, என் பேத்தி, பிள்ளைகளிருந்தும் ௱-பணம் வரை தை செலவு கொடுத்தாளாம். என் தாயும் அப்படியே பாம்படமதை செலவுக்குக் கொடுக்கச்செய்தாள். இப்பொழுது கொத்துவல்ப்பிள்ளை பெண்சாதி சவடியைக் கோவிலுக்குக் கொடுத்தாளாம். இப்படியும் அப்படியும் பலவருமானமுண்டு.

கலியாணஞ்செய்கிற பெண் மாப்பிள்ளைகள் அல்லது அவர்கள் தாய்தகப்பன்மார்கள் அந்த நாளில் பூசைக்கும் மோட்சவிளக்குக்கும் தை இட்டப்பணம் சந்தோஷமாய்க்கொடுக்கிறதுமுண்டு. திருட்டாந்தமாக என் தகப்பனாரவர்கள் கொடுத்தார்கள். பின்னு நம்முடைய நாடுகளில் அநேகரப்படிக்கொடுத்தார்களிது சபைகளில் வழக்கமாயிருக்கிறது, கட்டாயமில்லை. இதுவன்றிக் கடற்கரையிலும் பரவர் மறையர் இப்பேர்ப்பட்டவர்களுக்குள் வேறு வழக்கங்களான வருமானமுமுண்டு. திட்டமாய்த் தெரியாது.

உபதேசிமாருக்கு வருமானம்.

கலியாணத்துக்கு வாசலுபதேசிக்கு பணம்-க. தலத்துபதேசிக்கு பணம் உ-. வாசலுபதேசியில்லாத மடசேரத்தில் உபதேசிக்கு கலியாணப்பணம் ௩-. வருசத்துக்கு கூலிக்கட்டுக்கு என்பது ஒரு சமுசாரக்காரன். உபதேசிக்கு பணம்-க. தண்டிக் காரருக்கு பணம்-இ இதுபெரிய ஆற்றுக்கு மட்டுக்க வழக்கம். பொதுவாக உபதேசிமாருக்கு வீட்டுக் கலியாணத்துக்கு பந்தலில் அரிசி, படி-ரு. ஸ. கூ. தேங்காயும் அப்படியே. காப்புக் கட்டுக்கு, தேங்காயும்-உ, அரிசியும் படி-உ. கருபத்துக்கு ஞானஸ்நானத்திக்கை பணம்-க. அல்லது ரூ. அரைக்கால். மெழுகுதிரி, உபதேசி வைக்கவேண்டும். உபதேசியோர் வீட்டார் அல்லது உபதேசிக்குங் கூடவந்த ஆளுக்குச்சாப்பாடும் உண்டு.

மரித்தவர்கள் வீட்டில் குழிவாசலில் பணம்-க, மக-நாள், பணம்-க, அல்லது ரூ. அரைக்கால். மரித்த அன்றும் மரித்த மறுநாளும், மக-ம்நாளும்



உபதேசி செபம்பண்ண வீட்டுக்குங் கல்லறைக்கும் போகவேண்டும். மரித்த மறுநாளும், ய௬-ம் நாளும் சாப்பாடுமுண்டு அசனம் கொடுக்கிற வீட்டிலுஞ்சாப்பாடும் ரூ. அரைக்கால் அல்லது பணமுமுண்டு. உபதேசி செபத்துக்குப் போகா......அல்லது கூப்பிடாத வீட்டிற் சாப்பாடும் பணமுமில்லை

பெரிய வியாழக்கிழமை யசனத்துக்கு சாப்பாடும் பணமுங் கொடுக்கிறதுமுண்டு. சிலர் சாப்பாடு மாத்திரங் கொடுக்கிறது, சாப்பிடாத வீட்டில் அரிசி கறி வாங்கிறது. ய-வீட்டிலும் அசனங் கொடுத்தாலும் ஒரு வீடு சாப்பிட்டால் மற்றவீட்டில் அரிசி, அல்லது உபதேசிபிள்ளை யல்லது ஆள் போய் சாப்பிட்டால் அரிசியில்லை.

உபதேசிக்குப் புதுபதார்த்தமென்று தவசம், பயறு, காணம், கருப்புகட்டி முதலான சந்தோஷமாய்க் கொடுக்கிறது முண்டு.

சிலர் புது வீடுகட்டி குடிபோகும்போது உபதேசிபோய் செபம் பண்ணவேண்டும். சாப்பாடும் பணம்-க, அல்லது ரூபாய் அரைக்கால், கொடுக்கிறதுமுண்டு. கட்டாயமில்லை.

உபதரிக்கிற ஆத்துமாக்கள் திருநாளுக்கு க-க்கு ஒவ்வொரு வீட்டாரும் கைபெண்சாதியும் கிளை வழி யன்னியர் சனங்கள் முதலானவர்கள் பேரெழுதுகிறதுக்கு பணம்-க, ரூ. அரைக்கால், பணம்-இ, பணம்-ய, இப்படித் தருதிக்குத் தக்கதாய்க்கொடுத்துப் பெயரும் சொல்லுகிறதை எழுதுகிறது. உபதேசி ஊரா ஊருக்கும் போய் எழுதி வந்த பணத்தில் பத்துக்கு உ, க, என்று அர்தந்தத் திட்டமுள்ள இடங்களுக் குள்ளபடி உபதேசிக்கும் மற்றப்பணம் குருவுக்கும்.

கோவிலில் உபதேசிக்கு கடப்புக் காணிக்கையாகிய தட்டு, பணம், நெல் தவசம், பயறு, காணம், பருத்தி, நூல், கருப்புகட்டி, கொட்டைமுத்து, மிளகு, மெழுகு, எண்ணெய், நெய், சாம்பிராணி, வத்தல், காய்கறி முதலான புதுப்பதார்த்தங்களும் கோவிலில் வருகிற மற்றும் வஸ்துகளெல்லாம் உபதேசிக்கு. இப்படிக்கோவில் வருமானங்களில் மெழுகுதிரி, விளக்கு, எண்ணெய்ச்செலவு நீக்கி மற்றது மேற்கண்ட வருமானம் மிகுதியாயிருந்தாலும் குறைவாயிருந்தாலும் தை கோவிற் செலவு கடப்புக்குச் செலவழிக்கிறது உபதேசி.

விசேஷ திருநாள்க் கொண்டாடுகிற விசேஷ தலங்களில் உபதேசிக்கு ய-பணம், யரு-பணம், சம்பளம். பத்து நாளைக்கு தை வருமானத்தில் மெழுகு சாம்பிராணியும் கோவிலுக்கு மற்ற காணிக்கைகள் குருக்கள் அல்லது ஊரார் கணக்குப் பார்த்துக் கோவிலுக்கு குருவுக்கு எப்படி அக்

தந்த இடத்துக்குத் தக்கதாய் நடக்கும் மேற்படி காரியங்கள். நடந்தவை வழக்கம் வேறு நமக்குத் தெரியாது.

இப்படிக்கு, சவரிராயன்.

[illegible] பிப்பரவரி [illegible] எழுதினது.

(இந்த முற்கால ஏற்பாட்டுக்குத் தற்காலத்தில் தாரணைகள் வெகுவாய் உயர்ந்துபோயிருக்குமென்றும், நூதன காணிக்கைகள் வசூல்செய்ய புதுக்காரணங்கள் உண்டாயிருக்குமென்றும் நினைக்கலாம்.)

குருக்கள் ஆசாரம்.

நாலாம் பக்கத்தில் அவர்கள் உடையைக் குறித்துக் கொஞ்சம் சொல்லியிருக்கிறது. சேசுசபைக் குருக்களில் முதல்வரான அர்ச். சவரியார் நாள் முதல் தங்கள் வேதத்துக்குத் திரள் சனங்களைச் சேர்க்கவேண்டுமென்பதே முன்னாளில் கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். தத்துவ போதக சுவாமி காள் முதல் பிராமணர், பிள்ளைமார், முதலிமார், மேல் சாதிக்காரரை வேதத்தில் சேர்க்க வேண்டுமென்று செய்த பிரயத்தனம் எழுதிமுடியாது. அவர்கள் முயற்சியும் கைகூடி வந்தது. மேல் குலத்தோரை ஆதாயப்படுத்திக் கொள்ளவென்று சில குருக்கள் தங்கள் சாதி வண்ணம், உடை நடை, வழக்க ஒழுக்கங்களை மாற்றி இத்தேசத்துப் பிராமணக்குருக்கள், பண்டாரச்சன்னாசிகளுடைய ஆசாரங்களை அனுசரித்துக் கொண்டார்கள். இந்த ஆசாரங்கள் அநேகமாய் போத்தியுடைய காலம் வரைக்கும் நடந்து வந்தது.

[illegible] முதலிய நடந்தவை சபை, கீழ் சாதி சபையை விசாரிக்கிற குருக்கள் வேறே. உள்நாட்டில் மேல்சாதி சபைகளுக்குக் குருக்கள் வேறே. அந்தக் குருக்களுக்குப் பண்டாரக் குருக்கள் என்றும், இந்தக் குருக்களுக்கு, சுவாமிகள், சந்நியாசிகள் என்றும் பேர். நடந்தவை கோவில்களிலும் மேல்சாதிக்காரர் கோவில்களிலும் பூசைசாத்திரங்கள் ஒன்றே யானாலும், பூசை முறை, ஆலய முறை, வழக்கங்களில் அநேக வித்தியாசங்கள் உண்டு. பூசை உடை, சாதாரணமான உடை இதுகளிலும் இருவகை குருக்களுக்கும் வித்தியாசம் உண்டு. பண்டாரக் குருக்களுக்குக் கறுப்புச் சட்டை. அவர்கள் இந்த சந்நியாசிகளை நமஸ்காரம் பண்ண வேண்டும். மற்றபடி ஒருவர் ஒருவரைத் தொட்டுக்கொண்டிருக்கிறதாவது ஐக்கியம் பாராட்டுகிறதாவது இல்லை.

சந்நியாசிகள் பெரும்பாலும் பல்லக்கில் அல்லது ரதத்தில் வெளி போவார்கள். காவி முக்கிய அங்கப்பட்டிக்கை வேஷ்டிகட்டி, காவி சொக்காய்போட்டு, கழுத்தில் செபமாலை தரித்து, தலையில் நீண்ட செம்பு



குல்லா வைத்து, காவி அரசு வேஷ்டி போட்டிருப்பார்கள். நெற்றியில் சந்தனப் பொட்டிட்டிருக்கும். காதில் கடுக்கன், காலில் குமிழ் பாதகுறடு. அருளானந்த சுவாமி போட்டிருந்த கடுக்கன் அவர்கள் சீஷன் அறைவீட்டு அண்ணன் ஞானப்பிரகாசம் பிள்ளை இப்போது போட்டிருக்கிறார்களென்று ஐயா சொன்னார்கள். நான் 1869-ம் ௵ வடக்கன்குளத்துக்குப் போயிருந்த போது அவர்கள் காதில் அந்தக்கடுக்கனைப் பார்த்தேன், அது வெள்ளாளர் பிராமணர் போடுகிற சாதாரணமான பொன், கடுக்கன்தான். அருளானந்த சுவாமியுடைய சந்தனக்கல் அவர் பங்கு மாறிப் போகிற போது போத்திக்குக் கொடுத்தார். அது இப்பொழுது (1899) ஊத்துக்குடியில் பெரியபிள்ளை வீட்டிலிருக்கும். மதுரேந்திர சுவாமியுடைய குமிழ் பாதகுறடு இப்பொழுதும் வடக்கன்குளத்தில் கணையான் வம்சத்தாரிடத்தி லிருக்கிறதென்று செய்தி.

சனங்கள் சுவாமிமார்களை தெய்வம் ரிஷிகளாக மகா பயபத்தியோடு வணங்குவார்கள். அவர்கள் வாயில் சாபமானமொழி வந்துவிட்டால் கேடு தப்பாமல் வந்துபலிக்கும் என்று நடுங்கிப்பயப்படுவார்கள். அவர்கள் சவாரிபோகிற வாகனத்துத் தடத்தைத்தொட்டு முத்திக்கொள்வார்கள். குருக்கள் தெருவழியாய்ப் போகிறதைக் காணுகிற சனம் சிறு பிள்ளைமுதலாய் குபீரென்று முழங்காலில் நிற்கும். சுவாமியார் ஆசிர்வாதம்செய்து நடந்து போவார். அஞ்ஞான விக்கிரகங்கள், பேய், பிசாசுகளை மதிக்கிற, வழிபடுகிற வகையாய் எந்த அற்பக்கிரியையும், எந்தத்துர்நடக்கையும் சபையில் நடப்பதற்கு எள்ளளவும் இடங்கொடாமல் கண்டிப்பாய்ச் சட்சித்து ஆக்கினை செய்வார்கள். பண அபராதம்: அஞ்சுமணிக் குறடாவினால் அடிக்கிறது: தலையில் மண்பெட்டிஏற்றி முழங்காலில் வைக்கிறது: முள் முடிவைத்து தெருச்சுற்றச் செய்கிறது: பேய் முகங்கட்டித் தெருச்சுற்றுகிறது முதலிய ஆக்கினைகள் உண்டு. ஆனால் தேசாசாரங்கள், சாதியாசாரங்கள் முதலியவைகளில் தலையிட்டுச் சனங்களை இம்சைப் படுத்துகிறதில்லை.

அருளானந்த சுவாமி.

மதுரேந்திர சுவாமிக்குப்பின் வடக்கன்குளத்துக்கு ஒருவர் பின் ஒருவராய் கோவைக் குருக்கள் எட்டுப் பத்துப்பேர் வந்தார்கள். போத்தியிருந்த காலத்தில் வடக்கன்குளத்தி லிருந்த குருவுக்கு அருளானந்த சுவாமியென்று பேர்: அவர் போத்தி பேரில் வெகு பிரியம். போத்திக்கு கடைகட்டுகிறதுக்கு முளைப்பிடித்துக்கொடுத்து ஆசிர்வாதம்செய்தார். கடை, சின்னக் கோவில் [ வியாகப்பர் கோவில் ] கட்டக், கொடி

மரத்துக்குக் கிழக்கே சாணாக்குடிப் பக்கமாய்ப் பாவர் வீடுகளுக்குப் போகிற முடுக்குக் கிட்ட பெரிய தெருவிலிருந்தது. அந்தக் கடையிருந்த இடம் இப்பொழுது தெருவாயிருக்கிறது. போத்தி ஏனில் பெரிய மனுஷனும் யாருக்கும் பலவிதத்தில் அநேக நன்மை செய்து வந்ததினாலும் ஊரில் சொல்சத்தியுண்டு. ஆகவேண்டிய காரியங்களுக்கு சுவாமியார் போத்தியைக் கூப்பிட்டு விடுவார்.

வைத்தலைப்பிள்ளை யென்று ஒருவர் வேலைத்துக்காக வடக்குன்குளத்துக்கு வந்தார். அவர் உப்பு விற்கிறவராம். மகா துஷ்டன், வெகு பலசாலி. தன்னைப்போல் சில துஷ்டர்களையும் சேர்த்துக்கொண்டு அவர் பண்ணுகிற அக்கிரமங்களுக்கு அளவில்லை. விரோதி வீடுகளைத் தீக்கொளுத்தி விடுவார். அதினாலே யாரும் அவருக்கு அச்சந்தான். கலியாணம் பண்ணி பிள்ளை குட்டிக்காரனாய் பெரிய வீடுகட்டினார். வீட்டில் எந்தவேளையும் பாட்டும் படிப்பும் கைமணியும் மத்தளமுமாயிருக்கும்.

ஒருநாள் வைத்தலைப்பிள்ளை சுவாமியாரிடத்தில் ஏதோ விரோதப்பட்டுக்கொண்டு அவரிடத்தில் சண்டைக்குப் போனார். அவர் பயந்து கதவை அடைத்துக் கொண்டார். வைத்தலைப்பிள்ளை கதவை இடித்து உடைக்கப் போய்த் தொந்தரவு செய்ததில், சுவாமியார் போத்திக்குச் சொல்லியனுப்ப, போத்தி வந்து: சுவாமிக் கருகில் குடிக்கிற பயலே, சுவாமியிருக்கிற இடத்தில் வந்து என்ன வைசாசாட்ட மாகிறாய் என்று அதட்டின உடனே, வைத்தலைப்பிள்ளை பயந்து அடங்கிப்போனார். அந்தத் துஷ்டனுடைய மகாஉக்கிரம் பின்னைக்கும் பயபத்திதான். கணயானன் மக்கள் மூன் றுந்தரம் ஒருதடவை சண்டை போட்டுக் கொண்டபோது போத்தியும், சாமப்புமுதலியார் என்னும் பெரிய மனுஷர் இரண்டொருவருமிருந்து அவர்கள் விவாதத்தைத் தீர்த்து பாகம் பண்ணிக் கொடுத்த கணக்குகளும் தொடரா விசாரணைறியும் போத்தியிடத்தில் மத்தியமாய் வைக்கப்பட்டது இப்பொழுதும் [1899] அவ்விடத்தி லிருக்கிறது. போத்திக்கும் சுவாமியாருக்குமுள்ள கொடுக்கல் வாங்கல் கணக்கு மிருக்கிறது.

போத்தியுடைய பிள்ளைகள் பேரிலும் சுவாமியாருக்குப் பிரியம். அன்னம்மாள் பேரில் பிரியமாய் எப்போதும் அவளுக்கு சந்தனம் தின்பண்டம் கொடுப்பார். சுவாமியாரிடத்தில் அறைவீட்டு ஞானப்பிரகாசம் பிள்ளை வளர்ந்தார். தாய் தகப்பன் இறந்து போனதினால் சுவாமியார் இவரை பிள்ளை போலப் பரிபாலித்து வந்தார்.

அருளானந்த சுவாமி பங்குமாறி வடக்கே சருகணி மாகாணத்துக்குப்



போய்விட்டார். அவ்விடத்தில் வியாதிப்பட்ட போது போத்தியைப் பார்க்க விரும்பிவரும்படியாய் செய்தியனுப்பினார். போத்திக்கு அப்போது சுகமில்லாமலிருந்ததினால் போகக் கூடவில்லை. ஞானப்பிரகாசம் பிள்ளை போனார். அப்போதுதான் அவருக்கு சுவாமியார் தன் உடுக்கைகளைக் கொடுத்தது.

இது வரையிலும் வந்த கோவைக்குருக்கள் ஆதிமுதலாய் சேசுசபைக் குருக்கள் கோவிலிலும் சபையிலும் ஏற்படுத்தி நடத்திவந்த முறைமைகள் வழக்கங்களை ஒப்புக்கொண்டு அனுசரித்து வந்தார்கள். சனங்களுக்கும் எல்லாம் சரியாயும் திருப்தியாயு மிருந்தது.

அண்ணாவிச் சாமி

அருளானந்த சுவாமிகளுக்குப்பின் அண்ணாவி சுவாமி வடக்குன்குளத்துக்கு நேமுகமானார். இவர் வாத்தியாராயிருந்ததினால் மேஸ்திரி சாமியென்றும் பேர். இவருடைய சரியானபேர் பிரஞ்சிஸ்கு மூராந்த. இவர் கோட்டாற்றுப் பங்கிலிருந்து அப்பால் கோவைக்குப் போயிருந்தார். அண்ணாவிச்சாமி வருகிறார், வருகிறார், என்று சனங்கள் வெகு சந்தோஷமாய் வரவுபார்த்துக் கொண்டிருந்தார்கள், ஆரம்புளிக்குப் பல்லக்குக் கொண்டுபோய் ஆரவாரமாய் அழைத்துவந்தார்கள். இவர் முன்னிருந்த சாமிமார்களுடைய உடைகளைத் தள்ளி கால்சட்டையும் வெள்ளை அங்கியும் போட்டிருந்தார். இதுவரையில் சபையில் நடந்துவந்த சகல வழக்கத்தையும் மாற்றும்படியான ஏற்பாடுகள் கட்டளைகள் பிறப்பித்தார்.

## வடக்குன்குளம் கோவில்.

பரஞ்சோதிநாத சுவாமி அஸ்திபாரம்போட்டு, மதுரேந்திர சுவாமி கட்டி முடித்தது. "Dom. 1749" என்று ஒரு கல்லில் வெட்டிப் பதித்திருந்தது. இது சிலுவைமாதிரிக் கோவில். கிழக்கே பார்த்தது. கோவிலை இரண்டு பங்காய்ப் பிரித்துத் தென்வடலாய் அளிபோட்டிருந்தது. முன்பங்கில் வெள்ளாளர், முதலிமார், ராசக்கள், கம்மாளர், முதலிய சூத்திரரும்; பின்பங்கில் கீழ்சாதிக்காரரு மிருப்பார்கள். பின்பங்குத் தளம் தணிவாயிருந்தது.

கோவில் பீடத்தில் வேலைசெய்கிறதும், பூசையில் உதவிமந்திரங்கள் சொல்லுகிறதும், பாட்டுகள் படிக்கிறதும், தீபம் ஏற்றுகிறதும், மற்றும் கோவிலுக்குள் செய்யக்கூடிய கைங்கரியங்கள், சிறப்புகள், சகலமும்: தேர் திருநாள் சப்பரம் எழுந்தேற்றம் சகலமும் பிள்ளைமார் முதலிமாருக்கு மாத்திரமே உரித்து. அதாவது, இந்துக்கள் ஆலயத்தில் சுவாமி கைங்கரியங்கள் பிராமணர், ஓதுவார்களுக்கு மாத்திரம் பூர்த்தியப்பட்டது போலவே இங்கேயும் பிள்ளைமார் முதலிமார்களுக்கு மட்டும் பாத்தியமுடையதாக

வைத்துக்கொண்டார்கள்.

காலைப்பூசையில், அக்கிப்பிரார்த்தனையில், படிக்கிற தேவாரப்பதிகங்கள் பதங்கள், கீர்த்தனைகள் மற்றும் தமிழ் ஸ்தோத்திரங்கள் மேல்சாதிக்காரர் மாத்திரமே படிக்கலாம்.

வடக்கன்குளத்துக் கோவிலில் ஆதியில் பாடுகிற தமிழ்ப் பதங்கள் சில வீரமாமுனிவர் செய்யுளாயிருக்கலாம். ஆனால் போத்தியுடைய காலத்திலும் அதற்குப் பிற்காலத்திலும் பாடுகிறவைகள் ஏகதேசம் எல்லாம் வடக்கன்குளத்துப் பிள்ளைமார்களே உண்டுபண்ணினது. விசேஷம், துரை வீடு கணக்கு மரியதாசப்பிள்ளை செய்யுள். போத்தியுமுண்டுபண்ணினது. இன்னின்னார் செய்யுள் இன்னின்னதென்று திட்டமாய்ச்சொல்ல ஏதுவில்லை. அந்தந்தத்திருநாளுக்கும் அர்ச்சிட்டவர்களுக்கும் அததற்குரியபாட்டுகளுமுண்டு; மூர்த்துகின்றும் இருந்துகொண்டும் பாடாமல் முழங்காலில் நின்று பாடுவார்கள். ஒருபாட்டு ஒருவிருத்தம் பாடிமுடித்தவுடனே மேளகாரன், டமடமா, டமடமாவென்று மேளமடிப்பான். பாட்டுகளெல்லாம் முக்காலே மூன்றுமாகாணிப்பங்கு தேவமாதாவுக்கு ஸ்தோத்திரமாகத்தானிருக்கும்.

ஐயா கோவிலில் பாடுகிறதற்கு முக்கியமானதினால் சகல பாட்டுகளும் ஐயாவுக்குப் பாடமலே தெரியும். அநேகபாட்டுகள் நம்முடைய வீடுகளிலிருக்கிறது. இவைகளில் அநேகத்தை வீட்டில் ஐயா படிக்கிறதன்றி கோவிலில் பாடுகிற இரண்டு பதங்களை 13-ம் பக்கத்தில் காண்பித்திருக்கிறது. இங்கே இரண்டு விருத்தங்களை மாதிரிக்குக் காண்பிக்கிறது. இதிலெழுதியிருக்கிற இரண்டாவது விருத்தம் தங்களுடைய தகப்பனுண்டாக்கினதென்று ஐயா என்னிடத்தில் சொன்ன ஞாபகமிருக்கிறது. வீட்டில் இந்த விருத்தத்திற்கு முன்னும்பின்னுமாய் தொடர்ந்த இலக்கமுள்ள சில விருத்தங்களிருக்கிறது. அவைகளும் போத்தியுடைய செய்யுளாயிருக்கலாம். நிச்சயமில்லை.

சீரமே விரிந்து சந்த கஸ்தமலர் சூடிப் பொற்செவ்வி கலக்
காமிநிற் சாய்ந்து செந்தாமரைப் பாதமும் [illegible]
உரமே யிருந்த இருப்பு முன்பரவ உயர் [illegible]
மரமீதில் அறைந்த கோவே யென் நியமே மாத்திரமே.



"பாலைத் தியான ஆசிரியம்
ஒருலவு தெண்டிரை யுடுத்த பாருலகமுஞ் சேணுலகமுந் திகட்டாச்
செந்தேன்பொழிந்தொழுகுமுன்னிருபதாம்புயத் திருவடிகளைத்தொழ
பாருலவு கஞ்பார் வலிச்சோர் வலுத்தனக பாத்திபர்களிம் மூவரும் [வே
படாமுடி கடாவறனது செந்தாமரைப் பதம்பாவியே தூயமீறை
பேருலவு நன்னிதி வளர்ந்தவர்களேற்றவு மிரு மிருகம் வந்துதொழவும்
இடையர்தயிர்செய்மரியனிப்பவும்வானவர்க ளெண்ணிலார்வந்துதொழவுங்
காருலவுவெல்லைமாமலையருகிலாய முக்கற்குடிலில்வந்தெழுந்தெம்
காசறக்கன்னிமா மரிதருங் குமாரனே கருணையங் கடல்காதனே".

---

கோவிலில் விபூதி கொடுப்பார்கள். அதற்கு ஒரு ஆள் நியமித்திருக்கும். அவர் காவித்துணியும் தலையில்சுற்றிக்கொண்டு செம்புக்கெண்டியும் போட்டுக்கொண்டு கோவிலில் விபூதிகொடுப்பார். அந்த விபூதியை வாங்கி எல்லாரும் பூசிக்கொள்வார்கள். வீட்டில் விபூதிசெய்து பூசக்கூடாது. போத்தியுடையகாலத்தில் விபூதிகொடுக்கிறவர் செய்யப்பபிள்ளையுடையதகப்பனார்.

கோவிலில்மேளம், மிருதங்கம் சேவிக்கிறது ஓச்சர், வேதக்காரக்கணியார்.

கீழ்சாதிக்காரர் மேல்சாதிக்காரனைத் தாண்டி, அல்த்தார் கிராதிக்கிட்ட வரக்கூடாததினால், சுவாமியார் அவர்களிருக்கிற இடத்துக்கு அளிக்குமுன் போய் அவர்களுக்கு நன்மை கொடுப்பார். சாணார் இருக்கிற இடத்தில் ஒரு தீர்த்தக் கல்தொட்டியும் வெள்ளாளர் இருக்கிற இடத்தில் ஒரு தீர்த்தக்கல்தொட்டியும் இருக்கும். கர்த்தர் பிறந்த திருநாளில் குழந்தை யேசுநாதர் சுருபத்துக்கு வெள்ளாளர் முதலிமார் காணிக்கைவைத்துத்தொட்டு முத்திசெய்தபின்பு, சாணாரும் அப்படிச்செய்யும்படியாக அவர்களிடத்துக்கு வைசுருபம் கிட்டக்கொண்டுபோய் வைக்கப்படும். பாடுபட்ட திருநாளன்றும் பாடுபட்ட சுருபத்தை முத்திசெய்வதற்கு அதுவே மாதிரியான ஏற்பாடு செய்திருக்கும்.

கலியாண வழக்கம்.

சுவாமியார் சபையில் கலியாணம் முடித்துவைக்கிற முறை யென்ன வென்றால்:— கோவிலில் பூசைக்கு முன்னேயாவது பூசைக்குப் பின்னேயாவது அல்லது வேறு எந்த நேரத்திலேயாவது கோவிலில் சுவாமிக்குமுன் மாப்பிள்ளையும் பெண்ணும் முழங்காலில் நிற்பார்கள், இருவருக்கும் பின்னுலே உபதேசியார் நிற்பார். சுவாமியார் மாப்பிள்ளையைப் பார்த்து உன் பேரென்னவென்று கேட்க, அவன் தன்பேரைச் சொல்லுவான். பெண்

பேரையும் அப்படியேகேட்டு அறிந்து சொல்வார். [சிலவேளை பெண் தன் பேரைச் சொல்லக் கூடாதிருக்கும். திருஷ்டாந்தமாக, தன் பேர் சவரியம்மாள் என்றும், மாப்பிள்ளைபேர் சவரிமுத்து என்று மிருந்தால், பெண் தன்பேரைச் சொல்ல முடியாது. அப்போது உபதேசியார் சொல்லுவார். பெண்தானே வாயினால் உச்சரிக்கச்சொல்லித்தான் தீர வேண்டுமென்று சுவாமிமார் இம்சைப் படுத்துகிறதில்லை.] அப்போது மாப்பிள்ளையும் பெண்ணும் ஒருவர் கைமேல் ஒருவர் கையைவைக்கச்சொல்லி (சவரிமுத்துவாகிய) நீ இங்கேயிருக்கிற (சவரியம்மாளைத்) திருச்சபை யாசாரத்தின்படி உனக்குச் சொந்தப் பெண்சாதியாக ஒப்புக்கொள்ளச் சம்மதிக்கிறாயா என்பார். ஆமென்பான். பெண்ணைப்பார்த்து: [சவரியம்மாளாகிய] நீ இங்கே இருக்கிற [சவரிமுத்துவை] திருச்சபையாசாரத்தின்படி உன்னுடைய சொந்தப் புருஷனாக ஒப்புக்கொள்ள சம்மதிக்கிறாயா என்பார். அவளும் ஆமென்பாள். அப்போது உபதேசியார் செப்பில் சேர்த்துவைக்கிருந்த திருமங்கிலியத்தை ஒரு தாம்பாளத்தில் வைத்து சுவாமியாரிடத்தில் நீட்டுவார் அவர் லத்தீனில் இரண்டொரு வார்த்தைசொல்லி மந்திரித்து, அதாவது ஆசீர்வாதம்செய்து, திருமங்கிலியத்தைக் கையில் எடுத்து மாப்பிள்ளையிடத்தில் கொடுக்க, அவன் அதைவாங்கிப் பெண்கழுத்துக்கு நேரே நீட்டுவான். பெண்ணினுடைய சம்மந்தி யாராவது தாலியைப் பெண்கழுத்தில் கட்டுவாள். இதற்குள்ளாக சுவாமியார் சேர்த்து வார்த்தையில் லத்தீனில் ஏதோ ஒரு மந்திரஞ் சொல்லுவார். உபதேசியார், கலியாணக்காரருக்காக ஒரு பரமண்டல மந்திரம் வேண்டிக் கொள்ளுங்கோ வென்பார். எல்லாரும் அந்த மந்திரஞ் சொல்லுவார்கள். ஆக இவ்வளவு வேலையும் இரண்டு நிமிஷத்திற்குள் முடிந்துபோம்.

பிள்ளைமார் முதலிமார் பெரும்பாலும் வீட்டுக் கலியாணஞ் செய்கிறவர்கள். சுவாமியார் திருமங்கிலியத்தை மந்திரித்து மாப்பிள்ளை யிடத்தில் கொடுத்தவுடனே அதைவாங்கித் தன் ஆட்கள் வசத்தில் கொடுத்து செப்பில் வைத்துக்கொள்வார்கள். மாப்பிள்ளையும் பெண்ணும் கோவிலிலிருந்து அவரவர்கள் வீட்டுக்குப் போய்விடுவார்கள். அப்புறம் தங்கள் நிச்சயித்த சுபதினத்தில் மணவறைப்பந்தலில் தங்கள் சாதிப்படிக்கு எவ்வென்ன முறைமையாய் திருமங்கிலியந்தரித்து கலியாணஞ்செய்துகொள்வார்களோ அதே பிரகாரமாக கலியாணச் சடங்கு நிறைவேற்றுவார்கள். பெண்ணுக்கு பூவும் தேங்காயும் கொடுக்கிறது, மாப்பிள்ளைக்குக் காப்புக்கட்டுகிறது முதல் தலை குளிப்பு மஞ்சள் நீராட்டுவரை "லோக சாஸ்திரத்தின்



அக்கியான மில்லாமல் சாதி யாசாரத்தின்படியே" சகலமும் சரிவர நடக்கும். மணவறையில் தேவமாதா சுரூபம், பாடுபட்ட சுரூபம் வைத்திருக்கும். அக்கினி வளர்த்து தூபம்போடுவார்கள். உபதேசியார், சமையத்துக் கேற்றபடி

செல்வா சின்னேனு, சாருப்பியே, அஸ்துமான பாலஸ்தனேப்பிரபு,
பிதாகா சதா ஆருகா நமோ நமா

என்னும் மந்திரத்தையும் பின்னும் என்னமெல்லாமோ கத்தோலிக்க வேதமந்திரங்களை சமஸ்கிருதத்தில் சொல்லிக்கொண்டிருப்பார். மாப்பிள்ளை தன்கையினால் திருமங்கிலியத்தை பெண்ணின் கழுத்திலகட்டி ஒரு முடிப்புபோடுவார். மாப்பிள்ளையின் சகோதரி கூடநின்று அதை நன்றாய் முடிந்துபோடுவாள். நம்முடைய செட்டிப்பிள்ளைமார் ஆசாரப்படி எழு இழையும் தாலியுமாய் அன்று உள்ளகழுத்தில் கட்டின திருமங்கிலியம் புருஷன் உயிருள்ளளவும் அப்படியே இருக்கும். திருமங்கிலியம்பெருகிப் போனால் உள்ளங்கழுத்தில் வைத்துக்கொண்டே புது இழையிட்டுக் கட்டிக் கொள்வார்கள். பழைய இழையை எண்ணைக்கலயம் வைத்திருக்கிற உறியில் கட்டி வைப்பார்கள்.

### புதுச்சட்டம்.

அன்றுவி சாமியார் ஏற்படுத்தின ஒழுங்குகளில் விசேஷமானது [1] பெண்ணுக்கு கழுத்தில் திருமங்கிலியம் தரிக்கக்கூடாது, பெண்ணுடைய கைவிரலில் மோதிரம் போடவேண்டும். [2] பெண்ணுடைய பேரை மாப்பிள்ளையும் மாப்பிள்ளை பேரை பெண்ணும் வாயினால் சொல்லி வார்த்தைப்பாடு கொடுக்கவேண்டும். [3] சாணார் அல்த்தாருக்கு வந்து நன்மை வாங்கலாம். இதின்பேரில் மிகுந்த அமளியும் கலகமுமாயிற்று. மூன்றாவது ஏற்பாடு சாணாருக்கு சந்தோஷமாயிருந்ததினால் முதலாவது இரண்டாவது ஏற்பாட்டையும் விரோதியாமல் ஒப்புக்கொண்டார்கள். வெள்ளாளர் முதலிமாருக்கு சாமியார் பேரில் சென்மப்பகை மூண்டது. சாமியாருடைய நடவடிக்கைகளைத் தூஷித்து அவர்பேரில் துணைவிடு கணக்கப்பிள்ளை கவிராயர், மரியதாசப்பிள்ளை, "அன்றுவி, சென்றோர் முறுக்குருமுனியே" என்று முடிகிற பத்துவிருத்தங்களைப் பாடினார்.

### உபதேசியார்.

கோவில் உண்டான காலமுதல் நாளதுவரையும் நூற்றைம்பது வருஷத்துக்கு மேலாக வடக்கன்குளத்தில் ஒரே குடும்பத்திலேயே உபதேசி அலுவல் இருந்து வருகிறது. எப்பொழுதும் கோவிலுக்கு இரண்டு உபதேசிமார் இருப்பார்கள். அதில் ஒருவருக்குத் தலத்து உபதேசியாரென்றும் ஒ

ருவருக்கு வாசலுபதேசியாரென்றும்பேர். அவரவர்களுக்குவேலை பிரித்திருக்கும். அண்ணாவிசாமியார் இருந்தகாலத்தில் உபதேசிமார் பெரியண்ணாவி வியாகப்பபிள்ளையும் அவருடைய சொக்காரன் சின்னண்ணாவி வியாகப்பபிள்ளையும். பெரியண்ணாவி வியாகப்பபிள்ளையுடைய பெரியதகப்பனார் மூத்தபிள்ளை யென்ற மதுரேந்திரம் பிள்ளை, உபதேசியாரல்லாதிருந்தும், ஊரில் பெரிய தனம் உண்டு.

சுவாமியாரால் பிழைப்பு நடக்கவேண்டியதினால் ஷை அண்ணாவிமார் கூட்டம் சாமியாருடன் சேர்ந்துகொண்டு: சாமியாருடைய சொல்தான் திருச்சபைச் சட்டம், அந்தப்படியே எல்லோரும் ஒப்புக்கொண்டு நடக்கவேண்டும் என்று பிரசங்கம் பண்ண ஆரம்பித்தார்கள். ஒருக்கால் சன்னியாசியாய்ப்போனவன் தவிர, மற்ற எவனுக்கும் எந்தக்காரியமானாலும் வயிற்றுப் பிழைப்பே முதற் காரியம். வயிறு நிறைந்தால் அப்புறம் இரண்டாவது தேட்டம் அதிகாரப் பெருமை. இந்த இரண்டுக்கும் பிந்தித்தான் மற்ற ஈடேற்றமெல்லாம். லோகப் பிரசித்தப்படிக்கு "ஐயர் சொன்னதே வழக்கு, ஆமென்று சொன்னால் மெழுக்கு, அல்லவென்றுசொன்னால் முழுக்கு" என்பது உபதேசிமாருடைய மூலமந்திரம். அதுவுமல்லாமல் ஷை உபதேசிமாருக்கு சாணாரால் வரும்படி மிகுதியாயுண்டு. தங்கள் இனத்தாரால் கிடைக்கிற மரியாதை உபகாரம் சொற்பம். ஆதலால் மேற்படி உபதேசிமார் சாணாருக்கு அநுகூலமாயிருந்தார்கள். சாணாருக்கும் அவர்கள் நன்மைநிலைக்கு உதவவேண்டியவசியமும் அவர்கள் சாதிக்கென்றும் ஒரு உபதேசியுண்டு. வெள்ளாளர் முதலிமார் யாவரும் சாமியார் மேல் மாத்திரமல்ல, ஷை அண்ணாவிமார்மேலும் பகையானார்கள்.

வஞ்சிமாத்தாண்டநல்லூர் என்னும் கஸ்தூரி நகர ஊரிலிருந்த வாத்தியார் மரியதாசப்பிள்ளை தன் இனத்தார் வடக்கன்குளத்தாருக்கு ஒரு சீட்டுக் கவி அனுப்பினார்.

௲௮௱௨௰ கார்த்திகை ௴ ௨௨௳ [1820-12-5].

மாடான சிலானும் பலவருக்குப் பிறந்தவனென்றுரைத்தான் மூத்த
நாடானும் சாணாரோடுதேவடி இனத்தார்க்குநகைப்பேசெய்தான்
மேடானவிதுவறிந்தும் அவனோடே உறவுசெய்யும் மிலேச்சர் கேளீர்
குடானதில்லையுங்கள் பெண்டிரைத்தான்பிடித்தாலுஞ் சுகமுண்டாமே

இதில் சிலான் என்பது சிலாக்குட்டிப்பிள்ளையென்ற ஞானப்பிரகாசம் பிள்ளை. இவன் பெரியண்ணாவியுடைய மகன். குடிகாரன். சாமியார்களு



க்கு சமபாகிகளாயிருக்கிறவர்கள் பெரும்பான்மையும், ஷைப்பிள்ளை, உபதேசிகளாயிருக்கிறவர்கள் சிறுபான்மையும் குடிக்கிற வழக்கம் கற்றவர்களாயிருந்தார்கள். அண்ணாவி சாமி காலத்தில் தடையம் சேர்வைகாரன் பட்டிப் பங்கிலிருந்த மனுவேல் சாமியார் பொல்லாத மிடாக்குடியன் என்று பெயர் பெற்றவர். ஷை சிலாக்குட்டிப்பிள்ளை குடிகாரனாய்க் கெட்டலைந்து போனான். அமுதப்பிள்ளை மகன் பரவரோடு சாவகாசம்பண்ணி ஒரு பரத்தியையும் தாலிகட்டிப்பின்பு எப்படிப்போனானென்று தெரியாது. மூத்தநாடா னென்றது ஷை மதுரேந்திரம் பிள்ளையை.

## மோதிரக் கலியாணம்.

உபதேசிமார் தவிர மற்றொருவருக்கும் சுவாமியாரிடத்தில் பிழைப்பும் சலுகையும் வேண்டியிராததினால் அவர் கட்டளையை லட்சியம் பண்ணவில்லை. ஒரு கலியாணம் மாத்திரம் சுவாமியாருடைய ஒழுங்குப்படி நடந்தது. பாளையங்கோட்டை கல்வெட்டான்குழித்தெரு மதுரேந்திரம் பிள்ளை அக்காலத்தில் கோட்டாற்றுக்குச் சமீபமான ஆசுரகுளத்திலிருந்தார். அவர் பெண்ணழைத்துக்கொண்டு வடக்கன்குளத்துக்குச் சாமியாரிடத்தில் கலியாணம் முடிக்கவந்தார். சாமியார் மோதிரம் போட்டால்தான் கலியாணம் பண்ணுவிப்பேன், தாலிகட்டும்படி இடங்கொடுக்கமாட்டேன் என்றார். அவருக்கு உபதேசி வேலையிருந்ததினால் சாமியார் சொற்படி மாப்பிள்ளையும் பெண்ணும் ஒருவர் பேரை ஒருவர் சொல்லி மோதிரம் போட்டுக் கலியாணம் பண்ணிக்கொண்டார்கள். கோவிலை விட்டு ஊருக்குள் வந்தவுடனே தாலிகட்டிக்கொண்டார்கள்.

ஊரார் சாமியாரை மீறிக்கலியாணம் செய்துகொண்டார்கள். இப்படி ஒன்பது கலியாணம் வீடுகளில் நடந்தது. இவைகளில் ஐயாவுடைய கலியாணம் ஒன்று. சுவாமியார் இவர்களெல்லாருக்கும் நன்மை தின்மை விலக்கி இவர்கள் பேரைக் கோவிலில் வாசித்துப் பெரிய பெரிய சாபங்கள் போட்டார். ஆண் பிள்ளைகள் இந்தச் சாபங்களுக்கு அவ்வளவு பயங்கொள்ளாவிட்டாலும் பெண்பிள்ளைகள் மிகவும் கலங்கிப் புலம்பிக்கொண்டு அழுகையும் கண்ணீருமாயிருந்தார்கள்.

## பிராது

கர்த்தர் பிறந்த திருநாள் வந்தது. சாணார் சுருபத்தை முத்தஞ்செய்ய வெள்ளாளரைத் தாண்டி அல்த்தார் கிட்ட வந்தார்கள். கோவிலுக்குள் பெரிய கலகமும் கூப்பாடுமாயிற்று. பிள்ளைமாரில் சிலர் பெரியண்ணாவியைப் பிடித்து "நீ சாணாருக்குக் கையைக் காண்பித்தாய், உன் பொத்தை வய

த்தில் தீயை வைக்க" வென்று அவரை அடித்தார்கள். அவரும் சாமியாரும் சேர்ந்து அவருடைய சக்கிறிஸ்தி நிறவுசொல்களைப் பிடுங்கிக்கொண்டு கோவிலிலிருந்த பணம் பண்டங்களைக் கொள்ளையடித்துப் போட்டார்களென்று பிள்ளைமார்பேரில் கொள்ளைப்பிராது களவுப்பிராது கொடுத்தார்கள். (வடக்குன்குளம் பெருங்குடிக் கிராமமானது. சகல அதிகாரமும் பெருங்குடிப் பிராமணரிடத்தில் இருந்தது. வடக்குன்குளத்தில் ஒரு பேச்சுக்கும் "பெருங்குடியில்போய்ச் சொல்லுபோ" என்பார்கள். அந்தக் காலத்தில் வடக்குன்குளம் என்றவூர் சுற்றுப் பட்டிகளிலும் வேதக்காரருக்கும் மாத்திரம் தெரிந்ததாயிருந்ததன்றி மற்ற இடங்களிலும் சர்க்கார் எழுத்துக்குத்துகளிலும் பெருங்குடி என்றபேர் தெரியுமேயன்றி வடக்குன்குளமென்றால் தெரியாது. வடக்குன்குளத்துக்காரர் அன்னிய இடத்துக்குப் போயிருக்கும்பொழுது தங்களூர் பெருங்குடி என்று சொல்லுவார்களேயல்லாமல் வடக்குன்குளமென்று சொல்லமாட்டார்கள். சொன்னால் தெரியாது. லெக்லர் ஐயரவர்கள் ஐயாவுக்குக் கொடுத்த சுவிசேஷ புஸ்தகத்தில் பெருங்குடி சவரிராயபிள்ளைக்கு என்று எழுதிக்கொடுத்திருக்கிறார்கள்.) கொள்ளைப்பிராது பெருங்குளத்தில் விசாரிக்கிறபோது குற்றஞ் சாட்டப்பட்ட பிள்ளைமார் முதலியோர் கைகட்டி நிற்கவும் வாதிகளான சாமியார் வகையரா சாணார் நிழலிருக்கவும் பிள்ளைமார் கண்டு வெகு அவமானப்பட்டார்கள்.

லண்டன் மிஷியோன்.

பிள்ளைமார் முதலியோர் எல்லாரும் திரண்டு வடக்குன்குளத்து வெகு சொற்பப் பள்ளச் சபையை விசாரிக்கிற நாசரேத்கோவில் மால்ட்டு ஐயரிடம்போய் சுவிசேஷ மார்க்கத்தில் சேருகிறதாக ஒப்புக்கொண்டு கையெழுத்துப்போட்டார்கள். அதன்பேரில் மால்ட்டையர் பல்லக்குப்போட்டுக்கொண்டு வடக்குன்குளம் வந்தார். செம்பெப்பா வியாசப்ப பிள்ளை வீட்டுக்கு எதிரில் தேர் சப்பரம்போகிற கீழ்த்தெருவை மறித்துக் கோவில் கட்டினார்கள். இந்த சட்டியிலும் பிராதுகள் நடந்தது. ஆண்பிள்ளைகள் மாத்திரம் இந்தக்கோவிலுக்குப்போய் வருவார்கள். பெண்பிள்ளைகளில் மைப்பலைப்பிள்ளை பெண்சாதி பின்னும் இரண்டொரு தைரியக்காரிகளுந் தவிர மற்றப் பெண்பிள்ளைகள் பழைய கோவிலுக்குத்தான் போவார்கள்.

போத்திமுதலிய பெரியோர் முதியோர் சிலர், மால்ட்டையரிடத்தில் கையெழுத்துக் கொடுக்கவும் புதுக்கோவிலுக்குப் போகவுமில்லையாகிலும், ஆனால் தங்கள் கட்சியைச் செயிப்பதற்காகத் தங்கள் மக்கள் மற்றவர்கள்



போகும்படிக்கு உதவியாயிருந்தார்கள். மக்கள் வாசிக்கப்படிக்க விற்பனர்களாயிருந்ததினால் எங்கே பதிதர் புஸ்தகங்களை வாசிப்பதினால் பதிதர் வேதத்திலே நிலைத்துப்போகிறார்களோவென்று போத்தி பயந்து, வீரமாமுனிவர் பதிதருக்கு விரோதமாயெழுதிய வேதவிளக்கம் முதலிய அநேக நூல்களை வெகு அக்கறையாய் சுவடியில் எழுதி மக்களுக்குக் கொடுத்துப்படிக்கும்படி செய்தார்கள். பிற்காலத்தில், ஐயா, தானுந் தன் தமையனும் பாகம் பண்ணிக்கொண்ட காலத்தில், மேற்படி சுவடிகள், மீந்திரச் சுவடிகள், புதுமைச் சுவடிகளாகிய மார்க்கச் சுவடிகள் தன் பங்குக்கு விழவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆண்பிள்ளைகளிலும் சிலர் பழய கோவிலுக்குப் போவார்கள். அப்படிப் போயிருந்ததில் மிக்கேல் பிள்ளை; மால்ட்டையரிடம் புஸ்தகம் (தாவீதின் சங்கீதம்] வாங்கினவனென்று அவனைக் கையைப்பிடித்துத் தூக்கி விட்டார்கள்.

சாபம், வசவு.

சுவாமியார் தமக்குவிரோதிகளாய்ப் பதிதராய்ப் போய்விட்டவர்களைப் பேரெழுதிக் கோவிலில் வாசித்து பெரியசாபங்கள் போட்டார். பெண்பிள்ளைகளுக்கெல்லாம் இது சொல்லமுடியாத கஸ்தி. ஆனாலும் பகையும் விரோதமும் மேலிட்டதினாலே ஆண்பிள்ளைகள் சுவாமியாரைமதிக்கவில்லை. ரோமான் குருக்களுடைய நடபடிக்கைகளைக்குறித்து இராயப்பன் பாடின ஆனந்தக்களிப்பு முதலிய பாட்டுகளைத் தங்கள் தெருக்களிலும் தங்களை கூட்டங்களிலும் பாடுவார்கள். இராயப்பன் ஒரு பள்ளன். கரிசல் காட்டிலேயிருந்தான். அவ்விடத்து சுவாமியாருடைய நடக்கையின் பேரில் விரோதப்பட்டு பின்பு சுவிசேஷ மார்க்கத்தை ஏற்றுக்கொண்டான். அவன் அநேக விதமான பாட்டுகள் உண்டாக்கியிருக்கிறான். தன்னுடைய சுவாமியார் பேரிலும் அநேக பாட்டுக்கட்டினான். அதில் ஒரு கவி.

குருக்களே காசுக்குருக்கள்
அவர் காசு கண்டால் பூசை ஏற்றுவோமென்பார்
பாவத்தைத் தீர்க்கமாட்டார்
பாவந்தீர்க்க வந்தோரைச் செருப்பாலடிப்பார்
ஆங்கார கோபங்களேது
பின்னும் அடிக்கடி காசின்மேல் ஆசையுமேது
பாங்கான நற்குருவானால்
இவர் பதறிப் பதறிப் பணந்தேடுவதேது

வேதத்தை மெத்தப் படித்து
விசுவாசிகள் தன்னைத் தூற்றியடித்து
கடைப் பிடித்து இழுத்து
இவர் கட்டாயம் பண்ணக் கலக்கேடப்பா.
தானு நீறு நக்கவோனு.

## இராசி

ஒரு வருஷமாய்ப் பிராதும் கட்டியும் இருந்தது. தெருவை மறித்துக் கட்டின கோவிலை எடுத்துப்போடும்படி சர்க்கார் உத்தரவாயிற்று. சாமியாருடைய நடபடிக்கைகளை அவருடைய மேலதிகாரிகள் ஒப்பவில்லை. பிள்ளைமாரோடு இராசியாகும்படிக்குக் கண்டிப்பாய் உத்தரவு கொடுத்தார்கள். அப்படியே இராசியானார்கள். கலியாணநாழிக்கு முன்முறைவாய் நடந்தபடியே நடந்து வரவேண்டியது. ஆனால் மீறிக் கலியாணம் பண்ணினவர்கள் ஒரு மாசம் பிரிந்திருந்து சுவாமியாரிடத்தில் வந்து திருமங்கிலியத்தை மந்திரித்துக்கொள்ள வேண்டியது. சானார் கம்மாளர் இடத்தவர்களை சாமியார் இழுத்துவிட்டு ஆட்டம் பார்த்ததினால் அவர்களுக்கு சமாதானமாக; அவர்கள் அந்தாருக்கு வரலாம், வெள்ளாளரைத் தாண்டியல்ல சுற்றுப்பக்கமாய்த் தொண்டு இடித்து வரவேண்டியது. தேர்த்திருநாளில் தேர்ச்சப்பரம் வருகிறபோது சானார் தீவட்டி கொடி பிடிக்கலாம், பதிதராய்ப் போனவர்கள் அபராதம் கொடுக்கவேணும் அல்லவென்றால் அடிவாங்கிக்கொள்ளவேண்டும், என்பதாக இராசியானார்கள். சுவாமியாரும் தம்முடைய குற்றத்துக்குப் பரிகாரமாக அஞ்சுமணிக் குறடாவினால் தம்மை அடித்துக்கொண்டார்; புரோட்டெஸ்டாண்டு மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவராய்த் தங்கள் பழைய வேதத்துக்குத் திரும்பவந்து சேர்ந்தார்கள். இப்படி இராசியான செல்வம் போத்தியுடைய மனைத்துக்கு பின்னாட்களில் நடந்தகாரியங்கள். லண்டன் மிஷியோனில் அலுவலாயிருக்க இரண்டொருவரும் வைரத்தலைப்பிள்ளை முதலியவெல்லாம் ஐயருடைய வேதத்தில் பின்பும் கொஞ்சகாலம் இருந்தாலும் கடைசிவரைக்கும் நிலைக்கவில்லை, திரும்பப்போய்ச்சேர்ந்தார்கள். இப்படியாகக் கட்டிமுடிந்தது. ஐயா லண்டன் மிஷியோன் வேதத்தில் இருந்தகாலம் ஒரு வருஷத்துக்குக் குறைவு.

## ஐயாவுடைய கலியாணம்.

அன்னுவிச்சாமியாரால் சேசேட் குளப்பம் முற்றுமாயிருக்கிறபோது, போத்தி தன் இரண்டாவது மகனுக்குக் கலியாணத்துக்குக் கோரிக்கை பண்ணினார்கள்.



கொல்லம் ௯௯௫ ஆனி-மீ ௧௦-உ வியாழக்கிழமை நடந்தது. (1820-6-22) ஞானப்பிரகாசியார் திருநாள் முடிந்த மறுநாள், பெரியையா கலியாணத்துக்குப் போட்டிருந்த மணவறையைத் தீத்தித் திருத்தி — பெரிய முதலியாரென்ற வியாகப்ப முதலியாருடைய பேரன் ஞானேந்திர முதலியார் உபதேசியாராக இருந்து — நாற்காலிப் பலகையில் பட்டு விரித்து, தேவமாதா சுரூபம் எழுந்தருளப்பண்ணி — காணிக்கைவைத்து — தூபம்போட்டு — பகவத்தி போல ஆயிரப் பெருந்திரி கொளுத்தி — வாழை இலையில் நாலேந்துபடி அரிசியைக்குவித்து, அதின்மேல் வெட்டுத் தேங்காயை வைத்து, மெழுகுதிரி கட்டு — பொங்கலிட்டு — அரசாணிப்பானைவைத்து — வத்தி இறக்கி — கைபிடித்துக்கொடுத்து — உபதேசியார் செபங்கள் சமஸ்கிருதமந்திரங்கள் சொல்லி — மாப்பிள்ளை பெண்ணிடத்தில் வார்த்தைப்பாடு கேட்டு — செப்பிலிருந்த திருமங்கிலியத்தை கூடியிருந்த எல்லாரும் தொட்டு ஆசீர்வாதம்செய்து கொடுத்தபின் பேரில் — மாப்பிள்ளை திருமங்கிலியத்தை பெண்கழுத்தில் தரித்தார்கள். அப்போது ஐயாவுக்குவயசு பதினெட்டரை, அம்மைக்குப் பதினைந்து முடிந்து பதினாறு நடக்கிறது.

அம்மை கூடப்பிறந்த மாமன்மார்; செங்கோட்டையில் அலுவலாயிருந்தவர் கலியாணத்துக்கு நாலு மாசத்துக்கு முன்னிறந்து போனார். இன்னொரு மாமனார் அப்போது வியாதியாயிருந்தார். கலியாணத்துக்கு வரக்கூடவில்லை. கலியாணத்துக்கு ஒரு மாசத்துக்குப்பின் இறந்துபோனார். ஆகையால் மாமன் முறைக்கு தென்காசி மிக்கேல் பிள்ளை அம்மையைத் தூக்கி மணவறையைச் சுற்றிக்கொண்டுபோய் மணவறையில் வைத்தார்; கலியாணச் சடங்கு முடிந்தபின் அம்மையினுடைய அத்தான், (பெரியையா) அம்மையை மணவறையிலிருந்து தூக்கி மணவறையைச்சுற்றி வீட்டுக்குள் கொண்டுபோய் வைத்தார்கள். மறுநாள் பட்டணப்பிரவேசம் சிறப்பாய் நடந்தது. அம்மையினுடைய கலியாணக் கண்டாங்கியின் விலையம், நாலு பொன் ஐந்து பணம் [அதாவது ஒன்பது ரூபாய் ஆறு அணா].

கலியாணத்துக்கு, பெரிய வீட்டுக்கு வடக்கு, வடக்கு வீட்டுக்குத் தெற்கு; தென் வடலாய் மேலச்சுவரை ஒட்டி ஆக்குப்புரை மழைக்கு ஒழுகாமல் கட்டியிருந்தது.

## கோவிலில் காந்தருவ விவாகம்.

இதே தேதியில் சேரூர்ப்பிள்ளையென்ற பாக்கியம்பிள்ளைக்கும் ஞானப்பிள்ளையுடைய உடப்பிறந்தாள் அருளாயிக்கும் கலியாணம் நிர்மானித்திருந்தது. ஆனால், கோவிலில் மந்திரியாத தாலியைக்கட்டினால் என்ன பா

வம் வந்து சம்பவிக்குமோ என்று பயந்துபோய் ஒருவருக்குந் தெரியாமல் ரகசியமாய் ஒரு உபாயம் பண்ணினார்கள். சுவாமியார் அந்தப் பிரார்த்தனைக்கு வருகிறதில்லை, உபதேசியார்தான் வருவார். மாப்பிள்ளையும் பெண்ணும் இயல்பாய் கோவிலுக்குப் போகிறது போல அவரவர் பாட்டுக்கு கோவிலில் போயிருந்தார்கள். ஒருவை தயாவந்து மந்திரஞ் சொல்லுகிறபோது, இன்னும் சுரூபத்தை மூடாதிருக்கையில், குபீரென்று மாப்பிள்ளையும் பெண்ணும் அல்தாரீ கிட்டப்போய் முழங்காலில் நின்றுகொண்டு, மாப்பிள்ளை தன் கையில் கொண்டுபோயிருந்த தாலியை ஒரு நொடியில் பெண் கழுத்தில் கட்டி விட்டார். உபதேசியார் இதைப் பார்த்தவுடனே திகிலெடுத்தான் இதற்குடந்தையா யிருந்ததாக சுவாமியார் எங்கே நினைக்கப்போகிறாரோ என்று பயந்து ஒரே ஓட்டமாய் வெளியே ஓடிவிட்டார். அந்தப் பிரார்த்தனை அப்படி முடிந்தது.

[மீறிக்கலியாணம் பண்ணினவர்களுக்கு சாமியாரோடே ராசியானபிற்காலத்தில் புருஷனும் பெண்சாதியும் இராத்திரியில், சாமியாரிடத்தில் ஒழிச்சப்போய், புருஷன் திருமங்கிலியத்தைத் தொட, சாமியார் லத்தீனில் சாது வார்த்தைசொல்ல, பாவமும் சாபமும் நீங்கி விடுபட்டுச்சேர்ந்தார்கள்.]

அம்மை.

அம்மையும் ஐயாவும் சிறு பிள்ளையில் ஒருவரை யொருவர் பார்த்திருக்கிறார்கள். அம்மையிருந்த தெய்வாயிஆத்தாள் வீடு போத்தியுடைய வீட்டுக்கு மேலவீட்டுக்கு மேலவீடு. போத்தி வீடு பாங்காய்ச் சென்றபோது அம்மை போய்ச் சாப்பிட்டதென்று முன்னே சொல்லியிருக்கிறது. ஐயா, தன்னைப்போலொத்த சிறு பிள்ளைகளை யெல்லாம் கூட்டி வைத்துக் கொண்டு அவர்களுக்குக் குருப்பீடம், மந்திரம் (செபம்) சொல்லிக்கொடுப்பார்கள். தெய்வாயி ஆத்தாள் வீட்டில் பரணில் பூவெடுத்துப் போட்டிருக்கிறது. ஐயா போய் அந்தப் பூக்குட்டியைப் பிடித்து விளையாடுவார்கள். அம்மை பெரியபிள்ளையானபின்பு ஐயாவைப் பார்த்ததில்லை. ஐயா என்னிடத்தில் ஒரு தடவை சொன்னது: "அந்தக்காலத்தில் பெண்கள் வீட்டுக்குள்ளே இருக்கிறதேயன்றி வெளியே காணக்கிடையாது. ஒரு நாள் உங்கள் அம்மை பூசைக்குப் போய் வருகிறபோது நான் பார்க்க நேரிட்டது. முகம் சூரியப் பிரகாசம் போலிருந்தது" என்று சொன்னார்கள். அம்மையுடைய செவத்தமேனியும் அழகும் முதிர்வயதிலும் மகிமையாய் இருந்தது. தெய்வாயி ஆத்தாள் தெய்வபக்தியில் மகா சிறந்தவள், அவளுடைய ஆவியும் மாதிரியும் அவளிடத்தில் வளர்ந்த இந்தப்



பேத்திக்கும் கிடைத்தது. "தெய்வாயிஆத்தாள் வீட்டில் எத்தனை ஒழுக்கமாயிருக்கவேண்டும், இல்லாவிட்டால் அடுத்த வீட்டில் உங்கள் ஐயாவுக்கு என்னைக் கட்டுவார்களா, அம்மான்"; என்று அம்மைதானே ஒருதரம் என்னிடத்தில் சொன்னாள்.

அம்மை சொல்லுகிறது:— "பெரியண்ணாவி வியாகப்பபிள்ளையுடைய மகன் சிலாக்குட்டிப்பிள்ளை, என்ற ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு முந்தி என்னைப் பேசியிருந்தது ஒருவருக்குமாய். அத்தானுக்கு என்பேரில் பட்சம், அத்தானுக்கு தன் தம்பிக்கு என்னைக் கலியாணம் பண்ணவேணுமென்று உள்ளுக்குள் எண்ணம். அதினாலே சிலாக்குட்டிப் பிள்ளைக்கு என்னைக் கட்டிக் கொடாதபடிக்கு, தெய்வாயிஆத்தாள் மற்றவர்களிடத்திலும், 'அவன் உபதேசிமார் சேகரம், குடிப்பான், அப்படி இப்படி' என்று என்னை மெல்லாமோ குறிபக்குத்திச் சொல்லுவார்கள். அத்தான் சொன்ன அவ்வளவும் கடைசியில் சரியாய்த்தானிருந்தது".

அம்மையுடைய வம்சம்

சுவாமியடியார் இரண்டாவது கலியாணம் பண்ணின வியாகப்பபிள்ளையுடைய வயிற்றில் பிறந்த பிள்ளைகளில் தெய்வாயி ஆத்தாள் ஒருத்தி. தெய்வாயிஆத்தாள் புனர் சவரிமுத்துப் பிள்ளையைக் கலியாணம்பண்ணி சூசைமரியான் பிள்ளையையும் பின்னும் சிலபிள்ளைகளையும் பெற்றாள். அவள் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் ஆகமொன்பது. ஒருவர் தவிர மற்றப்பிள்ளைகளெல்லாம் பாலியத்திலும் சிறுப்பத்திலும் இறந்து போனார்கள்.

சூசைமரியான் பிள்ளை நேமத்து நல்லதம்பியா பிள்ளை மகள் (நேமத்தில் முத்துப்பிள்ளை என்று பேர் வழங்கிய) மாதவாடியாளைக் கலியாணம் பண்ணி நாலு பிள்ளைகள் பிறந்தது. [க] அம்மை (மரியவியாகுலம்,) [உ] நல்லதம்பியா பிள்ளை, [ங] ஞானப்பிரகாசம் பிள்ளை, [ச] தெய்வாயி.

அம்மையுடைய அம்மையுடைய தகப்பனார் நல்லதம்பியா பிள்ளைக்குப் பூர்வீகம் வலியூர் கருங்குளம். அங்கேயிருந்து நேமத்துக்குப் போய் அவ்விடத்தில் செட்டி வம்சத்தில் கலியாணம் பண்ணிக்கொண்டு அவ்விடத்திலிருந்தார். நேமத்தில் அவருக்கு ஒருபெரிய வீடாகவிருந்தது. நேமம் திருவனந்தபுரத்துக்கு இப்புறத்தில் ஆறு மயில் தூரத்திலிருக்கிற கிராமம். அம்மைபிறந்தது நேமம். சூசைமரியான்பிள்ளைக்குத் திருவனந்தபுரத்தில் அரண்மனையில் அரிக்காரச்சேவகம். அவர் ஒரு வாட்டவணி மனுஷன். தாய் கைம்பெண்சாதியும் இவர் ஒரே மகனாயுமிருந்தும், தாயை ஆதரிக்க வேண்டுமென்கிற எண்ணமாவது தாய் என்ற எண்ணமோவது கிடையாது. பெண்சாதியையும் மிகவும் துன்பப்படுத்துவார்.

## மக்கள் சம்பத்து.

போத்தி வீட்டில் மக்கள் நால்வர், மருமக்கள் இருவர், பேத்திப்பெண் ஆக வெளிப்பார்வைக்குச் சிறப்பாயிருந்தது. அம்மைக்குக் கலியாணமாகி ஆறு மாசத்துக்குப் பின் பெரியய்யாவுக்குக் காய்ச்சல் வந்து தோஷித்து வெகு நாள் பிழைப்பார்களென்ற நம்பிக்கையில்லாமற்போயிற்று. போத்தியும் ஆத்தாளும் பட்ட வருத்தமும் கஸ்தியும் சொல்லி முடியாது. பெரியம்மைக்கு அப்போது ஒருபெண்தானிருந்தது. அவளுடைய தாயார் ஒரு பெண்ணைப்பெற்றதோடு தாலியறுத்தாளே, இவள்பாடும் அப்படித்தானிருக்குமோவென்ற கலக்கம் சொல்ல முடியாது.

ஐயா கலியாணமாகி சிலமாசத்துக்குப்பின் அம்மை ஒருநாள் வெளியே போய்விட்டு வந்தபோது, நமக்குப் பேச்சு வார்த்தை யில்லாத வீட்டுக்குப்போய்விட்டு வருகிறாள் என்று கோபமாய் கையிலிருந்த விளாரை அம்மை மேல்வீச, கண்டி நெற்றியிலே தெறிக்கப்பட்டுவிட்டது. செக்கச்செவேலென்ற உடம்பானதால் இரத்த வாராய்த்தெறித்துப்போயிற்று. ஐயாவைப் போத்தி ஆத்தாள் ரொம்பச்சண்டை பிடித்துக் கோவித்தார்கள். ஐயாவும் புத்தித்தாழ்வுசெய்து போட்டோமே யென்று மிகவும் மனவேதனைப்பட்டுக்கொண்டார்கள்.—ஐயா இதை என்னிடத்தில் ஒருதடவை துக்கமாய்ச் சொன்னார்கள், சங்கதி நடந்து ஏறக்குறைய நாற்பத்தைந்து வருஷத்துக்குப் பின்னிருக்கலாம்.

ஐயாவுக்குத் தலைப்பிள்ளை பெண், கலியாணமான மறுவருஷம், சித்திரைமீ உதய செவ்வாய்க்கிழமை பிறந்தது (1821-5-8). பிள்ளைக்கு ஆத்தாளுடைய பேர் அருளாயி என்று பேரிடவேண்டுமென்று சொன்னபோது; போத்தி தம்முடைய தேவமாதாவினுடைய பேரைத்தான் தலைப் பிள்ளைக்கிடவேண்டுமென்று சொல்லி மரியம்மாளென்று பெயரிட்டார்கள். குழந்தை பிறந்த பதினாறாம் நாள் உபதேசியார் பெரியண்ணாவி வியாகப்பிள்ளை அவஸ்தை ஞானஸ்நானம் கொடுத்தார். அப்புறம் சுவாமியாரிடத்தில் ஞானஸ்நானத்துக்குக் கோவிலுக்குக் குழந்தையைக் கொண்டு போனபோது, மீறிக் கலியாணம் பண்ணினவர்களுடைய பிள்ளை யென்று ஞானஸ்நானம் கொடுக்கமாட்டேனென்றுவிட்டார்.

குழந்தை ஐந்து மாசமாயிருக்கையில் ஒருநாள் காலையில் கீழே தடுக்கில் துணியை விரித்துக் கிடத்தியிருந்தது. போத்தி கோவிலுக்குப் போய் வீட்டுக்குள் வந்து உத்தரியத்தைக் கழற்றி மாடக்குழியில் வைக்கப் போகிறபோது, பிள்ளை போத்தியைப்பார்த்துச் சிரித்தமுகம் காண்பித்



தது, போத்தியும் ஆத்தாளும் பிள்ளை சிரிக்கிறதைக்கண்டு மகிழ்ந்தார்கள். ஆனாலும் மூத்த மகனுக்குப்பிறந்தது பெண், இளைய மகனுக்கும் பிறந்தது பெண், ஆனதினாலே, போத்தியைப் பார்த்துப் பிள்ளை சிரித்தவுடனே, ஆத்தாள் "பெட்டைக்குட்டி தானே" என்றார்கள். அதற்குப் போத்தி "ஒரு கனவில்தானே பொழுது விடிந்து போகிறது" என்றார்கள்.

ஆத்தாள் மருமக்கள்மாரை முன்னே விட்டுக் கோவிலுக்குப் போவார்கள். ஒருநாள் தப்பாது.

அக்காலத்தில் வயசுவந்த பெரிய மனுஷர் வைதிகமுள்ளவர்கள்தான் உத்தரியம் போடுகிறது. பத்திமான் என்று பேரெடுத்தவர்களுக்குத்தான் சுவாமியார் வெகு பூச்சியமாய் உத்தரியம் கொடுப்பார்; கோவிலுக்குப் போகிறபோது மாத்திரம் போட்டுக் கொள்ளுகிறதே யன்றி மற்ற வேளையில் பத்திரமாய் வைத்திருப்பார்கள். இக்காலத்தில் சின்னக்குட்டிப் பயல்கள் கூடக்கழுத்து வழியாய்ப் போட்டுக் கொண்டு தெரு வழியாய் அலைகிறது போல் அக்காலத்தில் கிடையாது. ஐயாவும் உத்தரியம் பெற்றிருந்தார்கள்.

## அன்னம்மாள் கலியாணம்.

போத்தியுடைய மகள் அன்னம்மாளுக்கு இப்போது பதினாறு வயசாயிற்று, அவர்களுடைய அழகுக்கு நிகர்கண்டதில்லையென்று பிரஸ்தாபமாய்ச் சொல்லப்படும். அன்பும் அருமையும் குணமும் ஒழுக்கமும் அப்படியே அதிசயமாயிருந்தது. அதினால் அவர்களைப் பெற்றோரும் சகோதரரும் வெகு அருமையாய்க் கொண்டாடினார்கள். திருவனந்தபுரத்தில் அலுவலாயிருந்த தெய்வநாயகம்பிள்ளைக்கு இந்தப்பெண்ணைக் கலியாணம்பண்ண விரும்பிக் கேட்டனுப்பினார்கள். போத்திக்கும் மூத்தமகனுக்கும் மேற்படி மாப்பிள்ளைக்குக் கட்டிக்கொடுக்க முழுப்பிரியம். ஆனால் ஆத்தாளுக்குச் சம்மதமில்லை. தொட்டன்பட்டியில் தன்னுடைய தமயனார் விசேந்திமுத்துசெட்டியார் மகன் மிக்கேல்பிள்ளைக்கு கலியாணம்பண்ணிக் கொடுக்க எண்ணம்.

நம்முடைய ஆத்தாள் கூடப்பிறந்த சகோதரிகள் மூன்றுபேரும் தங்கள் மூன்று பெண்மக்களையும், தங்களுடைய அண்ணன்மார் மூன்றுபேருடைய மூன்று ஆண்மக்களுக்குக் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று பேசி அப்படியே நடத்தினார்கள்.

வடக்குத்தெரு ஆத்தாள், நான் என் மகளை உள்ளூர் அண்ணன் மகனுக்குக் கட்டிக்கொடுக்கிறேன், உன் மகளைத் தொட்டன்பட்டி அண்ணன்

மகனுக்குக் கட்டிக்கொடு என்று சொன்னார்கள். நம்முடையஆத்தான் அப்படியே செய்கிறதென்று நிர்மாணித்துக்கொண்டார்கள். அக்காள் தங்கச்சிமார் மூன்றுபேரும் ஒருவருக்கொருவர் வெகு விசுவாசம் பட்சம். "அக்காள் சொன்னாள், தங்கச்சி சொன்னாள்" என்றால் போதும், ஒருவர்சொல்லை ஒருவர் தட்டுகிறதில்லை. அத்தனை ஐக்கியம் ஆயிசு காலமெல்லாம்.

போத்திக்கு அந்த முறைமாப்பிள்ளைக்குக் கட்டிக்கொடுக்க மனமேயில்லை. ஜோத்தி தன் சாஸ்திரஅறிவினால் அந்த மாப்பிள்ளைக்குக் கட்டிக்கொடுத்தால் அன்னம்மாளுக்குக் குழந்தையிராது என்று நிர்மானமாய்ச் சொன்னார்களாம். ஆத்தாளும் மற்றவர்களும், அன்னிய சம்பந்தம், அறியாத இடத்தில் செய்யக்கூடாது, இதற்குமுன் நமக்குச் சொம்பாடி வம்சத்தில் சம்பந்தமுண்டா வென்றதின் பேரில், ஆத்தாளுடைய பிரியத்துக்கு இணங்கி, இனத்தாரை விரோதப்படுத்திக் கொள்ளாமல், தன்னுடைய மைத்துனன் மகனுக்குக் கட்டிக் கொடுக்கப் போத்தி மிகுந்த மனவருத்தத்தோடு சம்மதித்தார்கள்.

ஷ தொட்டன்பட்டி மிக்கேல் பிள்ளை மகா அழகன். அந்தப் பெண்ணுக்கு மாப்பிள்ளை அவர்தான், அந்த மாப்பிள்ளைக்கும் அவள்தான் பெண் என்று எல்லாரும் சொல்லும்படியாயிருந்தது.

தொட்டன் பட்டியில் மாப்பிள்ளை வீட்டில் கலியாணம் நடக்கிறதென்று பேசியிருந்தது. மூன்றுதரம்பேசி மூன்று தரம் உடம்பிப் போனதினால், கலியாணத்துக்குத் திரித்துவைத்திருந்த மாபுழுக்கடி பத்திப் போய், மற்றுஞ் சாமான்களும் நஷ்டமாய்ப் போனதினால், இனி பெண் தங்கள் வீட்டில்வந்து சேர்ந்த பின்பு தான் கலியாணத்துக்கு ஆகவேண்டியது எத்தனஞ் செய்வோமென்று மாப்பிள்ளை வீட்டார் இருந்தார்கள்.

அக்காலத்தில் ஒரு வண்டியைக்கண்டால் அதிசயமாயிருக்கும். வண்டியுங் கிடையாது. வண்டி போகிறதற்கு ரஸ்தாவுங் கிடையாது. பெண்ணை அழைத்துக் கொண்டு போகிறபோது கட்டுச்சாதம் ஒரு எருத்து மாட்டின்மேல். சேலை துணி ஒரு எருத்துமாடு. பண்டிமலை வழியாய்ப் போய், சிரிவைகுண்டத்தில் தங்கி, இருபத்தைந்துபடி அரிசி சமைத்துக் கட்டிக் கொண்டு போனார்கள். முதம்பன் வழியாய்ப் போனார்கள். தொட்டன்பட்டிக்குப் போய்ச்சேர்ந்த பதிமூன்றும் நாள் கலியாணம். கலியாணத்துக்கு முன் மூ நாளானதினாலும் சனக்கூட்ட மானதினாலும் வரகஞ்சோறு. அம்மை தன் பெத்தியார் வீட்டில் செல்லச்சாதமும் நல்ல வடக்குன்குளத்துக் கறியும் வைத்துச் சாப்பிட்டு வளர்ந்து, மாமியார்



வீட்டிலும் அப்படியே செல்லச் சாதம் சாப்பிட்டு வந்தவளானதினால் கரிசல்காட்டு வரகஞ் சாதம் பிடியாமல் வருத்தப் பட்டாள். ஒரு நாள் அம்மை வரகரிசி திரித்துக்கொண்டிருக்கையில் திரிக்கிறதென்னவென்று ஆரோ கேட்டதற்கு, திரிக்கிறது ஆட்டுக்கிடைக்கென்று பரியாசமாகச் சொன்னாள். பெண் தாயார் அதைக்கேட்டு அம்மை யிடத்தில் சண்டைக்குப் போனார்கள். அன்னம்மாள் பேரில் மேலே சொல்லியபடி பெற்றோரும் சகோதரரும் மகாபட்சம். "அன்னம்மாள்" "அன்னம்மாள்" என்று அண்ணன்மார் தங்கள் தங்கச்சியை ஒரு அச்சிட்டவளாகக் கொண்டாடுவார்கள். தங்கச்சியுடைய அன்பும் குணமும் அப்படியிருந்தது.

போத்தி தன் மகளுக்குச் சீர்சிறாட்டு கலியாணத்துக்குக் கூடவேகொண்டுபோய்ச் செய்தார்கள். அவைகளுக்கு விபரம் ஏட்டிலிருக்கிறது. இவையும் எழுதியிருக்கிறது. கலியாணம் முடிந்து போத்தியும் மற்றெல்லாரும் ஊருக்குத் திரும்பினார்கள். மகன் தகப்பனாரை அப்புறம் காணவில்லை.

(1821) ௲௮௱௨௰௧ ௵ ஆவணி ௴ அன்னம்மாள் வகை.

நகைக் கணக்கு.

மேலிடு, பாம்படம், தண்டொட்டி, அரிசித்தளுப்பன், அனந்தமுடிச்சு, உருக்குமணி சவடு நாலு, சவடிக்கடுக்கன், கொப்பு, கடுகுமணி, பொன்மணி, சிரகமணி, பொன்குவளை, தனிமணி, உள்க்கட்டு, அழகுகுளசம், பொன்தெறிப்பு, திருமங்கிலியக்குளாலும், தோள்க்காப்பு, கடையம், பசலும் இடைசூரி, பீலி, முக்தாங்கி, கால்மோதிரம், மயிலடி.

வட்டில், குழிவில், செண்டி, கொட்டுக்கூடை பெரியது சின்னது, வெண்கலக்கலசம் உ, திராவகப்பை க, காம்பு கிண்ணி, படிக்கம், பால்செண்டி, வெங்கலச்சங்கு, பிள்ளைத்தொட்டில், இரும்புக்கரண்டி, தாழி, உழக்கு, மடக்கு அருவாள்மணை, விளக்கு, முக்கவர் சிறுக்குவரி, சந்தனக்கிண்ணி, வெங்கலக் கரண்டகம், கட்டில், பாய், தலகணை, மாப்பிள்ளைக்குக் கடுக்கன், மோதிரமு மரைஞாண், மடிச்சீலைப் பணம் விராகன் ௰.

[நகைகளெல்லாம் எண்ணிக்கையும் பேரும் பெரிசாயிருக்கிறது, ஆனால் அதுகளெல்லாம் கூடி, இக்காலத்துப் பகுத்தார்க்கு, ஒருத்தி போட்டிருக்கிற ஒரு பாம்படத்துக்குக் காணாது.]

## பேரின்ப வீடு.

அன்னம்மாள் கலியாணத்துக்கு முன் இராசாவூரில் போத்தி நாலைந்து மாசம் போயிருந்து வயித்தியம் பார்த்து வந்தார்கள். கலியாணத்துக்குப்

பின் பொன் வாணிபத்தினி.சித்தம் ஆராம்புளிக்குப் போயிருந்த இடத்தில் சுருத்த ராசா தன் வீட்டில் வைத்தியம் பார்க்கவேண்டுமென்று கையைப்பிடித்து மிகவும் கேட்டுக்கொண்டார். அப்படியே சில நாளிருந்து வைத்தியம் பார்த்துவிட்டு ஊருக்கு வந்தார்கள். பின்பு மலையாளத்துக்குப் போய் வைத்தியம் பார்த்து வரவேண்டியதிருக்கிறது கடன் தீர்க்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, திரும்பவும் மலையாளத்துக்குப் போனார்கள். போத்தி புறப்பட்டுப் போகிறபோது ஐயா சரண்டைம்புளி ஆல்வரைக்கும் கூடவே போய் குளத்தங்கரையிலிருந்து பேசிக்கொண்டு வழியனுப்பிக்கொண்டார்கள். முன் யோசித்திருந்தபடி ஒரு மாசத்திற்கு முன் கலியாணமாகிப் போயிருந்த தங்கச்சியைப்பார்த்து வரும்படி மகனுக்கு விடை கொடுத்தனுப்பினார்கள். பேசிக்கொண்டிருந்த இடத்தில் பொடிக்குப்பியை ஐயா மறந்து வைத்துவிட்டதைத் திரும்பப்போய் எடுத்து வந்தார்கள். போத்தி புறப்படுகிறபோது ஒருபெட்டைக்கோழி ஏறு தட்டிக் கூவிற்றும் பெரியையா கோபமாய் அதைப்பிரம்பால் வீசினதில் அதுபட்டுச் செத்துப் போயிற்று.

ஆராம்புளியில் ஞானிராசாவென்ற ராயவனராசா பெண்சாதிக்கு வைத்தியஞ்செய்துகொண்டு அவ்விடத்திலிருக்கையில் [illegible] புரட்டாசிமீ உக-உ வியாழக்கிழமை காலையில்(1821-10-11)போத்திக்கு வியாதியுண்டாயிற்று. ஆராம்புளி, வடக்குன்குளத்துக்கு நேர் மேற்கே ஏழ்காதவழி. ஆராம்புளிச் சனைக்கு வடக்குன்குளத்துச்சனங்கள் போயிருக்கையில் போத்திக்குப் பேதியெடுத்ததைக் கேட்டு, போன சனங்களெல்லாம் அங்கே ஞானிராசா வீட்டிலிறைவக்கூடி வேண்டிய ஒத்தாசை செய்தார்கள். ஒருத்திமாத்திரம் வடக்குன்குளத்துக்குவந்து செய்திசொன்னாள். அப்போது மழையும் தூத்தலும். பெரியண்ணாவிலவைக் கூட்டிவரச்சொன்னதற்கு அவருக்குக்காய்ச்சல். சகல ஆட்களும் புறப்பட்டுப்போனார்கள். வைப்பிட்டு அன்னம்மாள் புத்தியறிந்திருந்ததற்கு அரிசி போடவேண்டியதற்கு அன்று அரிசிகுத்திவைத்திருந்தது. ஆத்தாள் அந்த அரிசியில் கொஞ்சம் மருமக்கள்மாருக்குத் தின்னக்கொடுத்ததை அம்மை மடியில் வைத்திருந்தாள். மருமக்கள் இரண்டுபேரும் இடையன்விளைக்குப் போய் வெள்ளையதலிப்புகொண்டுவந்ததை ஆத்தாளும் வாங்கிக் கழுத்தில் வைத்துக்கொண்டார்கள். அன்வந்துசெய்திசொல்லவே ஆத்தாள் உடனே புறப்பட்டுக் காசைப்பிள்ளை தெத்தேரியம்மாளையும் கூட்டிக்கொண்டுபோனார்கள். அப்புறம் போகிறவழியிலே ஒரு ஆளைக்கண்டு பிள்ளையைத் தூக்கிக்கொண்டுவரச்சொன்னார்கள்.



மூத்தமகனும் வடக்குன்குளத்து சனம்முழுவதும், ஒருவர்போனது ஒருவருக்குத் தெரியாமல் ஓடிப்போனார்கள்.

ஆராம்புளியில் கொச்சிப்பிள்ளை சவுக்கையில் அறுவல். அவர்களும் துரைவீட்டுப்போத்தி மரியதாசப்பிள்ளையும் குச்சவீட்டுப் பிள்ளையும் போத்திக்கு அருகேயிருந்து உதவிசெய்தார்கள். போத்திபோயிருந்த வீட்டுராசா பயந்து அடுத்தவீட்டுக் கதவையடைத்து உள்ளேயிருந்துகொண்டார். வெளிப்படவேயில்லை. அத்தான்மார் கொழுந்தன்மார் எல்லாரும் பக்கத்திலிருக்கிறதை நினையாமல் ஆத்தாள் போத்திபக்கத்தில் போய்க்கும்பிட்டுக்கொண்டேயின்றார்கள். ஆத்தாள் வந்து நிற்கிறதைப் போத்தி கண்ணைப் பார்த்துக்கொண்ட பின், முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். போத்தி தன் கைநாடியைப் பார்த்து மரணம் சமீபித்திருக்கிறதென்று சொல்லி, அப்புறம் பக்கத்திலிருக்கிறவர்களைப்பார்த்துக், கொஞ்சநேரம் பேசாமல் அமைதலாய் இருக்கச்சொல்லி, நெஞ்சிலே கையை வைத்துக்கொண்டு செபத்தியானமாயிருந்தார்கள். அப்போது இராத்திரி. சற்றுநேரஞ்சென்றபின், பக்கத்திலிருந்தவர்கள் காலில் கையைவைத்துப்பார்த்து ஆத்துமம் பிரிந்ததாகக் கண்டுசொல்ல, ஆத்தாள் சற்று அப்புறம்போய்க் கீழே விழுந்தார்கள். அவர்களுடைய தால் அறுந்துபோயிற்று. வந்திருந்த திரள் சனங்களுக்குக் கொச்சிப் போத்தி அரிசி காய்கறி வாங்கிக்கொடுத்து ஊருக்குத் தெற்கே கோவில் கட்ட சமையல் செய்யச் சொல்லி, சமையல் நடந்துகொண்டிருக்கும்போதே, போத்தி மரணமான செய்தி கேட்டு, சமையலை விட்டு வந்து, பெரிய துக்கங் கொண்டாடினார்கள்.

அப்புறங் கூடியிருந்தவர்கள் நூல் போட்டாற்போல் நேர்மேற்கே தேவசகாயம்பிள்ளை பாடுபட்ட இடத்தில் கட்டியிருக்கிற வியாகுலமாதாகோவிலருகில் அடக்கம்பண்ண வேணுமென்று யோசனைபண்ணுகிறதை ஆத்தாளறிந்து "வடக்குன்குளத்து மண்ணுக்கு ஆசைப்பட்டு வந்தோமே ஐயா" என்று அழுததைக்கேட்டு இருந்தவர்கள், ஒருவரும் மூச்சுக்காட்டாமல் இருந்தால் வடக்குன்குளத்துக்குக் கொண்டுபோய்விடலாமென்றார்கள். "என் மூச்சைப் பிடித்துக்கொண்டேன்" என்று ஆத்தாள் வாயை இறுக்கிப் பொத்திக்கொண்டார்கள். தொட்டில்கட்டி வியாதிக்காரனை வைத்திருக்கிற பாவனையாய்ப் போத்தியை வைத்து சுமந்துகொண்டு, கோட்டைவாசலைக் கடக்கிறபோது சேவுகர் கேட்டதற்கு, கொச்சிப்போத்தி, என் அண்ணனுக்குச் சற்று தேகமாயிருக்கிறது, ஊருக்குக் கொண்டுபோகிறோமென்று சொல்லிக் கடந்துவந்தார்கள். மற்றப்படி பிரேதத்தைக்கோ

ட்டைவாசல்வழியாய்க் கொண்டுபோகச் சம்மதிக்கமாட்டார்களாம். கோட்டைவாசலைக் கடந்தபின்பு கொச்சிப்போத்தி தான் எல்லாருக்கும் முந்திப் பெருங்கூப்பாடாய்க் கூச்சல்போட்டு மண்டையிலடித்து அழுதாராம், அதின்பேரில் சேவகர் ஏமாற்றிப் போய்விட்டனென்று அறிந்தார்கள். வடக்குன்குளத்தில் வீட்டுக்குக்கொண்டுவராமல், இராசா வீதியில் கொண்டுவந்து வைத்துக், குளிப்பாட்டிக் கல்லறையிலேயே, உஅ-ம-, வெள்ளிக்கிழமை காலையில் அவர்கள் மாமனார் சவரிராயன் செட்டியாரும் மாமி அன்னம்மையும் அடங்கிய கல்லறைக்குத் தென்புறத்தில் அருகே அடக்கம் பண்ணினார்கள்.

போத்திக்கு ஆரம்புளியில் பேதி ஆரம்பித்த அன்று நாயகன் தங்கச்சியைப் பார்க்கப் போக வடக்குன்குளத்திலிருந்து புறப்பட்டார்கள். அண்ணன்மார் தங்கச்சியைவிட்டுப் பிரிந்த காலம் கிடையாது. ஒரு மாசமாகப் பிரிந்தது என்னமோ போலிருந்தது. தங்கச்சிக்குப் பலகாரமுஞ் செய்துகொண்டு, மழை காலத்தில், பெண்சாதி பிள்ளையைவிட்டு ஐங்காத வழி நடந்து கரிசல் காட்டுக்குப் புறப்பட்டு, எருத்து மாட்டுக்காரரோடே சடையனேரியில் இராத் தங்கினார்கள். அங்கே விசேஷமான கறிகள் சமைத்துச் சாப்பிட்டு வெகு சந்தோஷமாய்ப் படுத்திருந்தார்கள். மறுநாள் வெள்ளிக்கிழமை தோட்டன்பட்டிபோய்ச் சேர்ந்து, சனிக்கிழமை காலை தங்கச்சி வீட்டில் தலைமுழுகிச் சாப்பிட்டு குருவிளாத்திக்குப் பெரியையா வீட்டுக்குப் போனார்கள். இழவு செய்திகொண்டு போன ஆளும் பின்னாலே போய் ஆவிச் சேர்த்துக் கட்டி, அப்பா, உன் ஐயா போய்விட்டார்களே என்று அழவே மகன் பட்ட மறக்கடி யார் சொல்லி முடியும்.

---

ஐயா கைப்பட்ட பின் வரும் எழுத்து ஒரு பழய கவடியின் கடைசி ஓலையின் பின் புறத்தில் குறித்திருக்கிறது. மங்கிப்போயிருக்கிறது. இரண்டொரு எழுத்து அழிந்து போயிருக்கிறது:—

ஆண்டும் பொங்கு புகழ்......தொன்னாயிரத்துத் தொண்ணூற்றொ
ண்டுக்கன்னி புரட்டாசி ஆன முகிலவன் பெருநாள்
வெண்டும் வெள்ளி வாரமதில் மிக நன் மதுரெத்திரம்புவியில்
மாண்டு வடவை மரியின்ற மைந்தன் வைப்பால் வைகினனே.

---



## மரணத்திலும் பிரிந்திருக்க வில்லை.

தன் பிராணநாயகன் சரீரத்தை வடக்குன்குளத்து மண்ணுக்கு ஒப்புவித்துவிட்டு வீட்டுக்குன்போன நாயகியின் சரீரம் அப்புறம் உயிரோடு வெளியே வரவில்லை, புருஷன் கட்டின திருமங்கிலியம் அறுத்த கழுத்தைப் புறத்தே காட்டவில்லை. அன்றியும் பேடையுமென்றது சரியாய் முடிந்தது. ஒப்புச்சொன்னால் கேட்டுச் சகிக்கமுடியாது. எப்படித்தான் உதயமாகுமோ. "சந்நிதியிலே யிருந்து சமஸ்தானம் பேசினால் கொம்பிலேயிருக்கும் குயிலுங் கிடுகிடுமே."

பொன் குமிள்வைத்த போத்தியுடைய எழுத்தாணியை முத்தி முத்தி உயிரை விடுவார்கள். பதினெட்டாம் நாள் மோட்சவிளக்கு. அதுமட்டும் பட்டினி. போத்தி மரணமான இருபத்திரண்டாம்நாள் வியாழக்கிழமை ஆத்தாளுக்கு விஷபேதி துவக்கிற்று. டை வியாதியில் பிழைத்தும் வயிற்றோட்டமும் வாந்தியும் இருந்துகொண்டேவந்தது. படைபிணியாய்க் கிடந்தார்கள்.

மக்கள் தாங்க்காகப் பட்டபாடும் வயித்தியர்களுடைய பிரயாசங்களும் இன சனங்கள் இராப்பகலாய்ச்செய்த உதவிகளும் எல்லாம் வீணாய்ப்போயிற்று. என்னென்ன மருந்துகள் வேண்டுமோ, என்னென்ன பக்குவங்கள் வேண்டுமோ, எல்லாஞ்செய்து பார்த்தார்கள். கூஅ௨௨-ஞ தை-மீ யு-உ ஞாயிற்றுக்கிழமை (1822—1—26) மரணமாகி, தன் நாயகன் கல்லறைக்குக் கீழ்புறத்தில் அடக்கமாயிற்று.

---

தாய் தகப்பனை இப்படி இழக்கக் கொடுத்தது, ஐயாவுக்கு, அவர்கள் ஆயிசு நாட்களெல்லாம் அன்றே நடந்த சங்கதிபோலப் பாதவிக்கும்படியான துக்கமாயிருந்தது. தன் பாவங்களுக்குத் தண்டனையாகத் தேவனால் வந்த கோபாக்கினை யென்று நிர்மாணமாய் நினைத்தார்கள். இதற்கு நாற்பது வருஷத்துக்குப் பிற்பாடு தன் மனதிலுண்டான எண்ணத்தை எழுதிய போது 'என் பாவங்களுக்குத் தக்க பலனை அடைந்தேன். முதலாவது தகப்பனைக் கவனிக்காமல் மரிக்கக்கேட்டு அடைந்த துக்கம் இன்னமும் மாறாதது; பின்பு, தாயாரும்—தொடுத்தாப்போல—அவளுடைய துக்கமும்—வியாதியினால் அவள் அநுபவித்த வேதனையும்—கடைசியாய் மரணமும்—நாலுமாசம் வரையும் கண்ணாரக்கண்டு மனதின் விசாரமும் துக்கமும் ஊணும் நல்ல உறக்கமுமில்லாமல் "நிறைந்த கஸ்தியடைந்தேன்" என்றும் பின்னும் இந்தமாதிரியாய் எழுதியிருக்கிறார்கள்.

ஐயா, தன் உயிருக்குயிராயிருந்த பெற்றோர்களிடத்தில் சேர்ந்து நித்திய பேரின்ப பாக்கியத்தை அடைய எத்தனப்படுகிறதைக் காட்டினதும் தன் பெற்றோருடைய மரணத்தையாத்திரை ஞாபகம்பண்ணித் தன் பின்னைகளுக்கு ஆறுதலும் தைரியமுமுண்டாகப் பேசினார்கள்.

———:0:———

ஐயாவுக்கு அருமையான பாட்டெழுதிவொன்று பின்வருவது:—
அதினால் ஐயாவுடைய மனதின் லங்கெல்லாந் தெரியும்.

———

தாங்கவொண்ணாத் துயர்கொண்டேங்கி மயங்குகிறேன்
தஞ்சமெனையாள் ஐயனே—மறை மெய்யனே
நீங்காக் கவலை மிகுந் தேங்கி நினை வயர்ந்து
நிலத்தில் வாடித் தவிப்பேனோ—மறந்திருப்பேனோ
அன்னலே நீதித் தயை அதிக மெய்ஞ்ஞான பெலன்
அளவில் அடங்கா நாதனே—சத்திய வேதனே
மின்னான்னோர் உந்தன் நாமம் எண்ணி நிலைத்திடாது
மயக்கத் துயர்வதாருமோ—உயிர் போகுமோ.
அறிவு நினைவு புத்தி தெளிவது அற்றிருக்க
அலகை செய் தந்திர வஞ்சமோ—இது கொஞ்சமோ
வெறியால் சதித்தலகை ஈசல் வதைப்பதற்கோ
வீணே படைத்துக் காத்தீரோ—துயர் ஏற்றீரோ
விலையற்ற ரத்தமதால் உலகில் மறுப் பயமா
மீண்டும்: அலகை யாள்வதோ—சித்தம் தாழ்வதோ
நிலையற்ற லோகப்பவிஷ அலை நீர்க் குமிழி யென
நிகழ்த்தி யுனைப் பணிவேனோ—உன்றன் அணிவேனோ
உத்தம தற்பொருளே இத்தனைபோதைக் காப்ப
துனக்கரிதல்ல கர்த்தனே—உன் சித்தமே
முத்தொழில் வல்லவனே நித்திய கிருபாகரனே
முழுதும் உன்பாதம் நம்பினேன்—அடியார் தம்பமே
தஞ்சமுன் பாதமன்றி அஞ்சல் எவருங் காணேன்
சருவ லோக நாயகா—உன் சகாயமே.

———

முதல் பங்கு முடிந்தது

———



# Revelation

## CHAPTER, I; 1, 6. VII, 9—17. XXI, 1—5. XXII.

சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். * * * இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது.

* * * * *

நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

* * * * *

இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்.

அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.

தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழ நின்று, சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புறவிழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு;

ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும்
ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களி
லும் உண்டாவதாக; ஆமென், என்றார்கள்.

அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை
அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்
கள்? என்று கேட்டான்.

அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன்.
அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்
தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரு
டைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.
ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பா
க இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச்
சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்க
ளுக்குள்ளே வாசமாயிருப்பார்.
இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை;
வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை.
சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவர் இவ
ர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்
டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர்
யாவையும் துடைப்பார் என்றான்.

* * * * *

பின்பு நான் புதியவானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்;
முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமு
ம் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகி
ய பரிசுத்த நகரத்தை தேவனிடத்திலிருந்து பரலோகத்தைவிட்டு
இறங்கிவரக்கண்டேன், அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்ப
ட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.
மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்
தைக்கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனு
டைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர்வாசமா



யிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தே
வன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவ
னாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் து
டைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில
லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று
விளம்பினது.
சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தை
யும் புதிதாக்குகிறேன் என்றார்; பின்னும், அவர்: இந்த வசனங்கள்
சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்.

* * * * *

பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான
நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து
புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின்
மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்த
ரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக்கொடுக்
கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்
கேதுவானவைகள்.
இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற
சிங்காசனம் அதிலிருக்கும்; அவருடைய ஊழியக்காரர் அவரைச்சேவித்து,
அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களு
டைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும்
சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டியதில்லை; தேவனாகிய
கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும்
அரசாளுவார்கள்.
பின்பு அவர் என்னை நோக்கி: இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமா
னவைகள்; சீக்கிரமாய்ச் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழி
யக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்
தராகிய தேவன் தம்முடைய தூதனை அனுப்பினார். இதோ சீக்கிர
மாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக்
கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்.
யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன். நான்
கேட்டுக் கண்டபோது, இவைகளை எனக்குக் காண்பித்த தூதனை வணங்கு
ம்படி அவன் பாதத்தில் விழுந்தேன். அதற்கு அவன்: நீ இப்படிச் செய்
யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோ

டும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங் கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள் என்றான்.

பின்னும், அவர் என்னை நோக்கி: இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்க தரிசன வசனங்களை முத்திரை போடவேண்டாம்; காலம் சமீபமாயிருக்கிறது. அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூடவருகிறது. நான் அல்பாவும் ஒமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்.

ஜீவவிருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்.

சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார்.

ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள், கேட்கிறவனும் வா என்பானாக: தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.

இந்தப்புஸ்தகத்திலுள்ள தீர்க்க தரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப்புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத்தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்தநகரத்திலிருந்தும், இந்தப்புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்.

இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார்.

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.

# விஞ்ஞாபனம்:

என் சுயரத்தமான என் சகோதரர், பிள்ளைகளுக்கு, மிகுந்த வாஞ்சையோடே எழுதி அறிவித்துக் கொள்ளுவது என்னவென்றால்:—

நமது பரமபிதாவாகிய ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

நமது குடும்பம் ஏழைக் குடும்பம், நாம் ஏழைகளிலும் ஏழைகள். இஷ்டதேவதைகளென்றும் குலதேவதைகளென்றும் அனந்தம் பேய்களைக் கைசேவித்து, அஞ்ஞானம், அறிவீனமாகிய அந்தகாரத்திலும் இருளிலும் கட்டுண்டு கிடந்தோம். இந்த ஏழைகளின் மேல் தேவன் தம்முடைய ஆச்சரியமான ஒளியைப் பிரகாசிக்கச் செய்து, ஒன்றான தெய்வமாகிய பராபரவஸ்துவாகிய அவரையும் அவருடைய கிருபைகளையும் அறிந்து கொள்ளவும்—சர்வ நீதிபராகிய தேவனுக்கும் மகாபாவிகளாகிய மனுஷ ஜென்மங்களுக்கும் இடையில் ஒன்றான மத்தியஸ்தராக அவதரித்து நம்மை மீட்கும் பொருளாகத் தம்மைத்தானே ஒப்புக்கொடுத்த தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்துப் பற்றிக் கொள்ளவும்—பிசாசுகளின் அடிமைகளாயிருந்த நம்மை, தேவாதி தேவனுடைய சுவிகார புத்திரராகவும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராகவும் பரிசுத்தஆவியானவர் முத்திரையிடப் பெறவும், நம்மை அழைத்தருளினது எத்தனை பெரிதான இரக்கம்.

ஐயாவுடைய சரித்திர சங்கதியும், அவர்கள் கைப்பட்ட எழுத்தாகவே, விஸ்தாரமாயிருக்கிறது. அதை நமது பிள்ளைகள் அறியும்படிக்குத் தொகுத்து எழுதிப், புஸ்தகமாக அச்சடிக்க எண்ணி, வெகுதூரம் எழுதியாயிருக்கிறது. அதற்குமுகவுரையாக, அவர்களுடைய மூப்பிதாக்கள் வம்சவிபரத்தையும் எழுதியிருந்தது. இந்தச் சிறு புஸ்தகம் அந்த முகவுரையாம்.

ஐயாவுடைய சரித்திர புஸ்தகத்தை அச்சடிப்பதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ, என்ன இடையூறுகள் நேரிடுமோ, நமது ஆயிசு என்ன நிலையோ, என்ற எண்ணத்தினால், நம்முடைய குடும்ப வரலாறு அச்சாகு மட்டும் முந்தி வெளிப்படுத்தத் தீர்மானித்தேன்.

இந்தக் காலத்தில் ஜீவியசரித்திர மென்று நம்முடைய நாட்டில் சில ஆட்களைக்குறித்துப் புஸ்தகங்களெழுதி அச்சடித்திருக்கிறார்கள். இறந்துபோனவர்களைக் குறித்து உயர்த்திப் பேசவேண்டியதே யன்றித் தாழ்த்திப்பேசாதே யென்று ஒரு பழமொழி இங்கிலீஷில் உண்டாம். அதேபடியாக, ஜீவிய சரித்திரங்கள் எழுதப் பட்டிருக்கிறது. எந்தக் கேவலஸ்தனை யானாலும், எந்தப் பயித்தியகாரனை யானாலும் எந்த அயோக்கியனை யானாலும், உயர்த்தி; என்பாட்டன் நாட்டுத்துரையா யிருந்தான், என் பூட்டன் சிமைச்சக்கரவர்த்தி யாயிருந்தான், ஞானியாயிருந்தான், தெய்வப் பிறவியாயிருந்தான் என்கிறது வழிபாடாயிருக்கிறது. நான் நேரிலேயே அறிந்த ஆள்களுடைய சரித்திரம் சிலது எழுதப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர்களிருந்தபடி யுள்ள சரித்திரமல்ல, அவர்கள் இல்லாத படியான சரித்திரமாக இருக்கிறது.

ஆகையால் நான், நமது வாழ்வானாலும் சரி, தாழ்வானாலும் சரி, நம்முடைய எளிமையையும் பேதமையையும் குற்றங் குறைகளையும், உள்ளதை உள்ளபடி, அறிந்ததை யெல்லாம் எழுதுவது கருத்தாயிருந்தேன். இது அத்தனை புத்தியல்ல வென்றாலும் எழுதி அச்சடிக்கத் தீர்த்தாயிற்று.

நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்: அவர் கிருபை என்றுமுள்ளது.

எனக்கு ஐயாவுடைய சரித்திரப் புஸ்தகம் மிகுந்த அருமையும் ஆனந்தமுமாயிருக்கிறது. அப்படி மற்றவர்களுக்கு இருக்கக் கூடுமோ? எனக்கு ஐயா அம்மையை நினைத்துப் பேசுகிறதில் இருக்கிற வாஞ்சையும் இன்பமும் கேட்கிறவர்களுக்கும் இருக்குமா? தனக்குப் பிரியமானது மற்றவர்களுக்கும் பிரியமாயிருக்கு மென்று எண்ணுவது மனுஷ இயல்பு. திருஷ்டாந்தம்:— பழையகாலத்தில் எங்கள் வீட்டில் சம்பா நெல், ஒருதலைக்கு இரண்டு பணம், மூன்று பணம், நாலு பணம், அஞ்சு பணத்துக்கு அப்போதப்போது வாங்கி, பானையில் அவித்து; வீட்டிலே ஆள்விட்டுக் குத்தித், தீட்டி சமையலாகும். அதினால் வடிதண்ணீர் வெகுமணமாயும் ருசியாயுமிருக்கும். வீட்டு வேலையெல்லாம் அம்மையுடைய பாடுதான். சாயங்காலம் சாதம் வடித்த உடனே, கஞ்சித் தண்ணீரில் வெந்நீர் விட்டு விளாவி, சீரகம் உப்புப்போட்டு, அம்மை மடக் மடக்குடித்தாளானால், அவளுக்குக் களைப்பும் வேலை ஆயாசமும் தீர்ந்தாப் போலிருக்கு மாக்கும். அதினால் அதை தண்ணீர் குடிக்கையில், பிள்ளைகள் பேரன் பேத்திகள் யாராவது வீட்டிலிருந்தால், அவர்களையும், நீ குடி, நீ குடி, என்று உபத்திரவப் படுத்துவாள். தாக



மில்லை, வேண்டாமென்றாலும், மல்லுக்கட்டித் தாங்கித் தடுக்கித், குடிக்கச் சொல்லுவாள். ஏன்! அவளுக்குப் பிரியமானதினாலே.

அதைப்போல: இந்த நம்முடைய குடும்ப சரித்திரத்திலும், ஐயாவுடைய சரித்திரப் புஸ்தகத்திலும், உள்ள சங்கதிகள், எத்தனையோ எனக்கு ஆறுதலும், தேறுதலும், போதனையும், படிப்பினையு மாயிருப்பதி னிமித்தம், மற்றவர்களுக்கும் அப்படியிருக்கு மென்று நான் நினைத்தால், அவர்கள் சிரிப்பது நியாயமாயிருக்கும்.

ஆகையால் தான், நான் சரீரப் பிரயாசம்போக, பணமும் அதிகம் செலவழித்து, அதிகத்தொகையான புஸ்தகங்கள் அச்சடிக்கவில்லை. துட்டுக்கொடுத்து இவ்வகையான புஸ்தகங்களை வாங்கி வாசிக்கிற வழக்கமும், பிரியமும், நமது சனங்களுக்கு நாளதில் கிடையாது, இனி ஒருகாலத்தில் உண்டாகும். வெள்ளைக்காரருக்குத் தான் இப்படிப்பட்ட சரித்திரங்களை மதிக்கத் தெரியும். ஐம்பது பிரதிமாத்திரம் அச்சடித்திருக்கிறது.

இந்தச் சரித்திரங்களை ஒழுங்குபடுத்திச் சேர்த்து எழுதுவதில் என்னுடைய பிரயாசம், இப்பேர்ப்பட்ட நூலை எழுதினவர்களுக்குத்தான் தெரியக் கூடும். எத்தனையோ சில்லறை ஓலைகளிலும், ஏடுகளிலும், காயிதங்களிலுமிருந்து, பொறுக்கி யெடுத்துச் சேர்த்தும், அந்தந்த இடங்கள் வரைக்கும் நானே போய்ப் பார்த்தும், அநேகரிடத்தில் நேரே விசாரித்தும், ஒரு தரம் எழுதினதை ஆறுதரம் திருப்பித் திருப்பி எழுதியும், இவ்வளவும் இராப்பகல் கலக்கமும் கவலையுமாய், என் ஜீவனார்த்த வேலையைச் செய்து வருகிறகாலத்தில் நான் செய்ய வேண்டியதா யிருந்தது.

பிள்ளை அருமை பெற்றவள்தான் அறிவாள். மற்றவர்கள் எத்தனை நாள் பழகினாலும் அறிகிறது அபூர்வம். தாய் கண்மங்கிக் கட்டில் கிடையாய்க் கிடந்தாலும், தன் பிள்ளை சுகதுக்கம் மனோமனசாட்சியாய் அறிந்துகொள்வாள். சமுசாரி நிலத்தை உழுது சாப்பிடுவான், என்பிள்ளைகள் நெஞ்சை உழுது சாப்பிடுகிறது என்று அம்மை சொல்லுவாள். ஆனால், எழுத்துவேலைக்கு என் பிள்ளைகளுடைய உதவி எனக்கு நிறைவாயிருந்தது. இந்தக் குடும்ப வரலாறு புஸ்தகமும், இந்த விஞ்ஞாபனமும் அச்சுக்குப் போகிற கையெழுத்துப்பிரதி ஏக தேசம்முழுவதும், என் சின்ன மகன் சஞ்சீவியுடைய கையெழுத்து. அச்சுப்பிழை பார்க்கிறவனும் அவனே. கீர்த்தருக்கு ஸ்தோத்திரம். என் மகன் சனி ஞாயிறு தவிரமற்ற நாட்களில் காலமே எழு-மணிக்குப் பள்ளிக் கூடத்துக்குப்போய் பொழுதடைய வீடுவந்து சேர்வான். இந்த எ

மூத்த முதலியவேலைகளினால் அவள் வருப்பில் குறைக்கப்பட்டால், அது என் குற்றந்தான்.

இனி அச்சடிக்க ஆரம்பித்திருக்கிற ஐயாவுடைய சரித்திரத்திலும் கண்ட சங்கதிகளெல்லாம் மெய்யானவைகளென்று நம்முடையவர்களுக்கு நான் சொல்ல அவசியமில்லை. அநேகம், ஐயாவும் போத்தியும் எழுதிவைத்த வைகளைத் தான் இங்கே எழுதியிருக்கிறது. அநேகம் நடந்த காலத்தில் ஐயா சொல்லச் சொல்ல நான் எழுதிவைத்தது. அநேகம் அம்மை சொன்னபடி எழுதியிருக்கிறது.

அம்மையுடைய ஞாபகம் ஆச்சரியமானது. அம்மைக்கு எழுத்துப் படிப்புகளொன்றுந் தெரியாது. ஆனால் அவளுடைய சீவகாலத்தில் நடந்தவைகள், கேட்டவைகளெல்லாம் மறவாமல், அச்சுப்படம் போல, அவள் மனதில் பதிந்திருந்தது. எற்பது வருஷத்துக்கு முன் நடந்த ஒரு சங்கதியை சொன்னாளானால், அந்தச் சங்கதியை மாத்திரமல்ல, அந்நாளில் அதற்கு முன்னும் பின்னுமாய் நடந்த சங்கதிகள், பேசின பேச்சுகள், இன்னாரென்றும் முதல் ஒன்றுவிடாமல், இன்றைக்குத்தான் நடந்த சங்கதியைச் சொல்லுகிறது போல் சொல்லுவாள். இப்படி ஞாபகமாய்ச் சொல்லுகிறது பிசகாயிராதா என்று சந்தேகப்பட்டு, ஐயாவுடைய அந்தக்காலத்து எழுத்துகள் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்து, ஒப்பிட்டால், அம்மை சொன்னது சரியாய் ஞாபகமாயிருக்கும். இப்படி அனேகம் சங்கதிகளை பரீட்சை பண்ணியிருக்கிறேன்.

பின்னை தேசத்திலே சில சாஸ்திரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சந்தேகம் தோன்றுதாம். அதென்னவென்றால்: இவ்வேத சாஸ்திரமுடைய வார்த்தைகள் நீண்டபோதகங்களை அவர்களுடைய சீஷர்கள், பத்து, பதினைந்து, இருபது, முப்பது, வருஷங்களுக்குப் பிற்பாடு எழுதினார்களே, அந்த வார்த்தைகளெல்லாம் அவ்வளவு காலத்திற்கு எப்படி ஞாபகமிருக்கும் என்று சந்தேகமாம். அப்படி சந்தேகப்பட்ட பண்டிதர்கள், என் அம்மைத் தாயார், எழுத்தென்பதறியாத ஒருத்தி பட்டிக்காட்டு மனுஷியிடத்தில் பேசக்கேட்டிருப்பார்களானால், அவர்கள் சந்தேகமெல்லாம் நீங்கிப்போம்.

அம்மை 1805-ம் வருஷம் பிறந்து 1891-ம் வருஷம் பரமபதம் சேர்ந்தாள். தன் பேத்தி தெய்வாயி ஆத்தாள் 1907-ம் வருஷம் மரணமாகும் வரையும் அனேகமாய் அவளோடே குடியிருந்தாள். தெய்வாயி ஆத்தாள் 1752-ம் வருஷம் பிறந்தவர். அவரும் ஞாபகசக்தியைக் கவனம் பண்



ணுவதில் சின்ன ஆசாமியல்ல. தெய்வாயி ஆத்தாளுடைய தாயார் சுவாமியடியாள். தாயும் மகளும் ஒரே இடத்தில் குடியிருந்தார்கள். இந்த மூவரையிற் கண்ட சங்கதிகள் தாய் மகள் இருவருடைய சீவகாலத்துக்குள் அடங்கியிருக்கிறது. ஆகவே போத்தியும், ஐயாவும் எழுதி வைத்திருக்கிறதோடு அம்மையிடத்தில் கேட்டெழுதிய வாக்கு மூலத்தையும் சேர்த்துக் கொண்டால் கதை நிசமென்பதருசுத்தான். நான் மற்றவர்களிடத்தில் விசாரித்து எழுதிய சங்கதிகள் அத்தனை அதிகமானது மல்ல, விசேஷமானது மல்ல. அன்றும்பிமார்கள் சொல்லியதிருந்தவைகள் ஐயாவுடைய பிற்கால சரித்திர சம்பந்தமானவைகள். இந்தப்புஸ்தகத்தில் அவைகள் வரவில்லை.

போன வருஷம் இந்தக்காலத்தில் என் பிள்ளைகளுக்கு என் மனவிருப்பம் தெரியும் படியாக நான் சொல்லவேண்டியவைகளை விபரங்கண்டு ஒரு நிருபம் எழுதி அச்சடிப்பித்து, ஐயாவுடைய சரித்திர முதலாம் புஸ்தகத்துக் கடைசியில் சேர்த்துக் கொடுத்திருக்கிறேன். இப்பொழுது நான் அவர்களுக்குச்சொல்ல வேண்டியது விசேஷமாய் ஒன்றுங் காணவில்லை.

ஆனால் அதே மாதிரியாக ரோமான் கத்தோலிக்கு வேதத்திலிருக்கிற என் சுயரத்தமான சகோதரர்களுக்கு இந்தப்பத்திரிகை மூலமாய் சிலகாரியங்கள் தெரிவித்துக் கொள்ள மிகவும் மன வாஞ்சையா யிருக்கிறேன். இது எனக்கு அனேக வருஷத்து ஆசை.

நாங்கள் ரோமான் கத்தோலிக்குவேதத்தில் பல தலைமுறையாயிருந்தவர்கள் இன சனங்களை விட்டு இப்படிப் பதிதராய்ப் போய் விட்டோமென்று எங்களுக்காக நீங்கள் மிகவும் பரிதாபப் படுகிறீர்கள். எங்கள் பேரில் உங்களுக்கு இருக்கிற பட்சத்தினால், நாங்கள் திரும்ப வந்து விடுவோமானால், வேண்டுமானால், எங்களுக்காக உங்கள் உயிரையும் கொடுக்கும்படியாய், உங்கள் ஆசை அப்படியிருக்கிறது. சவரிராயபிள்ளை எத்தனை ஆத்துமாக்களை நரகத்திற்குக் கொண்டுபோய் தாழ்த்திப் போட்டானென்று எத்தனையோதரம் அனேகர் பரிதாபப்பட்டுச் சொல்லக் கேட்டிருக்கிறோம். கொச்சிப் போத்தி நம்முடைய மூத்த அக்காளைக் காணும் போதெல்லாம்: "மரியம்மாள், உங்கள் புரோதெஸ்தாந்து வேதத்திலே மோட்சமில்லை யென்று என் ஒரு மகள் சத்தியமாய்ச் சொல்லுகிறேன்" என்று சொல்லுவார்.

நான் கலியாணம் பண்ணின பிற்காலத்தில் வடக்குன்குளத்துக்குப் போயிருந்தபோது, தெரிவும், சாலையிலும், எத்தனையோ நியாயத்தோடும், பரிகாசத்தோடும், சொன்ன புத்திமதியும், பேச்சும் கேட்டிருக்கிறேன். ஒரு

அம்மாள் என்னைக்காணும்போதெல்லாம்: "ஐயோ, பாவம், தாயில்லாப் பிள்ளை" என்று என்னைப் பார்த்துச் சொல்லுவாள். ஏன் என்னை அப்படிச் சொல்லுகிறாளென்று, எனக்கு வெகுநாளாய் அர்த்தம் விளங்கவில்லை. ஒருவர் என்னைக்காணும்போது மற்றவர்களிடத்தில்: "இவர் தாயார் இவருக்குக் கால் அலம்பி விடுகிறதில்லை, இவர் தகப்பனார் சும்மாநாக்கு மடியிலே வைத்துக்கொள்ளுவார்", என்று அசங்கியமாகவும்; "கர்த்தருக்குத்தான் ஆகவேண்டாமா," என்றும், இப்படியாகச் சொல்லுவார்.

ஐயா, வயிற்றுப்பிழைப்புக்காக, புரோடெஸ்டாந்து வேதத்தில் சேர்ந்தார்களென்று சொல்லுவது, முக்கியமானவகை. மைமபாவல் சொத்தாரிகவரியவர்கள் ஒருநாள் என்தம்பியையும், பின்னும் எங்கள் பிள்ளைகள் இரண்டொருவரையும் பாளையங்கோட்டை கோவிற்கிட்ட கண்டபோது, இன்னாரென்று கேட்டறிந்துகொண்டபின்பு, வயிற்றிலே தங்கள் கையைவைத்து, அவர்களுக்குக் காண்பித்தார்கள். அதாவது, வயிறு பிழைக்கப்போனவர்களென்ற அர்த்தமாய்.

எங்கள் தகப்பனார் வயிற்றுப்பிழைப்புக்காகத்தான் ரேனியூஸ் ஐயரவர்களிடத்தில் போய்ச்சேர்ந்தார்கள். அது நிச்சயம். என்னுடைய தாயார், ஒருவிசை, என்னிடத்தில், வடக்கன்குளத்தில் மாசம் மூன்று ரூபாய்க்கு வழியிருந்தால், நாங்கள் அவ்விடத்தைவிட்டுப்போவோமா, வென்று சொன்னார். ஐயாவுடைய தகப்பனார் இறந்த பிற்காலத்தில், ஐயாவுடைய கஷ்டம் அப்படியிருந்தது. அந்த விபரமெல்லாம் ஐயாவுடைய சரித்திரப் புஸ்தகத்தில் இனி வரும்.

கூலிக்கு உழப்போனவன், புதையலெடுத்து, சீமோன் ஆனைக்கிலயா! காணாமற்போன கழுதையைத் தேடித்திரிந்து அலைந்துகொண்டிருந்த சவுல் என்கிறவருக்கு, சாமுவேல் தீர்க்கதரிசியானவர் ராசபட்டம் சூட்டினதாகச் சத்திய வேதத்தில் எழுதியிருக்கிறது. ஆனால் எல்லாருக்கும் அப்படிக்கிடைக்கிறதா, கிறிஸ்துவின் சபையை அழிக்கப், பாழாக்கப், புறப்பட்டுப்போன சவுலின் இருதயத்தில் பரமஒளியைப்பிரகாசிப்பிக்கச்செய்து, சத்தியவேதத்தை அவரே பிரசங்கம்பண்ணும்படியாக தேவன் அழைத்தபோது, அவர் அந்ததேவஉத்தரவுக்குக் கீழ்ப்படிந்தார். ஐயாவுக்கு அவர்களுடைய இருதயத்தில் கிறிஸ்துவின் சத்தியவசனம் கேட்டபோது அவர்கள் தங்கள் மனசாட்சியை மழுக்கிக்கொள்ளவில்லை. உடனே அந்த வசனத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள். ஆகையால், எங்கள் பிதா வயிற்றுப்பிழைப்புக்காக சுவிசேஷ மார்க்



கத்தில் சேர்ந்தார்களென்பதை லோகமெல்லாம் அறியும்படி, விளம்பரம் பண்ணுதற்கு, நாங்கள் வெட்கப்படுகிறதில்லை.

ரேனியூஸ் ஐயரவர்களிடத்தில ஐயா போனபோது, பேரின்பம் என்கிற ஒரு சிறு புஸ்தகத்தைக்கொடுத்து, வாசிக்கச்சொல்லி, பின்பு, உதவியில் படிக்கும்படியாகச் சேர்த்துக்கொண்டார்கள். அப்புறம் அவர்களோடிருந்த லெக்லெர் ஐயரவர்கள், வெகுநாளுக்குப்பின், ஒரு சுவிசேஷபுஸ்தகத்தை எடுத்து "பெருங்குடியிலிருக்கும் உதவி சவரிராயன்பிள்ளைக்குச் சந்தோஷமாகக்கொடுக்கப்பட்டது" என்று எழுதிக்கொடுத்தார்கள். அந்த சுவிசேஷம் என்ன விலைபெறும் என்று நினைக்கிறீர்கள். ஆதிமுதல், காளதுவரை உள்ள சகல ராசாக்கள், சக்கரவர்த்திகளுடைய சகல கிரீடங்களும், ஆபரணங்களும், சொர்ணங்களும், நவரத்தினங்களும் அந்த சுவிசேஷமாகிய பொக்கிஷத்திற்கு ஒப்பிட்டால், ஒரு தூசி விலை பெறுமா? அந்த அழிவில்லாத வித்தாகிய சுவிசேஷத்தின் அருமை, அதினால் பொறுமையும், ஆறுதலும் அடைந்து அதினால் மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டவர்களுக்குத்தான் தெரியும்.

ஐயா, ரேனியூஸ் ஐயரவர்களிடத்தில் சேர்ந்த காலம் வருஷம் "ஞான விநோதம்" என்ற ஒருகவடி எழுதிவைத்திருக்கிறார்கள். அது வேதநாயக சாஸ்திரியார் செய்யுள். அதில், வேதநாயக சாஸ்திரியாருடைய தகப்பனார் சைவமதத்தைவிட்டு, வேதத்தில் சேர்ந்தபோது, திருநெல்வேலியில் அவருடைய இனத்தார், வைதீகரார் அவரைப்பண்ணின கோரணிகள் சொல்லியிருக்கிறது. அதுகளெல்லாம் எனக்கும் என் இனத்தார்கள் செய்தார்கள் என்று ஐயா என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் ஐயாவுடையபிள்ளைகளாகிய எங்கள் பேரில் விரோதமில்லாமல்த்தானிருந்திருக்கிறீர்கள். உங்கள் கோபமெல்லாம் ஐயாபேரில்தான். உங்களிலும் பொதுநீதியாய் நடந்துகொண்டவர்களுமுண்டு.

மேலேகுறித்த ஞான விநோத பாட்டுகள் பலதை இங்கே எழுதி அச்சடிக்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் புஸ்தகம் பெரிதாய்ப் போய் விடுமென்று நிறுத்திவிட்டேன்.

எங்களுடைய கோவிலில் பண்ணுகிற ஒரு மன்றாட்டு என்னவென்றால்: எங்களைப் பகைக்கிறவர்களுக்கும் துன்பப்படுத்துகிறவர்களுக்கும் அவதூறு பண்ணுகிறவர்களுக்கும் மன்னித்து, அவர்கள் இருதயத்தைத் திருப்பவேண்டுமென்று: நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.

இந்தமன்ருட்டைச் சொல்லுகிற போதெல்லாம் நான் என் இனத்தானை நினைத்துச் சொன்னேன் என்று ஐயா சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் நீங்கள் எங்கள் பேரில் வெறுமென்று பகைவர்மத்தியிலே யா அப்படி நடந்து கொண்டீர்கள். ஒரு போது மில்லை. நம்முடைய சொந்த சனமாயிருந்தும் இப்படிப் போனார்களே என்ற மார்க்க வைராக்கியத்தினால் தான். மார்க்கவைராக்கியம் இருக்கவேண்டியது தான். மூடத்தனமான வைராக்கியமாயிராமல் அறிவோடு கூடியவைராக்கியமாயிருக்கவேண்டும். பிறர் [illegible] போதித்து, உத்தமராகிய நாம் அன்பையும் சாந்தத்தையும் பொறுமையையும் காண்பிக்க வேண்டும். ஒருவரை நிந்தித்து அவமானப்படுத்திக் கேலி செய்வதினால் நம்முடைய மார்க்கத்திற்கு மகிமையுண்டாகமாட்டாது.

ஐயாவுக்கு எக்காலமும் தங்கள் இனசனத்தின் மேலிருந்த பட்சம் அதிசயமானது. அவர்களுடைய எழுத்துகளைப் பார்த்தால் நன்றாய்த் தெரியும்: என் அண்ணன், என் தம்பி, என் அக்காள், என் தங்கச்சியென்று ஐயா சொன்னால், அது முறை பாத்தமாய்ச் சொல்லுகிற வார்த்தையல்ல, மெய்யாக உடம்பிறவியைச் சொல்லுகிற வார்த்தை.

அவர்கள் தகப்பனார் இறந்த பின்பு பிழைப்புக்காக [illegible], ஜித்தன்புரார், கரிசல்காடு முதலிய இடங்களுக்குப் போய்க் குடியிருந்தார்கள். இந்தக்காலமெல்லாம் தங்கள் பூர்வ ஜோலையிலே நானிருக்கிறார்கள். இந்த இடங்களிலும் இனத்தாருண்டு. அப்படியிருந்தும்: "என் சடைத்தைக்குத் தக்கதாய் என் தகப்பன் ஏழு சகோதரர் எல்லாரும் கூடியிருந்து கலியாணங்கள் பிள்ளைகள் பெற்றதும் சந்தோஷமாய் வாழ்ந்த இடமாயிருந்தமனையும் வீடும் ஊரும் விட்டுப் போகநேரிட்டது. பிறவினால் தன் பிள்ளைகளுக் குண்டான சுதந்தரமான மனையும் வீடும் பறிபோய்க் கிடக்கவுங் கண் கண்டது, இதினால் எப்படிப் பட்ட இவ்மார்க்க கடமைக்கும் அதற்குத் தந்த பலனை யிக்கமயில் தானே [illegible]. இதுவுமன்றி இனசனங்களிலும் கூடியிருக்கவும் [illegible] வாமல் போய்விட்டது" என்று இப்படிப் பிரதிபலிக்கிறார்கள்.

சுவிசேஷமார்க்கத்தில் சேர்ந்த பின்பு தங்களுடைய ஐயமார்க்களிடத்தில் வருத்தப் பட்டு உத்தரவு வாங்கித் தங்கள் இனசனத்தானைப் பார்க்கவும் நன்மையின்மைக்கும் போவார்கள். மேலும் கிறிஸ்துவின் சுவிசேஷ ஒளி அவர்கள் இருதயத்தில் பிரகாசமான போது, தங்கள் இனத்தாரும் இந்த சுவிசேஷ அறிவையும் அதினால் உண்டாகிற ஆறுதலையும் பெற்றுக் கொள்ள வே



ண்டுமென்றதே, அவர்கள் இருதயத்திலிருந்து கொண்ட விருப்பமும், அவர்கள் வேகாலப் பிரயத்தனமும், தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருந்தது. அவர்கள் சில்லரை எழுத்துகளைப் பார்த்தால் தன் இனத்தானைக்குறித்து எத்தனை துக்கமும் வியாகுலமும் அவர்களோடு அன்பாய் ஒன்றித்து ஒருமித்து இருக்கவேண்டுமென்ற ஆசையும் எவ்வளவோ இருந்ததென்று காணலாம்.

தங்கள் குமாரர்களுக்குத் தங்கள் இனத்திலிருந்து பெண் கொள்ள வேண்டுமென்று எத்தனையோ பாடுபட்டார்கள். இவ்விடத்திலே குலத்திலும் குணத்திலும் பணத்திலும் படிப்பிலும் பெண் கிடையாமல் முட்டிப்போயிற்றென்றே. வள்ளக்குளத்து அத்தானிடத்தில்; ஐயா, 'மாப்பிள்ளை, உம்முடைய மகளை என் இளையமகனுக்குக் கட்டிக்கொடும்'. என்றார்கள் "பிள்ளையைப் பெற்று பசாசின் கையில் பிடித்துக் கொடுக்கவா" என்று மாமனுருக்கு வெகு அருமையாய் மருமகன் பதில் சொன்னார்கள். இப்படி சம்மந்த விஷயத்தையிட்டு அவ்விடத்துக் குருக்களுடைய சாபங்கள் விரோதங்கள் மாத்திரமல்ல, இவ்விடத்துக்குருக்களுடைய கோபங்கள் நிமைகளுக்கு மிடமாகுதேன். தங்களுடைய காரியம் எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் அவ்விடத்திலிருந்து நம்முடைய பிள்ளையாண்டான்மார் இங்கே சேரவந்தவர்களுக்கு சாப்பாடு படிப்புக்கு எவ்வளவோ செலவு செய்தார்கள். வீட்டுச் செலவுகஷ்டம் எவ்வளவு இருந்தாலும், வடக்குன்குளம், மலையாளம், கரிசல்காடு முதலிய இடங்களிலிருந்து வருகிறவர்கள் எத்தனை நாளிருந்தாலும் சலியாமல் வீட்டில் பொங்கிப் போடுவதல்லாமலும் போகிறபோதும் எதாவது கொடுத்தனுப்புவார்கள். இதெல்லாம் இனசன பாசத்தினால் அன்பை அருமையை பெறமுண்டு. எண்ணிடப்பித்ததல்லவா.

ஆனால் அவர்களுக்குப் பதிலிடைத்த மரியாதை என்ன. இரண்டு மழய [illegible] சொல்லுகிறேன். இது உங்களுக்கு விசனமுண்டாக அல்லது வசையாக சொல்லுகிறேனென்று சொப்பனத்திலும் நினைக்கவேண்டாம். [illegible] மார்க்கவைராக்கியத்தினால் தெரியாத்தன்மையினால் நடப்பித்த காரியம். எங்களுக்கோ அதினால் அதிக அறிவு வரக் காரணமாயிருந்ததினால் ஆண்டவருடைய கிருபையை ஸ்தோத்திரிக்கிறோம்.

ஐயா சிலரில் எழுதிவைத்திருக்கிறது. [பின் வருவது சுருக்கம்].

ஐயா சரிலில் [illegible] "வடக்குன்குளத்திலிருந்து வந்த சுவி [illegible] முத்தப்பிள்ளை உங்கள் பெரியதாயாருக்கு அவளைக்கொடுத்து வருத்தமாயிரு

க்கிறது உம்மைக்காண விருந்த ஆவலாய்த்தேடுகிறேனென்றதினால் உடனே
கனம் சாப்ட்டர் ஐயரவர்களிடத்தில் உத்தரவுவாங்கி வண்டியும் அமர்த்தி
நானுமென் சம்சாரமும் புறப்பட்டோம். பிள்ளையவர்கள் தங்களுக்குவர
வியாதியாயிருக்கிறதென்று தங்கள் மூத்தகுமாரன் வியாசப்பிள்ளையையும்
அனுப்பினார்கள். ௰௩ ௳ சாயந்திரம் ௬ மணிக்குள்ளாக ஷெ வடக்குன்குள
த்துக்குப்போய்ச் சேர்ந்தோம். ஷெ என் பெரியதாயார் என்னைத்தன் பிள்
ளைபோலச் சிநேகித்து வந்தவளானதினால் அவள் வியாதிப்பட்ட காலந்
தொடங்கிமுதல் ஓயாமல் எல்லாரிடத்திலும் என்னை வரச்சொல்லியும் வரவில்
லையாவென்றும் விசாரித்தும் வந்ததுமன்றி நாங்கள் போய்ச்சேர நாலுநா
ளைக்குமுன் நாங்கள் வருகிறதாக அறிவித்த தன்மகன் தேவசகாயம்பிள்
ளையிடத்திலும் வருகிறாரோ நான்போய்ப் பார்க்கப்போகட்டாவென்றாளாம்.
அப்படிப்பட்ட தாய்க்கு நாங்கள் போனபோது அறிவுமயக்கமாய் வெற்
றுமைக்கொதிப்பும் பேச்சுமுட்டுமுண்டாயிற்று. நான் வெகுவாய்க் கூப்பி
ட்டுத்தோத்திரஞ்சொல்ல மன்னியாவென்றும் தோத்திரமுஞ் சொன்
னாள். அரைகுறையாய்க்கேட்டது. அந்த மயக்கத்தில் பின்னும் என்னை
க்குறித்தறிவித்தவர்களுக்குந் திட்டமாயுத்தரமில்லை. பின்னும், பெத்தி என்
னைத்தேடினையாமே என்றதற்கும் ஆமாவென்றுஞ் சொன்னாள். போய்ச்
சேர்ந்த சோமுதலவள் மரணமாய் அவள் கண்ணும் வாயும் மூடியிருந்தவரை
யும் அவள்கிட்டவே இருந்திருந்து தண்ணீர் கொடுத்து [illegible]
ணியும் இருந்தேன். கடைசியாக; நானே அவள் வாயைமூடினேன். பி
ன்பு அடக்கப்பட்டு அழுது வெளியே அவளைக்கொண்டுபோய் அடக்கம்பண்ணப்பட்ட
கொண்டுவரும்வரை யிருந்தேன் [illegible]."

இதற்கிடையில் பெருமதலைச்சேரியவர்கள், [illegible] பண்ணினார்கள்.
பெரிய மருமகளைப்பட்டத்திலிருக்கிறபக்கத்தில் பந்தல்வைத்து [illegible]
சொல்லிருக்கிறேனே, அந்த அடக்கம்பண்ணுகிறபோது பந்தலுக்கு கட்
டிருக்கட்டாதென்று தீர்மானம் பண்ணினார்கள். அவள் உயிருடனிருந்த
சேலை கரண்டையில் முந்தஅன்றும் பந்தப்பாசிமாலைக்கொடுத்தசேலை
யென்பதை மறந்துபோனார்கள். ஷெ சேலையில் போட்டுவைத்தநாளி ஷெ
பந்தப்பாசியிருடைய மகன் மாமியாரின் வைத்தநாளி என்பதை மறந்து
போனார்கள். அவனைக்கொடுத்திருக்கிற கட்டில் ஷெ பந்தப்பாசியும் பி
ள்ளைகளும் படுத்திருந்த கட்டில் அவளுக்குக்கொடுத்ததென்பதை மறந்து
போனார்கள். அவளுடைய மருமகன் தென்காசியிலிருந்துபோனபோது இ
ந்த அன்றுச்சி பந்தப்பதேசி பேட்டையிலிருந்தவர்கள் வந்துதான் அடக்



கம்பண்ணிவைக்கஉதவவேண்டியதாயிருந்ததென்பதை மறந்துபோனார்கள்.

ஷெ யோசனைக்காரர், ஷெ ஆத்தாளுடைய பேத்தியைக்கொண்ட பாக்
கியம் பிள்ளையை அனுப்புவித்து, குருசுவாமியவர்கள் உத்தரவென்று
சொல்லி, ஐயாவைப் பார்த்து "அவளை எடுத்துப்போய் அடக்கம் பண்ணு
மட்டும் வேறுஇடங்களுக்குப்போயிருந்து வாருங்களென்று சொல்லி அனு
ப்பினார்கள்.

"அப்படியா, "நான் என் தாய்க்காக இங்குவந்தது, அவளுக்குச் செய்ய
வேண்டியதைச் செய்தும் முடிந்தது. உங்களுக்கும் எங்களுக்கும் என்ன
காரியமிருக்கிறது, இப்போதே சந்தோஷமாய்ப் போகிறோமென்று பிள்ளை
களையும் கூட்டிப்போய்விட்டோம். ஷெ என்தாய்க்கு மகனுடைய தேவசகா
யம்பிள்ளையிடத்தில்பேய்ச நீர் ஆயாசப்படாதிருமென்று ஷெ பாக்கியம் பி
ள்ளையிடத்தில் சொன்னபடியே சொல்லி ஆறுதல்படுத்திப் புறப்பட்டோம்.
இரண்டுநாளுமாய்ப் பள்ளிக்கூடத்திலும் உதவிச்சாலையிலும் சாப்பிட்டுப்
படித்துவந்த என்தங்கச்சி மகனும் மறுதலித்துப்போனான். இந்தக்காரிய
மும் எனதம்மாளுக்கு நல்லறிவு, திடனும், பேச்சுமிருக்கும்போது வந்து
அவளைச் சந்திக்காததுமே எங்களுக்குச் சொல்லமுடியாத துக்கமாயிருந்த
தன்றி, ஷெ ஊர் சமதுபந்து சனங்களைவிட்டுப் போகிறோமென்கிறதாவது
பின்னும் அவர்களைப் பார்க்கவேணு மென்கிறமனமுமோ, இல்லை. ......
பெருங்குடியாற்றில் வந்து குளித்ததண்ணீர் சாப்பிடும்வரை பசிதோன்றவி
ல்லை.

[ஆறாம்பிறைவழிக்கு வடக்கேயுள்ள] சுண்டவிளையிலிருக்கும் உப
தேசியார் முத்துசுவாமியா பிள்ளையவர்கள் வீட்டுக்குவந்தோம். எங்களுக்
குக் குளிக்க வெந்நீரும் வைத்துத் தந்து, "சாப்பாடும், வெகுவாய்ச்செய்
தார்கள்."

இதனாலே ஐயாவுடையமனம் விட்டுப்போயிற்றோ, இல்லையாது. கிறிஸ்
துவின் அன்பைவிட்டு அவர்களைப்பிரிக்கிறதற்கு பூலோகத்திலொன்றுமுண்டோ,
இல்லை. அப்படிப்போலவே, கிறிஸ்துவின் நிமித்தம் தங்கள்சனத்தார் மேல்
அவர்களுக்குள்ள அன்பின் பாசத்தை முறிக்கிறதற்கும் ஒன்றுமில்லை. பி
ன்னும் திரும்பவும் திரும்பவும், எத்தனையோதடவை, சுகசெய்தி விசாரிக்
கிறதற்கும், துக்கம்விசாரிக்கிறதற்கும் போய்வந்தார்கள்.

அனேக மாசங்களாய் நான் மதுரைக்கு அலுவலாகப்போயிருந்து, அ
ன்றுதான் சுவிசேஷபுரத்துக்கு வீட்டுக்கு வந்திருக்கிறேன். கொச்சிப்போ

த்தி வடக்குன்குளத்தில் இறந்துபோனார்க ளென்று ஓலைவந்தது. ஐயாவுக்கு இவர் சின்னப்பாமுறைவேண்டும். தானே தலையாகக் கண்ணீர்வடித்தார்கள். கல்லறையாவது, போய்ப் பார்த்துவரவேணுமென்று, சாப்ட்டய்பரவர்களிடத்தில் போய் உத்தரவு வாங்கிக்கொண்டு: உடனே புறப்பட்டுப் போனார்கள்.

எழுபது வயசாகி, மிசியோன் உபதேசி அலுவல்பார்க்க ஏலாமல், வீட்டடங்கியிருக்கிற தள்ளாத காலத்தில், இனி நம்முடைய தாயார் தப்பார் இருந்து, மரணமான நமது ஆதிமனையிற்போய், தானும், தன்மனைவியும் மரணமாக வேண்டுமென்று புறப்பட்டார்கள். மக்களாகிய எங்கள் ஒருவருக்கும் அது இஷ்டமில்லை. ஆனாலும், ஐயா அம்மையுடைய பிரியப்படி அவர்களுக்கு ஆறுதலும், சந்தோஷமுமாயிருக்கிற காரியம் நமக்குப் பாக்கியமென்று சம்மதித்தோம். வடக்குன்குளத்து இனத்தார்: முசோ என்னமோசம், ஊர் நடுவிலே பதிதன் வந்திருக்கலா, அதற்குஇடங்கொடுத்தால், ஊருக்குச் சாபம்வந்து விடுமென்று கலகம்பண்ண, அதினால்சேசி செறு செலவைக்கொடுக்க குருக்களும் உடன்பட்டார். [இது பெரிய கதை] கடைசி முடிவாக ஊரைவிட்டுத் தாக்கிவிட்டார்கள். அக்காலத்தில், பிள்ளைமார்களுடைய பெருக்கமும், வர்த்தகங்களும் செல்வமும் பரந்துகட்டும், கோயிலைப் பற்றிய அதிகாரமும் தெருக்களைப் பற்றிய அதிகாரமும், ஊர் அதிகாரமும் குருக்களுடைய சொல்சத்தியும் எல்லாமே ஒத்திருந்தது.

வேதத்திலே ஒருவர் தன்பெண்சாதி பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு தான் குடியிருந்த ஊரைவிட்டு ஓடிப்போனது போல, தானும் புறப்பட்டுப் போனதாக ஐயா எழுதிவைத்திருக்கிறார்கள். அத்தனை வயிற்றெரிச்சல் இருந்திருக்கிறது. ஐயாவுக்கு இதனால் உண்டான வெட்கமும், துக்கமும், மனவருத்தமும் சொல்லமுடியாது. சரீரமும் ஆயிசும் குன்றிப்போய் விட்டது. நான் செய்கிறது இன்னதென்று இப்போது அறியாய், இனிஅறிவாயென்று சொன்ன ஆண்டவர், நம்முடைய வேண்டுதல்களை, விருப்பங்களை, மன்றாட்டுகளைக் கேட்டுத்தருவதிலும், கேளாமல் தள்ளிவிடுகிறதினால் தான், அனேகதடவைகளில் நமக்குப்பெரிய நன்மை செய்கிறார் என்று அவர்கள் அறிந்த அநுபவத்துக்கு இதுவும் ஒருதிருஷ்டாந்தமாக சீக்கிரத்தில் கண்டுகொண்டார்கள்.

ஆண்டவர் எங்களுக்குச் செய்தது எத்தனையோ கிருபை. கல்லமாண்புரத்தில் மூத்த மகன் வீட்டில் ஆறுமாசம் ஐயா வியாதியாய், கட்டில்



கிடையாய்க்கிடந்தார்கள். வடக்குன்குளத்தில் அப்படி வியாதியாயிருப்பார்களானால், பலவிடங்களில் சீவனம் பண்ணுகிற அவர்கள் பிள்ளைகள் போய்ப் பார்த்து ஆதரிக்க ஒத்துவருமா. மூத்தமகன் ஆறுமாசம் இராப்பகல் லாங்காக் கச்சையாய் ஒவ்வொரு நிமிஷமும் எத்தனையோ அருமையோடு, எத்தனையோ அன்போடு, எத்தனையோ வணக்கத்தோடு நடத்தின பக்குவங்கள் எந்தச்சிமானுக்கும் நடக்கிராது. மக்கள், பேரன், பேத்தி, பூட்டன், பூட்டிகள் தினம் எத்தனை வாசிப்புகள், எத்தனை பாட்டுகள், எத்தனை செபங்கள் நடப்பித்தார்கள். கடைசி அவஸ்தையிலும் வாயில்வந்தசொல்லுகளில் தங்களுடைய வடக்குன்குளத்துக் கடைவீட்டு மச்சினன்மார்களுடைய பேர்களைச்சொல்லி அழைத்தது போலும் இரண்டொருசொல் கேட்டது. இந்த மச்சினன்மார் ஐயாவுக்கு ஒருகாலமும் விரோதஞ்செய்தவர்களல்ல.

கிறிஸ்துவுக்குள் சீவித்து கிறிஸ்துவுக்குள் மரணமானார்கள். "நீ உத்தமனைநோக்கி செம்மையானவனைப் பார்த்திரு. அவனுடைய முடிவு சமாதானம்".

இதற்கு நானூறுவருஷத்திற்குமுன் ரோமான்கத்தோலிக்கு வேதத்தைச்சேர்ந்தபோர்த்துக்கிஸ்காரர் கப்பலில் நமது இந்துதேசத்துக்குவந்து சேர்ந்தார்கள். அவர்கள் மலையாளத்தில்வந்து கரையிறங்கினபோது மலையாளதேசத்தில் ஆயிரம் பதினாயிரமான கிறிஸ்தவர்கள் இருக்கிறதைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். நீங்கள் எப்படிக்கிறிஸ்தவர்கள் எவ்வளவுகாலம் கிறிஸ்தவர்கள் உங்களுக்குக் குருக்கள்யார் என்றுகேட்டபோது நாங்கள் ஆயிரம் ஆயிரத்தைநூறுவருஷத்துக் கிறிஸ்தவர்கள், தோம்மையார்காலமுதல் கிறிஸ்தவர்கள், எங்கள் அதிமேற்றிராணியார் சூரியானி தேசத்திலிருக்கிறார் என்றார்கள். இந்தமலையாளத்துக் கிறிஸ்தவர்களுக்கு அப்போது ரோமை என்கிற ஒரு ஊர் இருக்கிறதென்றும் தெரியாது. அங்கே பாப்பானவரென்று ஒருவர் இருக்கிறார் என்றும் தெரியாது. அவருக்குக் கீழாகக் கர்தினால்களும், ஆயிரம் பதினாயிரம் மேற்றிராணிகள் குருக்களும் கோடாகோடி கிறிஸ்தவர்களும் இருக்கிறார்களென்று இந்த மலையாளத்துக் கிறிஸ்தவர்களுக்குத் தெரியாது.

போர்த்துக்கீஸ்காரருடைய சார்பில் அர்ச்சிஷ்ட சவரியார்முதலிய சேசுசபைக் குருக்கள்வந்து, இந்த நாட்டில் ரோமான்கத்தோலிக்கு சபையை ஸ்தாபித்தார்கள். அர்ச்சிஷ்ட சவரியருக்கு நூற்றைம்பதுவருஷத்திற்குப்பிற்பாடு தென்மார்க்கு தேசத்து ராசாவுடைய சார்பில் புரொதெஸ்தாந்து

குருக்கள் தரங்கம்பாடிக்கு வந்து, புரொடெஸ்தாந்து சபைகளை ஸ்தாபித்தார்கள்.

இவர்கள் எல்லாரும் நாங்கள் தான் மெய்யான சத்தியவேதத்தைப் போதிக்கிறோம் என்று அவரவரே சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்த வியாச்சியத்திற்கு முடிவில்லையா? முன்னாட்களில், நம்முடைய தேசத்து ராசாக்கள், ஒருவர் இங்கிலீஷ்காரர் கட்சியையும், ஒருவர் பிராஞ்சுக்காரர் கட்சியையும், ஒருவர் டச்சுக்காரர் கட்சியையும் சேர்ந்ததுபோல, நாமும் மார்க்க காரியத்தில் நடக்கிறதாயிருக்கிறது.

சைவ மதத்திற் பிறந்தவன் சைவனாயிருக்கிறான். வைஷ்ணவமதத்திற் பிறந்தவன் வைஷ்ணவனாயிருக்கிறான். துலுக்கமதத்திற் பிறந்தவன் துலுக்கனாயிருக்கிறான். ரோமான் மதத்தில் பிறந்தவன் ரோமானாயிருக்கிறான். புரொடெஸ்தாந்து மதத்தில் பிறந்தவன் புரொடெஸ்தாந்தனாயிருக்கிறான். நாங்கள் புரொடெஸ்தாந்து மதத்திலிருக்கிறதற்கு இதுதான் காரணம்.

நாங்கள் சத்தியமின்னதென்று இருபக்கத்தையும் சோதித்து, ஆராய்ந்தறியாமல், குருட்டுத்தனமாய் புரொடெஸ்தாந்து மார்க்கத்திலிருக்கிறோமென்று நினைக்கிறீர்களோ.

புரொடெஸ்தாந்து மார்க்கத்திற்கு விரோதமாக தமிழிலும் இங்கிலீஷிலும் எழுதப்பட்டிருக்கிற நூல்கள் நான் வாசித்ததுபோல, திருநெல்வேலி ஜில்லாவில் கருத்த மனுஷர்கள் வேறொருவர் வாசித்திருக்கமாட்டார்கள். வேதவிளக்கம், பேதக மறுத்தல், ஞானதெரிசனத்தியல்பு, வேதப்புரட்டிலே சிக்குஞ் சந்திசி, வேதாந்த நிராயப்பத்திரிகைகள் எல்லாம் எத்தனையோ தடவை வாசித்தேன். வேதவிளக்கத்தைத் திரும்பத்திரும்ப வாசித்ததினால் ஒரு காலத்தில் எனக்கு அது ஏகதேசம் பாடமாய்த் தெரியும்.

கையுங் களவுமாய்ப் பத்துப்பேர் கூடிப்பிடித்த கள்ளனை கச்சேரியில் சேர்த்துப்போய் விட்டால், அதிகாரிகள் உடனே மரணமாக்குத் தீர்ப்பு பண்ணிப் போடுகிறார்களா! அவனுடைய வாக்குமூலம் கேட்டு, அவன் தன்னுடைய சாட்சி விசாரிக்கவேண்டுமென்றால் அதற்கும் வாய்தாக்கொடுத்து, அப்புறமல்லவா முடிவுசெய்கிறார்கள். அப்படியிருக்க நீங்கள் யாதொரு விசாரணையும் செய்யாமல், உங்களுக்கு நரகம் என்று தீர்ப்புப்பண்ணிப் போடலாமா.

உங்களுடைய வழக்கு இன்னதென்று நாங்கள் ஒருவார்த்தை சொல்லப்போனால், காதை அடைத்துக்கொள்ளுகிறீர்கள். எங்கள் புஸ்தகமென்று



கண்டால், கிழித்து எறிகிறது தான் முதலானவல். கழிவுதாள் என்று சொல்வதற்கு பதிதன் தாள் என்று சொல்லுகிறதை நான் காதாலே கேட்டிருக்கிறேன். சாஸ்திரம், நியாயசாஸ்திரங்களில் தேறினவனென்பதாக பி. ஏ., பி. எல். பட்டம்பெற்று ரோமான் கத்தோலிக்கில் ஒருவரிருக்கிறார். அவர் எனக்கு அருமையான இஷ்டன். எங்கள் பள்ளிக்கூடங்கள், சாலைகளில் எங்கள் மார்க்கத்தைச்சேர்ந்த யாராவது ஒரு பெரியவர் வந்து, பொதுவான விஷயங்களைக்குறித்துப் பிரசங்கம்பண்ணுவதைக் கேட்கும்படியாக அவரை நான் அழைத்தால்; மாட்டேன், குடி கெட்டுப்போம் என்று சுவாமியாருக்குப் பயப்படுகிறார்.

எங்கள் குருக்கள் எவர்களாவது தங்கள் சபையாரைப்பார்த்து, தங்கள் உபதேசி, வாத்தியாரைப்பார்த்து, தங்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கிற பிள்ளைகளைப்பார்த்து, நீங்கள் ரோமான் மார்க்கப்புஸ்தகங்களை வாசியாதேயுங்கள் என்று கட்டளையிட்டதாக, இதுவரையில் நான் கேள்விப்பட்டதில்லை.

எங்கள் குருக்களிடத்தில் சர்தனந்தான் மணக்குமென்று நான் சொல்லுகிறவனல்ல. ஆனால் அவர்கள் போதகத்தில் உண்மையென்கிற உயர்ந்த நல்ல லட்சணம் இருக்கிறது. அவர்கள் சுத்த சுவிசேஷசத்தியவசனத்தை எங்கள் கையில் கொடுத்து; உங்கள் ஆசியா தேசத்தில் கிறிஸ்து அவதரித்தார், அவருடைய சீஷர் அப்போஸ்தலரும் உங்கள் ஆசியாதேசத்தார் தான், அவர்கள் ஆதியில் ஸ்தாபித்த சபைகளெல்லாம் உங்கள் ஆசியாதேசத்தார்களிலேதான், ஆசியாவிலிருந்து அப்புறந்தான் எங்கள் ஐரோப்பாதேசத்துக்கு சுவிசேஷம் வந்தது, நாங்கள் தவறாதவர்களல்ல, உங்களைப் போல நாங்களும் பாடுள்ள மனுஷர்தானே, எங்களை நீங்கள் பார்க்கவேண்டாம். நானே வழியுமாய் சத்தியமுமாய் ஜீவனுமாயிருக்கிறேன், என்று சொன்ன இயேசுவைநோக்கிப்பாருங்கள், வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் என்னிடத்தில் வாருங்கள் என்று சொன்ன இரட்சகரிடத்தில் போங்கள், என்னிடத்தில் வந்து கற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்ன பரமசற்குருவிடத்தில் போய்ப் படித்து, சந்தேகந் தெளியுங்கள், உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள், உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளை-

பேசித்திதக் கொண்டிருங்கள். யாவற்றையும் ஆராய்ந்துபார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள், என்று எங்களுக்குப் போதிக்கிறீர்கள்.

போன வருஷம் பெரிய வியாழக்கிழமையன்று ராத்திரி சாமத்துக்கு மேலே எனக்குத் தூக்கம்வரவில்லை. கண் பெலவீனமாய்ப்போனதில், ராத்திரி வாசிப்பை நிறுத்திப்போட்டேன். நான்கு பிள்ளைகளை எழுப்பி வாசிக்கச்சொல்லவும் பிரியமில்லை. வடக்குன்குளத்தில் பெரிய வெள்ளிக்கிழமை வந்தால், உபதேசிமார்கள் இராப்பகல் (பாடுபட்ட சரித்திரத்தியான) மறுவாசித்துத், தொண்டைகட்டிப்போம், என்று ஐயா சொன்னது ஞாபகம் வந்தது. அப்படியே பாளையங்கோட்டை ரோமான் கோவிலிலும் ஒரு வேளை வாசித்தால் கேட்கலாமென்று போனேன். நான் ஆசைப்பட்டுப் போனபடியே உபதேசியார் ஒரு புஸ்தகத்திலிருந்து அருமையான தியானங்களும் செபங்களும் விதவிதமா வாசித்தார், சில சனங்களுமிருந்தார்கள். நானும் கூடவேயிருந்து பாடுபட்ட கர்த்தனை நோக்கி முழங்காலூன்றி வேண்டிக்கொண்டு விலகி சேர்ந்தேன். என் பாதிரிமார் இதைக் கேட்டால் எனக்கு சாபம் போடுவார்களென்று நினைக்கிறீர்களா ஒரு போதும் இல்லை. கிறிஸ்துவாகிய கல்மலையின்மேல் தன்விசுவாசமாகிய வீட்டைக் கட்டினவனை, சத்தியவேதத்திற்கு விரோதமான எந்த மற்பாடுகளும், அசைக்கமாட்டாது என்று எங்கள் குருக்களுக்குத் தெரியும். ரோமான் சபையைச் சேர்ந்தவர்கள்; சீமையில் புரோதெஸ்தாந்துக் காரர் இன்னின்னார், இன்னின்னார் ஆயிரம்பேர் எங்கள் வேதத்தில் வந்து சேர்ந்துவிட்டார்கள் என்று அப்போதப்போது சொல்லுகிறார்கள். இன்னின்னார், இன்னின்னார், ஆயிரம்பேர் ரோமான் மார்க்கத்தைவிட்டு எங்கள் புரோதெஸ்தாந்து மார்க்கத்துக்கு வந்துவிட்டார்களென்று புரோதெஸ்தாந்துக்காரர் சொல்லுகிறார்கள். பஞ்சேறி நாதரிடத்தில் சாலமோன் உபதேசி போனாலென்ன, லைக்கலைப் பிள்ளை மல்ஜரையரிடத்தில் போனாலென்ன. இந்த நாட்டிலேயும், இரண்டு குருக்களும் பதினாயிரம், பதினாயிரம் பேரை தங்கள் தங்கள் கட்சிக்குச் சேர்த்துவைத்திருக்கிறார்கள். கிறிஸ்துவினுடைய மார்க்கத்துக்கு, அதாவது கிறிஸ்து நடந்து போனபாதையில், அவர்க்கொப்பாக நடக்கும்படியாக ஆட்களைக்கூட்டிச் சேர்ப்பார்களானால் அந்தக் கூட்டந்தான் மெய்யான திருச்சபையாகும். அப்படிக்கில்லாமல், தங்கள் தங்கள் தேசத்து சடங்கு முறைமைகள் தங்கள் தங்கள் சாதியாருடைய நடைபடிவழக்கங்களை நிலைநாட்டிக்கொண்



டு வந்து ஸ்தாபித்த கிறிஸ்துவின் கட்டளைகளையல்ல தங்கள் அதிகாரத்தை தங்கள் சபைப் பெருமைகளை நிலைநாட்டுவதற்காகச் செய்த ஏற்பாடுகளினால் சனங்களும் வயிற்றுப்பிழைப்புக்காக பொரிசுக்காக சலுகை உதவி அனுகூலங்களுக்காக மேன்மை பெருமைக்காக குருக்களிடம் சேர்ந்தடங்கியிருக்கிறார் [illegible]களேயன்றி தன் ஈடேற்றம் பிறர் ஈடேற்றங் கருதி மன சாட்சிப்படி பாப்ப டக்கிறார்களென்று சொல்லவகையில்லை. ஆகையால் நமது சபைகள் கிறிஸ்துவின் மார்க்கத்தைச் சேர்ந்திருக்கிறார்களென்று சொல்லுகிறதற்குப் பதிலாக, வெள்ளைக்காரர் வேதத்தில் சேர்ந்திருக்கிறார்களென்று சொல்லுகிறது, உண்மையான வார்த்தை. வந்த பலன் என்னவென்றால்; வேதத்தில் சேர்ந்தவர்களை அஞ்ஞானிகள் பார்த்து, எங்கள் நடக்கையிலும் உங்கள் நடக்கை என்ன யோக்கியம் என்று கேட்கும் போது, நாம் வெட்கத்தோடு தலையைக் கீழே போடவேண்டியதுதான்.

ஆனால் எங்கள் குருக்கள் தங்கள் சபையைச் சேர்ந்தவனுக்கெல்லாம், மோட்சம் கொடுக்கிறோமென்று உறுதி உடன்படிக்கை சொல்லுகிறதில்லை. கிறிஸ்துநாதர் அடிச்சுவடுகளைப் பின்சென்று, அவர் காட்டிப்போனமார்க்கம் பாதையில் நடந்து வந்தவன்தான் கரையேறுவான் என்பதுதான் அவர்கள் போதகம். ரோமான் கத்தோலிக்கு சபையிலே நடக்கிற உபதேசம் இதற்கு எதிராயிருக்கிறதாகக் காணுகிறது.

திருஷ்டாந்தம்: வடக்குன்குளத்தில் ** பிள்ளை, புரட்டுருட்டு, பித்தலாட்டத்துக்கு பேர்போனவர். கள்ளவழக்கு, கள்ளசாட்சிக்குக் குரு. பெண்சாதியைப்பண்ணுகிற நிஷ்டூரம் கணக்கில்லை. வேததர்க்கத்துக்கு சூரவளி. ஒரு தடவை, வேதப்புரட்டலை நீக்குஞ் சஞ்சீவியென்ற புஸ்தகத்தை கையில் வைத்துக்கொண்டு என்னைத் தோற்காப்பறிகண்டார். அந்த வேளையில் அத்தான் வீணைத்தாங்கனவீட்டு ஞானப்பிள்ளை வந்தார். ஷெ அத்தான் சிரியாமல் மெள்ள கவினமாய் கிருதுயேசுவதில் முதல் நம்பர், மரணவேளையில் சுவாமியார் அவஸ்தைகொடுக்க வந்திருந்தபோதுங்கூட, சுவாமியாரிடத்தில் ஏதோ கெடிபேசினாராம். ஷெ அத்தானுக்கு ஷெ தர்க்கசாஸ்திரியை முனைமடக்கவேண்டுமென்று எண்ணமாகும். அதற்காக என்னைப்பார்த்து: ஓய் மாப்பிள்ளை, உம்முடைய பதிதவேதத்தில் எல்லாருக்கும் மோட்சங்கிடைக்குமென்று என்ன உறுதி! இங்கே சுளுவிலே எல்லாருக்கும் கிடைத்துப்போம். சேனும், ஞானஸ்நானம் பெற்றால்; அன்றுவரை செய்த சென்மப்பாவம், கன்மப்பாவம், எல்லாந்தொலைந்து போகிறது, உம்முடைய மா

மியார் வீட்டில் ஞாத்தத்தோளிக்கிற இடைச்சி பெருங்காளியுடைய அப்பன் விடியவிடியப்பேயாடினான். விடிந்து பேதியெடுத்துச்செத்தான். சிவன் வளைக்கிறபோது, சாமியாரைக்கூட்டிவந்து, ஞானஸ்நானங்கொடுத்து, பாக்கியசேதசுவாமி மந்திரிச்ச கல்லறைவிளையில் புதைத்தார்கள். நேரே மோட்சத்திற்குப்போய்விட்டான். ஞானஸ்நானத்திற்குப் பிற்பாடுசெய்த பாவமெல்லாம், பரவசங்கீர்த்தனம் பண்ணினால், நன்மை வாங்கினால் அதோடு தீர்ந்து போகிறது. அப்புறம்செய்தபாவத்திற்கு, மரணநேரத்தில் அவஸ்தை பூசினால், அதோடு எல்லாப்பாவமும் தொலைக்கது. பின்னும் சொத்துக்குறை, எதாவது, இருந்தால் இரண்டு பணம் சாமியாரிடத்தில் கொடுத்து, மோட்சவிளக்கு எடுத்தால், எல்லாம் சரியாய்ப்போகிறது. அதற்கு வழியில்லாதவன் உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாள் அன்றைக்கு உபதேசியாருக்கு இரண்டுதுட்டுக்கொடுத்துக் கோவிலில் பேரெழுதி வாசித்துப்போட்டால் ஆத்துமா மோட்சத்தில் போய்ச்சேர்ந்து போகிறது. என்ன மாப்பிள்ளை என்ன சொல்லுகிறீர், எங்கள் ரோமான்காத்தோலிக்கு வேதத்தில் எவ்வளவு சுலபமாய் எவ்வளவு சுளுவாயிருக்கிறது மோட்சம். உம்முடைய புதுவேதத்தில் இப்படியுண்டா என்று அந்தாளவர்கள் உத்தரவு சொன்னார்கள். இலக்கண தர்க்கசாஸ்திரியவர்களும் பதில் பேசவில்லை. எனக்கும் வாய் அடைபட்டுப்போயிற்று.

உங்கள் சபையிலும் எங்கள் சபையிலும் ஒத்திருக்கிற சத்தியங்கள் எத்தனையோ முக்கியமானவைகள். நீங்கள் சொல்லுகிற பரமண்டலமந்திரந்தானே நாங்களும் சொல்லுகிறோம், நீங்கள் விசுவசிக்கிற அப்போஸ்தல விசுவாசமந்திரந்தானே நாங்களும் விசுவசிக்கிறோம். நீங்கள் படித்திருக்கிற பத்துக்கற்பனைதானே நாங்கள் திட்டமாய் படிக்கிறோம்.

எங்கள் கோயிலுக்கு ஒருநாள் வந்து நாங்கள் என்ன மன்றாட்டு செபம் சொல்லுகிறோம், என்ன வாசகம் வாசிக்கிறோம், என்ன பாட்டுப்படிக்கிறோம் என்று கேட்கலாகாதா. நீங்களாவது உங்கள் குருக்களாவது சொல்லக்கூடாத ஒருசெபம் ஒருமன்றாட்டு இருக்குமா. நீங்களாவது உங்கள் குருக்களாவது விசுவசிக்கலாகாத ஒருவார்த்தை வாசிக்கிறதுண்டா. நீங்களாவது உங்கள் குருக்களாவது பாடக்கூடாத ஒரு பாட்டுப்படிக்கிறதுண்டா.

உங்கள் குருக்களிடத்திலும் எங்களிடத்திலும் இருக்கிறது ஒருவகை சுவிசேஷமா இரண்டுவகை சுவிசேஷமா.

ஐயா, ஆலங்குளத்தில் மிசியோனில் உபதேசியாயிருக்கிறபோது, கிரேகோரிதசுவாமியவர்கள் அவ்விடத்திற்கு வந்திருந்தார்கள். அவர்களுடைய பி



ஷப்பிள்ளை அருளப்பபிள்ளையை அனுப்பி, ஐயாவைத் தங்களிடத்துக்கு அழைத்துவரும்படிக்குச் சொன்னார்கள். ஐயா போய், கும்பிட்டு, கைகட்டிநின்றார்கள். சுவாமியார் சுகசெய்தி விசாரித்து, சில புத்திகள் சொல்லி, ஒரு சிறு புஸ்தகமுங்கொடுத்து, உங்களிடத்திலிருக்கிற வேதபுஸ்தகமும் எங்களிடத்திலிருக்கிற வேதபுஸ்தகமும் ஒன்றுதான், வித்தியாசமில்லை. ஆனால் கொள்ளை உபதேசங்களை உங்கள் குருக்கள் புரட்டிப்போட்டார்கள் என்று சொன்னார்கள்.

அதற்கு, ஐயா தங்களிடத்தில் நான் பதில் சொல்லுகிறதற்கு எம்மாத்திரம், எங்கள் குருக்களும் தாங்கள் சொல்லுகிற மாதிரியாகவே உங்களைக் குறித்துச்சொல்லுகிறார்கள்; ஆனால் ஒரு வித்தியாசம்: எங்கள் குருக்கள் சுவிசேஷத்தை எங்கள் கையில்கொடுத்து தாங்கள் போதிக்கிறது அந்த சுவிசேஷத்திற்குச் சரியாயிருக்கிறதென்று நாங்கள் அறியும்படிக்கு செய்கிறார்கள் ஆனால் தாங்கள் சுவிசேஷத்தை அப்படிக்கொடுத்து, மெய்ப்பிக்கிறதில்லையே என்றார்கள்.

எங்கள் தாயார் தகப்பனார் புரொடெஸ்தாந்து மார்க்கத்தில் சேருகிறபோது, முப்பது முப்பத்தைந்து வயதுக்குமேலிருக்கும். சிலகாலம் இருந்து, திரும்பிப்போய் விடவேண்டுமென்று தான்வந்து சேர்ந்தார்கள். பின்னை, ஏன் திரும்பிப்போய்விடவில்லை, அவர்களை யார்தடுக்கக்கூடியது. * * * பிள்ளையவர்களுடைய ஆகாவழி நடபடிக்கைகள் லோகமெல்லாம் தெரியுமே. அப்படிப்பட்ட ஆளையுங்கூட அவர்கள் உங்களிடம் வந்து சேர்ந்தபோது, தரையிலே நடவாதே, எங்கள் தலைமேல் நட என்பதாக நீங்கள் கொண்டாடின கொண்டாட்டம் நான் கண்ணாலேபார்த்தேன். ஒரு கவர்னர் ஒரு பிஷப்பு வந்துசேர்ந்தாலுங் கூட அந்த மரியாதையும் பேச்சுப் பிரஸ்தாபமும் நடப்பித்திருக்க மாட்டார்கள். ஐயா அம்மை திரும்பிவந்திருப்பார்களானால், உடனே அர்ச்சிஷ்டவர்களாக்கி வணங்கியிருப்பீர்களே.

அவர்கள் நிலைப்பட்டதுக்கு முகாந்தரமென்ன. கிறிஸ்துநாதர் மனுஷருக்கு என்ன போதித்தார், அவருக்கு சீஷராக விரும்புகிறவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று சொன்னார், அவருக்காக ஊழியம் செய்கிறவர்கள் என்ன லட்சணமுடையவர்களாயிருக்கவேண்டுமென்று சொன்னார், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர்கள் அவரைக் குறித்து என்ன போதித்தார்கள், அவர்கள் ஸ்தாபித்த சபைகளுக்கு என்ன என்ன கட்டளைகள் கொடுத்தார்கள், எதை விசுவசிக்க வேண்டுமென்று சொன்னார்கள், என்னென்ன புண்ணியங்களை தழுவிக்கொள்ள வேண்டும், என்னென்ன பாவ

ங்களை விலகவேண்டுமென்று சொன்னார்கள், மோட்சத்தை அடைவதற்கு என்ன வழி காண்பித்தார்கள், இனி சுவாமி மனுஷரை நடுத்தீர்க்க வரும்போது என்ன நடக்கும், யார் அவருடைய சமுகத்திற் சேர்ந்து அவரோடு அரசாளுகிறதற்கு பாத்திரராயிருப்பார்கள், என்ற இந்த விஷயங்களெல்லாம் கண்டிருக்கிற தேவ வசனங்களை படித்து கிறிஸ்துவினுடைய மார்க்கமெதுவென்னதென்பதை ஐயாவும் அம்மையும் தெளிந்து தெரிந்து கொண்டார்கள். தங்களை ஞானியென்று எண்ணுகிறவர்களுக்கு, இது பரிசுத்த எழுத்துக்கள் ஆழமான கடல்தான். ஆனால் பரிசுத்த தேவ ஆவியினுடைய வரப்பிரசாதத்தை மன்றாடி கிறிஸ்துவினுடைய அடைக்கலத்திலே யிருக்கிறவர்களுக்கு இதை அறிந்து, நடந்து, அடைந்தேறுவதற்கு ஒரு வருத்தமுமில்லை. லோக ஞானிகளுக்கு மறைத்து, பாலகர்களுக்கு அந்த அதிசயங்களை அறிந்துகொள்ளும்படி ஆண்டவர் கிருபை செய்திருக்கிறார் என்று கிறிஸ்துநாதர் சொன்னதாக இது சுவிசேஷத்திலேயே எழுதியிருக்கிறது.

நாங்கள், தினந்தோறும், முழங்காலில் நின்று, ஆண்டவருடைய கிருபையைத் தேடிக்கொண்டு, அந்த ஆகமங்களை இடைவிடாமல் படித்துவருகிறோம். ஆகையால், எங்களுக்கு அதில் மயக்கம், சந்தேகம் ஒன்றுமில்லை மோட்ச பாதையில் செல்லுகிறவர்களுக்கு, சுவாமியினுடைய வசனத்தைப் போலொத்த தீவட்டி ஒன்றுமில்லை,

ஆனால் சொல்லுகிறீர்கள். பதிதர் இந்த சுவிசேஷத்தை அவனவன் வாசித்து, தான் நினைத்த ரூபமாய் அர்த்தம்பண்ணி, ஆயிரம் பிரிவாய் பிரிந்து போயிருக்கிறார்கள் என்கிறீர்கள். ஆயிரம் பிரிவு இருக்கிறதென்பது நிசந்தான். தூரப்போய்ப் பார்க்க வேண்டாம். நாகர்கோவிலில் லண்டன் மிஷியோன், பாளையங்கோட்டையில் இங்லாந்து சபை மிஷியோன், மதுரையில் அமெரிக்கன் மிஷியோன், திருச்சினாப்பள்ளியில் வெஸ்லியன் மிஷியோன், தஞ்சாவூரில் லூதரன் மிஷியோன், இதற்கிடையில் இரட்சணியசேனை இன்னும் இப்படி அனந்தம் பிரிவுகளிருக்கிறது.

இந்தப் பிரிவுகளெல்லாம் சபைகளை விசாரணைசெய்து, மேற்பார்க்க வேண்டிய முறைகளைக் குறித்தும், கொசடங்கள் சாதனங்களைக் குறித்தும், இப்படி முக்கியமற்ற காரியங்களில் வேறுபட்டிருக்கிறார்களே யன்றி, கிறிஸ்து இயேசுவினுடைய பிராயச்சித்தபுண்ணியத்தினாலே யன்றி, வேறு விதத்தில் மனுஷனுக்கு இரட்சிப்பில்லை என்கிற மூலமந்திரத்தில் எல்லாரும் ஒரே உறுதியும், ஒரே மனமும்; ஒரே நிலையும், ஒரே விசுவாசமுமாயிருக்கிறார்கள்.



இயேசுகிறிஸ்துவைக் குறித்து ஒரே போதகமே யன்றி, வித்தியாசங்கிடையாது.

எந்தப்பேருள்ள எந்த மிஷியோனானாலும், எல்லாரும், அப்போஸ்தலர் நாள்முதலுள்ள அப்போஸ்தல விசுவாசப்பிரமாணத்தை ஒரேமனமாய் விசுவசித்து, ஒரே வாக்காய் அறிக்கையிடுகிறார்கள். இந்த விசுவாசப்பிரமாணத்தில் உள்ள பன்னிரண்டு சத்தியங்களையும், விசுவாசியாதவனை நாங்கள் கிறிஸ்தவனென்று ஒப்புக்கொள்ளுகிறதே யில்லை.

ஆனால் ஒன்று. சுவாமி அவதரித்து, 1560 வருஷத்திற்குப் பிற்பாடு, அதாவது, இதற்கு முன்னூற்றுநாற்பது வருஷத்திற்குமுன், திரிதெந்து என்கிற ஊரிலே குருக்கள் சங்கம் ஒன்று கூடிற்று. இது அப்போதிருந்த பாப்பானவருடைய கட்டளையின்படிக்குக் கூடினது. இதிலே ஒருபுது விசுவாசமந்திரம் உண்டுபண்ணினார்கள். இதை கிறிஸ்தவர்களெல்லாரும் வேதசத்தியமாக ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கட்டளை பண்ணினார்கள். இந்த விசுவாசமந்திரம் வீரமாமுனிவர் எழுதிய வேதவிளக்கம், 306ம் பக்கத்தில் கண்டிருக்கிறது. இது புதிதாய் முளைத்தவேதமென்றும், ஆதிவேதமல்லவென்றும், சுவிசேஷ ஆகமங்களில் இந்தப் புதுஉபதேசங்கள் காணவுமில்லை, கைக்கொள்ளும்படி சொல்லவுமில்லையென்றும் புரொதெஸ்தாந்துகிறிஸ்தவர்களாகிய நாங்கள் இது திரிதெந்து விசுவாசப்பிரமாணத்தை ஒப்புக்கொள்ளுகிறதில்லை.

வேதத்தில் சொல்லவில்லையென்று நாங்கள் சொன்னவுடனே, எங்களுக்கு நீங்கள் பரமார்த்தகுருக்களையும் அவருடைய மட்டி, மடையன், மூடன் மூர்க்கன், மிலேச்சன், என்ற சீஷர்களையும் குறித்த கதையைச் சொல்லுகிறீர்கள்.

சப் ஜட்ஜி அண்ணுசாமி முதலியாரவர்கள் என்பேரில் வெகுபட்சம் தத்துவபோதகசுவாமி, மற்றும் ஆதிசேசு சபைக்குருக்கள், சீமைக்கு எழுதியனுப்பின காகிதங்கள் பிராஞ்சுபாஷையில் மதுரை மிஷியோன் என்ற புஸ்தகத்தில் அச்சடித்திருக்கிறது. அதை சாவகாசமிருக்கிறபோது, வாசித்து வாசித்து, இங்கிலீஷில் எனக்கு அர்த்தஞ்சொல்லுவார்கள். சிலவேளை, நான், ஐயா, இதை நிறுத்தி, இதற்கும் முற்காலத்திலுள்ள குருக்கள் எழுதியதைக்கொஞ்சம் வாசிப்போமே என்பேன். உமக்கென்ன தெரியுமென்பார்கள். எனக்குத்தான் தெரியாது, உங்கள் மகன் பி. எ. பாஸ்பண்ணவேண்டுமென்று, என்னமெல்லாமோ தலைமையான சாஸ்திரங்களை யெல்லாம் படித்

கப்போட்டுக்கொல்லுகிறீர்களே, இதையும் கொஞ்சம் படிக்கட்டுமே என்பேன். ஆம், சவரிராயபிள்ளை, உமக்கு மத்தேயு எழுதினர், மார்கு எழுதினர், சின்னப்பர் சொன்னர், அருளப்பர் சொன்னர் என்றதெல்லாம் பாட்டாய்ப்போயிற்று என்பார்கள். ரோமான் கத்தோலிக்கராகிற எப்பேர்ப்பட்ட நல்லமனுஷனிடத்திலும் என்னைப்போலுள்ளவன் தன் பேச்சைப் பேசினல் கவனமாய்க்கேட்டுக்கொள்ளுகிறார்கள். இது வேதவாக்கியமென்று மாத்திரஞ் சொன்னேனே யாகில், சுறுக்கென்கிறது. அதினால்தான் வெறுப்பு வராமல் இந்தப்பத்திரிகையில் வருகிற சுவிசேஷ வசனங்களை சுவிசேஷ வசனங்களென்று சொல்லாமல்விட்டேன். மன்னித்துக்கொள்ளவும்.

புரொடெஸ்தாந்து பிரிவுகளைக்குறித்து இன்னமொருவார்த்தை சொல்லுகிறேன். நம்முடைய இரட்சகர் தம்மையும், தமமுடையமெய்யான திருச்சபையையும், ஒரு திராட்சச்செடிமூட்டுக்கும், கொடிகளுக்கும், ஒப்பிட்டிருக்கிறார். எத்தனை ஆயிரம் கொடிகள் இருந்தாலும், மூட்டிலிருந்து சாரம் போனால்தான் பிழைக்கும். சாரம் பெற்றுக்கொள்ளாத கொடி பட்டுப்போம். பட்டகொடியை வெட்டி எடுத்துப்போடுவார்கள்.

எங்கள் வீட்டிலே ஒரு சுரைவிதை எப்படியோ தானாய்விழுந்து, உரக்குழிப் பக்கத்தில் முளைத்திருந்தது. ஐயா, அதற்குமேல் ஓலைக்கொடி கட்டிப் பந்தல் போட்டார்கள். அது அந்தப் பந்தலையுந் தாண்டி, பக்கத்திலுள்ள கள்ளிமேலும், புளிமேலும், வேம்புமேலும் படர்ந்து காய்த்தது, கடகம் கடகமாய் பறித்தோம். பந்தலில் காய்த்ததுவும் சுரைக்காய்தான், மரத்தின்மேல் காய்த்ததுவும் சுரைக்காய்தான், வேலிமேல் காய்த்ததுவும் சுரைக்காய்தான். கள்ளிமேல் காய்த்ததினால் சாக்கவுமில்லை, வேம்பின்மேல் காய்த்ததினால் கசக்கவுமில்லை, புளிமேல் காய்த்ததினால் புளிக்கவுமில்லை. ஏனென்றால், எல்லாக்கொடிகளும் தங்கள் சாரத்தை, தங்கள் உயிரை, சுரைச்செடியின் ஒரே மூட்டிலிருந்து பெற்றுக்கொண்டது. அப்படிப்போல, சகல கோவில்சபை, இங்கிலாந்துசபை, அமெரிக்கன்சபை, வெஸ்லியன்சபை, லூத்தரன்சபை, வேறு எந்தப்பேருள்ள சபையிலிருக்கிறவனுனாலும் கொடிகளானது செடியிலே பொருந்தியிருக்கிறதுபோல், கிறிஸ்து இயேசுவோடு ஐக்கியமாயிருந்து, அவரிடத்திலேயே சாரத்தை ஞானஉயிரை, பெற்றுக்கொள்வானானால், அவன் நல்ல கனிகளைக்கொடுப்பான். அந்தச்சாரம்பெறாதவன் கிறிஸ்துவினுடைய மெய்யான திருச்சபையைச்சேர்ந்தவனல்ல. ஒரு மரத்தை அதின் கனியினால் அறியவேண்டியது.



ஆண்டவருடையபிள்ளைகள் ஒருமனமாய், ஒத்துமையாயிருக்கவேண்டியது மகாமுக்கியமான காரியந்தான். கெத்சேமனே தோட்டத்திற்குப் போகிற வழியிலே, நமது இரட்சகர் தமது பிதாவைநோக்கிப்பண்ணின மன்றாட்டெல்லாம், தமது பிள்ளைகள் ஒத்துமையாயிருக்கவேண்டுமென்ற மன்றாட்டுத்தான். பரிசுத்தவான்களுக்கு இவ்வுலகத்திலும் ஐக்கியமுண்டு, இதினிமித்தம் இப்பிரபஞ்சகட்டுப்படிக்கைகளில் அவர்களுக்குள்ள எண்ணங்கள் அபிப்பிராயங்கள் வித்தியாசப்படமாட்டாதென்று சொல்லக்கூடுமோ, அறிவு எவ்வளவு வித்தியாயிருக்கிறதோ, அவ்வளவுக்கு அபிப்பிராயங்களும் வித்தியாசப்படுகிறதுண்டு. வானசாஸ்திர அறிவில்லாத சனங்களுக்கு, சூரியனைக்குறித்து எல்லாருக்கும் ஒரேஎண்ணமேதவிர, இரண்டெண்ணங்கிடையாது. ஆனால் வானசாஸ்திரிகளைக்கேட்டால், அவர்கள் சூரியனுடைய தன்மையைக்குறித்தும், அதின் அசைவைக்குறித்தும், அதில்காணுகிறமாறுதல்களைக் குறித்தும், அதினுடைய பிரகாசத்துக்குக் காரணத்தைக்குறித்தும், அதின்பிரகாசம் பூமிக்குவருகிற விதத்தைக்குறித்தும், சூரியனால் பூமியில் உண்டாகிற பலாபலன்களைக் குறித்தும், ஆயிரவிதமான கோட்பாடுள்ளவர்களா யிருக்கிறார்கள். இதினிமித்தமாக, வானசாஸ்திரம் படிக்கிறதுகெட்டது, மூடத்தனமாயிருக்கிறது நல்லதென்றுசொல்லலாமா. குறவர்களைப்பாருங்கள். குறக்குடிவழக்குக்கும், சண்டைக்கும் ஓய்வில்லையென்று பெயர், பெண்சாதியையுங்கூட ஒத்திவைக்கிறார்கள். ஆனால் அவர்கள் வழக்கெல்லாம் அவர்கள்சாதி அதிகாரிநாயனுக்குள்ளே தீர்த்துபோகிறதேயன்றி அவனைமீறி வெளியேறுகிறதில்லை. அத்தனை சாதிக்கட்டுப்பாடும் பஞ்சாயத்தும் ஒத்துமையும் அவர்களுக்குள்ளிருக்கிறது.

வண்ணார்பேட்டை வண்ணாரப்பயல்களுக் குள்ளிருக்கிற ஒத்துமையினல், நாங்கள்படுகிற துன்பம் சொல்லமுடியாது. எங்களிஷ்டப்படி வண்ணானை நியமிக்கவும் தள்ளவும் எங்களுக்குவிதியில்லை. வண்ணாரமூப்பன் சொன்ன வண்ணான், வண்ணாத்தியைத்தான் நாங்கள் வைத்து வேலைவாங்க வேண்டியதாயிருக்கிறது.

வெள்ளாளர், பிராமணருக்குள் இந்தஒத்துமையுண்டா. பிராமணரும் பிராமணரும், வெள்ளாளரும்வெள்ளாளரும் பண்ணிக்கொள்ளுகிற வியாச்சியந்தான் கோர்ட்டில் முக்கால்வாசி. ஆகையால்சிலவேளைகளில் ஒத்துமையென்பது மூடத்தனத்துக்கு அடையாளமேயல்லாமல், அறிவுவிவேகத்துக்கு

அடையாளமாக மாட்டாது. அவசியமான காரியங்களில் மனஒருத்தமையாயும் அநாவசியமானகாரியங்களில் மனஇஷ்டமாயும், எல்லாக்காரியத்திலும் பெரியமனசோடும் நடந்துகொள்ள வேண்டியது நல்ல கடமை.

திருநெல்வேலி நாட்டில் சேசு சபையைச்சேர்ந்த பிராஞ்சுகுருக்களும் இங்கிலாந்து சபையைச்சேர்ந்த இங்கிலீஷ்குருக்களும் அனேகசபைகளுக்கு அதிகாரிகளாயிருக்கிறார்கள். ரோமான்கத்தோலிக்குக் குருக்கள் தங்கள் வேதத்திற் குள்ளேயல்லாமல், அதற்குப்புறத்தே யிருக்கிறவர்களுக்கு ஈடேற்றமில்லையென்கிறார்கள். இங்கிலீஷ்குருக்கள் தங்கள்சபைதான் சத்தியசபை, மேற்படி ரோமான்சபை மெய்யுபதேசத்தினின்று வழுவி பொய்யுபதேசங்களைத் தழுவி தவறிப்போயிருக்கிறதென்கிறார்கள். இருவகைக்குருக்களும் தாங்கள் தாங்கள்தான் கிறிஸ்துவின் அப்போஸ்தலர், அதாவது மிசியோனேரிகள் என்கிறார்கள்.

நேபாளதேசத்து ஒரு அஞ்ஞானஇராசமுன்பாக ஒரு பிராஞ்சுகுருக்களும் ஒரு இங்கிலீஷ்குருக்களும்போய் தங்கள் கடவுளுடைய மெய்வேதத்தைப் போதிக்கிறவர்களென்று சொன்னார்களென்று வைத்துக் கொள்வோம். அந்தஇராசா புத்திசாலியுள்ளவழியில் பிரியமுள்ளவர் இவர்களைப்பார்த்து இந்தப்பாவச் சென்மம் நீங்கி முத்திபெறுவதற்கு நான்என்னசெய்ய வேண்டுமென்று கேட்கிறார். இவர்களுடைய பதில் உத்தரவினால் பாவிகளுக்குக் கிறிஸ்துவாகிய இரட்சகரொருவர் உண்டென்று அறிகிறார். அவரை வழிபடும் வகையென்ன என்று கேட்கிறார். இரண்டுகுருக்கள்சொல்லுவதும் ஒன்றுக்கொன்று விரோதம்போலக் காணுகிறது.

விசாரிக்க விசாரிக்க, இரண்டுகுருக்கள் கட்டியும் அதிகப்பட்டுத் தன் சபை யென்பதைப் புகழ்ந்தும் எதிரி சபையென்பதை இகழ்ந்தும்பேசித் தன் பட்சத்துக்கு இவர் ஒப்பாத சாட்சியெழுத்துகளை அவரும், அவர்ஒப்பாத சாட்சியெழுத்துகளை இவரும், சொல்லிக்கொண்டுவருகிறார்கள். இராசாவுக்குச்சந்தேகம் அதிகப்படுகிறது. ஆனால் புத்திசாலியானபடியினால் ஒரு கேள்விகேட்கிறார். நீங்கள் இரண்டுபேரும் ஒப்புக்கொள்ளுகிற பொதுசாட்சி மீதும் ஒன்றுமில்லையா என்றுகேட்கிறார். இரண்டு குருக்களும் ஏகவாக்காய், மத்தேயு, மாற்கு, லூக்கா, அருளப்பர், இராயப்பர், சின்னப்பர், யாகப்பர், யூதேயப்பர் இப்படி எட்டுசாட்சிகள் இருக்கிறார்கள். அவர்களெழுதிவைத்த இருபத்தேழு தஸ்தவேசுகளிருக்கிறது என்கிறார்கள். மோசம்போகாத இந்த ஐந்திரளான சாட்சிகள் நம்மைச் சேர்க்கிறதாக என்று இராசா சந்தோ



ஷிக்கிறார். சேத்திரத்தில் இருளும் மருளும் அவர்மனதில் நின்று நீங்கிப்போகிறது. சத்தியமே செயமென்று பட்டாற்று மனசோடு தெய்வ வசனமாகிய உரைகல்லில் சோதிக்கும்போது, தெய்வ கட்டளையாகிய பசும்பொன் இன்னது, மனுஷ கட்டுப்பாடான பித்தளைச்சரக்கு இன்னதென்று கண்டுகொள்ள நேரம் பிடிக்காது.

சத்தியவேதாகமம் எழுபத்திரண்டு புஸ்தகங்கள் உள்ளதென்று ரோமான் திருச்சபையில் சொல்லப்படுகிறது. ரோமான்குருக்கள் நமது சீமைக்குவந்து மூன்றூற்றெழுபது வருஷம் போலாகிறது. இவ்வளவு காலத்துக்குப் பிற்பாடு நாளதில் கனம் ஜிரிங்கால் சுவாமியவர்கள் புதிய ஏற்பாட்டை தமிழில் திருப்பி அச்சடித்திருக்கிறார்கள். தங்கள் மனஇஷ்டப்படியான வியாக்கியானக்குறிப்புகளையும், விசேஷமாய் எங்களுக்கு விரோதமாய்ச் சொல்லக்கூடிய தங்களுடைய சொந்தஅபிப்பிராயங்களையும், அதோடுசேர்த்து அச்சடித்திருக்கிறார்கள். எப்படியாவது, புதியஏற்பாடு தமிழில் வெளிப்பட்டதே சந்தோஷம். அந்த புதிய ஏற்பாட்டை சுயபாஷைக்காரிடத்தில் வாங்கி வாசியுங்கள்.

அதை வாசித்தீர்களானால், இயேசுநாதர் இன்று உங்களோடு பேசுகிறதுபோலிருக்கும். அவருடைய சமூகத்தில் சேருவதற்கு வழி இன்னதென்று பட்டப் பகல்போல அதில் தெரியும். நாம் ஆண்டவருடைய பிள்ளைகளானால், நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கு ஆண்டவருடைய வார்த்தை அந்தப் புஸ்தகங்களிலிருக்கிறது. சிறுபிள்ளைகளுங் கூட அறிந்து உணர்ந்துகொள்ளத் தக்கதாக நம்முடைய இரட்சகர் பேசியிருக்கிறார்.

நம்முடைய இரட்சகர் சாஸ்திரிகள் ஞானிகள் என்று தங்களை எண்ணினவர்களோடு பேசினது சொற்பம். எல்லாம் படிக்காட்டித் தனங்கள் படிப்பில்லாதவர்கள் ஏழைச் சனங்கள் பெண் பிள்ளைகள் இப்படிக் கூட்டத்தில் வந்தவர்களோடு தான் அதிகமாய்ப் பேசி புத்திசொல்லி யிருக்கிறார். அந்தப்போதகங்கள் தான் சுவிசேஷங்களில் எழுதியிருக்கிறது. அப்படியே அவருடைய சீஷர்கள் எழுதின நிருபங்களும் அனேகமாய் பேதமையான சனங்களுக்கும் பேதமையான சபைகளுக்கும் தான் எழுதியிருக்கிறது. அந்தக்காலத்தில் சில பேர்களும் சில தீர்ப்புக்காரரும் அந்த நிருபங்களில் கண்ட சில காரியங்களை தங்கள் தர்க்கசாஸ்திரக் கிசைய தப்பர்த்தம் பண்ணினதுண்டு. ஆகிலும் பரிசுத்த வேத எழுத்துக்களை அந்தச் சனங்கள் சிறுவயது முதல் படித்திருந்தால் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தி

னாலே இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்கும். ஏனென்றால் அந்தத் தேவ வசனங்கள் உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோசனமுள்ளவைகளாயிருக்கிறது. அதைப் படிக்கிறவர்களும் கேட்கிறவர்களும் பாக்கியவான்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஷை சுவாமியாரவர்கள் அச்சடிக்கிற அந்தப் புஸ்தகத்துக்கு அதிக விலை போட்டிருக்கிறார்கள். பெரிய காரியமல்ல. எப்படியும் வாங்கி வாசியுங்கள். வாசிக்க வாசிக்க வேதபுஸ்தக அருமை உங்களுக்குத் தெரியும். எங்கள் வேதாகமசங்கத்தில் அச்சடிக்கிற புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்கள் முழுவதும் சொற்பவிலைக்குக் கிடைக்கும். வாசிக்க ஆசைப்பட்டுக் கேட்கிறவர்களுக்கு சும்மா கொடுக்கிறார்கள். அந்தப் புஸ்தகத்தில் எங்கள் குருக்கள் தங்கள் புத்தியான வியாக்கியானங்கள் சேர்க்கிறதுமில்லை. சேர்க்கிறதும் கூடாது. ஆனாலும் அதை வாங்கி வாசிக்கப்பயப்படுகிறீர்கள். இது எத்தனை துக்கமான காரியம்.

ஐயா, ஒருதடவை குருவிசாரத்துக்குப் போயிருந்த போது அஞ்ஞானிகளுக்காக எழுதப்பட்ட குருட்டு வழி என்ற புஸ்தகத்தை ஒரு அஞ்ஞானிக்கு வாசித்துக் காண்பித்தார்கள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த நம்முடைய பக்தர்களில் ஒருவர், அஞ்ஞானிகளுக்குச் சொல்லுகிறதற்கு அது நல்ல புஸ்தகமென்று சொல்லி, தனக்கு அது வேணுமென்று கேட்டார். ஐயா அவருக்குக் கொடுத்தார்கள். வாங்கினவரில் வைத்திருந்தவருக்கு கோயில் சேரத்தில் போகவே மாறிவிட்டது. திரும்ப ஐயாவிடத்தில் கொடுத்து: இதை நான் வைத்திருக்கக் கூடாது, பதிதரிடத்தில் புஸ்தகம் வாங்கினேனென்று சுவாமியாருக்குத் தெரிந்தால் [illegible] சேர்க்கும். எனக்கு இவ்வளவையும் ஏட்டில் எழுதித் தாருங்கள் என்றார். ஐயா அப்படியே ஏட்டில் எழுதிக் கொடுத்தார்கள்.

விசேஷமாய் இப்படியிருக்கிறபடியால் நீங்கள் எங்கள் புதிய ஏற்பாட்டை எங்கேயாகிலும் வாங்கிப்போடுகிறீர்கள். என்னவெனில் கொடுத்தாலும் அந்த புதிய ஏற்பாட்டைச் சுவாமியாரிடத்தில் வாங்கி தெய்வ சமூகத்தை மனமுவந்து [illegible] வருகிறவர்களாயிருங்கள்.

ரோமான் கத்தோலிக்கு திருச்சபை அர்ச்சிஷ்ட இராயப்பர் ஸ்தாபித்த சபையென்கிறீர்கள். இராயப்பர் தாம் போதித்துவந்த சபைகளுக்கு எழுதின இரண்டு கடிதாசுகள் இன்றுவரையும் இருக்கிறது, அது எங்களிடத்தி



லிருக்கிறது. உங்கள் குருக்களிடத்திலுமிருக்கிறது. நீங்கள் வாசிக்கும்படிக்கு அந்தக் கடிதாசுகளை உங்களிடம் கொடுத்ததுண்டா. இந்தமுதல் பாடம் படியாமல் நாங்கள் இராயப்பர் சபை என்று சொல்லிக்கொள்வதில் என்ன சலாக்கியமிருக்கிறது.

அர்ச்சிஷ்ட இராயப்பர் ரோமையில் ஸ்தாபித்த சபை எங்கள் சபையென்கிறீர்கள். அர்ச்சிஷ்ட இராயப்பரும், அர்ச்சிஷ்ட சின்னப்பரும் ரோமாபுரியில் ஒரே நாளில் ஒரே இடத்தில் வேதசாட்சியாக உயிர்வதை செய்யப்பட்டார்களாமே. மேற்படி சின்னப்பர் மேற்படி ரோமை சபைக்கு ஒரு நிருபம் எழுதியனுப்பியிருக்கிறாரே. அந்தக்கடிதாசு இன்னுமிருக்கிறதே. நமது ரோமை சபையைக்குறித்து என்ன சொல்லியிருக்கிறார், நமது ரோமை சபைக்கு என்னபுத்தி போதனை சொல்லியிருக்கிறார் என்று அறியவேண்டாமா. மேற்படி கடிதாசை உங்கள் குருக்கள் உங்களுக்கு என்றைக்காவது வாசிக்கக் கொடுத்ததுண்டா.

நாங்களும் எங்கள் பிள்ளைகளும் ஷை அர்ச்சிஷ்ட இராயப்பர் எழுதிய இரண்டு கடிதாசுகளையும், ஷை ரோமை சபைக்கு அர்ச்சிஷ்ட சின்னப்பர் எழுதிய கடிதாசியையும் வெகு பூச்சியமாய் வைத்துக்கொண்டிருந்து அக்கறையோடும், மிகுந்த கவனத்தோடும் திரும்பத்திரும்ப எத்தனையோ தடவை பாராமல் படித்து தியானம்பண்ணி பயபக்தியோடு வாசித்து அர்ச்சிஷ்ட இராயப்பர் சொன்ன போதகத்தின்படியும் அர்ச்சிஷ்ட சின்னப்பர் ரோமாபுரிசபைக்குச் சொன்ன போதகத்தின்படியும் நடக்கும்படியாக ஆண்டவர் எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று மன்றாடி வருகிறோம். ஆகையால் நீங்களல்ல, நாங்கள்தான் அர்ச்சிஷ்ட இராயப்பர் பேரிலும் ஆதி ரோமை திருச்சபைப்பேரிலும் கிரமமான பக்தி விசுவாசமுள்ளவர்கள்.

புதிய ஏற்பாட்டை நீங்கள் வாசித்தபிற்பாடு நீங்கள் எங்களைப் பதிதர் என்று சொல்வது நியாயமா, நாங்கள் கிறிஸ்துவினுடைய மெய்யான திருச்சபையில் சேராதவர்கள் என்று சொல்வது நியாயமா, என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை, என்று சொன்ன கிறிஸ்து இயேசு சுவாமியை எங்கள் முழு ஆத்துமாவோடும் அன்பு செய்து விசுவசித்து நம்பியிருக்கிற எங்களை இரட்சியாமல் தள்ளிவிடுவார் என்று சொல்லலாமா என்ற இந்தக்காரியங்களை ஆராய்ந்து யோசித்துத் தீர்மானம்பண்ணுங்கள்.

இன்னும் அனேகம் எழுதலாம். கிளைத்ததையும் விரும்புகிறதையும் எல்லாம் எழுதி முடியாது. உங்களுக்கும் அலுத்துப்போகும். சொன்னவைகளைக்கொண்டு சொல்லாதவைகளையும் தெரிந்துகொள்ளுவது அறிவாளிகள் கடன்.

என் முழு இருதயத்தின் வாஞ்சையிலும் அன்பிலும் எழுதியிருக்கிற இவைகளை சுமனதோடு அங்கீகரித்துக் கொள்ளுங்கள். இவ்வளவாக எழுதியதெல்லாம் ஒரே ஒரு காரியத்துக்குத்தான். நீங்கள் தெய்வவசனமாகிய புதிய ஏற்பாட்டை ஒழுங்காய் கருத்தாய் தவமாய் வாசித்துப் படித்துத் தேடி அந்தநிலையில் வளர்ந்தின்படி நடந்தேறின தேவ ஒத்தாசையைத் தேடிக்கொள்ளவேண்டும். இக்குறிப்பே என் மன்றாட்டு.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்களெல்லாரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. ஆமென்.

பாளையங்கோட்டை
Christmas, 1899.

இப்படிக்கு
உங்கள் அன்புள்ள சகோதரன்
போவாஸ் தேவசகாயம் சவரிராயன்